ஓம் ஸ்ரீ ஸாயிராம்.

# நீலகிரியில் நிமல கருத்துரைகள்

பகவான் ஸ்ரீ ஸத்யஸாயி பாபா அவர்கள் திருவாய் மலர்ந்தருளியவை


தமிழாக்கம் :

திரு.சி. குப்புசாமி, M.A (Phil.),
Asst. Prof. of phil., Pachaipaa's College, Madras-30.

மேற்பார்வையிட்டுச் சீர் செய்தவர்

உயர்திரு. சி. ஜெகந்நாதாசார்யர், M.A. (Hist,), M.A. (Tamil),
L.T., P.O.L., Dip.in Geography, Vidvan,
Proffessor of Tamil (Retd.),
Vivekananda College, Madras-4.
Former U.G.C. Proffessor of Tamil.

# அணிந்துரை

பாபாவின் அருள்மொழிகள்
பாரெங்கும் பரந்திடவே
சீரான செந்தமிழில்
ஆரானவமு தாயினவே.

இவ்வகன்ஞாலத்து மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அறிய வேண்டிய உறுதிப்பொருள்கள் நான்கு, அவை அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும். இவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைந்தது. அஃது அந்த மிலின்பத்தது. இதனைப் பகவான் போன்ற கடவுளர் உணர்ந்திருப்பவே, சாயி பகவான் தமது பேரருளால் மாணவர் நிலையிலேயே கிளைத்துத் தழைத்துக் காய்த்துப் பழுத்துக் கனிந்து நல்லற ஞானப்பழமாகப் பயனளிக்கும் என்ற பெருநோக்கோடு ஐம்மூன்று கருத்துரைகளின் மூலம் கிருஷி செய்யத் தொடங்கினார். செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்ளும் நம் பகவான் நான்காண்டுகளுக்கு முன் தமது சீரிய பணியை நீலமேனியனின் உருவொளி குளிர் தருவாய் நின்று நிழல் பரப்பித் தமது கல்லூரிகளிற் பயிலும் மாணவ மாணவியரை வியாஜமாகக் கொண்டு, உலகினருய்யும் நீடாழியுலகத்து மறைநாலொடைந்தென்று நிலை நிற்கவே வாடாத தவ வாய்மை முனிராசன் சொல்லிய மகாபாரதமதனுள் மன்னிச்சு ஏறிட்டுக் கொண்ட கிருஷ்ணனைப் பற்றி உட்பொதிந்து கிடக்கும் அவனது சத்தியமான திப்பிய கலியாண குணங்களைக் கடலமுதெடுத்துக் கரையில் வைத்தது போல் நம் பகவான் பிரகாசப்படுத்தியுள்ளார். பதினைந்து நிமல கருத்துரைகளும் விலைமதிப்பற்ற பதினைந்து நிமல மாணிக்கங்கள்.

நாடு வாழ, உலகம் வாழ, உலகில் உள்ள தீமைகள் நலிய, நன்மைகள் பொலிய நம் சாயி பகவான் ஆற்றிய இவ்வருளுரைகளைக் கசடறக் கற்றபின் அதற்குத் தக நின்று மரணமில்லாப் பெருவாழ்வு எய்தி சிறப்போமாக.

இத் தமிழாக்க நூலைச் சமைத்த தத்துவத்துறைத் துணைப் பேராசிரியர் திருவாளர் C.குப்புசாமி பகவான் திருவருளால் சகல மங்களங்களும் பெற்றுத் திகழ்வதாக, பகவான் ஸத்யஸாயியின் அஞ்சலென்ற கரதலம் அம்புவிக்கு முழுநலம்.

திருவல்லிக்கேணி
31–10–80

இங்கனம்
C.ஜெகந்நாதாசார்யர்

## முன்னுரை

உலகில் தர்மம் தழைக்க மானுடச்சட்டை தாங்கிய பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா அவர்கள் ஸத்யஸாயி கல்லூரியைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு 1976ஆம் வருடம் மே மாதம நீலகிரியில் கோடை வகுப்புகளை ஏற்பாடு செய்து நாடோறும் நல்கிய ஞானவுரைகளைத் தொகுத்து டாக்டா பகவந்தம் அவர்கள் ஆங்கிலத்தில் 'Summer Roses on Blue Mountains' எனும் புத்தகமாக வெளியிட்டார். இது "ப்ரீ சேவாதள" இறுதியாண்டு மாணவர்களுக்குப் படிப்பதற்கென விதிக்கப்பட்டுள்ள ஓர் உயரிய நூல். தமிழில் படிக்க விரும்பும் பக்தர்களின் பயனுக்காக, இந்நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கும்படி தமிழ் நாட்டு ஸத்யஸாயி சங்கங்களின் மாநிலத் தலைவரான உயர்திரு P.G.அச்சுதானந்தம் அவர்கள் பணித்தமையின், பகவானின் பேரருளை மேற்கொண்டு எழுந்த என் முயற்சியின் விளைவாய், இம்மொழிபெயர்ப்பு உருவானது. இருப்பினும், கற்றுத்துரை பேரருளை மேற்கொண்டு எழுந்த என் முய ற்சியின் விளைவாய், இம்மொழிபெயர்ப்பு உருவானது. இருப்பினும், கற்றுத்துறை போகிய பேரறிஞரும் எனது பேரன்பிற்கும் பெருமதிப்புற்குமுரியராயும் உள்ள பேராசிரியர் உயர்திரு. C. ஜகந்நாசார்யர் அவர்களை இந்த மொழிபெயர்ப்பைச் செப்பனிட்டுச் சீர் செய்ய வேண்டுமென மிக்க தாழ்மையுடன் வேண்டிக் கொண்டேன். அவரும் பேரருள் கூர்ந்து ஒரு கண்பார்வை சீரற்ற நிலையிலும், மொழிபெயர்ப்பின் ஒவ்வொரு வரியையும் உ ற்று நோக்கி உரிய இடங்களில் மாற்றங்களை நல்கி ஏற்றமும் தோற்றமும் அளித்தார். அவரது பெரும் பணிக்கு நல்லோர் வணக்கங்கள் என்றும் உரித்தாகுக. இம்மொழிபெயர்ப்பு நூல் எம்பெருமானாகிய ஸத்ய ஸாயியின் திருவடித் தாமரைகளில் சமர்ப்பிக்கப்படுகிறது.

சென்னை – 94.<br>31–10–1980.

இங்கனம்<br>C.குப்புசாமி.

# பொருளடக்கம்

கருத்துரைகள்


1. தொடக்கம் – கோடை வகுப்புகளின் குறிக்கோள்,

2. மனித சகோதரத்துவமும் இறைவனுடைய பித்ருத்துவமும்.

3. தர்மம் எப்போதும் மாய்வதில்லை, அதனைக் கடைப்பிடித்தல் ஷணீத்துள்ளது.

4. அடக்கம், கீழ்ப்படிதல் என்னும் இரு பெருங்குணங்கள் கிருஷ்ணாவதாரத்தின் தனிச்சிறப்பாக விளங்கின.

5. கிருஷ்ணர் எப்போதும் சமாதனப்பிரியர், யுத்த வியாபாரியல்லர்.

6. மகாபாரதம் பல விலைமதிப்பற்ற பாடங்களை நமக்குப் புலட்டுகிறது.

7. ஒரு நல்ல அமைதியான மரணத்தை எல்லா தபோஞானியரும் விரும்புகின்றனர்.

8. மனிதன் தன் உள்முகக் காட்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

9. நல்லொழுக்கம், நற்செயல், நற்காட்சி – இவைகளே கடவுணெறியாகும்.

10. மனிதன் எந்தச் சமயத்திலும் ஒரு மிருகத்தைப்போல நடந்துக் கொள்ளக்கூடாது.

11. மனித உடம்பு ஒரு நீர்க்குமிழி போன்றது.

12. மனிதன் தன் அகங்காரத்தால் குருடனாகிறான்.

13. மனிதனுடைய மனம் பைத்தியம் பிடித்த குரங்கைப் போன்றது.

14. ஆண்டவனை அடைவதில் மிக விரைவான பாதை அன்புப் பாதையாகும்.

15. உங்கள் மனசாட்சியே உங்கள் யஜமானனும் வழிகாட்டியும் ஆகும்.

# 1. தொடக்கம்

## முதலாவது கருத்துரை

### கோடை வகுப்புகளின் குறிக்கோள்.

உங்கள் தமோகுணத்தையும் கோபத்தையும் விட்டொழிக்காமல் ஆன்மீகப் பிண்ணனியை நீங்கள் எங்கனம் ஆன்மீகப் பிண்ணனியை நீங்கள் எங்கனம் புரிந்து கொள்ளப் போகிறீர்கள்? உங்கள் ரஜோகுணத்தையும் தீய மன எழுச்சியையும் போக்காமல் ஆன்மீக விஷயங்களில் நீங்கள் எங்கனம் ஈடுபாடு கொள்ள முடியும்? உண்மையில் மூன்று குணங்களில் மிகச் சிறந்த குணம் சத்வகுணமே; அக்குணமே பக்தியைப் பெருக்குகிறது—அதுதான் மிகச்சிறந்த சாதனை ஆகும். நான் உங்களிடம் சொல்லிக் கொண்டிருப்பது மிகவும் எளிய ஆரம்ப உண்மையாகும்.

திவ்யாத்ம ஸ்வரூபிகளே! இந்த நாட்டின் எதிர்காலக் குடிமக்களாக விளங்கப் போகும் சிறுவர்களே! சிறுமியர்களே! மனிதன் பிறந்த உடனேயே செய்யும் முதல் பணி தன் தாயையும் தந்தையையும் புரிந்து கொள்வதாகும். நாம் வாழும் சமுதாயத்தின் பரந்த நிலையில் ஒருவன் தன் பெற்றோர்களைப் புரிந்து கொண்ட பின்பு தன்னுடைய தாய்நாடு, தாய் நாட்டின் நாகரிகம்—இவற்றின் பொருளையும் முழுமையான பெருமையையும் புரிந்து கொள்வதற்கு முயல வேண்டும். நமது நாட்டின் சரித்திரமும், நமது பாரம்பரியங்கள், பண்பாடுகள்—இவற்றின் சரித்திரமும் நமது உண்மையான பெற்றோர்களாகும். நமது நாட்டின் சுதந்திரத்தைப் பெற்று இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் கழித்த போதும், நமது சுதந்திர காலம் முழுவதிலும் நமது நாட்டின் பண்பாட்டைப் பிரதிபலிக்கக் கூடிய ஒரு புத்தக்கத்தையேனும், புனித நூலையேனும் நாம் உருவாக்க இயலவில்லை என்பது மிகவும் துரதிருஷ்டமாகும். இந்த நாட்டில் நாம் உண்மையான சரித்திரத்தைப் பலவழிகளிலும் கேட்டுக் கொண்டிருந்த போதிலும் நமது நாகரிகத்தின் சாரத்தை உண்மையாக உணர்ந்து கொள்வதற்கு இயலாதவர்களாக இருக்கிறோம். காலத்தால் மாறுபடாத அத்தகைய சாசுவாத உண்மையே, புரட்சிகளால் பாதிக்கப்படாத, மாறாத, அத்தகைய அழியாத உண்மையே, நமது பண்பாட்டின் சாரமும், உண்மையான வடிவமும் ஆகும். அத்தகைய உண்மையின் உறுபொருளும் பெருமையும் நமது நாட்டின் சரித்திரத்தைப் பிரதிபலிக்கின்றன. இத்தகைய நமது புனித சரித்திரத்தை மறந்துவிட்டு, சிறிது காலமே இருக்கக்கூடிய, மாறுகின்ற, செய ற்கையான வழிமுறைகளை நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். இத்தகைய மாற்றத்தினால் நமது நாட்டின் உண்மையான நிலை எது என்பதைச் சொல்லி நிலைநாட்ட எந்த மாணவனும் இயலாதவனாய் இருக்கின்றான்.

துரதிருஷ்டவசமாக, இன்று ஒவ்வொரு மாணவனும் தேர்வில் வெற்றி பெறுவதற்கு எல்லா முய ற்சிகளையும் எடுத்துக் கொள்கிறான். உண்மையான கல்வியின் உள்ளூறையும் ஞானத்தை உணர்வத ற்கு அவன் எந்த முயற்சியும் செய்வதில்லை. இன்றைய மாணவர்கள் மலிவான, தரங்கெட்ட புத்தகம் அல்லது குறிப்புரை ஏதேனும் ஒன்றை நேர்வழியிலோ மறைமுகமாகவோ எப்படியேனும் பெறுவதற்கு முய ற்சி செய்து கொண்டு, அத்தகைய தரமில்லாத புத்தகங்களிலிருந்து ‘காப்பி’ யடித்தும், அல்லது ஆசிரியர்களை அச்சுறுத்தியும், தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு தேர்வில் மட்டும் வெற்றி பெற விரும்புகின்றனர். தூங்கியெழும் காலத்திலிருந்து மீண்டும் தூங்கப்போகும் வரை இத்தகைய அற்பமான முறையிலே மனிதன் தன் காலம் முழுவதையும் செலவழிக்கிறான். மற்றவர்களை அடுத்து வாழவேண்டிய நிலையில் மனிதனுடைய வாழ்வுமுறை இன்று அமைந்து விட்டது. மனிதன் எப்போதும்

அவசர நிலையில் வாழ்கிறான். ஒன்றிலிருந்து மற்றொன்றைத் தேடி ஓடுவதிலேயே தன் காலம் முழுவதையும் வெறுமனே செலவிடுகிறான். பேருந்தில் இடம்பிடிக்க ஓடுகிறான்; திரைப்பட அரங்கின் நுழைவுச் சீட்டுக்காகப் பறக்கிறான்; கல்லூரியில் சேர்வதற்காக ஓடுகிறான்; இதையேனும், அதையேனும், ஏதேனும் ஒன்றைப் பெறுவதற்காகத் தன் வாழ்நாள் முழுவதும் ஓடுகிறான். இத்தகைய அவசரத்தில் பொருள்களைத் தேடிப் பெறுவதற்காக அவர்கள் செய்யும் செயல்களிலே ஒவ்வொன்றிற்காகவும் காத்திருக்க வேண்டிய துரதிருஷ்டத்தில் அவர்கள் ஆழ்கிறார்கள். ஒவ்வொன்றிற்காகவும் மற்றவர்களை அடுத்து வாழும் ஒரு பறவை அல்லது பூச்சியினுடைய வாழ்க்கை போன்று நமது வாழ்க்கை தோன்றுகிறது. பயனற்ற கதைகளைப் படிப்பதற்காக நம் நேரம் முழுவதையும் இன்று நாம் செலவிடுகிறோம். நமது கலாச்சாரத்தின் பயனுள்ள அம்சங்களையும் பயனுள்ள சரித்திரத்தையும் படிப்பதற்கு ஒருவனுக்கு நேரமிருப்பதில்லை. இது மட்டுமல்ல; மனிதன் தான் அடைய விரும்பும் அனைத்தையும் குறுக்குவழியில் அடைய விரும்புகிறான். மனிதன் பயிரிட்டு விளைவிக்க முய ற்சி செய்வதை விரும்புவதில்லை; யாரோ ஒருவரால் செய்யப்பட்ட அறுவடையைப் போய்த் திருட விரும்புகிறான். எதற்கும் பாடுபட்டுப் பயன்பெற அவன் விரும்புவதில்லை. மற்றொருவனுடைய பையிலிருந்து பணத்தை திருடிச் சம்பாதிக்க அவன் விரும்பிகிறான். இது போலவே ஒவ்வொன்றிற்கும் குறுக்கு வழிகளைக் கையாள அவன் விரும்புகிறான். இங்கனம் வாழவிரும்பும் ஒருவனுடைய அறிவு வளர்ச்சி எங்கனம் பரந்து விரிய இயலும்? ஆன்மிகப் பிண்ணனி மலர்ச்சி பெறாதவன் தன் வாழ்வின் முழு நோக்கத்தையும் ஒருபோதும் புரிந்து கொள்ள மாட்டான். பல புத்தகங்களைப் படிப்பது மட்டுமே கல்வி என்று கூற இயலாது. இந்தப் பிரபஞ்சத்தில் நாம் பார்க்கக் கூடிய பரந்து பட்ட படைப்பினுள் உள்ள மதிக்க இயலா மாபெரும் சக்தி நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய உண்மையாகும். மனிதனுடைய பிறப்பும் இறப்பும் சாதாரண விஷயங்கள் போல நமக்குத் தோன்றினாலும், பிறப்பு, இறப்பு இவற்றின் இரகசியத்தை உணர்வது மிகவும் கடினமான விஷயமாகும். மனிதனுடைய பிறப்பு, இறப்பு, மனித வாழ்வு—இவற்றின் காரணத்தை உணர்ந்து கொள்வதற்கு எவரும் முயற்சி செய்வதில்லை. மனிதன் என்ற முறையில் ஒருவனுடைய பொறுப்புகள், கடமைகள் எனை என்பதை உணர்ந்து கொள்வதற்கு ஒருவன் எத்தகைய முயற்சியும் செய்வதில்லை. இன்றைக்கு உலகத்தில் ஏன் இவ்வளவு அராஜகமும் குழப்பமும் இருக்கின்றன? ஏன் இங்கு அமைதி இல்லை? இது எதனால்—படித்தவர்கள் இல்லாமையினாலா? கல்வி நிலையங்கள் இல்லாமையினாலா? இல்லை. படித்தவர்கள் பல பேர் இருக்கிறார்கள். ஆனால், தேவையான பண்பாடும், கல்வி நிலைக்கேற்ற பரந்த நோக்கும் அவர்களிடம் இல்லை. படித்தவர்கள் பல பேர் இருக்கிறார்கள். ஆனால், தேவையான பண்பாடும், கல்வி நிலைக்களஞ்சியம் என நம் நாடு அறியப்படுகிறது. இருந்தாலும் நம் நாட்டின் ஆன்மீகச் செல்வத்தையும் உண்மையான பலத்தையும் நாம் மறந்து கொண்டு வருகிறோம்.

கல்வி என்பதன் பொருளைக் கூடக் குழந்தைகள் புரிந்து கொள்வதில்லை? ‘வித்’ என்ற வேர் ச்சொல்லோடு ‘யா’ என்பதைச் சேர்த்தால் ‘வித்யா’ என்னும் சொல்லை நீங்கள் பெறுகிறீர்கள். இங்கு ‘வித்’ என்பதன் பொருள் ‘ஒளிவிளக்கம் ; ‘யா’ என்பது ‘அது’ என்பதைக் குறிக்கிறது. ஆகையால், எது ஒளியையும், ஒளிவிளக்கத்தையும் தருகின்றதோ அது வித்யை ஆகும். எது உங்களுக்கு ஒளியைத் தந்து அறியாமையைப் போக்குகின்றதோ, எது உங்களுக்கு ஞானத்தையும் பேரறிவையும் நல்குகிறதோ, அதைத்தான் வித்யை என்று அழைக்க முடியும். அறியாமையையும் இருளையும் பெருகச் செய்வதை வித்யை என்று அழைக்க இயலாது. நினைவிற்கு எட்டா காலந்தொட்டு நமது நாடு உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் வழிகாட்டியாக இருந்திருக்கிறது. இவ்வுலகில் தலைமைப் பீடத்திலிருக்கும் தனித்தகுதியை அது பெற்றிருந்தது. கடந்த காலத்தில் நாம் அனுபவித்திருக்கிற புனிதத் தன்மை இதுவேயாகும். அத்தகைய இலட்சிய வாழ்க்கைகளுக்கும் கற்பிக்கக் கூடிய தலைவர்கள் இன்று

இல்லாமையினால் நாம் தீய நிலைமைகளில் இழிந்துவிட்டிருக்கிறோம். இதற்குக் காரணம் என்னவெனில், மக்கள் பேசக்கூடிய சொற்களுக்கும், அவர்கள் செய்யக்கூடிய செயல்களுக்கும் ஒன்றிய தன்மை இல்லை. நீங்கள் எல்லோரும் பாரதநாட்டின் எதிர்காலக் குடிமக்கள், பாரத நாட்டின் க்ஷேமத்தை வளர்க்கப் போகிறவர்கள் நீங்களே. நாட்டின வளமையும் வாழ்வும் உங்கள் பொறுப்பினைச் சார்ந்திருக்கின்றன. உங்கள் வாழ்வும், இதயங்களும் தூய்மையுடையவை, புனிதமானவை, மாற்றம் அற்றவை. நாட்டில் நிலவும் குழப்பமும் அராஜகமும் உங்கள் தூய்மையான, மாறாத, புனித மனங்களை மாற்றுவதற்கு நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள் என நான் நம்புகிறேன். இந்த நாட்டின இலட்சியக் குடிமக்களாக நீங்கள் வளர்வீர்கள் என நான் நம்புகிறேன் ஒழுக்கம் என்பதைப் பற்றி நாம் ஓயாமல் பேசுகிறோம். ஒழுக்கத்தைக் கடைபிடிக்கும் உறுதியும் நம்பிக்கையும் பெறாமல் ஒழுக்கத்தைப் பற்றி ஓயாமல் பேசுவது மட்டும் எந்த நன்மையும் பயக்காது. கட்டுப்பாடு, கடமை என்பதோடு நாம் கடவுள் பக்தியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடு, கடமை, கடவுள் பக்தி—இம் மூன்றையும் ஒரு சேர உங்கள் இதயத்தில் பதித்த பின்பே உங்கள் உள்ளம் புனிதத் தன்மையுடன் பொலிந்து விளங்கும். இன்றைக்குத் துரதிருஷ்டவசமாக மிகவும் படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் பாராட்டப்படுபவர்களும் கூட நடைமுறை வாழ்க்கையில் பலவீனர்களாகத் தோன்றுகிறார்கள். அத்தகைய மக்கள் உண்மையான கல்வியின் மதிப்பை உணரவில்லை. ஒரு மாணவன் சற்று முன் கூறியதுபோல், கல்விநிலை என்பது வயிற்றுப் பிழைப்புக்காகப் பிச்சை எடுக்கும் பாத்திரமாக மாறிவிட்டது.

மாணவர்கள் ஒரு பட்டம் பெற்ற பின்பு சமுதாயத்திற்குப் பயன் தரும் தொண்டு ஒன்றை ஏற்க வேண்டும். இதற்கு மாறாக வேலைக்காக நீங்கள் அலைந்தால் அல்லது கெஞ்சினால் அது சரியல்ல. உடலென்னும் இரத்தத்திற்கும், ஆத்மா என்னும் அச்சாணிக்கும் உள்ள சம்பந்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை. இக்குறைய நிவர்த்தி செய்வதற்காக – அதாவது, தேகாத்ம சம்பந்தத்தையறிவதற்காக ஒருவன் குடும்பத்தையும் வீட்டையும் விட்டுவிடவேண்டுமென்பது யோகத்தின் பொருளல்ல. காட்டிற்குப் போய்த் தியானத்தில் ஆழ்வதை யோகம் குறிக்கவில்லை. இன்றைக்குத் தான் வாழும் சமுதாயத்தில் பல பிரச்சினைகளைத் தைரியமாக எதிர்கொண்டு ஏற்று, அவற்றை நீக்குவதே யோகத்தின் உண்மையான பொருளாகும். ஒவ்வொரு மனிதனும் இன்பத்தையும் அமைதியான வாழ்வையும் நாடுகிறான். தான் வாழும் சமூகத்தில் ஒரு மதிக்கத் தகுந்த நிலையை எய்த ஒவ்வொருவனும் விரும்புகிறான்; நல்ல ஆரோக்கியமும், இந்த அமைதியான வாழ்வும் யோகத்தின் ஒரு பகுதியாகும். இந்த ஆனந்தத்தையும் அமைதியையும் அனுபவிப்பதற்கு இயலும் வண்ணம் நாம் ஓர் உபாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அதுதான் நாம் பேசும் யோகம்.

பகவத்கீதையிலே அர்ச்சுனனுக்குக் கற்பிக்கப்பட்ட யோகமானது, அவன் எதிர் கொண்டிருந்த பிரச்சினைகளுக்குப் புறங்காட்டாமல் அவற்றைச் சமாளிக்கும் ஆற்றலை அவனுக்கு அளிப்பதற்காக. பிரச்சினைகளைச் சமாளித்து அவற்றிற்குத் தீர்வு காணவேண்டும் என்பது அர்ச்சுனனுக்கு அளிக்கப்பட்ட பாடமாகும். மாணவர்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய யோகம் என்னவென்றால், நாட்டிலும் சமுதாயத்திலும் உள்ள பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு உதவி செய்யும் யோகமாகும். கடவுளுடைய அருளால் நீங்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படும். உங்களில் உள்ள சுயநலத்தையும், இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும். உங்களில் உள்ள சுயநலத்தையும், அகங்காரத்தையும் தூக்கியெறியுங்கள். சமூகப் பிரச்சினைகள் உங்கள் சொந்தப் பிரச்சினைகளாகவே கருதி நீங்கள் அவற்றைத் தீர்க்க வேண்டும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாணவர்கள் முன்வர வேண்டும் என்பது அவசியம். உங்கள் மாணவர்களாக உள்ளவர்கள் இம்மாதிரிப் புனிதக் கூட்டங்களில் பெரியோர்கள் அளிக்கும் செய்திகளைக் கிரகித்து, நீங்கள் நாட்டின் பயனுள்ள குடிமக்களாக ஆகும் வண்ணம் உள்ள வாழ்வை

உருவாக்குவீர்கள் என நான் நம்புகிறேன். இது உங்களால் முடியும் என நான் நம்புகிறேன். உலகில் பிறந்த எல்லாப் பிராணிகள்ளும் மனிதனாகப் பிறப்பது மிகவும் அரியதும் அதிருஷ்டமானதும் ஆகும். மனிதனாகப் பிறந்த பின்பு, அறிவென்னும் அருங்கொடையைப் பெற்ற பிறகு, உங்கள் மனிதப் பிறப்பையும் மனித வாழ்வையும் நீங்கள் புனிதப்படுத்த வேண்டும். பத்து நல்ல விஷயங்களில் ஒன்றையேனும் நீங்கள் கடைப்பிடிப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். உங்கள் வாழ்வு முழுவதும் தொண்டர்களாகப் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும். தலைவனாக இருக்க ஒருபோதும் நினைக்காதீர்கள். நல்ல கீழ்ப்படிபவர்களாக ஆவது எப்படி என்பதை அறியாமல் இன்றைக்கு மக்கள் தலைவர்களாக ஆனதினால்தான் மிகவும் துரதிருஷ்டமான நிலையிலே உலகை இன்று காண்கிறோம். இத்தகைய நிலையில் உங்கள் வாழ்வு முழுவதும் மனித சமுதாயத்தின் தொண்டிற்குச் செலவிட நீங்கள் தயாராக இருக்கவேண்டும். முதன் முதலாக, உங்கள் சொந்த வீட்டிற்குத் தொண்டாற்ற வேண்டும். பிறகு உங்கள் கிராமத்திற்கு, அதன்பின் உங்கள் மகாணத்திற்கு, அதன்பின் உங்கள் நாட்டிற்கு நீங்கள் தொண்டாற்ற வேண்டும். உங்கள் சொந்த வீட்டிற்குத் தொண்டாற்றி அதன் நல்விளைவுகளைச் சாதிக்கவல்ல ஆற்றலைப் பெறாமல் எப்படி நீங்கள் நாட்டிற்குத் தொண்டாற்றி நல்விளைவுகளை உண்டாக்க இயலும்?

மாணவர்களே! முதலில் உங்கள் தந்தையையும் தாயையும் திருப்தி செய்ய வேண்டும். நமது மரபுகளின்படி, நமக்கு மனித உடலை ஈந்த தாயும் தந்தையும் கடவுளர்கள் போல நடத்தப்பட வேண்டும்; அவர்களுக்கு நம் நன்றியைக் காட்ட முடியவில்லையென்றால் திருப்தி செய்வதற்காகப் பல பெரிய மகான்கள் எல்லாவற்றையுமே அர்ப்பணம் செய்திருக்கின்றனர். சைதன்யர், புண்டரீகன் போன்ற மகான்கள் தங்கள் பெற்றோர்களுக்குத் தொண்டு செய்வதற்காக எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்திருக்கின்றனர். முதலில் உங்கள் தாய்க்கும் தந்தைக்கும் நன்றியுணர்ச்சியைக் காட்டி அவர்களுக்குத் திருப்தி அளிக்க வேண்டும். பிறகு நீங்கள் நாட்டிற்குத் தொண்டாற்ற முயற்சி செய்யலாம். நீங்கள் எடுத்துக்கொள்ளும் பணிகள் எல்லாம் காலத்தை வீணடிக்காகத வண்ணம் இருக்கவேண்டும். நமக்கு ஒவ்வொன்றும் கால ஸ்வரூபமே. உண்மையில், இப்படைப்பிலே நாம் பார்க்கக்கூடிய அனைத்தினுடைய அடிப்படையான ஆதாரம் காலம்தான். நாம் காலத்தை வீணடித்தால் நமது முழு வாழ்வையும் உடலையும் வீணாக்குகிறோம். இன்றைக்குக் கோடை வகுப்புகளை நாம் ஆரம்பிப்பதன் குறிப்பு என்னவெனில், நம்மிலுள்ள ஆத்ம சக்தியை நாம் உணர்வது ஆகும். இந்த ஆன்மிக சக்தியை வளர்த்து, அதை மலரச் செய்து, அதை மற்றவர்களுக்கு உபயோகுமாகும் படி சமுதாயத் தொண்டிற்கெனத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள சங்கங்கள் மற்ற சங்கங்களுக்கு இலட்சியம் காட்டும் வண்ணம் தனிப்பட்ட பிரத்யேகமான சிறப்பு அம்சம் ஒன்றைத் தன்னில் கொண்டிருக்க வேண்டும். நமது கோடை வகுப்புகளை இன்று நாம் ஆரம்பிக்கிறோம். அனுபவம் பெற்ற பெரியோர்கள் பலர் வந்து உங்களுக்கு உரையாற்றுவார்கள். அவர்களுடைய விழுமிய கருத்துகளை நீங்கள் உங்கள் உள்ளங்களில் பதித்துக் கொள்வீர்கள்; உள்ளத்தில் பதித்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் முயற்சி செய்து செயலாற்ற அவற்றைக் கடைப்பிடிப்பீர்கள் என நான் நம்புகிறேன். உங்கள் எல்லோரையும் ஆசீர்வதித்து என் உரையை முடிக்கிறேன்.

## இரண்டாவது கருத்துரை.

## மனித சகோதரத்துவமும் இறைவனுடைய பித்ருத்துவமும்.

நற்குணங்களில்லாத குழந்தைகள், நன்னடத்தையைக் குறிக்கோளாகக் கொள்ளாத கல்வி, நீதியில்லாத வாழ்கை—இவை நோக்கமற்றவையும் பயனற்றனவுமாகும். மன அமைதியில்லாத மனிதனும், சந்திரனில்லாத உலகும் இவை போன்றே நோக்கமும் பயனுமற்றவை ஆகும்.

பவித்ராத்ம ஸ்வரூபிகளே! இவ்வுலகப் படைப்புவகை ஒவ்வொன்றும் தனக்கே உரிய சில தனித்த குணநலன்களைப் பெற்றுள்ளது. இவ்வுலகிலுள்ள ஒவ்வொன்றும் இந்தத் தனித்த தன்மையைக் கைவிட்டால், அது தன்னை அழித்துக்கொள்ளும் இதற்குச் சில உதாரணங்கள் இருக்கின்றன. எரிப்பதற்குரிய இயல்பும், சக்தியும் நெருப்பிற்கு உண்டு. நீரிற்கு ஓடும் தன்மையுள்ளது. மனித இயற்கை என்னும் தன்மையை மனிதன் பெற்றுள்ளான். விலங்காக இருக்கும் தன்மை மிருகத்துக்கு இருக்கிறது. அடிப்படையான மனிதத்தன்மைக்குரிய உள்காட்சி மறையும்போது, ஒருவனை மனிதன் என நீங்கள் அழைக்க முடியாது. புறக்காட்சி அல்லது விலங்குத்தன்மை நீங்கும்போது ஒன்றை விலங்கு என நீங்கள் அழைக்க முடியாது. ஒவ்வொன்றுக்கும் உள்ளார்ந்த இயற்கை இருக்கிறது என்பதையும் நாம் இங்குப் பார்க்கிறோம். உள்காட்சி (உள்ளொளி) பெறுவது ஒரு மனிதனுடைய உண்மையான தன்மையாகும். மிருக லட்சணப்படி ஒரு விலங்கு வெளிப்புறமே பார்க்க இயலும். ஒருவன் மனிதவடிவில் இருக்கலாம். ஆனால் அவனுக்குக் புறக்காட்சி மட்டுமே இருந்து, தன்னுள் பார்க்க (அக்காட்சி) இயலவில்லை என்றால், அவனை மனிதன் என அழைக்க முடியாது. அவன் விலங்கு என்று அழைக்கப்படுவான். இந்த வகைகளில் ஒவ்வொன்றும் விதித்த குணத்தை வெளிக்காட்டுவதால் அல்லது ஆடைபோல் தரிப்பதால் இந்தத்தன்மை அதன் தருமம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தத்தருமம் பலவித வடிவங்களை எடுத்துக்கொள்கிறது. தனக்கே உரிய இயற்கைத் தன்மையையோ, தருமத்தையோ ஓர் இனமானது அதிகம் பெற்று, அதனுள் ஏதேனுமொரு அம்சத்தை அதிகமாகப் பெருக்கும்போது, அதன் தருமத்தை முன்னேற்றும் முயற்சியாகும் அது' எனக் குறிப்பிடப்படுகிறது. முயற்சியால், ஒரு மாணவன் ஒரு வகுப்பிலிருந்து உயர் வகுப்புக்கு உயர்த்தப்படுவதுபோல், தனக்கே உரிய ஒன்றுக்குக் கவனம் செலுத்துவதாலும் உயர்ந்த, சிறந்த ஒன்றுக்குக் கவனம் செலுத்துவதாலும் ஒரு மனிதன் சிறந்த நிலைக்கு உயரமுடியும். அடுத்தடுத்து உஷ்ணத்தால் ஏற்படும் செயல் நிலைகளால் பண்படுத்தி ஓர் உயிரற்ற இரும்புத்துண்டைப் பல உபயோகரமான கருவிகளாக மாற்ற முடியும்.

சில பைசாக்களே விலைபோகக் கூடிய பண்படுத்தப்படாத ஓர் இரும்புத் துண்டிலிருந்து, தேவையான மாற்றங்களைச் செய்து ரூபாய் 300 விலையுள்ள ஒரு கடிகாரத்தை நாம் உற்பத்தி செய்ய முடியும். நாம் பொருளுக்குச் செய்யும் ஸம்ஸ்காரம் அல்லது மாற்றத்தினால்தான் மதிப்பு பெறுகிறது, ஸம்ஸ்காரம் இல்லாத பொருளின் உள்ளார்ந்த மதிப்பினால் அல்ல என்பதை நீங்கள் இங்குக் கவனிக்க வேண்டும். இந்த உவமையைப்போல், ஒரு சாதாரண உயர் நிலையில்லா மனிதன், உயர் மக்களின் சகவாசத்தைத் தேடுவதால், பரமஹம்சர் நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தைப் பெறுகிறான். புலன் உறுப்புகளின் உதவியால் மனிதன் அத்தகைய புனித ஞானத்தைப் பெற விழைகிறான். மனம் நன்மையையும், தீமையையும் பிரித்துப் பார்க்க இயலாத சூழ்நிலையில், மனதிற்கு மேலாக நன்மையையும் தீமையையும் பகுத்துணரும் நோக்கத்திற்காகப் புத்தி முன் வருகிறது. புத்திகூட, தானாகவே நன்மையையும் தீமையையும் முடிவு செய்ய முடியாது; தனக்கு முன் வைக்கப்படும் உண்மைகளிலிருந்துதான் அது தீர்ப்பளிக்க முடிகிறது. தனக்கு முன் வைக்கப்படும் உண்மைகளின் அடிப்படையில்தான் சரியானது எது, தீமையானது எது என்பதை ஒரு நீதிபதி முடிவு செய்கிறார் என்பதை நாம் அறிவோம். இந்த உவமையைப் போல், தனக்கு முன் வைக்கப்படும் உண்மைகளின் அடிப்படையில், நன்மையையும், தீமையையும் பற்றிப் புத்தி முடிவெடுக்கிறது; உண்மைகளைக் கடந்து முடிவெடுக்கப் புத்தியால் முடியாது. தர்மநடத்தையையும், தருமத்தைக் கடைப்பிடித்தலும் மனதின் தன்மையாகும். தனக்கு முன் வைக்கப்படும் உண்மைகளின் அடிப்படையில் நன்மையையும், தீமையையும் பகுத்துணர்வது புத்தியின் தன்மையாகும். இன்றுள்ள உலகத்தில், புத்தியை நான்கு வேறு வகைகளாக வகுக்கலாம். இவைகளில், முதலாவது – சுயநலம்மிக்கது ஆகும்; இரண்டாவது – சுயநலமுற்றதும் சுயநலமற்றதும் ஆகும்; மூன்றாவது – முற்றிலும் சுயநலமற்றது ஆகும்; நான்காவது – ஆத்மாவின் அடிப்படையில் அமைந்தது ஆகும். முதலாவது வகையான புத்தி

எப்போதும் தனக்கு மட்டும் என்ன நன்மை என்பதையே நினைத்துக்கொண்டு, தனக்கு மட்டும் நன்மையானதை முடிவு செய்கிறது. அது ஒரு காக்கையின் புத்தியைப் போன்றதாகும். இவ்வகையான புத்தி இன்று மிகவும் வழங்கி வருவது ஆகும், உலகத்தில் பெரும்பாலான மனிதர்களில் இவ்வகையினரை நாம் பார்க்கிறோம். இரண்டாம் வகையான புத்தியில் ஒரு பகுதி சுயநலம் மிக்கது, இன்னொரு பகுதி சுயநலமற்றது ஆகும். இது மற்றவர்களுடைய நன்மையுடன் தங்கள் சொந்த நன்மையையும் நினைக்கும் இது சாதாரண வாழ்வு முறையாகத் தோன்றுகிறது சுயநலமற்ற புத்தி என விவரிக்கப்படும் மூன்றாம் வகையான புத்தி எப்போதும் மற்றவர்களைப் பற்றி நினைக்கிறது. மற்றவர்கள் அடைய வேண்டிய மகிழ்ச்சியைத் தான் அடைய வேண்டிய மகிழ்ச்சியாக நினைக்கிறது; மற்றவர்கள் விட்டொழிக்க வேண்டிய துக்கத்தைக் கூடத் தான் விட்டொழிக்க வேண்டிய துயரமாகக் கருதுகிறது. நீங்கள் ஒரு நாயை போஷித்துக் காப்பாற்றும் வரை, அது எஜமானனைத் தொடர்கிறது. நீங்கள் ஒருவருக்கு சம்பளம் கொடுக்கும்வரை, அவர் உங்களிடமிருந்து உங்களுக்குத் தொண்டாற்றுகிறார். நீங்கள் அன்புகாட்டாமல், உணவு கொடுக்காமல் தடியொன்றால் நாயை அடித்தால் நாய்கூட உங்களைக் கடிக்கும். அதுபோலவே நீங்கள் ஒரு வேலைக்காரனைப் பாதுகாக்காமல் அவனைத் தூரத்தில் தள்ளினால், வேலைக்காரன் உங்களுக்கு ஊழியம் செய்வதை நிறுத்திவிடுவான். இதே முறையில் நீங்கள் மற்றவர்களுக்கு நன்மையை விரும்பினால், நீங்கள் நன்மையைப் பெறுவீர்கள்; ம ற்றவர்களுக்குத் தீமையை விரும்பினால் நீங்கள் தீமையை அடைவீர்கள். இந்நிலையில் மனித உடல் ம ற்றவர்களுக்கு நன்மை செய்வதாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து மூன்றாம் வகையினரான மனிதர்கள் மற்றவர்களுக்கு எப்போதும் நன்மையே செய்ய விரும்புவார்கள். இவர்களின் புத்தி எப்போதும் ம ற்றவர்களுக்கு நன்மையை நினைத்துச் செய்யும் புத்தி வகை என்று விவரிக்கப்பட்டுள்ளது. நாலாம் வகையான புத்தி ஆத்மபுத்தி  தர்ம நிலையோடு இணைந்திருக்கும். தன்னைக் கடவுளின் தூதன் என இப்புத்தியுள்ளவன் எப்போதும் நினைக்கிறான். தன் சுயநலங்களை மறந்துவிட்டு அவன் எப்போதும் தியாகத்தைப் பற்றி நினைக்கிறான். உலகமனைத்திற்கும் நன்மையைச் செய்கிறான். இந்நிலையில், உண்மையொன்று மட்டுமே எது, நன்மை எது தீமை என்பதைப் பற்றிய முடிவெடுக்கும் உரிமை பெற்றுள்ளது. அத்தகைய முடிவெடுப்பதற்கு மற்றவர்களுக்கு உரிமையில்லை. இந்நிலையினை விளக்க, "ஸத்யம் நாஸ்தி பரோ தர்ம": – ஸத்யத்தைக் காட்டிலும் உயர்ந்த தர்மம் வேறொன்றுமில்லை – என நமது வேதங்கள் கூறியிருக்கின்றன. உண்மையால்தான் சூரியனும் சந்திரனும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. உண்மையால்தான் பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்கிறது. உலக நடை இடையறாமல் போய்க்கொண்டிருப்பதும் இந்த உண்மையால்தான். ஆனால் இன்று மனிதனுக்கு உண்மையில் நம்பிக்கையில்லை, உண்மையை விரும்புவதில்லை. மனிதன் இன்று விரும்பாத ஒன்று உண்மை. தன்னைப் பற்றிய உண்மையைக் கண்டுபிடித்து அறிவதற்குக்  கூட அவன் எப்போதும் பின்னோக்கியே அடி எடுத்து வைக்கிறான். அவன் அத்தகைய உண்மையை அறிய வருவதற்குப் பயப்படுகிறான்.

தன்னுள் உள்ள உண்மைக்குப் பயப்படும் அத்தகைய மனிதன் உண்மை வழியை எப்படிக்கண்டுபிடிக்க முடியும்? உண்மை, பிரேமை, அஹிம்சை என்னும் சொற்களை ஒரு கிளியைப் போல் மேடையில் நாம் பேசுகிறோம். நமது அன்றாட வாழ்வில் நமக்கு உண்மையில் நம்பிக்கை இருப்பதில்லை. நாம் அஹிம்சையைக் கடைப்பிடிப்பதில்லை, நாம் பிரேம மார்க்கத்தைப் பின்பற்றுவதில்லை. இந்நிலையில், இன்றைய இளம் தலைமுறையினர் இந்தச் சொற்களை அநுஷ்டானத்தில் கொண்டுவர முயல வேண்டும். அவைகளை அர்த்தமில்லாமல் வெறுமனே சொல்லக்கூடாது. ஒருவனுடைய சொற்கள், எண்ணங்கள், செயல்கள் என்ற மூன்றின் அடிப்படையில் மனிதனுடைய வாழ்வு அமைந்துள்ளது. ஒருவனுக்கு என்ன ஆசை ஏற்பட்டாலும் அவன் அதை வெளிப்படுத்துவான், அதனைத் தன் மனதுக்கும் எடுத்துச் சொல்லுவான். ஓர் எண்ணம் ஏற்படுவதற்கு மனம் அடிப்படையாகும். உங்கள் மனதில் ஏற்படும் எண்ணம் வாய்ச் சொல்லாக உலகத்தில் எடுத்துக் காட்டப்படுகிறது. வாயினால் சொல்லைக்கூறி, எண்ணத்தை ஒரு தடவை நீங்கள் வெளிப்படுத்தும் போது, நீங்கள் அதைச் செயலில் காட்டும் வண்ணம் செயல் ஏற்படுகிறது.

எண்ணம், சொல், செயல் இவற்றிடையே இசைவு இருந்தால்தான் மனிதன் தன் உண்மையியற்கையை உணர்ந்து கொள்ளும் நிலையில் இருப்பான். எண்ணம், சொல், செயல் என்ற மூன்றையும் சரியான வழியில் கடைபிடிக்க முடியும் போது நாம் புண்ணியம் ஈட்டச் செய்கிறோம். ஆனால அவற்றைத் தீய வழியில் செலுத்தும் போது, பாவத்தை ஈட்டுவோம். நன்மைக்கோ, தீமைக்கோ, மூன்று அடிப்படையான பொருள்கள் – எண்ணம், சொல், செயல் என்பவை என்னும் தெளிவான முடிவுக்கு நாம் வருகிறோம். நம் எண்ணம், சொல், செயல் இவற்றைப் பரிசுத்தமாக்கும் வண்ணம், நாம் ஏதேனுமொரு சாதனையைக் கடைப்பிடிக்க வேண்டும். எண்ணம், சொல், செயல் இம்மூன்றிலும் இசைவைக் கொண்டு வர சரியான முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும். மனிதனைப் பற்றிய சரியான படிப்பு மனித குலத்தைப் பற்றிப் படித்து அறிவதாகும் எனப் பெரியோர்கள் சொன்ன போது, இந்தப் பொருளையே உணர்த்தினர். இந்த விதமான மனித இயற்கை இன்றிருக்கிறதா இல்லையா என்னும் விசாரணையை மேற்கொள்ளும் கட்டாயம் நமக்கிருக்கிறது.

இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களின் விலையும் ஏறிக் கொண்டே போகிறது. ஆனால் மனிதனுடைய மதிப்பு குறைந்து கொண்டே போகிறது. மனித இயற்கையின் உண்மை மதிப்பை உணரும் பாக்கியத்தைத் தான் பெறாததால் நாளுக்கு நாள் தன் மதிப்பு கீழிறங்கும் வண்ணம் மனிதனே நடந்து கொள்கிறான். முதன்முதலில், நமது மனதில் எழும் எண்ணங்களைப் புனிதப்படுத்திச் சிறந்ததாக்கும் முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும். உங்கள் மனதில் எண்ண அலைகள் எழுந்தவுடன் அந்த எண்ணங்கள் நல்ல எண்ணங்களா, கெட்ட எண்ணங்களா என்பதையும், அவை நாட்டின் நன்மைற்கு உதவுமா என்பதையும் உங்களைச் சுற்றியுள்ள சமுதாயத்திற்கு அவை உபயோகமாக இருக்குமா இல்லையா என்பதையும் ஆராய்வதில் ஒரு சில நிமிடங்களையாவது நீங்கள் செலவிட வேண்டும். மாணவர்களே! உங்கள் மனதில் எண்ணங்கள் எழுந்தவுடன் அவை நல்லவையா கெட்டவையா என்பதை முடிவு செய்வதில் கொஞ்ச நேரம் கழிக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அவை தீய எண்ணங்களாக இருந்தால் அவற்றைத் தள்ளிவிட வேண்டும்; அவை நல்ல எண்ணங்களாக இருந்தால அவற்றை வளர்க்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். முட்செடியைப் பார்க்கும் போது, முட்செடி என்றுணர்ந்தவுடன் அது களையப்பட்டு விடுகிறது. ஆனால் ஒரு நல்ல பழ மரம் வளரும்போது அதைக் காத்து அதன் வளர்ச்சியை மேம்படுத்த முயற்சி செய்கிறோம். இதுபோலவே, உங்கள் இருதயம் என்னும் வயலில் தீய எண்ணங்கள் படர்ந்தவுடனேயே, அவற்றைப் பிடுங்கித் தூர எறிய வேண்டும். விதைகள் ஒரு பெரிய மரமாக வளர்வது போல், மனிதனும் வளர்ந்து முடிவில் மாதவனாவதற்கு (தேவனாவதற்கு) முயற்சி செய்ய வேண்டும். இந்த இரண்டு வழிகளுக்கும், நமது சொந்த தன்மைகளே அடிப்படைப் பொறுப்பை ஏற்கின்றன. உயிரற்ற பொருள்களிலோ, உயிருள்ள பொருளிலோ, நல்ல தன்மைகளின் வளர்ச்சி அவற்றை நாம் எப்படி அதிகரித்துக் காக்கிறோம் என்பதையொட்டி அமையும். இவ்வுலகில் பிறந்தவெல்லாம் மாற்றம் அடைய வேண்டும். இவ்வுலகில் பிறந்த எல்லாப் பொருள்களுக்கும் மாற்றம் இயற்கையான குணமாகும். கணத்திற்குக் கணம் மாறும் பொருள்கள் மக்களுக்கு எப்படி சாசுவதமான ஆனந்தத்தைதத் தர இயலும்? சாசுவதமான இன்பமும் ஆனந்தமும் சாசுவதமான பொருள்களிலிருந்துதான் பெறமுடியும். மாறக்கூடிய பொருள்களிலிருந்து அல்ல. இன்று முதன்முதலில் நம் மனதில் எழும் எண்ணங்களைத் தெய்வீகமாக்கத் தேவையான முயற்சி செய்ய வேண்டும். இன்றைய இளம் மக்கள் தங்கள் மனங்களில் பொருளற்ற எல்லாவிதமான எண்ணங்களையும் நினைக்கிறார்கள். இந்தப் பொருளற்ற கொள்கைகளையும் எண்ணங்களைமுடையவர்களுக்குக் கூட புனித எண்ணங்களே பெரும் பயன் விளைவிக்கும். மனிதனுக்கு ஓய்வும் அமைதியும் இல்லை. இத்தகைய கவலையால் துன்பமுறும் மனிதன் அத்தகைய புனித எண்ணங்களை நினைப்பதால் பெருமளவிற்கு உதவி பெற்றவனாகிறான். நமது புனித எண்ணங்கள் ஒரு கர்ம காண்டத்தை – கர்ம வழியை – விதிக்கின்றன. அதைக் கடைப்பிடித்தால்தான் நாம் நல்ல எண்ணங்களையும் புனித எண்ணங்களையும் தோற்றுவிக்க முடியும். காலையில், நடுப்பகலில், மாலையில் சாப்பிடுவதற்காக நமக்கு உடம்பு தரப்படவில்லை. குறிப்பிட்ட

காலங்களில் நற்பணியைச் செய்து நமது உடம்பைத் தெய்வீகமாக்க வேண்டும். காலம், செயல், கடமை இவை மனிதனுடைய முதன்மையான பொறுப்புகளாகக் கருதப்பட வேண்டும்.

நினைவிற்கெட்டா காலந் தொடங்கி நமது புனித உபதேசங்கள் உள்ளன. இவற்றை மறந்து, இத்தகைய புனிதப் பொருளுக்குக் கவனம் செலுத்தாமல் இருத்தல் நமக்கு ஏற்றதன்று. நமது எண்ணங்கள், சொற்கள், செயல்கள் இவற்றை நாம் புனிதமாகக்கினால் இதைக் காட்டிலும் மனிதனுடைய முக்திக்குச் சிறந்த வழி இருக்க முடியாது. தான் ஏன் கல்வி முறையைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது? என்ற கேள்வியை ஒவ்வொரு மாணவனும் தனக்குள் கேட்டுக் கொண்டால் "இந்த இந்தப் பட்டத்தைப் பெறுவத ற்காக அல்லது இந்த இந்த வேலையைப் பெறுவதற்காக" என்ற பதில் கிடைக்கிறது; தான் நாடும் கல்வி அல்லது பட்டங்களின் விளைவாகத் தான் என்ன பெறமுடியும் என்பதையே எல்லாக் காலங்களிலும் நினைத்துக் கொண்டுள்ளான். இது ஒரு மாணவனின் சரியான மனநிலையன்று. தான் மற்றவருக்கு எப்படிப் பயன்பட முடியும் அல்லது தன்னுடைய பட்டம் தான் வாழும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் எங்கனம் பயன்படும் என்று தன்னைத்தான் கேட்டுக் கொள்வதுதான் ஒரு மாணவனுடைய சரியான மனநிலையாகும். வாழ்வு என்பது கொடுக்கல் வாங்கல் முறைமையாக இருக்க வேண்டும். எப்போதும் நீங்கள் வாங்கும் நிலையில் மட்டும் இருந்து கொள்ளும் "ஒரு வழிப்பாதை" யாக இருக்கக் கூடாது. கல்வியின் எல்லாவிதமான வேறுபட்ட கிளைகளும் தம்முள் சாரமற்றவை போல் தோன்றுகின்றன. இவ்வுலகில் வயிற்றுப் பிழைப்பை மட்டும் நடத்துவதற்கு உதவி செய்யும் பொருள்களாகத் தோன்றுகின்றன. உலகியல், பொருள்கள், ஆத்மீக விஷயங்கள் இவ்விரண்டையும் நிறைவு செய்வதாகக் கல்வி அமைய வேண்டும். கல்வியினால் பணிவு உண்டாகிறது. இவ்வுரிமையினால் நீங்கள் செல்வத்தை அடைய இயலும். செல்வத்தை நீங்கள் அடைந்தீர்களானால் நீங்கள் தர்ம மார்க்கத்தைக் கடைப்பிடிக்க முடியும். நீங்கள் தர்ம மார்க்கத்தைக் கடைப்பிடித்தால் இவ்வுலகிலும் ஆத்மவுலகிலும் நீங்கள் இன்பமாக இருப்பீர்கள். மாணவர்களே! வயிற்றுப் பிழைப்பிற்காக இருக்கும் ஒரே நோக்கத்திற்காகத்தான் கல்வி என்னும் எண்ணத்திலும், மாயையிலும் இருக்காதீர்கள். பிறந்த உலகிற்கும், வாழும் சமுதாயத்திற்கும் ஏதேனும் நன்மையைச் செய்வதற்கு நாம் பெறும்கல்வி உதவ வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆகாயத்தில் மேகங்கள் எங்கு எப்போது திரண்டாலும் அங்கு மின்னல் ஒளி தோன்றுவது போல் கல்வியுள்ள இடத்தில் மின்னல்போன்ற ஞானம் இருக்க வேண்டும். உங்கள் இதயம் என்னும் மேகங்களில் அத்தகைய புனித ஞானம் ஒளிவிடும்போதுதான், மற்றவர்களுக்கு ஏதேனும் நன்மை செய்து அவர்களுக்குத் தொண்டா ற்ற உங்கள் கல்வி உங்களுக்கு உதவ முடியும்.

ஒரு பள்ளியிலோ அல்லது கல்லூரியிலோ அல்லது ஒரு பல்கலைக் கழகத்திலோ க ற்றுக் கொள்வதுதான் கல்வி என்று நாம் கருதுகிறோம். அது சரியன்று. இந்த முழு பிரபஞ்சமும் நமக்குக் கல்வி அளிக்கும் இடமாகும். ஒருவர் பணியாளராக, விவசாயியாக, வியாபாரியாக இருந்தாலும், அவர் கற்க வேண்டிய பல பொருள்கள் உள்ளன. உண்மையில் நமது தொழில் என்னவாக இருந்தாலும் இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு கணமும் நாம் பல பொருள்களைக் கற்றுக் கொண்டு வருகிறோம். உண்மையில் பொது அறிவு என்ற பெயரால் அளிக்கப்படும் கல்வி நமது வாழ்வில் இன்றியமையாததாகும். இங்கு ஒரு சிறிய உதாரணம். M.A. பட்டம் பெற்றுள்ள ஒரு மாணவன் B.A. பட்டம் பெற்றுள்ள மாணவியை மணக்கும் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். காலப்போக்கில் ஒரு மகளைப் பெறுகிறார்கள். இந்த மகனுக்கு ஜலதோஷமா, காய்ச்சலோ வந்தால் என்ன செய்வது என்று அறியாது குழப்பத்தில் ஆழ்கின்றனர். அவர்கள் மகளை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடுகின்றனர். உங்கள் குழந்தை நோய்பெறும் ஒரு சூழ்நிலையைச் சமாளிக்கும் தைரியத்தையும், சக்தியையும் நீங்கள் பெற்றிருக்கவில்லை என்றால் நீங்கள் பெ ற்ற M.A. பட்டம் அல்லது B.A. பட்டத்தினால் என்ன பயன்? இதன் பொருள் என்னவென்றால், உங்கள் அன்றாட வாழ்வில் நீங்கள் ஒரு சூழ்நிலையைச் சந்தித்துச் சமாளிக்க வேண்டுமென்றால் நீங்கள் M.B.B.S.

பட்டம் பெறவேண்டியதில்லை. ஆனால் உங்கள் பாடத்தில் பெறும் அறிவுக்குக் கூடுதலாகப் பொது அறிவையும் பெற வேண்டும் என்பதேயாகும். ஒரு மாணவன் முதன்முதலாக உணர வேண்டியது “அன்றாட வாழ்வில் தனக்குத் தேவையானது என்ன?” என்பதேயாகும். நாம் நம்மையே ஒரு கேள்வி கேட்டுக் கொள்வோம். “நாம் B.A. பட்டம் பெற விரும்பினால், நாம் பாட புத்தகங்களை வாங்க முடியும், வீட்டிலேயே படித்துத் தேர்வில் வெற்றிபெற இயலும். இதற்காக நாம் ஏன் கல்லூரிக்குப் போக வேண்டும்?” கல்லூரிக்குப் போவதால், பல்வேறு விதமான மாணவர்களின் சகவாசத்தை நீங்கள் பெறுகிறீர்கள்; நாம் பலவிதமான மனப்பான்மைகளையுடையவர்களாக இருக்கிறோம். அவர்களுடனிருப்பதால் நீங்கள் சமாளிக்கவேண்டிய சூழ்நிலைகளைச் சமாளித்துத் தீர்வு காண்பதற்குத் தேவையான ஒழுங்கைப் பெறுகிறீர்கள். பௌதிகம், இராசாயனம், விலங்கியல், தாவரஇயல் போன்ற பாடங்களில் மதிப்பெண்களைப் பெற்று நீங்கள் தேர்வில் தகுதிகளை நீங்கள் பெறாவிட்டால், ஒரு விசேஷமான பாடத்தில் மதிப்பெண்களைப் பெறுவதில் பயனில்லை நமது மாணவர்கள் இந்த அம்சத்தைப் பற்றிக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் மதிப்பெண்கள் பெறாவிட்டால் பரவாயில்லை. ஆனால் நீங்கள் குற்றஞ்சாட்டப்படாமலிருக்கும் வண்ணம் ஏற்ற கட்டுப்பாட்டைப் பெற்று ஒழுக வேண்டும். உங்கள் ஆசிரியர்களை மதிக்க நீங்கள் முயல வேண்டும். உங்கள் நடத்தையால் உங்கள் ஆசிரியர்களைத் திருப்திப்படுத்த நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

கல்வியின் முக்கிய அடிப்படையை உங்களுக்குக் கற்றுக் கொடுப்பவரே உண்மையான ஆசிரியர் என்றும், கடவுளின் தெய்வத்தன்மையை அடைய நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களுக்குச் செல்பவரே உண்மையான தந்தை போல்வார் என்றும் பிரகலாதன் கூறியுள்ளார். அத்தகைய உண்மையான ஆசிரியரையே, உண்மையான தந்தை போல்வாரையே நீங்கள் நாட வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக, இன்று அத்தகைய ஆசிரியர்களும் தந்தை போல்வார்களும் உங்களுக்குக் கடைப்பிடிப்பதில்லை. இத ற்கிணங்க, இத்தகைய ஆசிரியர்களிடம் கல்விகற்கும் மாணவர்களும் சரியான வழியைக் கடைப்பிடிப்பதில்லை. தாம் வாழும் சமுதாயத்தை இருவரும் உண்மையாக ஏமாற்றுகின்றனர். இந்த இளம் வயதில், உங்கள் மனதில் உண்டாகும் புனித எண்ணங்களும், நீங்கள் பெறும் புனித அனுபவங்களும் உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. மோஹன்தாஸ்கரம்சந்த் என்ற ஓர் இளைஞன் ஹரிச்சந்திர நாடகத்தைப் பார்த்து, சத்தியத்தின் முக்கியத்துவத்தைக் கற்றுக் கொண்டான். அவன் தன் தாயிடம் சென்று தன் பிற்கால வாழ்வில் தான் சத்தியத்தைக் கடைப்பிடிப்பதாகக் கூறினான். சத்தியத்தைக் கடைப்பிடித்து மோஹன் தாஸ்கரம்சந்த் மஹாத்மா காந்தி என்று அழைக்கப்பெறும் மஹாத்மாவாகிப் பரிணமித்தார்.

அக்காலத்திலும், காந்தியைத் தவறான மார்க்கத்தில் செலுத்த விரும்பிய ஆசிரியர்களும் இருந்தனர். ஆசிரியர் தன்னைத் தவறான மார்க்கத்தில் செலுத்த முயன்றபோது காந்திஜி இணங்கவில்லை. அவர் சமுதாயத்தில் ஊன்றி நின்றார். இதன்காரணமாக முதலில் தன் ஆசிரியர் சொன்னதைக் கீழ்ப்படியாதவர் போல் பொருள்பட்டாலும், முடிவான நிலையில் வெற்றி பெற்றவரானார். இன்று சில ஆசிரியர்கள் உங்களைத் தீய நெறியில் செலுத்த முயலலாம். ஆனால் உங்கள் மனசாட்சிக்கு அது தீய நெறி எனத் தோன்றினால் ஆசிரியர்கள் ஆணைக்குக் கீழ்ப்படாமல் சரியான வாழ்வைப் பின்ப ற்றுதல் உங்களுக்கு மிக்க நன்மையுடைத்தாகும். உங்கள் மனதில் விகாரங்களை உண்டாக்கி, மனிதத்தன்மையையே, உங்கள் இதயத்தின் இனிமையையே அழிக்கும் வண்ணம் இன்று நீங்கள் பார்க்கும் திரைப்படங்களும் நாடகங்களும், சுவரொட்டிகளும் உள்ளன. நீங்கள் பார்க்கும் இத்தகைய நாசவிய ற்கையினால், நீங்கள் தீய எண்ணங்களை நினைக்கிறீர்கள். நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலையால் மக்களின் புனிதமான சஞ்சலமில்லாத தூயமன.கள் மாற்றப்பட்டு அழிக்கப்படுகின்றன. கவர்ச்சியின் இயற்கை நிலையிலாது மிகவும் மாறக்கூடிய தன்மையுடையது; அது ஒருபோதும் உண்மையாக இருக்கமுடியாது.

அத்தகைய செயற்கையான கவர்ச்சிகள் நமக்கு மிகவும் தீங்கு பயக்கமுடியும். உங்கள் அன்றாட வாழ்வில் நிகழும் அத்தகைய பல சம்பவங்கள் இருப்பதால், இத்தகைய பொது நிகழ்ச்சிகளை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. சிலர் நூல் நிலையம் அல்லது கல்லூரி போவதற்கு அல்லது சில கடமைகளைச் செய்வதற்குப் பஜாரில் மோட்டார் சைக்கிளில் போகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் மோட்டார் சைக்கிளை ஓட்டுபவர் ஓட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும். தான் சேர வேண்டிய இடத்தைப் பத்திரமாக அடைவதில் அவன் தன் சிந்தனையை ஒருமுகப்படுத்த வேண்டும்; ஆனால் இவற்றைச் செய்ய வேண்டிய ஆள் இந்த முறைகளை ஏற்றுக்கொண்டு கடைப்பிடிப்பதில்லை. மிக்க வேகத்துடன் தன் மோட்டார் சைக்கிளில் போகிறான், தான் ஓட்டுவதில் கவனம் செலுத்துவதில்லை. அவனது கவனம் சுவரொட்டிகளில் திரும்புகிறது. ஒரு காரின் மேலோ அல்லது மற்றொரு இயந்திர வாகனத்தின் மீதோ மோதி விபத்துக்கு உள்ளாகிறான். கவர்ச்சி மிக்க சுவரொட்டிகளின் ஒரே விளைவு தீமைதான்.

இந்நிலையில், உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தை நான் விவரிக்க அவசியம் உள்ளது. கேரளாவில் பல பஸ் விபத்துக்கள் எண்ணிக்கையில் மிக அதிகமாக இருந்தன. இந்தப் பிரச்சினை சட்ட சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பலர் பரந்த அளவில் ஏற்படும் விபத்துக்களுக்கான காரணங்களைச் சுட்டிக் காட்டினர். அவர்களால் கொடுக்கப்பட்ட அறிவுரையையொட்டி, அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்தும், விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியவில்லை. நான் திருவனந்தபுரத்திற்கு விஜயம் செய்து, ஒரு பொறுப்புள்ளவர் வீட்டிற்குச் சென்றிருந்தபோது, ‘அவர்கள் பல நடவடிக்கைகள் எடுத்திருந்தும் விபத்துக்கள் குறையாததற்குக் காரணம் என்ன?’ என்னைக் கேட்டார். நான் பார்ப்பதற்குச் சிறியதாகத் தோன்றும் அறிவுரையை நல்கினேன். உடனடியாக அந்த அறிவுரை பின்பற்றப்பட்டது. எல்லா விபத்துக்களும் நின்றுவிட்டன. கேரள மாநிலத்தில் “பஸ்ஸின் முன் புறத்தில் ஓட்டுபவருக்குப் பின்னால் தங்களுக்கு இருக்கைகள் ஒதுக்கப்படவேண்டும்; இதனால் பஸ்ஸின் பின் புறத்தில் பஸ்ஸின் ஓட்டத்தால் ஏ ற்படும் குலுங்கள்களைத் தவிர்த்து வசதியாகப் பிரயாணம் செய்யலாம்” என்று பெண்கள் பிரத்தியேகமாக விண்ணப்பம் செய்து இருந்தனர். பெண்களினழைகைப் பார்ப்பதற்காக ஓட்டுபவர் எப்போதும் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருந்தார். இதனால் விபத்துக்கள் பரந்த அளவில் ஏற்பட்டன. ஓட்டுபவரின் முட்டாள் தனமான கவர்ச்சி எவ்வளவு தீமையை விளைவித்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர முடியும். இன்று மனிதன் தன் மனதில் முட்டாள்தனமான எண்ணங்களை வளர்ப்பதற்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறான். இந்த நாட்டின் எதிர்காலக் குடிமக்களாக விளங்கப் போகும் இளைஞர்களின் உள்ளங்களில் இத்தகைய தீய எண்ணங்கள் தோன்றிக் கொண்டுள்ளன. அவர்கள் தன் சொந்த நாட்டிற்குத் துரோகிகளாக ஆகிக் கொண்டு வருகின்றனர். இன்று உங்களை உண்மையில் நீங்கள் வித்தையை நாடவில்லை. அற்ப விஷய சுகத்தையே நாடுகிறீர்கள். மாணவர்களே! நீங்கள் பிறரைப் பார்த்துப் பின்பற்றும் பழக்கத்தை ஒதுக்கித் தள்ள வேண்டும். நீங்கள் உங்கள் சொந்த உள் சக்தியை வளர்க்கவேண்டும். நமது முறையும் எல்லாம் பிறரைப் பார்த்துப் பின்பற்றுவதையொட்டி அமைந்துள்ளன. உங்களுக்குச் சொந்தமான மனம் இருக்கிறது. ஆனால் இன்னொருவருடைய மனத்தையும், செயல்களையும் பின்பற்றுவதால் உங்களை நீங்களே வெறும் அடிமையாக்கிக் கொள்கிறீர்கள். நீங்கள் சுதந்திர புருஷர்கள். சுதந்திரம் என்பதின் பொருள் என்ன? உங்களுக்குச் “சுவேச்சா” (சுயேச்சை) அல்லது “எண்ணும் சுதந்திரம்” இருக்கிறது. ஸ்வ, இச்சா என்ற இரண்டின் சொந்த இச்சைகளுக்கு உட்பட்டு நடவுங்கள். மற்றவர்களின் ஆசைகளைக் கடைப்பிடிப்பதை ஒருபோதும் செய்யாதீர்கள். உங்களை ஆசைகளை உள்முகமாக நன்கு பரிசீலியுங்கள்.

கவனமாக நினைத்துப் பாருங்கள். உங்கள் ஆசை நல்லது என்று உணர்ந்தால் அதைக் கடைப்பிடியுங்கள். தீயது என்று நீங்கள் நினைத்தால் அதை விட்டுவிடுங்கள். ஆனால், இன்றைய

மனிதன் அத்தகைய வழியை மேற்கொள்வதில்லை. அவன் எப்போதும் மற்றவர்களைப் பார்த்துப் பின்பற்றும் முயற்சியைச் செய்கிறான். எப்போதும் மற்றவர்களைப் பின்பற்றத் தயாராக இருக்கிறான்.

உங்கள் சொந்தக் காட்சியால் நீங்கள் பார்ப்பது முடிவான உண்மையைப் பிரதிபலிக்காது. உங்கள் காட்சி படைப்பின் முழுவதையும் பார்க்கிறது. முழுப்படைப்பும் நீங்கள் பார்க்கப்படும் பொருளாக விளங்கும்போது, நீங்கள் பார்ப்பவராக உங்களை மாற்றிக்கொள்கிறீர்கள். கண்ணே பார்க்கப்படும் பொருளாகும் போது, உங்கள் அறிவு பார்க்கும் ஒன்றாக ஆகிறது. இதற்கு ஓர் உதாரணமுள்ளது. நீங்கள் எல்லோரும் இந்தக் கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் காதுகள் இங்குள்ளன. உங்கள் கண்கள் இங்குள்ளன. இந்தக்கணத்தில், உங்கள் கிராமத்திலுள்ள ஏதேனுமொன்றைப் பற்றி உங்கள் மனது நினைத்துக்கொண்டிருந்தால், நீங்கள் இங்கு இருந்தாலும் கூட, ஸ்வாமி என்ன பேசிக்கொண்ருக்கிறார் என்பதை நீங்கள் கவனிக்க இயலாது. உங்கள் கண்கள் இங்கிருந்தாலும்கூட, உங்கள் முன்னுள்ளதை நீங்கள் பார்க்க முடியாது. இங்கனம், மனது எங்கேயாவது இருந்தால், புலன் உறுப்புகள் இங்கிருந்தாலுங்கூட, அவைகள் பார்ப்பவையாகவோ, கேட்பவையாகவோ இயங்க முடியா. ஆனால், சில சமயங்களில் மனதும் பார்க்கப்படுகிறது, அப்போது புத்தி பார்ப்பவன் ஆகிறது. சில நிலைகளில், சில கட்டங்களில், புத்தி கூட பார்க்கப்படும் பொருளாகிறது, ஆத்மா பார்ப்பவன் ஆகிறது. இங்கனம் எல்லாவற்றையும் காண்பதாக இருப்பது ஆத்மா, இதற்கும் மேலானது எதுவுமில்லை. உலகியல் பொருள்களைப் பொறுத்தமட்டில், பார்ப்பவன் என்ற முறையில் புத்தி உங்களுக்குப் பயன்படுகிறது, புத்தி உண்மையில் புலன் உறுப்புகளுக்கு மேம்பட்டது.

இதை விளக்குவதற்குச் சிறிய கதை ஒன்றுள்ளது. ஒரு கிராமத்தில், ஒரு குருடனும், நொண்டியும் நண்பர்களானார்கள். குருடனுக்குக் கால்களிருந்தன, நொண்டிக்குக் கண்களிருந்தன. நொண்டி குருடனுடைய தோள்களின் மேல் உட்கார்ந்து கொள்வான். நொண்டி வழியைப் பார்த்துக்கொண்டு குருடனை வழி நடத்தும் தொண்டைச் செய்தான். குருடனுக்குக் கால்களிருந்தன, போவதற்கு அவன் கால்களைப் பயன்படுத்திக் கொண்டான். இவ்வழியில் அவர்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போய்ப்பிச்சை எடுத்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு அவர்கள் போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் பயணத்தின் நடுவில், நொண்டி பெரிய வெள்ளரிக்காய்கள் குவியலைப் பார்த்தான். அவன் கூறினான், “அன்பான சகோதரனே! நாம் வழியிலிருந்து சிறிது தூரம் இடது கைப்பக்கம் சென்றால், அங்குப் பல வெள்ளரிக்காய்கள் இருக்கின்றன. நாம் சில வெள்ளரிக்காய்களை எடுத்துக்கொண்டு பிறகு நம் வழியில் செல்லலாம்” என்றான். அங்குப் பல வெள்ளரிக்காய்கள் இருந்தால், ஒரு வேளை அவைகள் காவல் இல்லாமல் இருக்கின்றனவா எனக் குருடன் கேட்டான். நாம் மரப்பக்கம் செல்வதற்கு முன்னால் சற்று நினைத்துப்பார் என்றும் சொன்னான். அங்கு எந்த வேலியும் காவலும் இருப்பதாகத் தோன்றவில்லை என்று நொண்டி சொன்னான். மரங்களைக் காவல் செய்யும் காவலாளி ஒரு வேளை இருக்கும் சாத்தியத்தைப் பற்றிக் கருத்து தெரிவித்தான் குருடன். வெள்ளரிக்காய்களை காவல் செய்யும் காவலாளியும் இல்லை, வேலியும் இல்லை, போய் வெள்ளரிக்காய்களைச் சாப்பிட விரும்புகிறேன் என்று நொண்டி சொன்னான். அவைகள் உண்மையில் நல்ல வெள்ளரிக்காய்களாக இருந்தால், அவ்வளவு பரந்த எண்ணிக்கையில், காவல் இல்லாத நிலையில் விடப்பட்டிருக்குமா? சாப்பிடுவதற்குத் தகுதியில்லாத கசப்பான வெள்ளரிக்காய்களாக அவை நிச்சயமாக இருக்கவேண்டும் எனக் குருடன் கூறினான். உண்மையில், இங்கு, புத்தி பணிபுரிந்துள்ளது, புலன் உறுப்புகள் பணிபுரியவில்லை. அவர்கள் வெள்ளரிக்காய்களைச் சுவைத்தபோது, உண்மையில் அவை கசப்பானவை என்பதைக் கண்டனர். இந்தக் கதையிலிருந்து புத்தியானது புலன் உறுப்புகளைக் காட்டிலும் மேம்பட்டது. முடிவான ஆத்மாவின் ஆணைகளுக்கு உட்படுவது தான் ஸ்வ இச்சா என்று அழைக்கப்படுகிறது. நாம் இதைத் சுதந்திரம் என்றோம், ஆனால் விலங்குகளால் அனுபவிக்கப்படும் ஒருவகைச் சுதந்திரமாக மாற்றிவிட்டோம்.

மாணவர்களே, நாம் எல்லோரும் மானுட வடிவைப் பெற்றுள்ளோம், ஒரு மனிதனுக்குள்ள உருவம் நமக்கிருக்கிறது. நமக்கு உயர்ந்த அறிவுள்ளது; இந்த அறிவைப் பயன்படுத்தியும் கூட, இன்னும் நமது வாழ்வைக் கீழான வழிகளில் நடத்துகிறோம்; இது மனிதர்களின் அடிப்படை இயற்கையாக இருக்கமுடியாது. புனிதத்தன்மையாகவும் நல்லவையாகவும் இருக்கும் அளவிற்கு உங்கள் ஆசைகளும் எண்ணங்களும் உயர வேண்டும். முழு உலகத்தையும் உடன் பிறப்பின் இணைப்பாக நீங்கள் கருத வேண்டும். மனித குடும்பத்தில், மனிதனுடைய சகோதரத்துவத்தையும் இறைவனுடைய பித்ருத்துவத்தையும் புரிந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

இது எல்லா மனிதர்களுடைய மனப்பான்மையாக அமைய வேண்டும். இந்த இலட்சியங்களைக் கடைப்பிடித்து உலகிற்கு நீங்கள் பிரகடனம் செய்ய இயலும். அந்நாளன்றே, இந்நாட்டுப் புகழை நீங்கள் நிலைநாட்டியிருக்கிறீர்கள் என்று நாம் சொல்ல முடியும். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும், ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படி இறக்க வேண்டும் என்பதைப் பற்றிய வினாக்களுக்கு நமது வேதங்களும் சாஸ்திரங்களும் விடை பகர்ந்துள்ளன. மனிதனுக்குப் பிறப்பு என்பது முக்கியமானதன்று. தன் வாழ்நாள் முழுவதும் நல்ல மனத்தையும் நல்ல எண்ணங்களையும் அவன் முன்னே ற்ற வேண்டும்; இறங்குக் காலத்து, அவைகளை அவன் பெற்றிருக்கவேண்டும். மனிதனுக்குப் பிறப்பைக் காட்டிலும் இறப்பு மிகவும் முக்கியமானது. நீங்கள் எந்த வகையில் மரணமடைகிறீர்கள் என்பதையொட்டி உங்கள் மறுபிறவி நிச்சயிக்கப்படுகிறது. அடுத்தப் பிறப்பில் நல்ல பிறவியையும் வாழ்வையும் நீங்கள் விரும்பினால், நீங்கள் நல்ல மரணத்தையும் விரும்ப வேண்டும்.

ஒரு நாயின் மரணத்தைப் போல் கவனிப்பாரற்று மரணத்தை நாம் அடையக் கூடாது. அர்த்தமற்ற புலன் ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காக நம் வாழ்க்கைகய அர்ப்பணிக்கக் கூடாது. நமது புலன் உறுப்புகள் நமக்கு அடிமைகளாக இருக்க வேண்டும். ஆனால், நாம் புலனுறுப்புகளுக்கு அடிமைப்பட்டோமோ அன்றைக்கே உலக ஆபாசங்களுக்கு அடிமையாயினோம். நாம் நம் புலன் உறுப்புகளுக்கு அடிமைகளானால், எந்தவிதமான சக்தியை பெறமுடியும்? நமது வேலைக்காரர்களுக்கு நாம் எஜமானர்களாக இருக்க வேண்டும், நமது வேலைக்காரர்களுக்கு வேலைக்காரர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ என நாம் ஆராய வேண்டும். சில புறப்பொருள்கள் வீட்டில் எங்கிருக்கின்றன என்பதை வேலைக்காரர் அறியமுடியும், உங்களுக்குச் சொல்ல முடியும். ஆனால், அன்றாடப் பயனுக்கு உதவும் பொருள்களை அறிவதுடன் விலையுயர்ந்த பொருள்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை வீட்டு எஜமானர் தான் அறிவார். எங்கு விலையுயர்ந்த பொருள்களில் ஒவ்வொன்றும் மூடிவைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அவரே அறிவார். இன்று, நமக்குப்புறம்பான பல பொருள்களைப் பற்றி நாம் பேசுகிறோம், ஆனால் நமது உள்ளங்களிலுள்ள விலையுயர்ந்த ஆத்மாவை உணர, பேச இயலாதவர்களாய் உள்ளோம். இந்நிலையில், உடல் என்னும் வீட்டின் எஜமானனைப் போலல்லாமல், வேலைக்காரனைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உண்மையில், நாம் வாழும் வீட்டின் எஜமானனாக இருந்தால், ஏன் நம்முள் உள்ள நல்ல கொள்கைகளையும் நல்லெண்ணங்களையும் அறியாதவர்களால் உள்ளோம்? கடவுள் உங்களுக்கு வெளியே உள்ளவர் அல்லர். அவர் உங்களுள் இருக்கிறார். இதுபோலவே பாவம் உங்களுக்குப் புறம்பான ஒன்றல்ல. இது உங்கள் செயல்களால் முடிவு செய்யப்படுகிறது. இந்த இரண்டு உண்மைகளையும் நீங்கள் அறிந்த அக்கணமே, உங்கள் புலன் உறுப்புகளுக்கு நீங்கள் அடிமையாக இருக்கமாட்டீர்கள். அவைகள் உங்கள் வேலைக்காரர்களாக இருக்கும். மாணவர்களே! நீங்கள் இங்குக் கவனிக்கும் நல்ல விஷயங்கள் சமுதாயத்தில் பிரகடனம் செய்யப்பட வேண்டும். நீங்கள் இவற்றைக் கடைப்பிடிக்கத் தயாராக இருக்க வேண்டும். விளக்கு எல்லா இடங்களிலும் வெளிச்சம் தர வேண்டுமென நீங்கள் விரும்பினால், நீங்கள் விளக்கை உயரத்தில் வைக்க வேண்டும். நீங்கள் இந்த விளக்கை ஒரு குழியில் வைத்தால், அது சுற்றிலும் எங்கனம் ஒளி தரும்? ஆகவே உங்களுள் புனித எண்ணங்கள் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டால், முழு

உலகமும் அவற்றைப் பார்கக முடியும். அவைகளை உங்கள் இருதயம் என்னும் குழியில் வைத்து அவைகளைத் தேங்கச் செய்யக் கூடாது.

நமது உடம்பு ஓர் இயந்திரத்தைப் போன்றது. நாம் ரேடியோ என்னும் இயந்திரத்தை வைத்துக்கொண்டு அதன் மூலம் பல நிகழ்ச்சிகளைக் கேட்கிறோம். ரேடியோ அவைகளை உண்டாக்குகிறதா? அல்லது அவை எங்கேனும் உண்டாக்கப்படுகின்றனவா? இந்நிகழ்ச்சிகள் ஏதேனுமொரு ஒலிபரப்பு நிலையத்தில் உருவாக்கப்படுகின்றன; ரேடியோ, நிகழ்ச்சிகளை உருவாக்கவில்லை. இதுபோலவே, நாம் ஒரு நபரின் எண்ணங்களையோ கொள்கைகளையோ கேட்கும்போது, அவை அவருடைய வாயிலிருந்து வரவில்லை என்பதை நாம் உணரவேண்டும். அவை, அவருடைய இதயத்தில் உருப்பெற்ற பிறகு அவர் வாய்மூலம் தெரிவிக்கப்படுகின்றன. ஒரு ரேடியோ போல, அவர் அவற்றைத் தெரிவிக்க மட்டும் செய்கிறார். இந்தச் சப்தங்கள் உருவாக்கப்படும் ஒரு மூலம், ஓர் ஆதாரஸ்தானம் இருக்கிறது. ரேடியோ இந்த சப்த அலைகளை நமக்குத் தெரிவிக்கும் ஓர் உபகரணமே. மனித உடல் ரேடியோ போன்றது. மூலம் ஆத்மாவாகும். ஆத்மா என்ற ஆதாரஸ்தானத்திலிருந்து எல்லாக் கொள்கைகளும் எண்ணங்களும் உண்டாக்கப்படுகின்றன. எல்லா எண்ணங்களும் புனிதமான ஆத்மாவிலிருந்து உண்டாகுமென்றால் ஏன் நல்ல எண்ணங்கள் கெட்ட எண்ணங்கள் இரண்டும் எழுகின்றன என்ற வினாவை நீங்கள் கேட்கலாம். ஆனால் எண்ணங்களை நல்லவை தீயவை ஏன் வகுக்கவேண்டும்? நீங்கள் ரேடியோவை முடுக்கும் முறையில் (ட்யூன் செய்யும் முறையில்) நாம் கேட்க விரும்பும் எண்ணம் ஒன்றாயிருக்க, நாம் ‘ட்யூன்’ செய்யும் நிலையில் வேறொன்றாயிருக்கிறது. இது மட்டுமல்ல, சரியானதைக் கேட்பதற்கு உதவி செய்யும் வண்ணம், நீங்கள் ரேடியோவை முடுக்கும் முறையும், நிலைமைக்கேற்ப ஒத்தியங்கும்படி மாற்றி அமைக்கும் முறையிம் தகுதியுடையவையாக இருக்க வேண்டும். நமது ஆசை ஒன்றாயிருக்க, நமது செயல் அந்த ஆசைக்கிசைவானதாக இல்லாமல் இருந்தால், இந்தக் கஷ்டத்தை நாம் பெறுகிறோம். நாம் ஒரு நிலையத்தைக் கேட்க விரும்புகிறோம், இன்னொரு நிலைய நிகழ்ச்சியை முடுக்கி விடுகிறோம். இதன் பொருள் – நீங்கள் முன்னேற்ற விரும்பும் புனித எண்ணங்களும் உங்கள் மனதில் விழையும் புனித எண்ணங்களும் உங்கள் செயல்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதாம். அதாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அத்தகைய புனித எண்ணங்களை முன்னே ற்றுவதாக இருக்க வேண்டும். உங்கள் கொள்கைகளும் எண்ணங்களும் உங்களுக்கு மட்டும் நன்மையாக இருந்தால், நன்மையானவை என்றழைக்கப்படா. முழு உலகத்திற்கும் அவை நன்மைபயப்பின், அவை நன்மை என்றழைக்கப்படும். மனிதனுள் நான்கு விதமான ஆசைகள் வெளிப்படுகின்றன. ஓர் அம்சம் என்னவெனில், மற்றவர் பிழைகளையும் தன் பிழைகளையும் ஒரே சீரான நிலையில் கருதி, அதன் அடிப்படையில் பேசுவது. மற்றொரு அம்சம் தனது நன்மைகளையும் மற்றவர்களிடமுள்ள குறைகளையும் வெளியே பேசுதல். மூன்றாவது அம்சம் மற்றவர்களிடமுள்ள நன்மைகளைப் போலவே தன்னிடமுள்ள நன்மைகளைப் பேசுதல், நான்காவது அம்சம் தன்னிடமில்லாத நன்மைகளைத் தன்னிடம் இருப்பதாகவும், ம ற்றவர்களிடமில்லாத குறைகளை அவர்களிடமிருப்பதாகவும் பேசுதல். இது எல்லாவற்றிலும் மிக இழிந்தது. இன்று இந்த நான்காவது அம்சத்தை ஒழிக்க நாம் தீர்மானமாக முயற்சி செய்ய வேண்டும். நாம் உலகத்தி ற்குப் பிரகடனம் செய்ய விரும்பும் கொள்கைகளை நாம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரத் தயாராக இருக்கவேண்டும். திவ்யாத்ம ஸ்வரூபிகளே! நாடு முழுவதிலும் தம் தத்துவத்தைப் பரப்பச் சங்கராச்சாரியர் விரும்பியபோது, அவர் நான்கு சிஷ்யர்களுடன் மட்டும் அதைச் செய்தார். உலகனைத்திற்கும் இந்த இலட்சியங்களை கடைப்பிடித்துப் பிரகடனப்படுத்த விரும்பும் பத்து மாணவர்களை ஒவ்வொரு கல்லூரியிலும் நாம் பெற்றால் கூட, அது போதுமானது. ஒவ்வொரு மாணவனும் இந்தத் தீர்மானம் எடுக்க முயற்சி செய்ய வேண்டும். உதகமண்டலத்தில் இந்தக் கோடை வகுப்புகளை ஏற்பாடு செய்வதற்கு வெளிப்படையான காரணம் இல்லாமல் இல்லை. கோடை விடுமுறை வந்ததும், பல விதமான செயல்களைத் திட்டமிடுவது மாணவர்களின் வழக்கம். அவர்களுக்குப் பல எண்ணங்கள் இருக்கின்றன. இந்த

விடுமுறையில், வாழ்வின் இன்பங்களைப் பெற அவர்கள் விரும்புகின்றனர். இந்த ஆசைகளுக்குட்பட்டு ஒருவருடைய காலத்தை வீணடிப்பது ஓர் அம்சம். கோடை விடுமுறையில் தாங்கள் பெற்றுள்ள வசதிகளைத் தவறான வழியில் பயன்படுத்துவதற்கு மாணவர்களுக்குப் பல வாய்ப்புகள் இருக்கின்றன. காலத்தை வீணடிப்பது வாழ்வை வீணடிப்பது ஆகும். காலத்தை வீணணக்காமல் இருக்கும் வண்ணம் இந்தப் புனிதமான இடத்தில் உங்கள் விடுமுறை நாட்களைத் தெய்வீக நாட்களாவதற்கு நாம் முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறோம். இந்தப் புனிதமான காலத்தில், நீங்கள் புனிதமான நன்மையான எண்ணங்களை அடைய வேண்டும். நீங்கள் தொடர்பு கொள்ளும் மற்றவர்களுக்கு இந்த எண்ணங்களைத் தெரிவிப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். நாளையிலிருந்து பாரதம் அல்லது பாகவதம் அல்லது ராமாயணம் போன்ற பிரத்யேகமான தலைப்பை எடுத்துக்கொண்டு, நீங்கள் புனிதமான கொள்கைகளையும் எண்ணங்களையும் பெறுவதற்கு இயலும்படி செய்வோம். இன்று முதல் நாள், இன்று நீங்கள் மற்ற நாட்களில் பெறப்போவதற்கு நல்ல அஸ்திவாரம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையானவற்றை எல்லாம் நான் கொடுத்துவிட்டேன். நீண்ட நேரம் கடத்தாமல் என் பேச்சை முடிக்கிறேன்.

மூன்றாவது கருத்துரை

தர்மம் எப்போதும் மாய்வதில்லை, அதனைக் கடைப்பிடித்தல் க்ஷீணித்துள்ளது.

இவ்வாழ்வு உங்களுக்கு ஏன் கொடுக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் அறிவீர்களா? வாழ்நாள் முழுவதும் உணவுத்தேடி வாழ்வை நடத்துவதற்காக அன்று; கடவுளைத் தேடுவதற்காக உங்களுக்கு உதவி செய்யவே வாழ்க்கை அமைந்துள்ளது. பவித்ராத்ம ஸ்வரூபிகளே! நமது நாட்டின் பெயரான பாரத் என்று சொல்லைக் கேட்ட அக்கணமே இமயமலைத்தொடர் நம் மணக்கண்முன் வருகின்றது. பழங்காலத்தில் பல நூற்றாண்டுகளாக இந்து மதத்தின் இன்றியமையாத பெரும் தத்துவங்கள் உண்மையிலும் (சத்தியம்), அஹிம்யையிலும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. உண்மை, அஹிம்சை என்ற இருபெரும் தத்துவங்கள் வெள்ளிப் பனிமலையில் (இமயமலையில்) சித்தரிக்கப்பட்டுள்ளன. இந்த மாண்புமிக்க மலைகள் பெரு மக்களும், பெரிய துறவிகளும் தபசு செய்து இருக்கின்ற இடமாகும். சத்தியத்தின் வழியில், தர்மத்தின் வழியில் அடையப்பட்ட தூய்மையின் சின்னங்களாக இந்த மலைகள் தோன்றுகின்றன. இம்மலைகளை நாம் பார்க்குமிடத்து மாதவனின் தியானத்தில் இந்த வெள்ளிமலைகள் ஆழ்ந்துவிட்டனவோ என்னும் உணர்வை நாம் பெறுகிறோம். ரிஷிகள் தபசு செய்திருந்த இந்த மலைகளில் தான் புனித கங்கா நதியின் உற்பத்தி ஸ்தானம் இருக்கிறது. கங்கை இந்து மதத்தின் பிரவாகச் சின்னமாகும். ஆத்மீக இதயத்திலிருந்து நமது நாட்டின் இரத்த நாளங்கள் ஓடுவதைக் கூடக் கங்கை சித்தரிக்கிறது. பாரத நாட்டின் குடிமக்களின் குருதியோட்டத்தையும், பாரத நாட்டின் இரத்தக் குழாய்களையு. புனித கங்கையின் பிரவாகத்திற்கு ஒப்பிடலாம். கங்கை என்ற நாமத்தை நாம் கேட்டவுடனே அதன் இரு கரைகளிலும் உள்ள புனித க்ஷேத்திரங்களைப் பற்றிம், கல்வி கற்கும் பெரிய இடங்களைப் பற்றியும் நினைவுகூர்கிறோம். கங்கையைப் ப ற்றி நாம் நினைக்கும்போது, மிகப்பெரும் ஆத்மிக நிலையங்களான காசி, பிரயாகை, ரிஷிகேசம், ஹரித்துவாரம் ஆகியவற்றை நம் மனக்கண்முன் நினைக்கிறோம். இந்தக் கங்கை நதி தீரத்தைப் போலவே இரத்தக் குழாயின் ஒவ்வொரு பக்கத்திலுள்ள நமது மனத்தின் புனித க்ஷேத்திரங்களைக் கூட நாம் அறிய வேண்டும். நமது சொந்த அறிவும், அந்தக்கரணமும், நமது உடலின் பெரிய க்ஷேத்திரங்களாகும். இந்தப் புனித க்ஷேத்திரங்களில் தூய செயல்கள் செய்யப்படுகின்றன. இதன் விளைவாக, புனிதமான கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன என்பது தெளிவு. நமது உள் உடலில் இரத்த உயிரோட்டத்திற்கேற்ப நமது மனது, நமது சித்தம், நமது அஹங்காரம் முதலியவற்றின் பக்கங்களிலுள்ள இடங்களில், நல்ல எண்ணங்கள் உருவாக்கப்பட முடியும் என்பதை நாம் உணரலாம். நமது நாட்டில் கங்கை ஓடுகின்றது என்ற உண்மைக்கு

ஓர் ஆத்மீக சிறப்பு இருக்கிறது. நமது நாட்டின் பெயரான பாரத் என்பதைக் கேட்டவுடனே பெரிய இதிகாசமான மகாபாரதத்தை நாம் நினைவுகூறுகிறோம். இந்த இதிகாசத்தின் கதாநாயகன் பகவான் கிருஷ்ணர் ஆவார். பகவான் கிருஷ்ணரின் மாபெரும் செயல்கள் எப்படி இருந்தபோதும் முரணான முறையிலே சித்தரிக்கப்படுகின்றன. பகவான் கிருஷ்ணரின் உண்மை இயற்கையையும், உண்மைத்தன்மையையும் ஒருவன் மறக்கும் அளவிற்கு உணர்வைப் பெறுகிறான். நீர் பாலுடன் கலப்பது போல கோபியர்களுடனும், கோபர்களுடனும் இணைந்து வாழ்ந்த ஒருவர் கிருஷ்ணராவார். கோபியர்களுடனும், கோபர்களுடனும் அவர் நெருங்கிப் பழகினார். கிருஷ்ணருடைய செயல்களில் பொதிந்துள்ள புனிதமான உண்மையை உணர வேண்டுமென்றால் கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் நடந்த மிகப்பெரும் யுத்தத்தில் கிருஷ்ணர் யுத்தகானத்தில் அர்ச்சுனனை அழைத்துச் சென்று அவனுக்கும் அவன் மூலமாக உலகிலுள்ள பல்லோருக்கும், நமக்கும் செயலைப் பற்றிய தத்துவத்தைக் (கர்மயோகத்தை) கற்பித்தார் என்பதை நாம் உணர வேண்டும். இந்நிலையில் திருதாஷ்டிரன் ஒரு கேள்வியைக் கேட்டதாகவும், யுத்தகளத்தை “தர்ம க்ஷேத்ரே”– குரு க்ஷேத்ரே” என விவரித்ததாகவும் அதில் ‘குரு க்ஷேத்ரே’ என்ற பெயரில் வியப்புற்றதாகவும் சொல்லப்படுகிறது. இந்த வினாவில் மறைந்துள்ள பொருளையும், குறிப்பையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். வினாவில் “மாமகா:” – அதாவது, என் புத்திரர்கள் என்று சொல்லப்பட்டுள்ள எவர்களுடன் நாம் பாசத்தால் இணைக்கப்பட்டுள்ளேனோ அவர்களும், தம் சாத்வீக குணங்களால் புகழப்பட்ட பாண்டவர்களும்– இந்த இரண்டு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் – தர்ம க்ஷேத்திர யுத்தகளத்தில் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? என்பது. திருதராஷ்டிரன் தன் அறியாமையால் ஒரு கேள்வியைக் கேட்டான் என்பதை இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டும். உள் அர்த்தத்தை வைத்துப் பார்க்குமிடத்துத் திருதராஷ்டிரன் கேள்வி உண்மையாகக் குறிப்பது என்னவென்றால் – கௌரவர்கள் என்னும் பிரதிநிகளால் குறிக்கப்படும் தமோ, ரஜோ குணங்கள் பாண்டவர்கள் என்னும் பிரதிநிதிகளால் குறிக்கப்படும் சாத்வீக குணங்களுடன் யுத்தகளத்தில் என்ன செய்து கொண்டிருக்கின்றன என்பதே. புலன் உறுப்புகளை உருவகிக்கும் குருக்ஷேத்திரத்தில், உடல் என்னும் தர்மக்ஷேத்திரத்தில் எல்லாக் காலங்களிலும் ஒரு பக்கம் தமோ, ரஜோ குணங்களும் மற்றொரு பக்கம் சாத்வீக குணமும், ஆக, குணங்களுக்கு இடையேயுள்ள யுத்தம் நடக்கும் போது பகவான் கிருஷ்ணர் ஆத்ம வழிகளில் சாக்ஷி சைதன்யமாக எல்லாக் காலங்களிலும் காணும் சாட்சியாக இருக்கிறார். பாரதத்தின் அடிப்படை சாரம் தான் மனித வடிவில் வந்த கிருஷ்ணர் இந்து மதத்தின்படி, பார்க்கப்படாத ஆத்மா என்று கூறப்படுவதின் உள்ளுணர்வை உருவகிக்கிறார். தமது வழிமுறையை உலகத்திலுள்ள மக்கள் – அரசியல், கலாசார, சமூக வழிமுறையை உலகத்திலுள்ள மக்கள் – எளிதாக உணர்ந்து கொள்ளும் வழியில், அந்த அம்சத்தை விவரிக்கும் நோக்கத்துடன் பிரபுவான கிருஷ்ணரே சாதாரண மனித வடிவில் வந்திருக்கிறார்.

இன்று உலகத்தில் உள்ள சூழ்நிலையை நாம் நினைத்துப் பார்க்குமிடத்து அது மிகவும் பரந்துபட்ட சிக்கலான சூழ்நிலையாக உள்ளது என்பதை நாம் பார்க்கிறோம். தமது உணவு, தேவைகள், செல்வம் முதலியவைகளில் எல்லா மனிதர்களையும் ஒரே நிலைக்கு வரும்படி செய்ய விரும்பும் சோஷியலிஸம் என்னும் பெயரால் ஒரு புது சமூகத்தைப் படைப்பதற்கு நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நாம் இதை ச் சோஷியலிஸம் எனக் கருதிக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் இந்நிலையை சோஷியலிஸம் என அழைக்க இயலாது. இதைச் சோஷியலிஸம் என அழைப்பதற்கான ஆதாரம் எதுவும் நமது சரித்திரத்திலோ, நம் வழி மரபுகளிலோ இல்லை. இன்று நாம் செல்வத்தையும் வளமையையும் பரக்க விநியோகம் செய்யும் நிலையில், எல்லா மனிதர்களுக்கும் வீடுகளைக் கட்டிச் சமமாக விநியோகம் செய்யும் நிலையில் இருக்கிறோம்; விநியோகம் செய்யத் தயாராக இருக்கலாம். ஆனால், எல்லா மனிதர்களுக்கும் மனித குணத்தின் ஆசைகள் அனைத்தையும் சரிசமமாக விநியோகிக்கும் நிலையில் நாம் இல்லை. எல்லா மனிதர்களுக்கும் ஒரே வகைப்பட்ட ஆசைகள் இருந்தால்தான் நாம் சோஷியலிஸம் என்பதைச் சொல்ல

முடியும். எல்லா மனிதர்களுடைய ஆசைகள் ஒரே மாதிரி இருந்தால், உண்மையில் எல்லாப் பொருட்செல்வம், பூலோகவுடைமைகள் முதலியன தாமாகவே சமமாக விநியோகிக்கப்பட்டு விடும். பணியாளனிலிருந்து விவசாயி வரை எல்லா மக்களுக்கும் சரிசமமான சொத்து விநியோகிக்கும் முறை உண்மையில் பிரெஞ்சு புரட்சியில் ஆரம்பித்தது. ஆரம்பக் கட்டமான இந்த முதற்கொள்கையிலிருந்து ஒவ்வொரு ஆளுக்கும் அதிகார நிலை இருக்க வேண்டும் என்னும் உணர்வு தோன்றியது. அது ஆசைகளுக்கும் தூண்டுதலளித்தது. ஒரு சில மக்களின் கைகளிலேயே அதிகாரமும் சக்தியும் குவிக்கப்படக்கூடாது. அவை எல்லா மக்களுக்கும் சரிசமமாக விநியோகிக்கப்படவேண்டும் என்னும் உணர்வு வளர்ந்தது. படிப்படியாக இந்தக் கொள்கை பல மாறுதல்களை அடைந்தது, அது விகாரமான வடிவைப் பெற்றபோது, கம்யூனிசம் என்னும் பெயர் பெற்றது. இந்த இரு புரட்சிகளின்போதும், அவைகளின் பிறப்பிற்குக் காரணங்களாக இருந்த எண்ணங்கள் உண்மையில் நன்மையானவை, புனிதமானவை, ஒப்புக்கொள்ளத்தக்கவை; ஆனால் நடைமுறையில் முதற்கொள்கைகளும் இலட்சியங்களும் கோணலாக விகாரப்பட்டுவிட்டன. இதன் விளைவாகப் புரட்சிகள் திருப்தியற்றவையாக ஆகிவிட்டன. சம சந்தர்ப்பங்கள் அளித்தல், எல்லா மனிதர்களுக்கும் சமமாகச் செல்வத்தை விநியோகம் செய்தல் என்ற அடிப்படைக் கொள்கைகள் புதியவையாகவும் புதுமையாகவும் கருதப்படுகின்றன. இது சரியன்று; ஐம்பது நூற்றாண்டுகளுக்கு முன்னால், கிருஷ்ணர் உண்மையில் இதே காரியங்களைச் செய்தார். இந்த லட்சியங்களை ஆரம்பித்தார்.

இன்று நாம் அழைக்கும் பாரதப் புது சமுதாயத்தின் வேர்களை உண்மையில் சரித்திர புருஷனான கிருஷ்ணர் நட்டார். நமது சரித்திரத்தில் மாபெரும் புருஷரான அவரே பணியாளர், விவசாயி, படிப்பாளி இவர்களை ஒரே நிலைக்குக் கொண்டு வந்தார். அந்தக் காலத்தில் கூட நாட்டின் அரசர்களிடம் இருந்த அரசியல் துரோகத்தை வெளிப்படுத்திக் காட்டினார். அவர்களைச் சமத்துவக் கொள்கைகளை நன்கு புரிந்து கொள்ளும் படி செய்தார். அவர் முடி சூட்டப்படாத மன்னனைப் போல் அரசாட்சி செய்தார். பழங்காலத்திலிருந்து கிருஷ்ணனைக் “கோபால்” என்று குறிக்கும் புனித எண்ணம் நம்மிடமிருந்தது. ‘கோபால்’ என்னும் சொல்லில், மரபு வழியாக, ‘கோ’ என்பது ஒரு பசு அல்லது ஒரு விலங்கைக் கருதுவதாக வழங்கி வருகிறோம். இது சரியன்று. சரித்திரக்காலங்களில் நமக்கு வளமையும் இன்பமும் கொடுத்த ஒவ்வொன்றும் ‘கோ’ எனக் கருதப்பட்டது. இப்போது நாம், ‘கோ’ என்பது விலங்கைக் குறிப்பதாகக் கருதுகிறோம்; ஆனால் உண்மையில் மனித சமுதாயத்தின் இன்பத்தைக் காப்பா ற்றுகிறவர், மனித சமுதாயத்தின் இன்பத்தை அளிப்பவர் ‘கோபாலன்’ எனக் கருதப்பட வேண்டும். அந்நாட்களில், உலகத்திற்கு வளமை அளிப்பது “பசு” என்னும் கொள்கையைப் பரப்பினர். இன்று மனிதன் அறியாமையுள்ளவனாக இருக்கிறான், எது உண்மையான செல்வம் என்பதையும், எது மனித சமுதாயத்திற்கு உண்மையான வளமையளிப்பது என்பதையும் உணர முடியாதவனாயிருக்கிறான். கரன்சி நோட்டுக்களைப் பார்க்கும் துரதிருஷ்டவசமான நிலையில் இன்று நாம் இருக்கிறோம்; அவை வளமை அல்லது செல்வத்தை உருவாக்குகின்றன என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இது செல்வமன்று. நமக்குப் பால்தரும் பசுவைக் கிருஷ்ணர் செல்வமாக் கருதினார். இந்தச் செல்வமானது மக்களிடையே சமமாக விநியோகிக்கப்பட்டது. பசுவினிடமிருந்து பால், நெய், வெண்ணெய், தயிர் மற்ற உணவுப் பொருள்களை நாம் அடைவதோடு இல்லாமல், பசுவின் கன்றுகளாயிருந்து வளர்ந்த எருதுகளை விவசாய நோக்கங்களுக்காக நாம் பயன்படுத்துகிறோம். பசுவிடமிருந்தும், பிற கால் நடைகளிடமிருந்தும் நமக்குத் தேவையான உணவை நாம் உற்பத்தி செய்கிறோம். நாம் விளைச்சல் அறுவடை, பால், தயிர் இவைகளைப் பற்றிப் பேசுகிறோம்; அவைகள் இரு வேறு வகைப்படுகின்றன. மனித சமுதாயத்தின் தேவைகள் அடிப்படையில் இருவகைப்படுகின்றன. ஒன்று பாலும் பால் பொருட்களும்; மற்றொன்று விவசாய விளைச்சல் அறுவடை. இவை இரு சகோதரர்களிடை விநியோகிக்கப்பட்டது. கோபாலன், பசு, பால், பால் பொருட்களின் உ ற்பத்தியைக் கவனித்துக் கொண்டார். கலப்பையேந்திய பலராமன் விவசாயத்தையும், அதன்மூலம்

கிடைக்கும் பல பொருட்களின் உற்பத்தியையும் பார்த்துக் கொண்டார். உண்மையில், மனித இனத்தின் வளமை அறுவடை, பால், பால் பொருள்களை ஒட்டி அமைந்துள்ளது. மக்களுடைய இந்தத் தேவைகள் ஆகாயத்திலிருந்து விழா; தாமாகவே பூமியிலிருந்து உற்பத்தியாகா. இவை கால்நடை விலங்குகள், பூமி மூலமாகத்தான் கிடைக்கின்றன. தம் உடல் பலத்தைக் கவலைப்படாமல், தாம் எதையும் தியாகம் செய்ய முடியும் என்பதற்குப் பலராமனும், கிருஷ்ணரும் உதாரணமாக விளங்கினார்கள். அவர்கள் கடுமையாகப் பணிபுரியத் தயாராக இருந்தனர்; தம் கடுமையான உழைப்பால் உண்மையான உழைப்பால் வளமையை அடைய முடியும் என்பதைக் காட்டினர். பிரபு கிருஷ்ணர் எல்லாவற்றையும் அறியும் எல்லாச் சக்தியுமுடைய தெய்வத்தின் அவதாரமாய் இருந்த போதும், அர்ச்சுனனுடைய தேரோட்டியாகப் பணி புரிந்தார். சமுதாய சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர் கிருஷ்ணர். தன்னுடைய அனுஷ்டானத்தால், மக்களுக்குச் சேவை செய்வது முக்கியமானது என்பதற்கு முன்னுதாரணமாக விளங்கினார். மஹாபாரத யுத்தத்தில் ஒவ்வொரு நாளும் யுத்தம் முடிந்த பின் குதிரைகளை ஓட்டிச் சென்று, அவைகளைக் கழுவி, அவைகளின் காயங்களைத் தடவி மருந்து போட்டவர் இவரே.

இதனால் கடுமையான உழைப்பும் எல்லா உயிர்களுக்கும் இரக்கம் காட்டுதலும் எல்லா மனிதர்களின் கடமையாக இலங்குகிறது என்பதை எடுத்துக் காட்டினர். அந்நாட்களில் இவ்விருவரும் அத்தகைய உதாரணங்களாக விளங்கினர். கிருஷ்ணர் அல்லது பலராமர் நாமத்தைக் கேட்கும்போது, அவர்கள் யசோதை அல்லது தேவகியின் சாதாரண பையன்கள் தான் என நாம் உடனடியாக நினைக்கிறோம். இந்த விதமான உணர்வு சாதாரண மனித நிலையிலுள்ளதாகும். ஆனால் 'கிருஷ்ண' எனும் நாமத்தின் (சொல்லின்) பகுதியின் அர்த்தத்தை நோக்குங்கால், 'ஒவ்வொருவருக்கும் கவர்ச்சிப் பொருளாக இருக்குமொருவன் கிருஷ்ணன்' என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். இதற்கு மற்றொரு பொருள் உள்ளது, 'காஷ்யதீதி கிருஷ்ண' என நாம் சொல்ல முடியும். இதன்படி வயலைக் கிருஷி செய்து உழுமொருவன் கிருஷ்ணனவார். உண்மையாக, கிருஷ்ணன் உழும் வயல் இருதய வயல் என்பதை நீங்கள் உணரவேண்டும். உங்கள் இருதயத்தை இங்கனம் உழுவதால் அவர் அமைதி என்னும் பழங்களை உற்பத்தி செய்து மனிதர்களுக்குப் பகிர்ந்து விநியோகித்த மாபெரும் புருஷராக விளங்கினர் கிருஷ்ணர். கிருஷ்ணரின் அத்தகைய இலட்சிய வடிவத்தையே நம் மனதிற்கொள்ள வேண்டும். இது (இதய வயலைப் பயன்படுத்துவது) நமது நாட்டின் பெரிய துறவிகளின் சிந்தனையைப் பிரதிபலிக்கிறது எனப் பெரிய மனிதர்களிடம் அவர் அறிவுறுத்தினர். இதனில் மற்றொரு அம்சமும் இருக்கிறது. முன்னுதாரணமாக விளங்கி எல்லா மனிதர்களுக்கும் அமைதியையும் ஆனந்தத்தையும் நல்குவேன் என அவர் புனிதத் தீர்மானம் செய்திருந்தார். தம் வழியில் ஏற்பட்ட தடைகளை அவர் பொருட்படுத்தாமல் எப்போதும் இன்பகரமான, ஆனந்தமயமான வாழ்வை நடத்திக் கொண்டிருந்தார். இத்தகையதே கிருஷ்ணரின் வாழ்வு. அவர் யுத்த களத்தில் இருந்தாலும் அல்லது மயானத்தில் இருந்தாலும், அமைதியான இடத்தில் இருந்தாலும், தன் இய ற்கையால் ஆனந்த ஒளி பரப்பினர். இது அவருடைய மாபெரும் குணமாகும். இந்தக் காரணத்தினால்தான் அவர் யுத்த களத்தின் நடுவில் கூட 'கீதையை அர்ச்சுனனுக்கு உபதேசித்தார். "கீதா" என்பது பாடல் எனப்பொருள்படும். நமது சந்தோஷமான நேரத்தில் தான் நாம் பாடுகிறோம். ஆனால் யுத்த களத்தில் கூட கிருஷ்ணர் பாடிக் கொண்டு ஆனந்ததைப் பரப்பினர். இந்தக் காரணத்தினால் அவர் சத்–சித்–ஆனந்தம் என்று கூட அழைக்கப்பட்டார். மனிதன் என்ற முறையில் அவருக்குள்ள சக்தியைப் பாகவதத்தை விட மகாபாரதத்தில் அதிகம் பார்க்க முடியும். பாகவத புராணத்தில், அவர் குழந்தையைப் போன்று லீலைகளைச் செய்து கொண்டிருந்தார். ஆனால் மகாபாரதத்தில், மனித இயற்கை, தெய்வீக இயற்கை இவற்றின் விசேஷமான இணைப்பை அவர் வெளிப்படுத்திக் காட்டினார். காலத்திற்குக்காலம் தர்மத்தைப் பிரகடனம் செய்து நிறுவுவதற்காக அவர் மீண்டும் மீண்டும் வருவாரேன அவரே கீதையில் சொல்லியிருக்கின்றார். தர்மம் க்ஷீணம் அடையும் போது அவர் மீண்டும் மீண்டும் தோன்றுவார் எனச் சொல்லப்படுகிறது. சாது

சனங்களைக் காப்பதற்காகவும், தீயவர்களைத் தண்டிப்பதற்காகவும், மறையும் தர்மத்தை மீண்டும் நிலை நிறுத்துவதற்காகவும் அவர் தோன்றுகிறார். இங்கு தர்மம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தர்மம் அழியக்கூடியது என்றால், பிறகு தர்மத்தை நிறுவுவதற்காகத் தர்ம சொரூபியான கடவுள் மீண்டும் மீண்டும் ஏன் தோன்ற வேண்டும்? மற்ற அழியக் கூடிய எல்லா பொருள்களையும் போலத் தர்மம் மறைய முடியுமென்றால் அது தர்மமேயாகாது. அழிக்க முடியும்படியான எதுவும், பலமற்றதாக ஆக்கப்படக் கூடிய எதுவும் தர்மமாகாது. தர்மம் அழியக்கூடியது என்றால், தர்ம ஸ்தாபனத்தைப்பற்றிய வினா எழுவதற்கே நியாயமில்லையே. ஆகவே தர்மஸ்தாபனம் என்பது தர்மத்தை நிறுவுவதல் எனப்பொருள் கொள்ளாமல் தர்ம அனுஷ்டானத்தை நிறுவுவதல் எனப்பொருள் கொள்ள வேண்டும். தர்மம் சாய்வதில்லை. ஆனால் தர்ம அனுஷ்டானமே சாய்கிறது. மரபு வழிப்படி நாம் பார்க்குமிடத்து, மிக ஆரம்பகாலத்தில் கிருதயுகத்தில், தர்மம் நான்கு கால்களில் நின்றது என நாம் பார்க்கிறோம். பிறகு த்ரேதாயுகத்தில் மூன்று காலங்களில் நின்றது என நாம் நம்புகிறோம். அதற்கும் பிறகு த்வாபரயுகத்தல் அது இரண்டு கால்களில் நின்றுகொண்டிருந்தது. கலியுகத்தில் அது ஒரே காலில் நிற்கிறது என நாம் நம்புகிறோம். தர்மம் கிருதயுகத்தில் சாய்ந்து கொண்டிருந்தது. ஆகவே இராமர் த்ரேதாயுகத்தில் இராமர் தர்மத்தை மீண்டும் நிறுவினர் என்றால் மூன்று கால்களின்மேல் தர்மம் நின்றது என்பதன் பொருள் என்ன? மறுபடியும் தர்மம் குன்றியபோது தர்மத்தை மீண்டும் நிறுவ த்வாபரயுகத்தில் கிருஷ்ணன் வந்தார் எனவும் தர்மம் த்வாபரயுகத்தில் இரண்டு கால்களில் நின்றது எனவும் நாம் நம்புகிறோம். கிருஷ்ணர் தர்மத்தைக் காக்க வந்தும் த்வாபரயுகத்தில் தர்மத்தின் கால் ஒன்று மறைந்ததென்றால் அதன் பொருள் என்ன? இது உண்மையென்றால் தர்மத்தினைப் பாதுகாப்பத ற்காகக் கிருஷ்ணர் செய்திருக்கக்கூடிய உண்மையான பெரிய செயல் என்ன? இந்தக் கால்கள் தர்ம அனுஷ்டானத்துடன் சம்பந்தப்பட்டதாக விளக்கப்பட வேண்டும். இந்த அவதாரங்கள் தர்மத்தை மீண்டும் நிறுவ ஒருபோதும் வரவில்லை—தர்மம் ஒரு போதும் அழிக்கப்படவில்லை. ஆனால் தர்ம அனுஷ்டானம் மட்டும் அவ்வப்போது குறைந்து வந்துள்ளது. கலியுகத்தில் தர்மத்தை அனுஷ்டானம் செய்யும் ஒரே ஒரு முறைதான் எங்கும் உள்ளது அது நாமஸ்மரணமாகும். ஆகவே ஒரே ஒரு கால் இருக்கிறது என நாம் சொல்லுகிறோம். மனிதன் பிறக்கும் போது இரண்டு கால்களுடன் பிறக்கிறான். சில மாதங்கள் கழித்து அவன் நான்கு கால்களில் நடக்கிறான். இன்னும் சில மாதங்கள் கழித்து மீண்டும் இரண்டு கால்களில் நடக்கிறான். அவன் வயதானவன் ஆனதும் அவன் ஒரு தடியை உபயோகப்படுத்துவதால், அவன் மூன்று கால்களில் நடக்கிறான். இந்தக் கால்கள் எல்லாம் கால்களாக அழைக்கப்பட முடியாது. தன் அன்றாட வாழ்வில் தன் உடலை அசைத்தும் தன் கடமைகளைச் செய்வதற்காகவும் மனிதனுக்கு உதவும் பெருந்துணைக் கருவிகள் தாம் அவைகள். அவை அவன் வாழ்வை பூர்த்தி செய்ய உதவும் உபகரணங்கள் ஆகும். அதுபோலவே யுகங்கள் பிறக்கும்போது தர்மத்தை மக்கள் கடைப்பிடிப்பதற்காகப் பல வழிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தர்மத்தின் ஆதாரம் உண்மையாகும். உண்மை சாஸ்வதமானதொன்றாகும். ஆகையால், தர்மம் என்றும் மாறாத ஒன்றாகும். இன்று சிலர், தர்மத்திற்கு மூல அர்த்தத்தைக் காட்டிலும் வேறு காலத்தில், தர்மத்தின் பொருளை ஒருவகையான வழியில் விளக்கிக் கொண்டிருந்தார். இன்று இந்த நபர் எல்லா வசதிகளையும் அனுபவிப்பதற்குத் தகுதியுடையவன் என்றும், இன்பமாக இருப்பதற்குத் தகுதியுடையவன் என்றும் தர்மத்திற்கு நாம் விளக்கம் தருகிறோம். பணக்காரன் மட்டும் ஏன் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். பணக்காரன் மட்டும் வாழ்வில் இன்பங்களை ஏன் அனுபவிக்க வேண்டும்? ஏழைக்கும் ஏன் செல்வம் கொடுக்கப்படக் கூடாது? செல்வம் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் விநியோகிக்கப்பட வேண்டாமா? என்பவை இன்றைய வினாக்களாகும். இந்த வினாக்கள் இன்று நாம் அழைக்கும் 'சோஷியலிஸம்' கொள்கைக்கு அடிப்படைக் கூறுகளாக விளங்குகின்றன.

இன்றைய சோஷியலிஸக் கொள்கையிலே ஒரு விதமான மக்களுக்கு மட்டும் வளமையைக் கொடுக்க விருப்பமும், மற்றொரு விதமான மக்களுக்கு அதே நன்மையைக் கொடுக்க

விரும்பாமையும் மறைமுகமாக மறைக்கப்பட்டுள்ள கருத்தை நாம் பார்க்கிறோம். ஆனால் மனித வடிவில் வந்த தர்ம சொரூபமான கிருஷ்ணன் மனித சமுதாயம் முழுவதின் நன்மையையும் விரும்பினார். பிரபஞ்சத்தில் மனித சமுதாயம் அனைத்தினுடைய நன்மையைக் கோருவதுதான் தர்மத்தின் உண்மையான விளக்கம் ஆகும். இந்நிலையில் சிலரை விரும்புவது போலவும், சலுகை காட்டுவது போலவும், சிலரை விரும்பாதது போலவும், கிருஷ்ணரே நடந்து கொண்டார் என நீங்கள் விவாதிக்க ஆரம்பிக்கலாம். ஆனால் சூழ்நிலைகள் அப்படி இருந்ததனால் எல்லாவற்றையும் அறியும் கிருஷ்ணர், ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் செயல்புரியும் தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. தன்னுடைய சொந்தக்காரர்களுக்கு எதிராக யுத்தம் செய்து அவர்களைக் கொன்று அவர்கள் இரத்தத்தைப் பார்க்க மிகுந்த மனத்தளர்ச்சி இருந்தும், ஆனால் அதே சமயத்தில் அரசனாக விரும்பிய அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணர் என்ன கூறினார் என்பதை மீண்டும் நினைத்துப் பாருங்கள். கிருஷ்ணன் அர்ச்சுனனிடம் கூறினனர்:- “திருதராஷ்டிரன் அவனுடைய குடும்பம் இவற்றின் எதிர்காலத்தை நான் சொல்கிறேன். நான் சொல்வதைக் கவனமாகக் கேள். திருதராஷ்டிரனுக்கு நூறு புத்திரர்கள் இருந்தாலும், அவன் இறக்கும் போது அவனுக்கு இறுதிச் சடங்குகள் செய்ய ஒரு மகன் கூட இருக்கமாட்டான். நன்மையோ, தீமையோ, புண்ணியமோ, பாபமோ மற்றவர்கள் உங்களுக்குக் கொடுப்பதல்ல. இவைகள் நாம் செய்யும் செயல்கள் அனைத்தினுடைய நேரிடையான விளைவுகள்தான்.” கிருஷ்ணர் சொன்னதும் ஒப்புக் கொண்டதும் என்னவெனில் அத்தகைய சூழ்நிலைகளுக்கிடையே யுத்தம் செய்வதுதான் சரியான தர்மமாகும் என்பதே. இதன் காரணம் என்னவெனில், அத்தகைய நல்ல குடும்பத்தை அழிப்பதற்காக இத் தீய மக்கள் பிறந்திருக்கிறார்கள் என்பதே. இந்த அழிவு முறைக்கு அடிமையால் வளர்க்கப்பட்டவன் (கர்ணன்) துணையாக ஆகிவிட்டான். நெருப்புக்கு விறகிடுவது போலச் சகுனியும் இருந்தான். வரப்போகும் யுத்தம், ஜ்வலிக்கப்போகும் அக்னி– அதனைத் தடுக்க முடியாது. ஒன்று, நீங்கள் இந்த நெருப்பினால் ஏற்படும் அழிவிலிருந்து உலகத்தைக் காக்க விரும்பினாலும், யுத்தத்தைத் தவிர்க்க முடியாது. யுத்தம் அம்புகள் இவற்றின் சக்தியை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது அதிகம் பரந்து ஆக்ரமித்து இருக்கக்கூடிய அதர்மம் என்ற அக்னியை நீங்கள் அவிக்க விரும்பினால், அவ்வக்னி அதிகம் பரந்து ஆக்ரமித்து இருப்பதால் அதை அவிக்கக்கூடிய ஒரே வழி ஒரு பெருமழையைப் பெய்வித்தலே–சாதாரண மழைத்துளிகளால் அன்று அதுமட்டுமல்ல, இம்மழை அம்புமழையாக (சரமாரியாக) இருக்க வேண்டும். அகில உலகத்தையும் சூழ்ந்து வரும் அதர்மம் என்ற அக்னியை அவிப்பதற்கு யுத்தமும், அம்பு மழைகளும் இன்றியமையாதன எனக் கிருஷ்ணர் நம்பினார். இன்றைய இளைஞர்களுக்குச் சந்தேகம் ஒன்று எழலாம் : “கிருஷ்ணர் உலக அமைதியை விரும்பினார். இருப்பினும் நாற்பது லக்ஷம் மக்கள் கொல்லப்பட்ட இந்த பெரும் யுத்தத்தை அவர் ஊக்கினார். இதனை ஹிம்சை என்று அழைப்பதா அல்லது அஹிம்சை என்று அழைப்பதா?” இதற்குக் கூட கிருஷ்ணர் ஒரு தகுந்த பதிலை அளித்திருக்கிறார். அவர் சொன்னார் : “அர்ச்சுனா, உடலில் புற்றுநோய் வியாதியால் ஏற்படும் வளர்ச்சியை எடுத்துக் கொள்வோம். புற்று நோயின் வளர்ச்சி உடலில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்தாலும் அது உடல் முழுவதற்கும் துன்பம் அளிக்கிறது. இப்புற்று நோய்க்கட்டியில் பல சிறிய கிருமிகள் உள்ளன. இப்புற்று நோய் வளர்ச்சியை ஒரு வைத்தியர் அறுவை சிகிச்சை செய்யும் போது அவர் சந்தேகத்திற்கு இடமின்றிப் பல லட்சக்கணக்கான கிருமிகளைக் கொல்லுகிறார். தான் லட்சக்கணக்கான கிருமிகளைக் கொல்லுவதாக அவர் நினைக்கமாட்டார். அதனால் அறுவை சிகிச்சையை நிறுத்தமாட்டார். அவர் அறுவை சிகிச்சை செய்யாவிட்டால் கிருமிகள் காப்பற்றப்படும். ஆனால் நோயாளி துன்பப்படுவார். அவர் நிச்சயமாக வியாதிகளை உண்டாக்கும் கிருமிகளைக் கொன்று நோயாளியைக் காப்பாற்றுவார்”. கிருஷ்ணர் மேலும் கூறினார்: “இவ்வுலகமெனும் உடலில் இது தான் இப்போதுள்ள சூழ்நிலை. ஆட்சி செய்யும் கௌரவர்களின் வடிவில் புற்று நோய் வந்துள்ளது. உலகமுழுவதும் நிலைக்கொள்ளாமல் தத்தளிக்கிறது. இப்போது உலகத்தில் அராஜக நிலை நிலவிக் கொண்டிருக்கிறது. தர்மமும் க்ஷீணம் அடைந்துள்ளது. அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த எல்லாக் குடும்பங்களும் உடைக்கப்பட்டு

வருகின்றன. ஆகவே அர்ச்சுனன் கம்பவுண்டராகவும் (மருந்து சேர்ப்பவர்) நான் டாக்டராகவும் இருப்பேன். மகாபாரத யுத்தம் என்னும் வடிவில் புற்றுநோய் அறுவை சிகிச்சை நான் செய்வேன். இந்த யுத்தத்தில் அல்லது அறுவை சிகிச்சையில், உலகத்தின் நன்மைக்காக வியாதிகளை உண்டாக்கும் நாற்பது லக்ஷம் துஷ்டக் கிருமிகள் கொல்லப்படும். இது உலக நன்மைக்கா அல்லது தீமைக்கா?”

இதை இன்னொரு கோணத்திலிருந்து நாம் பார்க்கவும் முடியும். எல்லாவிதமான பற்றுகளும் உறவுககம் தேகசம்பந்தமான உறவுகள் என்பதை நாம் பார்ப்போம். கடவுள் ஒவ்வொருவரிலும் இருக்கிறார். சில மக்கள் தங்களின் பழைய செயலின் காரணமாகத் துன்பம் உறுகிறார்கள். மற்றவர்களோ அவர்களால் செய்யப்பட்ட நல்ல செயல்களின் காரணமாகத் துன்பம் உறுவதில்லை. இந்தச் சூழ்நிலையில் எது சரியானது, எது தீமையானது? என்பதை நம்மால் முடிவு செய்ய முடியாது. நேரியதும் தீயதும் செயல்களை ஒட்டி அமைந்துள்ளன. தேக சம்பந்தத்தால் ஓர் உடல் மற்றோர் உடலுடன் தொடர்பு கொள்கிறது. ஆனால் ஒரு ஆத்மாவுக்கும் இன்னொரு ஆத்மாவுக்கும் அத்தகைய உறவுகள் இல்லை. எல்லா மனித உடல்களிலும் ஒரே ஒரு ஆத்மாதான் உள்ளது.

நமது உடலில் பல உறுப்புகள் உள்ளன; உடலென்பது பல உறுப்புகளால் ஆக்கப்பட்டிருந்தாலும், ஓர் உறுப்பு நோயுற்றால் அது தனியாக நீக்கப்பட வேண்டியிருக்கிறது. அவ்வுறுப்பைத் துண்டித்து நீக்குவதற்கும் நாம் தயாராக இருக்கிறோம். அதே வழியில் மிகப்பழமையான ஜீவன் இந்த உடலென்னும் தற்காலிகமான இடத்தில் புகுந்துள்ளான் என்பதை நாம் உணர்ந்தால், ஒரு பகுத நோயுற்றால், அதை வெட்டி எறிவதிலோ அல்லது உடல் நோயுற்ற பகுதியை நீக்குவதிலோ தவறு எதுவும் இல்லை. இந்தக் கிருஷ்ணர் தம்முடைய அதிகாரத்தைத்தான் எடுத்துக் காட்டுகிறார். அதிகாரத்தை உணர்ந்து ஏற்றுக் கொள்ளுதல் மிகவும் கடினமான செயலாகும். இதற்கு ஒரு சிறிய உதாரணம் இருக்கிறது. ஒரு மருத்துவமனையில் மிகவும் கைதேர்ந்த ஆற்றல் உள்ள வைத்தியரை நீங்கள் பார்க்கலாம். அவர் வைத்தியத்துறையில் மிகவும் புகழ் பெ ற்றவராக இருக்கலாம். அடுத்த நாள் காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒருவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்னும் முடிவுக்கு வருகிறார். இது அறிவிப்புப் பலகையில் தெரிவிக்கப்படும் . சம்பந்தப்பட்ட எல்லா உறவினர்களுக்கும் செய்தி அனுப்பப்படும். இதைப் பற்றிய இரகசியம் எதுவும் இல்லை; ஒவ்வொருவரும் இதைப் பற்றி அறிவர். நோயாளி அறுவை சிகிச்சை அறைக்கு எடுத்துச் செல்லப்படுவார். மருத்துவர் அவருக்கு அறுவை சிகிச்சை செய்கிறார். ஆனால், ஏதோ துரதிருஷ்டவசத்தினால் நோயாளி இறக்கிறார். இதன் விளைவாகப் போலீஸார் வந்து மருத்துவரைக் கைது செய்யமாட்டார்கள். அதே சமயத்தில் இருவர் சண்டை செய்து கொண்டு, அவ்விருவரில் ஒருவர் மற்றொருவருக்கு “ரேசர் பிளேடினால்” சிறிய காயத்தை உண்டாக்கினால், போலீஸார் உடனடியாக வந்து, வழக்கைப் பதிவு செய்து, தீங்கு உண்டாக்கிய மனிதனைக் கைது செய்வர். இரண்டாவது உதாரணத்தில், ரேசர் பிளேடினால் காயத்தை உண்டாக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மனிதனுக்கு இல்லை. ஆனால், முதல் உதாரணத்தில், வெளிப்படையாக அறுவைச் சிகிச்சையைச் செய்யும் உரிமையை மருத்துவர் பெற்றிருக்கிறார் சில சமயங்களில் இவைகளில் ஒன்றை உதவி எனவும், நல்ல செயல் எனவும், மற்றொன்றைத் தீமை எனவும் பெயரிட்டு விளக்குகிறோம். தம் கையில் காயத்துடன் உள்ள நீரிழவு வியாதி உடைய நோயளியொருவரை உதாரணமாக நாம் எடுத்துக் கொள்வோம். காயம் ஆறாமல் ‘கான்க்ரின்’ (Gangrine) என்னும் வடிவில் உடல் முழுவதும் பரவலாம். இந்த மேற்கொண்ட பரவலைத் தடுக்கக் கையையே எடுத்துவிட வேண்டும் என்று மருந்துவர் வந்து கூறலாம். அப்போது அவர் முழுக்கையையும் துண்டித்துவிடுவார். இச்செயல் உடலுக்குச் சம்பந்தப்பட்ட நல்ல செயலாகும்.

மற்றொரு உதாரணம் தன் கையில் வளையல்களை அணிந்துள்ள ஒரு பெண்ணை ஒரு திருடன் வந்து கையை வெட்டிவிட்டு வளையல்களை எடுத்துச் செல்ல அல்லது வளையல்களுடன் கையை வெட்டி

எடுத்துச் செல்ல முடிவு செய்யலாம். திருடனும் மருத்துவரும் இருவரும் அதே செயல்களைத் செய்திருந்தபோதிலும் திருடன் செய்தது தீமையாகும், மருத்துவர் செய்தது நன்மையாகும். ஒரு வீட்டிற்கு அருகாமையில் ஒரு சிறிய பையன் தீயைப்பற்ற வைத்து விட்டால், அக்குழந்தை மிகுந்த தீமை செய்து விட்டாதாக நினைத்து அதைத் தண்டிக்க ஆரம்பிக்கிறோம். இருந்தபோதிலும் வானுலகத்தையே போன்று வளம் நிறைந்த இலங்கையை அனுமார் எரித்தபோது நாம் அவரைத் தண்டிக்காதது மட்டுமல்லாமல், அவரை ஒரு தெய்வீக புருஷராக இன்னும் கருதுகிறோம். இதற்குக் காரணம் என்னவெனில், முதல் உதாரணத்தில் நன்மையானதொன்று எரிக்கப்பட்டது. ஆனால் இரண்டாவது உதாரணத்தில் அனுமார் எரித்தது பாபத்தையே ஆகும். அவர் அரக்கர்களுக்கும் ராக்ஷசர்களுக்கும் தீமையே விளைவித்தார், ஆனால் சிறிய பையன் நல்ல மக்களுக்குத் தீமை விளைவித்தான். இங்கனம் நம்முன் உள்ள அரக்க குணத்தை நீக்குவதற்கு முழுமையான உரிமையும் சக்தியும் நம்மிடம் இருக்கின்றன. இந்தப் பலவிதமான முரண்பாட்டையும் சூழ்நிலைகளையும் உணர்ந்து கொள்ளும் கட்டத்தில்தான்—இந்த முரண்பாடும் சூழ்நிலைகளின் உள்ளர்த்தத்தை விளக்கும் வகையில் நன்மையானவை எவை என்பதை அறிவிக்கும் பலவிதமான நிகழ்ச்சிகளைக் கிருஷ்ணர் விவரிக்கிறார். கிருஷ்ணர் ஒரு சுயநலமற்ற மனிதர். அவர் எப்போதும் நல்லதாகவே இருந்தது. அவர் செய்ததில் தீமை என்பது எப்போதும் இருந்ததில்லை. அவரே பல நாடுகளை வென்றார். ஆனால் இந்த நாடுகளில் ஒன்றுக்குக் கூட அவர் ஒரு போதும் அரசனாக ஆகவில்லை. வென்ற இந்த நாடுகளை அவர் பல பேர்களுக்குக் கொடுத்து விட்டார். அவர் எதைச் செய்திருப்பினும் ஒரு நல்ல உள்ளர்த்தம் இருந்தது. ஒரு நல்ல உள்ளர்த்தத்தை உபதேசிப்பதை நோக்கியே அவரது செயல்கள் எல்லாம் திருப்பப்பட்டன. மற்றொரு உதாரணத்தைப் பாருங்கள்; யுத்தம் பதினெட்டு நாட்கள் நடந்தது; கௌரவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்; பாண்டவர்கள் வெற்றி பெற்றவர்களானார்கள். இவ்வெற்றியின் போது கிருஷ்ணர் தேரோட்டியாக இருந்தார். அர்ச்சுனன் தேரில் யஜமானன் போல் இருந்தான். வெற்றிக்குப் பிறகு அவர்கள் தங்களுடைய மாளிகைக்குத் திரும்பி வந்தனர். அர்ச்சுனன் மனித இயற்கை உடையவான இருந்தான். அதனால் அவனுள் சற்று எஞ்சிய அகந்தையும் இருந்தது. காரை ஓட்டுபவர் அந்தக் காரின் யஜமானர் காரிலிருந்து இறங்கும் போது காரின் கதவைக் கீழிறங்கி வந்து திறப்பதை எதிர்பார்ப்பது இன்று கூட ஒரு பொதுவான பழக்கமாக உள்ளது. அதே வழியில் அன்று கூடத் தேர் வந்து தன் வீட்டின் முன் நின்றவுடன் கிருஷ்ணர் முதலில் இறங்கிக் கதவைத் திறக்க வேண்டும் என்று அர்ச்சுனன் வலியுறுத்தினான். கிருஷ்ணர் அதற்கு இசையவில்லை. உண்மையில் சற்றுக் கடினமான மொழிகளால் கிருஷ்ணர் அர்ச்சுனனை எச்சரித்தார்; முதலில் அர்ச்சுனனை இறங்கி உள்ளே போகும்படி கூறினார். தனக்குக் கட்டளையாகக் கொடுக்கப்பட்ட சொல்லின் உட்பொருளை உணராமல் அர்ச்சுனன் இன்னும் கிருஷ்ணனுடன் வாதம் செய்து கொண்டிருந்தான். யுத்ததில் கிருஷ்ணரால் தங்களுக்கு வெற்றி கிடைத்தது; ஆகையால் கிருஷ்ணனுடன் சர்ச்சையில் இறங்கினால் தனக்கு ஏதேனும் அபாயம் வரக்கூடும் என அர்ச்சுனன் பயந்தான். ஆகவே சற்று மனது பிடிக்காமலேயே கிருஷ்ணன் சொன்னதை அவன் முடிவாக ஒப்புக்கொண்டான். அர்ச்சுனன் தேருக்கு வெளியே போய் வீட்டிற்குள் நுழைந்தவுடனேயே கிருஷ்ணர் ஒரே தாவலில் ரதத்திலிருந்து வெளியே குதித்தார். கிருஷ்ணர் வெளியே குதித்தவுடனேயே ரதம் முழுவதும் பற்றி எரிந்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த பாண்டவர்கள் ஆச்சரியமுற்றனர். “ரதம் அப்படிப் பற்றி எரிந்தது ஏன்?” என்று கிருஷ்ணரைக் கேட்டனர். அப்போது யுத்தத்தின்போது பீஷ்மர், கர்ணன் சிறந்த யுத்த வீரர்களால் மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் ஏவப்பட்டன. இந்த ஆயுதங்கள் எல்லாம் சக்தி குறைக்கப்பட்டுத் தம் கால்களின் கீழே வைக்கப்பட்டதாகக் கிருஷ்ணர் விளக்கினார். அர்ச்சுனன் முதலில் இறங்கமாலிருந்தால் இந்த ஆயுதங்கள் வெடித்து அர்ச்சுனனையும், மற்றவர்களையும் கொன்று இருக்கும். அர்ச்சுனனை முதலில் வெளியே குதிக்கும்படி சொல்லிவிட்டு பின்னால் தான் குதித்ததன் காரணம் இதுவே எனக் கிருஷ்ணர் விளக்கினார். தன் பக்தர்களைக் காப்பாற்றும் வண்ணம் பல்வேறு வழிகளில் பல்வேறு செயல்களைக் கடவுள் திட்டமிடுகிறார். அத்தகைய செயல்களின் உள்ளர்த்தத்தைப் புரிந்து உணராமல்

பக்தர்கள் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். கடவுள் அவர்களுக்குத் தேவையில்லாத கஷ்டங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறார்கள். மனிதன் புறக்காட்சி மட்டுமே பெற்றுள்ளான். கடவுளுக்கு உள்காட்சி உள்ளது. பரமாத்மா எப்போதும் தம் மக்களின் நன்மையைப் பற்றியும் தேவைகளைப் பற்றியும் கவனம் வைக்கிறார்; அவர் எதைச் செய்யினும் தம் பக்தர்களின் க்ஷேமத்திற்காகச் செய்கிறார். மிகவும் கவனமாகத் தாயாரால் வளர்க்கப்படும் மகன் கூட ஒரு தவற்றைச் செய்யும் போது மகனுக்கு ஒரு அடி கொடுத்துத் தாயார் தண்டிக்கிறார். இதை நாம் பார்க்கும் போது தன் மகனை இத்தகைய கவனம், அன்பு, மென்மையுடன் வளர்த்த தாயாரே அந்தக் குழந்தையை அடிப்பதில் கவனமாக இருப்பதாக நாம் உணர்கிறோம். ஆனால் குழந்தையை அடிக்கும் தாயார் அன்பினால் தான் அடிக்கிறாள். இதே வழியில் லோக பிதாவாக இருக்கும் கடவுள் தேவை ஏற்படி பிரேமையுடனும் அன்புடனும் தம் பக்தர்களைத் தண்டிக்கிறார். இதன் விளைவாகவே, கடவுள் மக்களைத் தண்டிக்க விரும்புகிறார் என்னும் எண்ணத்தை நாம அடையக் கூடாது. கடவுள் எப்போதும் கருணை நிறைந்தவர். அவர் ஒருபோதும் கோபம் கொள்வதில்லை. இருப்பினும், சில சமயங்களில் அவர் கடினமான சொற்களைப் பயன்படுத்துகிறார். ஆனால், அவர் கடினமானவர் அல்லர். சொற்கள்தான் கடினமானவை; அவருடைய இருதயம் அம்ருதத்தைப் போன்று மிருதுவானது. கடவுள் தம் பக்தர்களிடம் காட்டும் அன்பு, மென்மை எத்தகையது என்பதை உணர்ந்து கொள்ளும் தகுதியை நாம் முதலில் அடைய வேண்டும். இன்பம், துன்பத்தில் இருந்து வருகிறது. எல்லா துன்பமும் முடிவாக இன்பத்தில் முடிகிறது என்பதை நாம் உணர வேண்டும். பாண்டவர்கள் காடுகளில் பன்னிரண்டு வருடங்கள் இருந்ததனாலும் ஒரு வருடம் அஞ்ஞாச வாசம் செய்ததனாலும் அவர்களுடைய தெய்வீகமான குணங்களை அறியும் சந்தர்ப்பத்தை மக்கள் பெற்றனர். பிரஹலாதனுக்கு ஏற்பட்ட பல தடைகள், துன்பங்கள் காரணமாக, அவனுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள் காரணமாக, உலகமெங்கும் பிரகலாதனுடைய பக்தி எவ்வளவு பெரியது என்பதை அறிய முடிந்தது. ராக்ஷசர்கள் தன்னைத் துன்புறுத்திய போது கூட பிரகலாதன் ஒருபோதும் கண்ணீர் விட்டதில்லை; ஒருபோதும் துன்பத்தை வெளிக்காட்டியதில்லை. அவன் இறைவனுடைய நாமத்தை மட்டும் சொல்லிக் கொண்டிருந்தான்; இறைவனைத் தன்னிடம் வரும்படி கேட்டுக் கொண்டிருந்தான். அத்தகைய சூழ்நிலையின் காரணமாகத்தான் அவன் பக்தியை அதிகரிக்க முடிந்தது; உண்மையான நம்பிக்கையும் பக்தியும் இருந்தால் என்ன செய்ய முடியும் என்பதை மற்றவர்களுக்குக் காட்ட முடிந்தது. அதற்கு மாறாக பிரகலாதன் கவனத்துடனும் மென்மையுடனும் தன் தந்தையால் வளர்க்கப்பட்டு அவன் தந்தையார் அவனை மடியில் வைத்துக் கொஞ்சியிருந்தால் எஞ்சிய உலகனைத்தும் பிரகலாதனுடைய பக்தியும் நம்பிக்கையும் எப்படி அறிந்திருக்கும்? ஆகவே, நாம் பெறும் துன்பங்களும் துயரங்களும் எல்லாம் முடிவாக இன்பத்தையும் சந்தோஷத்தையும் அடைவதற்கு வழிமுறைகளாக அமைகின்றன. ஒரு நல்ல தன்மையுள்ள வைரம் கூட நாம் அதன் முகங்களை வெட்டிப் பட்டைத் தீட்டினால் அன்றி அதன் ஒளிரும் தன்மையை அது பெறுவதில்லை. சுத்த தங்கங்கூட நன்கு அடிக்கப்பட்டு அடிக்கடி நெருப்பில் இடப்பட்டாலொழிய ஒரு நல்ல ஆபரணம் உருவாக்க முடியாது. எல்லாத் துயரங்களிலும் துன்பங்களிலும் முடிவான சந்தோஷத்தை அடையும் பாதைகளை மட்டுமே நாம் உணர வேண்டும். வழிநெடுக இன்பத்தை மட்டும் தேடித் துன்பத்தை வரவேற்கமாலிருத்தல் சரியன்று. பாரதத்தின் புனிதமான தத்துவப் பொருளும், பக்தர்களின் நடத்தையைப் பற்றிய கிருஷ்ணரின் புனிதமான உபதேசங்களும் மற்ற நல்ல விஷயங்களும் உங்களுக்கு நாளையிலிருந்து சொல்லப்படும். மாணவர்கள் கவனமாகக் கேட்டுப் புரிந்து கொண்டு மகாபாரதக் கதையின் பயனைப் பெறுவர் என நான் நம்புகிறேன். இப்போது என் உரையை நான் முடிக்கிறேன்.

## நான்காவது கருத்துரை

அடக்கம், கீழ்ப்படிதல் என்னும் இருபெருங்குணங்கள் கிருஷ்ணவதாரத்தின் தனிச்சிறப்பாக விளங்கின.

உங்களுக்குக் கண்பார்வையும் கண்களும் ஏன் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? உங்களைச் சுற்றியுள்ள அனைத்தையும் பார்ப்பதற்கா? இல்லை, நிச்சயமாக இல்லை. சர்வ வல்லமை வாய்ந்த தெய்வீகத்தை, பரம்பொருளைப் பார்ப்பதற்கு உதவவே கண்கள் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

பவித்ராத்ம ஸ்வரூபிகளே, இன்று நமது நாடு வேண்டுவது இலட்சியக் கோட்பாடுகளே. சமூகத் துறையிலும் அரசியல் துறையிலும் நாம் விரும்பவேண்டிய ஓர் இலட்சியத்தைக் குறிக்கோளாக வைத்திருக்க வேண்டியிருக்கிறது. எந்த நாட்டிலும், ஒவ்வொரு துறையிலும், ஒரு தனிப்பட்ட நபர் இலட்சியமாக இருக்கலாம். ஆனால், சமூகம், அரசியல், ஆன்மீகம், பொருளாதாரம் முதலிய எல்லாத் துறைகளிலும் நம்மை வழிகாட்டவல்ல ஒரு நபர் மிகவும் அபூர்வமானவர். நமது பழமையான சரித்திரத்தை நாம் நன்கு ஆழ்ந்து பார்க்கும் போது, எல்லாச் செயல் துறைகளிலும் இலட்சியமான உதாரணத்தை நிலைநிறுத்தி நம்மை வழிநடத்திச் செல்லவல்ல ஒருவரைப் பார்க்கிறோம். அவர்தான் கிருஷ்ணர், அவர் ஓர் அபூர்வமான மனிதராக இருந்தார். அகில உலகத்திற்கும் அவரை ஓர் இலட்சியமாகக் கருதமுடியும். ஆனால், கிருஷ்ணருடைய இந்த அம்சங்களைப் புரிந்து கொள்ள இயலும் வண்ணம் நாம் சில முயற்சிகளைச் செய்ய வேண்டும். கிருஷ்ணருடைய இந்த லட்சிய அம்சங்களை புரிந்து கொள்ள விரும்பினால், அவருள்ளிருந்த தெய்வீகத்தை ஓரளவுக்கு நாம் ஒதுக்கிவைத்து விட்டு அவரது வாழ்க்கை, பணி இவைகளில், மானுட அம்சங்களில் மனத்தை ஒருமைப்படுத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது. நாம் அவரது தெய்வீக அம்சத்தை ஏகமுகமாகப் பார்க்கும் வரையில் அவருடைய மனித குணங்கள் நம்முடைய மனத்துக்குச் சரியான நிலையில் புலப்படா.

மேலும், இப்போது நாமுள்ள நிலையில் அவர் எடுத்துக் காட்டிய மிக உயர்ந்த மானிட குணங்களை நாம் எண்ணி அனுபவிக்க விரும்பினால், அது சாத்தியமாகாது. நாம் காலத்தால் பின்னோக்கிப் பயணம் செய்து அவர் வாழ்ந்த காலத்துக்குச் செல்ல வேண்டியிருக்கும். அவர் வாழ்ந்த காலத்தையும் சூழ்நிலையையும் இப்போது நாம வாழும் காலத்தையும் சூழ்நிலையையும் ஒப்பிட்டுக் காண்பது மிகவும் கடினமான செயலாகும். இன்று நாட்டின் பிரஜைகள் மனிதனை வழிபடுவதற்குத் தயாராக இருக்கிறார்களேயன்றி, மனிதப் பண்பினை இன்னதென உணர்வதற்குத் தயாராக இல்லை. மனித இய ற்கையின் மூலம் நாம் முயற்சி செய்தால்தான் மனிதர்களுள் பொதிந்துள்ள தெய்வீக ஆற்றலைப் புரிந்துகொள்ள சாத்யமாகும். ஆகையால், நாம் இன்று கிருஷ்ணருடைய மனித அம்சங்களைப் புரிந்து கொண்டு உணர்வதற்கு விரும்பினால், அவர் வாழ்ந்த காலத்திற்குப் பின்னோக்கிப் பயணம் செய்ய வேண்டும். பலர் இதை உணர்ந்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றியுள்ள நூல்களை நாம் படிக்கும்போது, அடக்கமும், கீழ்ப்படிதலும் அவரது தனிப்பண்புகளாக இருந்தன என்பது நமக்கு முற்றிலும் தெளிவாக விளங்கும். இக்காலத்திய மக்கள் உண்மையில் அடக்கமும், கீழ்ப்படிதலும் அவரிடம் இருந்தனவா எனச்சந்தேகம் கொள்ளக்கூடும். இந்தச் சந்தேகத்துக்குக் காரணம் என்னவெனில்– இன்று திரைப்படங்களில் சித்தரிக்கப்பட்டு நாம் பார்க்கும் கிருஷ்ணர் – இவரைப் பற்றிய விவரங்கள் உண்மையிலிருந்து மிகமிக வேறுபடுகின்றன. ஆகையினால், இந்தச் சூழ்நிலையில், பாரத நாட்டில் அந்தக் காலத்தில் அத்தகைய புனித எண்ணங்கள் இருந்திருக்குமா என்னும் சந்தேகத்தையும் நாம் அடையக் கூடும். கொஞ்சம் பணம் சம்பாதிப்பதற்காக, கொஞ்சம் தற்காலிகமான இன்பத்திற்காக நமது சொந்த புனிதமான சரித்திரத்தை தவறாகச் சொல்லுவதே உண்மையில் பொது வழக்கமாக ஆகிவிட்டது. நாம் இதையெல்லாம் பார்க்கும் போது, கிருஷ்ணர் எப்போதும் அரசர்களுடன் யுத்தம் செய்து அவர்களை அரசாட்சியிலிருந்து நீக்கிக் கொண்டிருந்தார் என்னும் கருத்தைப் பெறுகிறோம். அவருடைய பக்தர்களால் அலர் குருட்டுத் தனமாக வழிபாடு செய்யப்பட்டார் எனவும் நாம் நினைக்கிறோம்; நாம் காணும் இரு அம்சங்கள் இவைதான். ஆனால், வியாசரால் ஆக்கப்பட்ட மகாபாரதத்தின் உட்பொருளை நாம் கவனமாகப்

படிக்குமிடத்து, கீழ்ப்படிதலும், அடக்கமும் கிருஷ்ணரிடம் நிறைந்த அளவில் இருந்தன என்னும் பிழைப்படாத உணர்வை நாம் பார்க்கிறோம். உண்மையில், அந்தக் குணங்கள் ஒரு சாதாரண மனிதன் ஒப்புக்கொள்வத ற்கு அதிகமாகவே அவரிடம் இருந்தன.

இதை எடுத்துக்காட்ட ஒரு எளிய உதாரணம் இருக்கிறது. ஒரு நாள் யுத்தம் பயங்கரமான முறையில் மூண்டது. அன்று கர்ணன் தன்னுடைய சக்திவாய்ந்த ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்தான். கர்ணனுடைய கோபத்தைத் தாங்க இயலாமல் பாண்டவ சேனை இங்குமங்கும் சிதறி ஓடிக் கொண்டிருந்தது. பாண்டவர்கள் மிகவும் காயமுற்றனர். தர்மராஜா தன்னுடைய பாசறைக்கு மிகவும் அவசரமாகத் திரும்பினார். தன் பாசறைக்குத் திரும்பியதும், யுத்தகளத்தில் இன்னொரு பகுதியில் அர்ச்சுனன் போரிட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தார். தர்ம ராஜாவுக்கு வேறு உதவியில்லை. அவர் தன் காயங்களால் மிகவும் துன்புற்றார். தன் கொந்தளிக்கும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டார். அர்ச்சுனன் பாசறைக்குத் திரும்புவதை எதிர்நோக்கியிருந்தார். சிறிதுநேரம் கழித்து அர்ச்சுனன் பாசறைக்குத் திரும்பினான். என்ன இருந்தாலும் தர்மராஜர் ஒரு தனி மனிதர் தானே. ஆயுதங்களால் உண்டாக்கப்பட்ட உடற்காயங்களினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அவரால் அந்தத் துன்பத்தைச் சகிக்க முடியவில்லை. தன் உணர்ச்சிவசத்தில் அவர் அர்ச்சுனனையும் அவனுடைய காண்டீபத்தையும் இகழத் தொடங்கினார். தர்மராஜர் அர்ச்சுனனைப் பார்த்துச் சொன்னார் : “இந்தப் புனித அஸ்தரங்களைப் பெற்ற உன்தவம் அனைத்தினாலும் என்ன பயன்? உன் காண்டீபத்தினாலும் என்ன பயன்? கர்ணன் நமது சேனையில் பேரழிவு செய்து கொண்டிருக்கிறானே! இதை எதிர்த்துப் போர் புரிய உன்னால் முடியவில்லையே. எங்கே உன் வீரம்?” இந்தவிதமாகத் தர்மராஜா தன்னுடைய உணர்ச்சிவசத்தைக் காட்டிபோது, அர்ச்சுனனும் தன்னுடைய உணர்ச்சிவசத்தைக் காட்டினான். இருவரும் மனம் கொந்தளித்த நிலையில் இருந்தனர். ஒருவருக்கொருவர் நிதானமாயிருக்க முயன்றனர். ஆனாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அர்ச்சுனன் தர்ம ராஜாவைக் காண்டீபத்தினால் அடிப்பதற்குக் கூட முனையும் அளவுக்குப் பெருங்கோபம் கொண்டான். இந்த இக்கட்டான சூழ்நிலையில் கிருஷ்ணர் பாசறைக்குள் புகுந்தார். பாண்டவர்கள் அதற்குப் பிறகு ஒருபோதும் மறக்காத அளவிற்கு அப்போது கிருஷ்ணர் காட்டிய அடக்கம் இருந்தது. கிருஷ்ணர் அர்ச்சுனனின் கைகளைப் பிடித்துக்கொண்டு, யுத்த உணர்ச்சி வசத்தால் தன் சகோதரருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கக் கூடாது என அவனை வற்புறுத்தி வேண்டிக் கொண்டார். பிறகு தர்மராஜாவிடம் சென்று அவர் பாதத்தை வணங்கி, அவர் முழுவமனதுடன் அர்ச்சுனனை மன்னிக்கும் வரை அவர் பாதத்தை விடமாட்டேன் எனச் சொன்னார். மேலும் “பஞ்ச பாண்டவர்களாகிய நீங்கள் பஞ்ச பிராணன்களைப் போன்றவர்கள். ஐந்து பிராணன்களைப் போன்ற ஐந்து சகோதரர்களிடையே இத்தகைய வேறுபாடுகள் ஏற்பட்டால், இத்தகைய வேறுபாடுகளை உலகம் அறிந்தால், உலகுக்கு என்ன நிகழும் என்பதைச் சிந்தித்தீர்களா ?’’ என்று அவர் தர்மராஜாவிடம் கூறினார்.

தர்மராஜர் அர்ச்சுனனை மன்னித்துவிட்டேன் என்று உறுதியளிக்கும் வரை தான் பாசறையை விட்டுப் போக மாட்டேன் என்று கிருஷ்ணர் சொன்னார். அத்தகைய சூழ்நிலையில் முன் நிகழ்ந்திராத அளவி ற்குக் கிருஷ்ணர் அடக்கமும், கீழ்ப்படிதலும் காட்டியதைத் தர்மராஜர் கண்ணுற்றதும், அவர் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாகப் பெருகியது. கிருஷ்ணர் பாண்டவர்பால் வைத்த அன்பினால்தான் அத்தகைய அடக்கத்தைக் கைக் கொண்டார் என்று தர்மராஜா உணர்ந்தார். உடனடியாக அவர் அர்ச்சுனனிடம் சென்று தமக்குள் சச்சரவைப் பற்றி மறந்துவிடும்படி கேட்டுக்கொண்டு அவனிடம் மன்னிப்புக் கோரினார்.

தர்மராஜாவிடம் சென்று அவர் பாதத்தை வணங்கும் அளவிற்கு ஏன் கிருஷ்ணர் தன்னை ஆட்படுத்திக் கொண்டார் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். கிருஷ்ணர் பாண்டவர் பால் வைத்துள்ள அன்பினாலும் பிரியத்தினாலும்தான் என்ற விடையைப் பெறுவோம். தன் பக்தர்பால் வைத்துள்ள

பிரேமையினாலே, எத்தகைய மறுப்புத் தெரிவிக்கும் தகாத சூழ்நிலையிலும் கூடக் கடவுள் தம்மைத் தாழ விட்டுக் கொள்ளத் தயங்க மாட்டார். தம் பக்தர்கள் மேல் வைத்துள்ள பிரேமையின் விளைவாகத் தம்மை எந்தச் சூழ்நிலையிலும் கடவுள் வைத்துக் கொள்வார் என்பதை எடுத்துக் காட்டியவர் அவதார புருஷராகிய கிருஷ்ணர். இங்கு, கிருஷ்ணரின் மானுடகுண நலன்களை எடுத்துக்கொண்டு ரசிக்க வேண்டுமா அல்லது அவருள் உள்ள தெய்வீக குணங்களை முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டுமா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். பின்னால் சொல்லப்பட்ட தெய்வீக நிலையில், அவர் ஒரு கடவுள் புருஷராக இருக்கும்போது, ஏன் தம்மை இவ்விஷயங்களில் உட்படுத்திக் கொள்கிறார் என்னும் சந்தேகம் நமக்கு வரும். நாம் வாழும் இந்தச் சமூகத்தின் நிலைக்கேற்ப, பலவழிகளிலும் ஊனமுற்றிருக்கும் இந்தச் சமூகத்திற்கு ஏற்ப நாம் கிருஷ்ணரிடமுள்ள மனித குணங்களையே எடுத்துக் கொண்டு ஆராய வேண்டும். அவ்வாராய்ச்சி நமக்கு நல்ல பலனைத் தரும்.

மற்றவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காகவோ அல்லது துக்கமூட்டுவதற்காகவோ அவர் தாம் சொல்வதை ஒரு பொழுதும் மாற்றியதில்லை. இது மற்றவர்களை மகிழ்ச்சியூட்டும் அல்லது துன்பமூட்டும் என்று நினைக்காமல் அவர் எப்போதும் உண்மையையே பேசினார். ஒரு சமயத்தில் தர்மராஜா ராஜசூய யாகத்தைச் செய்ய விரும்பினார். அவர் தம் சகோதரர்களை அழைத்துத் தமக்குத் துணை செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார். சகோதரர்கள் உடனடியாக அண்ணனின் ஆணையை ஒப்புக்கொண்டனர். அத்தனை பெரிய யாகத்தைச் செய்வதற்கு அவர்தான் சரியான தகுதிவாய்ந்தவர் எனவும், அவருக்குத் துணை செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறினார். அடுத்த நாள் அவர் பண்டிதர்களையும் புரோகிதர்களையும் அழைத்து யாகத்தைச் செய்யவிரும்பும் தம் நோக்கத்தை அவர்களிடம் தெரிவித்தார். பண்டிதர்களும் இந்த எண்ணத்தை வரவேற்றுப் புகழ்ந்தனர். அத்தகைய செயலைச் செய்வதற்குத் தர்மராஜர்தான் சரியானவர் எனவும் கூறினர். மேலும், அவரைச் சந்தோஷப்படுத்தும் பல சொற்களையும் கூறினர். அடுத்த நாள் அவர் தௌம்யரையும் வியாசரையும் ஆள் அனுப்பி அழைத்து அவர்களிடமும் ராஜசூய யாகத்தைச் செய்யப்போகும் தம் நோக்கத்தைக் கூறி அவர்களுடைய ஆசியையும் பிரார்த்தித்தார்.

இவ்வளவு இருந்தபோதிலும், இத்தனை பேரிடமிருந்து தாம் அனுமதி பெற்ற போதிலும் தர்மராஜா திருப்தியடையவில்லை. கிருஷ்ணர்தான் எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமான அடிப்படையானவர் என நினைத்து, அர்ச்சுனனை ஏவிக் கிருஷ்ணரை அழைத்து வரும்படி சொன்னார். கிருஷ்ணர் வந்தபோது, தர்மராஜர் அவர் பாதத்தை வணங்கினார். பின் ராஜசூய யாகத்தைச் செய்யப்போகும் தம் நோக்கத்தைக் கூறினார். தர்மராஜர் சொன்னதனைத்தும் புன்முறுவலோடும் கவனமாகவும் கிருஷ்ணர் கேட்டார் ஆனால், தர்மராஜாவைச் சந்தோஷிப்பதற்காக மட்டும் இந்த நோக்கத்தை ஆமோதிக்க கிருஷ்ணர் தயாராக இல்லை. அவர் ஒரு கணம் தமது கண் புருவங்களை உயர்த்திவிட்டு அவருக்கு ராஜசூய யாகத்தை ச் செய்யும் உரிமை இன்னும் இல்லாததால் அந்த யாகத்தைச் செய்யும் எண்ணத்தை விட்டும்படி கேட்டுக்கொண்டார். நாட்டின் எதிர்ப்பில்லாா பேரரசர் தர்மராஜா விளங்கும் வரை அவருக்குச் சமமாகச் சக்தியுள்ள அல்லது அவரைக் காட்டிலும் சக்தி மிகுந்த அரசர்களான சிசுபாலன், தந்தவக்ரன் முதலியோர் இருக்கும் வரை – அவர் ராஜசூய யாகத்தைச் செய்ய முடியாது எனக் கூறினார். சிசுபாலன், தந்தவக்ரன், ஜராஸந்தன் முதலிய அரசர்களை வென்று அவர்களைக் கீழ்ப்படுத்த முடியுமானால் அவர் யாகம் செய்யும் உரிமையைப் பெறுவார். இதற்குக் காரணம் என்னவெனில், எந்த யாகத்தைச் செய்வதற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு அதிகாரம் வேண்டப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட யாகத்தைச் செய்வதற்கு நிறைய செல்வம் இருக்கவேண்டும். மற்ற அரசர்களிடமிருந்து ஏராளமான உதவிகள் இருக்க வேண்டும். அப்போது அப்படிப்பட்ட சக்திகளைத் தர்மராஜர் பெற முடியவில்லை. உதவி செய்வதற்குத் தயாராக இல்லாமல், அவர்க் கீழ்ச் சிற்றரசர்களாகத் தங்களைக் கருதாமல் இருக்கும் வரை பொதுமக்களுக்கு உண்மையில் பல துன்பங்கள் ஏற்படும். சிசுபாலன், தந்தவக்ரன் போன்ற மற்றும் பல அரசர்களின்மேற் சென்று வெல்லும்படி

தர்மராஜரிடம் கிருஷ்ணர் கூறியதன் காரணம் என்ன என்று நாம இங்கு ஆராய வேண்டும். இந்த அரசர்கள் மிகவும் ஆழ்ந்த சுயநலம் படைத்தவர்களாக இருந்தார்கள். தங்களை ஆளும் நிலையில் வைத்துக் கொள்வத ற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். தங்கள் செல்வங்களைத் தாமே சுயமாக நிலைநிறுத்திக் கொள்ளும் முடிவான குறிக்கோளுடன் அவர்கள் குடிமக்களுக்கு மிகப் பெருந் தீமையைச் செய்து கொண்டிருந்தார்கள்.

மக்களின் க்ஷேமத்தைப் பற்றிய எண்ணமில்லாத, சுயநலப்போக்கை உடைய அரசர்கள் இருந்தால், உலகில் அமைதி இருக்காது என்ற கொள்கையைக் கொண்டிருந்தார் கிருஷ்ணர். அத்தகைய அரசர்கள் விரும்பத்தாகதவர்கள் எனக் கிருஷ்ணர் நினைத்தார்; அவர்கள் நீக்கப்படவேண்டும் என உணர்ந்தார். அரசாளும் சக்தி சுயநலமுடைய அரசர்களிடம் இருந்தால், தம் சுயநலப் பேரார்வகளுக்கு உதவும் செயல்களை மட்டும் அந்த அரசர்கள் செய்வர் என்பதை, அறிந்து மக்களுக்கு அராஜகம் தற்காலிகமாக ஏ ற்பட்டால் கூட, அத்தகைய அரசர்கள் நீக்கப்படவேண்டும் எனக் கிருஷ்ணர் தர்மராஜாவிடம் சொன்னார். “நாட்டிலுள்ள மக்கள் ஆள்பவரின் உடல் உறுப்புகளைப் போன்றவர்கள்; மக்களைப் பொருத்தவரை, ஆள்பவன் நாட்டின் இதயத்தைப்போன்றவன் ஆவான்.” என்பது கிருஷ்ணர் கொள்கை. இதயத்துக்கும் உடலுக்குமிடையே இருக்கும் ஆழ்ந்த உறவு ஒரு நாட்டிலுள்ள ஆள்பவனுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையே உள்ள ஆழ்ந்த உறவாக அமைய வேண்டும். நாடும் உடலும் முறையே அரசின் உயரின் பிம்பங்கள் போன்றவை. தன் உடலுக்கு வரும் தீமையிலிருந்து தப்புவதற்கு ஒரு தனி மனிதன் எல்லா முயற்சிகளும் செய்வதுபோல், நாட்டிற்கு வரும் அபாயத்தை நீக்குவதற்கு நாட்டுமக்கள் எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். நாட்டில் சுயநலமிக்க அரசர்கள் இருக்கும்வரை நாட்டில் எந்த அமைதியும் பாதுகாப்பும் நிலவா என்பதை எந்தத் தனிப்பட்ட சுயநல நோக்கமும் இல்லாமல் கிருஷ்ணர் மிகத் தெளிவாகச் சொன்னார். ஆகவே, தர்மராஜர் ராஜசூய யாகத்தை செய்வதற்கு உரிமை பெற விரும்பினால், முதலில் அத்தகைய அரசர்களை அவர் நீக்க வேண்டும். தர்மராஜர் கிருஷ்ணருடைய ஆணைகளை ஒப்புக்கொண்டார். கிருஷ்ணருடைய ஆசியுடன் அவர் முதலில் அரசன் ஜராஸந்தனை வென்று அவனை நீக்குவதற்கு ஆரம்பித்தார். பீமார்ச்சுனர் உதவியால் தர்மராஜர் மன்னன் ஜராஸந்தனை அரசாட்சியிலிருந்து நீக்க முடிந்தது.

இதைச் செய்த பிறகு இராஜசூயயாகத்திற்குத் தர்மராஜர் ஏற்பாடு செய்தார். இராஜசூயயாகத்தை நடத்துவதற்குக் கிருஷ்ணரே தர்மராஜருக்கு எல்லா உதவியும் செய்வதற்குத் தயாராக இருந்தார். ஒவ்வொரு விதத்திலும் கிருஷ்ணர் அவருக்கு உதவி செய்தார். தர்மராஜர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு குறிப்பிட்ட பணியைச் செய்வதற்காக நியமித்தார். வியாசர் தலைமைப் புரோகிதராக அமர்த்தப்பட்டார். யாகத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய அர்ஜுனன் நியமிக்கப்பட்டான். விருந்தினர்களை வரவேற்கும் பொறுப்பு சகாதேவனுக்கு தரப்பட்டது. பலவிதமான மக்களுக்கும் தானங்கள் செய்யும் பணி கிருபாசாரியாருக்குக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆளுக்கும் பணிகள் கொடுக்கப்பட்டபோது, கிருஷ்ணரும் கூப்பிய கரங்களுடன் நின்று கொண்டிருந்தார்; அவர் சொன்னார்: “தர்மராஜரே, இப்போது தாங்கள் நாட்டில் எதிர்ப்பில்லாத பேரரசராக இருக்கிறீர்கள் நான் உங்கள் பிரஜைகளில் ஒருவன். எனக்குத் தகுதியான ஒரு பணி கொடுக்கப்பட வேண்டுமெனத் தங்கள் முன் நின்று கேட்டுக்கொள்கிறேன்.” தர்மராஜர் சிறிது மனவருத்தப்பட்டார். தான் பேரரசராக இருக்கும் நாடும், எல்லா எல்லைகளும். தான் அனுபவித்துக்கொண்டிருக்கும் எல்லாச் செல்வமும், எலலாம் கிருஷ்ணருடைய தெய்வீக ஆசியின் விளைவு, ஆகையால் கிருஷ்ணரிடம் ஒரு பணியைச் செய்யும்படி சொல்வது தனக்குச் சரியானதன்று எனத் தர்மராஜர் கூறினார். அந்தச் சமயத்தில் கிருஷ்ணருடைய தெய்வீக அம்சத்தை மறந்துவிட்டு, அவருடைய மானிடத்தன்மையை மட்டும் தர்மராஜர் பார்க்கவேண்டுமெனக் கிருஷ்ணர் சொன்னார். கிருஷ்ணர் மேலும் கூறினார் : “உங்களுடைய மக்களுள் ஒரு குடிமகனனாக என்னை நீங்கள் கருதிப்பார்க்கவேண்டும், என்னைத் தெய்வீக ஆத்மநிலையில் வைத்து நீங்கள் நினைக்கக்கூடாது.” அப்போது தர்மராஜர்

கிருஷ்ணரை அழைத்து அவர் விரும்பும் எந்தப் பணியையேனும் அவரே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று கூறினார். தாம் ஒவ்வொருவருக்கும் சேவை செய்ய விரும்புவதாகவும், எல்லா விருந்தினர்களுடைய பாதங்களையும் விளக்கி ஸ்ரீ பாத தீர்த்தத்தைத் தம் தலைமேல் தெளித்துக்கொள்ள விரும்புவதாகவும் கிருஷ்ணர் கூறினார். இந்தக்கடமை தமக்குக் கொடுக்கப் படவேண்டுமென மேலும் வேண்டிக்கொண்டார். மேலும் தர்மராஜரை நோக்கி, "தலைவர் நீர், நான் தொண்டன்; தொண்டன் என்ற முறையில் மக்களுக்கு நான் தொண்டு செய்ய விரும்புகிறேன்" என அவரிடம் சொன்னார் கிருஷ்ணர். எல்லாவற்றையும் அறியும் ஸர்வசக்திமானாயிருந்தும், அத்தகைய தொண்டைச் செய்வதற்கு அவர் முன் வருவது, அப்படி முன் வருவதில் அடங்கியிருக்கும் அடக்கம் இவற்றின் பொருளை ஒருவர் உணர்ந்து கொள்ள முயல வேண்டும். உண்மையில் நாம் படிக்கும் புத்தகங்களிலோ, நாம் பார்க்கும் திரைப்படங்களிலோ, நாடகங்களிலோ, நாம் கிருஷ்ணரைப் பார்க்குமிடத்து, அவர் சித்தரிக்கப்படும் எல்லா அம்சங்களும் தெய்வீக அம்சங்களே, அவரிடம் மானிடத் தன்மை இல்லை என்னும் முடிவுக்கு வருகிறோம். கிருஷ்ணர் துவாபரயுகத்தில் வாழ்ந்தார். கலியுகத்தில் வாழ்கின்ற நமக்குக் கிருஷ்ணருடைய மனித குண நலன்களை உணர்வது மிகக் கடினமானதாக இருக்கும். நாம் கிருஷ்ணரது நடத்தையை உணர விரும்பினால், நம்முடைய காலத்தி ற்குக் கிருஷ்ணரைக் கொண்டு வராமல், கிருஷ்ணரின் காலத்திற்குப் பின்னோக்கிப்போவதுதான் நாம் செய்யக்கூடிய சரியான செயலாகும்.

கிருஷ்ணரை ஓர் இலட்சியமான மனிதர்க்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடியவர் என்பதைை உண்மையாகப் புரிந்து கொண்டு உணர்ந்துகொள்ள விரும்பும் இளைஞர்கள் கிருஷ்ணர் வாழ்ந்த காலத்தி ற்குப் பின்னோக்கிப் பயணம் செய்து, அக்காலத்தைப் புரிந்துகொள்வதற்குத் தயாராகவிருக்கவேண்டும். சமூக, அரசியல், ஆன்மீகத் துறைகளில் இலட்சியமான நடத்தைக்கு முன் உதாரணமாக, எடுத்துக்காட்டாக விளங்கிய மஹான் அவர்.

ஒரு சமயம் அர்ஜுனன் மிகவும் தளர்ச்சியுற்றுத் தற்கொலை செய்து கொள்ளத் தயாராகிக் கொண்டிருந்தான். இது அனுமதிக்கப்பட்டால் பாண்டவர்களின் குடும்பம் முழுவதற்கும் ஒரு களங்கமாகவும், மிகவும் வெட்ககரமான ஒரு செயலாகவும் இருக்கும் என்பதை நினைத்து உணர்ந்து கிருஷ்ணர் அர்ஜுனனிடம் சென்று அத்தகைய செயலைச் செய்யாதிருக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். தற்கொலை செய்து கொள்ளல் கூடாது என்பதையும் அவனை நம்பவைத்தார். கண்ணிமைகள் கண்களைப் பாதுகாப்பது போல் பல சூழ்நிலைகளிலும் பல கஷ்டமான சந்தர்ப்பங்களிலும், அவர் பாண்டவர்களைக் காத்துக் கொண்டு வந்தார். ஒரு சமயம் கிருஷ்ணர் தூதராகச் சென்றபோது திருதராஷ்டிரன் அவரைப் பழித்துப் பாண்டவர்களும் கௌரவர்களும் எல்லோரும் சகோதரர்களாகவிருக்கும்போது, பாண்டவர்களைத் தனிப்பட்ட முறையில் தனிச் சலுகைகளோடு கூடிய முறையில் பாரபட்சமாகப் பார்க்கக்கூடாது எனக்கூறினான். அந்தச் சூழ்நிலையில் கூட தயவை எதிர்பார்க்காமல் பயமில்லாமல் திருதராஷ்டிரனிடம் உண்மையைக் கூறக் கிருஷ்ணர் தயாராக இருந்தார். 'நெருப்புக்கும் நீருக்கும் ஒருபோதும் நட்பிருக்க முடியாது' எனத் திருதராஷ்டிரனிடம் அவர் கூறினார். பாண்டவர்கள் தர்ம சொரூபிகளாதலால், அவர்கள் எப்போதும் தருமத்தைப் பாதுகாப்பதால், தாம் எப்போதும் பாண்டவர்களின் பக்கமிருப்பதாக அவர் கூறினார். மாறாக, கௌரவர்கள், தீயவர்கள். கெட்டவர்கள். தீயவர்களும், கெட்டவர்களும் தார்மீக வழியைப் பின்பற்றும் மக்களுக்குத் துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது அத்தகைய கேடான சூழ்நிலையில் தாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் சாட்சியாக இருக்க முடியாது எனக் கிருஷ்ணர் கூறினார்.

உடலாக உருவகிக்கும்போது, தருமராஜர் தலையைப் போன்றவர், அர்ச்சுனன் தோள்களைப் போன்றவன், பீமன் வயிற்றைப் போன்றவன், நகுல சகாதேவர்கள் கால்களைப் போன்றவர்கள்;

பாண்டவர்களால் ஆக்கப்பட்ட அந்த உடலில் கிருஷ்ணர் இதயமாக இருந்தார். உடலின் பல உறுப்புகளுக்கும், கிருஷ்ணருக்கும் இடையேயிருந்த உறவு நெருக்கமாக ஆழ்ந்திருந்தது. உடலாகும் பாண்டவர்கள் உண்மையாக இல்லாவிட்டால், கிருஷ்ணருக்கு பாண்டவர்கள் உண்மைாக இல்லாவிட்டால், கிருஷ்ணர் என்றழைக்கப்படும் இருதயம் இல்லை. அவர் இல்லாவிட்டால், பாண்டவர்கள் என்ற உடல் இல்லை. கிருஷ்ணரை அவமதித்துத் தீங்கு செய்யும் எண்ணத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்த தீயவர்களின் சபையிலே தயவை எதிர்பார்க்காமல், பயமில்லாமல், ஒரு பக்கம் பாண்டவர்களுக்கும், ம ற்றொரு பக்கம் கிருஷ்ணருக்கும் உள்ள உறவின் திறம் எடுத்துரைக்கப்பட்டது. விளைவுகளை எதிர்பார்க்காமல் உண்மையைப் பேசுவதற்கு விரும்பிய இலட்சிய உதாரண புருஷராகக் கிருஷ்ணரை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இது ஒரு பக்கம் மட்டும் சாய்ந்துள்ள அன்பல்ல. பாண்டவர்களும் கிருஷ்ணரைத் தங்கள் உயிராகவே கருதிக் கொண்டிருந்தனர். பாண்டவர்கள் கிருஷ்ணர்பால் கொண்டிருந்த பிரேமையின் விளைவாகத்தான் அத்தகைய இருமுனை இணைப்பு உறவு விளங்கியது. முளைக்கப் போகும் செடியின் இயற்கை, விதையின் இயற்கையைப் பொறுத்து அமையும்; ஏப்பம் விடும்போது வரும் வாசனை ஒருவர் சாப்பிடும் உணவால் தீர்மானிக்கப்படுகிறது. பணியாரம் செய்வதற்கு நீங்கள் பயன்படுத்தும் மாவுவகையால் பணியாரத்தினுடைய விதமும் நிச்சயிக்கப்படுகிறது. சமாதான உடன்படிக்கை செய்வதற்காகக் கிருஷ்ணர் அனுப்பப்பட்டபோது பாண்டவ சகோதரர்களுக்கிருந்த துன்பத்தையும், தயக்கத்தையும் மற்றவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளவில்லை. அது கிருஷ்ணருக்கு மட்டும் மிகவும் நன்றாகத் தெரிந்தது. தன் அண்ணன் பரமாத்மாவான கிருஷ்ணரைத் தீயவர்கள் நிறைந்த ஒரு சபைக்கு அனுப்புகிறார் என்பதைப் பற்றிப் பாண்டவ சகோதரர்கள் குறிப்பாக நகுலனும், சகாதேவனும் கவலையு ற்றனர். கிருஷ்ணருக்கு இத்தீயவர் தீங்கிழைக்கக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது என்பதைப் பற் றி அவர்கள் மிகவும் கவலையுற்றனர். சமாதான உடன்படிக்கைக்கான முயற்சிகள் அனைத்தையும் முடித்துவிட்டுக் கிருஷ்ணர் பத்திரமாகத் திரும்பும் வரை நகுலனும், சகாதேவனும் ஒரு துளி தண்ணீர் கூட அருந்தவில்லை. கிருஷ்ணருக்குத் தீங்கு நேர்ந்தது என்னும் செய்தி வருமோ என்ற பயத்திலும், பெரும் பீதியிலும் அவர்கள் பொழுதைக் கழித்தனர். அவர்கள் இடைவிடாது கிருஷ்ணரையும் அவரது க்ஷேமத்தைப் பற்றியுமே நினைத்துக் கொண்டிருந்தனர். கிருஷ்ணர் திரும்பியவுடன் பாண்டவர்களில் இளையவரான சகாதேவன் கிருஷ்ணரை ஆலிங்கனம் செய்துகொண்டு கீழ்க்கண்ட மொழிகளில் தன் கருத்தைத் தெரிவித்தான்: “என் அம்மான் சேய் கிருஷ்ணர் சமாதான உடன்படிக்கையாகத் தூது அனுப்பப்பட்ட போது நான் மிகுந்த தயக்கத்துடனும் சந்தேகத்துடனும் இருந்தேன். நான் அவருக்கு நேரப்போகும் தீங்கைப் பற் றிக் கவலையுற்றேன். அவரைச் சமாதானப் பணிகளுக்கு அனுப்பும் எண்ணத்தை விட்டு விடும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ள முடியாமல் இருந்தேன். ஏனென்றால், நான் அத்தகைய எண்ணத்தை வெளியிட்டால் அது ஒரு அபசகுணமாகக் கருதப்படும் என்றெண்ணி, அமைதியாக இருந்தேன். எப்படியிருந்த போதிலும், கிருஷ்ணர் இப்போது பத்திரமாகத் திரும்பியிருக்கிறார் என்பதைப் பற்றி நான் மகிழ் ச்சி அடைகிறேன்.” இப்படிச் சொல்லிக் கொண்டு அவன் அவரை ஆலிங்கனம் செய்துகொண்டு மிகுந்த சந்தோஷத்தை வெளிப்படுத்தினான். பாண்டவர்கள், கிருஷ்ணரிடம் அத்தகைய பெருநம்பிக்கையும், அன்பும் கொண்டிருந்தமையால் கிருஷ்ணரும் அவர்களை எல்லாச் சமயங்களிலும் பாதுகாத்தார்.

கடவுளுக்கும், அவர் பக்தர்களுக்கும் இடையேயுள்ள இணைப்பானது எப்போதும் பிரேமபாசத்தால் வலியுறுகின்றது. லட்சுமி தேவி கூட நாராயணனைத் தனக்குக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால், பிரகலாதனுடைய பிரேமையால் ஸ்ரீமந் நாராயணன் கட்டுண்டான். நாம் நரசிம்மவாதரத்தைப் பார்க்கும்போது பயங்கர உணர்வைப் பெறுகிறோம். ஆனால், பிரகலாத–நரசிம்ம வரலாற்றை ஊன்றிப் படிக்கும்போது, நரசிம்மர் பிரகலதனுக்குத் தரிசனம் அளித்தபோ அவர் பேரன்பைக் காட்டினார் என்பதை உணர்வோம். ஆனால், ஒரு மூலையில் பிரகலாதன் பயம் நிறைந்து நின்று கொண்டிருப்பதுபோல் தோன்றியது அந்தச் சமயத்தில் நரசிம்மர் பிரகலாதனைப் பார்த்து, “உன் தந்தையைத் தண்டிக்க வந்துள்ள பயங்கரமான

வடிவத்தைப் பார்த்துப் பயப்படுகிறாயா?" எனக் கேட்டார். ஆனால், ஒருவன் உணரும் வடிவங்களிலெல்லாம் மிகவும் இனிமையான வடிவம் கடவுளுடையதேயாதலின், பிரகலாதன் தான் பயப்படவில்லையென விளக்கினான். கடவுளைத் தான் பார்க்க முடிந்ததற்கு உண்மையில் சந்தோஷப்படுவதாகவும் அவன் கூறினான். நரசிம்மர் அப்போது, "அப்படியாயின் நீ ஏன் பயப்பட வேண்டும்? எனக் கேட்டார். இதற்குப் பிரகலாதன், "இப்போது நான் பார்த்துக் கொண்டிருக்கும் தெய்வீகக்காட்சி சிறிது நேரத்தில் மறைந்து விடக்கூடுமே; நான் விரைவில் தனியாக விடப்படுவனே," எனப் பயப்படுவதாகப் பதிலளித்தான். கடவுள் இவ்வுலகில் தன்னை விட்டு மறைந்து விடுவார் என்னும் பயமே பிரகலாதனைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது. தன்னை விட்டுவிட்டுச் செல்லாதிருக்கும்படி கடவுளைக் கேட்பதற்குப் பிரகலாதன் விரும்பினான். கடவுளுடைய தெய்வீகக் காட்சியும், தெய்வீக அழகும், அவருடைய பக்தர்கள் மட்டுமே ரசிக்கும்படியிருக்கின்றன. கடவுள் எங்குமில்லையென்று இரண்யகசிபு சொல்லிக்கொண்டே இருந்தான். மாறாக, நாம் எங்கு விரும்புகிறோமோ, அங்கெல்லாம் கடவுள் காணப்படுவார் எனப் பிரகலாதன் கூறினான். அவன் எங்கெல்லாம் காண வேண்டினானோ அங்கெல்லாம் உண்மையாகவே அவனுக்குக் கடவுள் இருந்தார். இது 'யத்பாவம் தத்பவதி' என்பதன் விளைவே ஆகும். உங்கள் மனதில் என்ன நினைக்கிறீர்களோ அவையெல்லாம் உண்மையென உங்களுக்குப் பிரதிபலிக்கும். இன்று நாம் கடவுக்குப் பூஜை செய்கிறோ; அவரை வழிபடுகிறோம்; அவரைக் கடைப்பிடிக்க விரும்புகிறோம்; யாருடைய நன்மைக்காக இவையெல்லாம் நாம் செய்கிறோம்? நாம் இதையெல்லாம் நம்முடைய நன்மைக்காகவே செய்கிறோம்? நாம் இதையெல்லாம் நம்முடைய நன்மைக்காகவே செய்கிறோ, கடவுளுடைய நன்மைக்காக அன்று. நாம் இவையெல்லாம் செய்வதன் காரணமாக, கடவுளிடமுள்ள கல்யாண குணங்களை நினைத்துக் கொண்டிருப்பதால் நாமும் அத்தகைய நல்ல குணங்களைப் பெறுவோம் என்பதால் தான்.

இதற்கொரு சிறிய உதாரணம் இருக்கிறது. ஏதேனும் ஒன்றைப்பற்ற நமக்கு உணர்ச்சி வசமான கிளர்ச்சி எண்ணம் ஏற்பட்டால், நமது சொற்கள் உணர்ச்சி வசப்படுவதாகவும், நமது செயல்களும் உணர்ச்சி வசப்படுவதையும் நாம் பார்க்கிறோம். மாறாக, நமது மனத்தில் துன்பம் நிறைந்த எண்ணங்களிலிருந்தால், அப்போது நமது மனம் அனுபவிக்கும் துக்கத்தை நமது ஸ்தூல சரீரம் காட்டுகிறது. நாம் அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. நாம் ஒரு ஆரஞ்சு பழத்தைப் பற்றி நினைத்து, அதை உரிப்பதாக நினைத்துக்கொண்டால், நம் நாக்கில் உமிழ்நீர் சுரப்பதை நாம் காணக்கூடும். உண்மையில், ஆரஞ்சு பழரசம் உங்கள் நாக்கை வந்து தொடவில்லை. ஆரஞ்சு பழரசத்தினுடைய எண்ணம் உங்கள் நாக்கில் நீர் சுரக்கச் செய்கிறது. நாம் உணவு உண்ணும்போது ஏதேனும் அசுத்தப் பொருளை நினைத்தால், நம் மனது கொஞ்சம் சலனப்படுகிறது. ஆதலால், மக்கள் உணவருந்தும்போது யாரும் அவர்களிடம் போய் அசுத்தமான விஷயங்களைப் பற்றிப் பேசக் கூடாது என்பது நமது மரபுவழி முறைமையாக இருக்கிறது. இதற்குக்காரணம், நாம் ஒன்றைப் பற்றி நினைக்கும்நேரத்தில் நமது மனதில் ஓர் எண்ணம் ஏற்படுகிறது; அவ்வெண்ணத்துடன் நமது இதயம் இசைந்து கொள்கிறது என்பதே. நாம் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, யாரேனும் ஒருவர், "தேள் ஒன்று காணப்படுகிறது,'' எனக் கத்திக் கூறினால், தேள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், 'தேள்' என்ற வார்த்தையே நம்மை நடுங்கச் செய்து இங்கிருந்து விலகிப்போகும்படி செய்கிறது. ஆகவே, நமது மனதில் நுழையும் ஓர் எண்ணமானது, நம்மை எல்லாச் செயல்களிலும் அவ்வெண்ணத்துடன் இசைந்து கொள்ளச் செய்கிறது. ஆகையால் நாம் கடவுளைப் பற்றிய தெய்வீகமான எண்ணங்களையே நினைத்துக் கொண்டிருந்தால் நம்முள் அந்தத் தெய்வீக குணங்கள் முன்னேறி நம்முள்ளேயே நன்மாற்றம் செய்யும்படி செய்கின்றது என்பது இதிலிருந்து பெறப்படுகிறது. இந்நிலையில்தான், 'பிரம்மவித் பிரம்மைவ பவதி' எனச் சொல்லப்படுகிறது. பிரம்மத்தைப் பற்றிய அறிவு உங்களைப் பிரம்மாகவே ஆக்குகிறது. ஆகையால், நாம் நல்ல கொள்கைகளை, நல்ல இலட்சியங்களை, நல்ல எண்ணங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதன் பொருள், "கடவுள் எங்கேயோ இருந்துகொண்டு நமது

பிரார்த்தனையைக் கவனமாகக் கேட்கிறார்; நமது கஷ்டங்களைப் போக்குவதற்காக எங்கிருந்தோ இவ்வளவு தூரம் வருகிறார்" என்பதல்ல.

உலக நிலையில், அதிகார நிலையிலுள்ள ஒருவரிடம் இன்னொருவர் நெருங்கிச் சென்று அவரைப் புகழ்ந்தால், அப்போது புகழும் மனிதருக்கு ஏதேனும் நன்மையை அவர் செய்யலாம். ஆனால், இருந்த இடத்திலிருந்தே உங்கள் மனதிலேயே கடவுளைப் பிரார்த்தனை செய்தால் கூட அவருடைய கருணை உங்களுக்கு உதவும். ஆகையால், கடவுளைப் பிரார்த்தனை செய்தல், கடவுளுடைய புகழ் பாடுதல், கடவுளுடைய தெய்வீகமான குணங்களை நினைத்தல்—இவையெல்லாம் நம்முடைய சொந்த நன்மைக்காகச் செய்யப்படுகின்றன; அக்குணங்களில் சிலவற்றை அடையும் நோக்கத்துடன் செய்யப்படுகின்றன மாணவர்களே! பலவழிகளில் பாரதம், கீதை முதலியவற்றின் பலவிதமான புனிதமான அம்சங்களை உணர்வதற்கு நீங்கள் முயற்சி செய்கிறீர்கள். ஆனால், இவற்றை வெறுமனே கேட்டுவிட்டு அவைகளை அனுஷ்டானத்தில் கடைப்பிடிக்காத வரைக்கும் நன்மையே இல்லை. புராணத்தில் விவரிக்கப்படும் கத்தரிக்காய்கள் உங்களுக்கு எந்த வழியிலாவது உதவுமா? எவ்வளவு பசியாக இருப்பினும் ஒரு புலி பூரியை ச் சாப்பிடுமா? எந்த விதமான கவர்ச்சியாக இருக்கட்டும், ஓர் உண்மையான பக்தன் யோக்கியமற்ற விஷயங்களை ஒருபோதும் நினைக்க மாட்டான். உங்கள் வழியில் எவ்வளவு தடைகள் வந்தாலும், அந்தத் தடைகளுக்குப் பயந்து வளைந்து கொடுக்காமல் உங்கள் மனதில் நம்பிக்கையை உறுதியாக ஊன்றினால் அப்போது நாம் ஒரு கிருஷ்ண சேனையை உருவாக்க முடியும். அசையாத நம்பிக்கையையும் நிலையான காட்சியையும் பெறுவதற்கு நீங்கள் எல்லோரும் உங்கள் மனங்களை உறுதிப்படுத்த வேண்டும். இது நீங்கள் செய்ய வேண்டிய முக்கிய முயற்சியாகும். நீங்கள் பெறவேண்டிய அனைத்தையும் பெற்றிருக்கிறீர்கள்; உங்கள் குறிக்கோள் நிறைவேறும் வரை அவைகளைத் தளர விடாதீர்கள். நீங்கள் விரும்பியிருப்பன அனைத்தையும் ஏற்கனவே தெரிவித்துள்ளீர்கள்; அவை பூர்த்தியாகும் வரை பின்னடையாதீர்கள். நீங்கள் கேட்டவை நல்லவைதான்; அவை உங்களுக்குத் தரப்படும் வரை விட்டுவிடாதீர்கள். உங்கள் மனதில் நினைத்தவைகளை ஏற்கனவே தெரிவித்து விட்டீர்கள்; அந்த எண்ணங்கள் நிறைவேறும் வரை ஒருபோதும் அவ்வெண்ணங்களிலிருந்து பிறழாதீர்கள். உங்கள் திட உறுதியையும், பக்தியையும் பார்த்துக் கடவுள் இணங்கி உங்கள் கோரிக்கையைப் பூர்த்தி செய்வார். ஒரு வேளை நீங்கள் தளர்ச்சியடைந்தாலும் உங்கள் மனோதிடத்தை விட்டுவிடாதீர்கள். அதுதான் சரியான பாதையாகும்; உங்கள் உறுதியை விட்டுவிடுதல் சரியான பாதையன்று. மாணவர்களே! பாரத சரித்திரத்தை நீங்கள் சிறிது திரும்பிப் பார்ப்பீர்களாக! நமக்குக் கிருஷ்ணர் காட்டியுள்ள இலட்சிய வாழ்க்கையையும், இலட்சிய உதாரணத்தையும் நீங்கள் அங்குக் காண்பீர்கள் என நான் நம்புகிறேன். நீங்கள் அவற்றை உங்கள் குறிக்கோளாக வைத்துக்கொண்டு, இந்நாட்டின் எதிர்காலப் புனிதகுடிமக்களாக உங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும். நான் உங்களை ஆசீர்வதித்து, இவ்வுரையை முடிக்கிறேன்.

ஐந்தாவது கருத்துரை

கிருஷ்ணர் எப்போதும் சமாதனப் பிரியர், யுத்த வியாபாரியல்லர்.

உங்களுக்குக் கால்கள் ஏன் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவீர்களா? பயனற்ற முறையில் எல்லா விதிகளையும், குறுகிய சந்துகளையும் சுற்றுவதற்கு உங்களுக்கு கால்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? இல்லை. நீங்கள் இறைவனுடைய கோயிலுக்குப் போவதற்காகத்தான் உங்களுக்கு அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பிரேம ஸ்வரூபிகளே! மேலாகப் பார்க்கும் பார்வையாளர்களால் கிருஷ்ணர் அமைதியை விரும்புபவராகக் கருதப்படுவதில்லை. பொதுவாக அவரை, யுத்தங்களையும், சண்டைகளையும் உ

ற்சாகப்படுத்தும் ஒருவராக மக்கள் நினைக்கின்றனர். கிருஷ்ணருடைய யுத்த விருப்பத்தால்தான் மகாபாரதப் போரில் இரத்தப் பெருக்குண்டானது என்று கூட அவர்கள் நினைக்கின்றனர். இது கிருஷ்ணரைப் பற்றிய உண்மையான விவரணம் அன்று. உண்மையில், அவர் அமைதியில் மிகவும் நாட்டமுடையவராக இருந்தார். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையே நடைபெறவிருந்த போரைத் தடுத்து, அந்தச் சமயத்தில் நாட்டில் அமைதியையும், பாதுகாப்பையும் நிறுவுவதற்காக அவர் செய்த முய ற்சிகளும், எடுத்துக்கொண்ட சிரமங்களும் நாம் வியாஸருடைய ஸமஸ்கிருத நூலைப் படித்தால்தான் தெரிய வரும். சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளக் கிருஷ்ணர் அஸ்தினாபுரத்திற்குப் புறப்பட்டார். துரியோதனனும், துச்சாதனனும், மற்ற கௌரவர்களும், கிருஷ்ணர் சமாதனர் பேச்சுக்காக வருகிறார் என்பதை அறிந்தவுடன் அவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்தனர்; அஸ்தினாபுர நகரத்தின் புற எல்லையிலேயே கிருஷ்ணரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். தகுதியான வரவேற்பைத் தருவதற்காக, மாபெரும் இரதம் வந்தவுடன் அது நகரத்தின் முன்பாகக் கொண்டுவரப்பட்டது. கிருஷ்ணர் இரதத்திலிருந்து இறங்கிய உடனேயே துரியோதனனும் துச்சாதனனும் அவரைச் சந்தித்தனர். அவருக்கு ஒரு சிறப்பான வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது எனவும், ஒரு வசதியான அரண்மனை அவர் தங்குவதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது எனவும் அவர்கள் அவரிடம் கூறினர். அன்று அரண்மனையில் (ஏ ற்பாடு செய்துள்ள) ஒரு சிறப்பான விருந்துக்கு அவரை அழைத்தனர். தான் சமாதானம் செய்வதற்குத் தூதராக அங்கு வந்திருப்பதாகவும், தன் பணி நிறைவேறுவதற்கு முன்பேயே தூதன் என்ற நிலையில் வந்திருக்கும் தான் அவர்கள் அழைப்பை ஏற்பது சரியன்று எனவும் கிருஷ்ணர் துரியோதனனிடமும் து ச்சாதனனிடமும் கூறினார். தன்பணி நிறைவேறிய பின்பு அவர்கள் விருந்தோம்பலைச் சந்தோஷமாக ஏ ற்பதாகவும், அப்படிச் செய்வதுதான் ஏற்புடையதெனவும் அவர் கூறினார். இந்தச் சந்தோஷமூட்டும் வார்த்தைகளைக் கூறி அவர் விதுரருடைய வீட்டிற்குச் சென்றார். கிருஷ்ணர் தம் வீட்டிற்கு வந்ததைப் பார்த்ததும் விதுரருக்குப் பேராச்சரியமாக இருந்தது. ஏனெனில், கிருஷ்ணர் தம் வீட்டிற்கு வருவதாக அவர் ஒருபோதும் கற்பனைகூடச் செய்ததில்லை. அவர் பெரு மகிழ்வுற்றார். அதைத் தம் பெரும் பாக்கியமாகக் கருதினார். உடனே, அவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். அவர்கள் இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர்.

சாப்பிட்ட பிறகு விதுரர், கிருஷ்ணர் இருவரும் சேர்ந்து சம்பாஷிக்க உட்கார்ந்தனர். அப்போது, அவருக்குத் தீங்கிழைக்கக் கூடிய தீயவர்கள் சபைக்குச் சமாதான உடன்படிக்கைக்காகக் கிருஷ்ணர் வருதல் தமக்குச் சரியானதாகத் தோன்றவில்லையென விதுரர் சொன்னார். அனைத்தையும் அறிந்தும் சமாதானப் பேச்சுக்காக அங்குக் கிருஷ்ணர் வந்திருக்கக்கூடாது என அபிப்பிராயப்பட்டார். அப்போது, கௌரவர்கள் தீய குணங்களும் தீய எண்ணங்களுமுள்ள மக்கள் என்பதைத் தாம் அறியாதவரல்லர் எனக் கிருஷ்ணர் கூறினார். இருப்பினும், குற்றமற்ற மக்கள் துன்புற நேரும்போது, இரத்தப் பெருக்கு நிகழவிருக்கும்போது, அநீதியையும் இரத்தப் பெருக்கையும் தடுப்பதற்குப் பொறுப்புள்ள ஒவ்வொருவரும் தன்னாலானதனைத்தையும் செய்யவேண்டும்; இந்தச் சூழ்நிலையில் தான் தாம் சமாதானத்திற்காக முயற்சி செய்வதற்காக அபிப்பிராயப்பட்டார். அந்தச் சமயத்தில் கிருஷ்ணர் சொன்னதன் உட்பொருளை நாம் உண்மையாகப் பார்க்குமிடத்துக் கிருஷ்ணர் உண்மையில் மக்களின் பாதுகாப்பிற்காகவும், அமைதிக்காகவும் பாடுபட்டார் என்பதை நாம் காண்போம்; கிருஷ்ணர் உண்மையில் அமைதியை விரும்புபவர். யுத்தத்தை நாடுபவரல்லர் என்பதை நாம் புரிந்துகொள்வோம். மனித நிலையில் கிருஷ்ணரா செய்யப்பட்ட இந்த அம்சங்களையும், செயல்களையும் ஒரு மனிதனால் மனித நிலையில் (தெய்வீக நிலையன்று) செய்யப்பட்டவையாக உணர்ந்து கொள்ள வேண்டும். விதுரர் அப்போது தம் சந்தேகத்தை தெரிவித்தார்: இந்தச் சமாதானப் பேச்சுகள் வெற்றிகரமான நிறைவைப் பெறா; ஏனெனில், தமக்குத் தெரிந்தவரை கௌரவர்கள் தீங்கிழைக்க எல்லாவற்றையும் தயாராக வைத்திருந்தனர், அவர்களுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் கூடத் தயாராக இருக்கும்படி அழைக்கப்பட்டுள்ளனர், ஆயுதங்களும் தயாராக

வைக்கப்பட்டிருக்கின்றன என அவர் சொன்னார். இந்தச் சூழ்நிலைகளுக்கிடையில் அவர் எந்த அமைதியையும் எதிர்பார்க்கவில்லை. அப்போது விதுரர் நன்கறிந்திருந்த தர்மப்படி நோக்கினாலும், அமைதியை நிலைநிறுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் செய்யப்படவேண்டுமெனக் கிருஷ்ணர் அவரிடம் கூறினார். வெற்றியாயினும் சரி, தோல்வியாயினும் சரி, நாம் நமது கடமையைச் செய்ய வேண்டும் என அவர் சொன்னார்.

பொழுது விடிந்ததும் கிருஷ்ணர் தனது தேரில் ஏறி அஸ்தினாபுர நகருக்குள் சென்றார். அன்று நகரம் சந்தோஷமாகக் காணப்பட்டது. வீதிகள் தோரண வளைவுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. எல்லா வீதிகளும் பார்ப்பதற்கு அழகான காட்சிகளாகக் காணப்பட்டன. சமுத்திரத்தின் அலைகள் சந்திரனைக் கண்டு பொங்கி வரவேற்பது போல் அஸ்தினாபுரத்தில் மக்கள் அவரை பொங்கி வரவேற்பது போல் அஸ்தினாபுரத்தில் மக்கள் அவரை மகிழ்ச்சி பொங்க வரவேற்க முன் வந்தனர். அந்தச் சூழ்நிலையில் புன்முறுவல் பூத்துக்கொண்டு அஸ்தினாபுரத்து மக்களைப் பார்த்துக் கொண்டே (கிருஷ்ணர்) சென்றார். அவர் அரண்மனைக்கு அருகே வரும் தருணத்தில் அவரை வரவேற்பதற்குத் துரியோதனனும் கர்ணனும் அங்கு நின்று கொண்டிருந்தனர். கிருஷ்ணரின் மேல் பொழிவதற்ககப் பெண்கள் மலர்களைக் கொண்டு வந்தனர்; மாடிகளின் மேல்தளங்களில் நின்று கொண்டு கிருஷ்ணரின் மேல் மலர்களைப் பொழிந்தனர். தம்மைச் சந்தோஷப்படுத்துவதற்காக இவையெல்லாம் கௌரவர்களால் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று கிருஷ்ணருக்குத் தோன்றியது. எப்படியிருந்த போதிலும், இந்தப் புறத் தோ ற்றங்களெல்லாம் அவருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அவர் அரண்மனைக்குள் நுழைந்தார். கர்ணனும், துரியோதனனும் அரசவைக்குள் நுழைந்துச் சென்றபோது கிருதவர்மா கிருஷ்ணரைப் பின் தொடர்ந்து சென்றார். கிருஷ்ணர் அவைக்குள் நுழைந்தவுடனேயே அரசர்கள் சிற்றரசர்கள் அனைவரும் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் செலுத்தினர். கிருஷ்ணர் அவைக்குள் நுழைந்தவுடனேயே மற்றவர்கள் உதவியுடன் திருதராஷ்டிரன் அவரை வரவேற்க வந்தார். அவர் கிருஷ்ணரை ஆலிங்கனம் செய்து பீஷ்மரின் உதவியுடன் கிருஷ்ணருக்கு முன்பாகச் சென்றார். கிருஷ்ணரைப் பேராசனத்தில் அமரும்படி துரோணர் கேட்டுக்கொண்டார். கிருஷ்ணர் அந்த ஆசனத்தில் அமரவில்லை; நாட்டின் அமைதிக்கும் வளமைக்கும் என்ன நிகழப்போகிறது என்பதைப் பார்ப்பதற்காக அந்த அவையிலே கூடியிருக்கும் புகழ்பெற்ற மகிரிஷிகளும், யோகிகளும், நன்கு படித்தவர்களும் இருக்கும் போது தமக்குப் பேராசனம் அளித்தல் சரியன்று, இது துரோணருக்கும் நன்கு தெரியும் எனக் கிருஷ்ணர் துரோணரிடம் கூறினார். கிருஷ்ணரின் அறிவுரைப்படி பீஷ்மர் பலரை அழைத்து, அவரவர் தகுதிக்கேற்பப் பெரியோர்களுக்கு ஆசனம் அளிக்கும்படி ஏற்பாடு செய்தார். இவர்கள் எல்லோருக்கும் ஆசனம் அளித்த பின்பே, கிருஷ்ணர் அவையோர் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துப் பிறகு தமது ஆசனத்தில் அமர்ந்தார். அதற்குப் பிறகு துரியோதனன், கர்ணன், பீஷ்மர், துரோணர் – இவர்கள் தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்தனர். இப்பெரியோர்கள் அனைவரும் அமர்ந்த பிறகு சிற்றரசர்கள் அனைவரும் சபைக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுத் தத்தம் ஆசனங்களில் அமர்ந்தனர்.

அந்த அவையில் கிருஷ்ணர் என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்பதற்கும், கிருஷ்ணர் கொண்டு வந்துள்ள செய்தியை அறிவதற்கும் ஒவ்வொருவரும் ஆவலுடன் இருந்தனர். எதையும் தவறவிடாமல் அவரை உற்றுக் கவனித்துக்கேட்கும் ஆவலால் ஊசி விழுந்தால் கூடக் கேட்குமளவுக்க அவர்கள் எல்லோரும் அமைதியுடன் இருந்தனர். அந்த அவையிலுள்ள ஒவ்வொருவரும் அநேகமாகக் கிருஷ்ணரை இதற்கு முன்பு பலமுறை பார்த்திருக்கின்றனர்; ஆனாலும் அவர்கள் எல்லோரும் இப்போது அகலத் திறந்த கண்களுடனும் ஆவலுடனும் அவரிடமிருந்து மிகவும் சிறந்தது ஒன்றை எதிர்பார்த்து அவரை இடைவிடாது பார்த்துக் கொண்டிருந்தனர். கிருஷ்ணரின் கருமையான சுருண்ட கேசமும் முத்துப் போன்ற வெண்பற்களும் மக்களைக் கவர்ந்து கொண்டிருந்தபோது அவர்

திருதராஷ்டிரனை நோக்கித் திரும்பினார். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமிடையே அமைதி நிலவ வேண்டும் என்பதே கிருஷ்ணரால் கூறப்பட்ட முதல் வார்த்தையாகும். பிறகு அவர் சொன்னார்: 'கௌரவர்கள், பாண்டவர்கள் ஆகிய இரு குடும்பங்களும் எப்போதும் நட்புடன் இருந்து கொண்டு உலகில் அமைதியையும் வளமையையும் ஸ்தாபிக்கட்டும். உலகம் அனைத்தும் அமைதியை விரும்புகிறது. அவர்கள் நாடும் ஒரே சொல் இதுவேயாகும்." அமைதியை விரும்பும் நிலையில் தான் அங்குத் தூதுவனாக வந்திருப்பதாக அவர் மேலும் கூறினார். அவர் இதனுடன் நிற்கவில்லை; திருதராஷ்டினிடம் சென்று, "இந்த அவையில் எது தீர்மானிக்கப்படுகிறதோ அது உமக்கு மிகவும் முக்கியமானதொரு விஷயமாகும். அதனால் ஒரு முடிவெடுப்பதற்கு முன் நீர் கவனமாக நினைத்துப் பார்க்க வேண்டும்," என்று கூறினார். மேலும் அவர் சொன்னார்: "பாண்டவர்கள் தாம் குழந்தையாக இருந்த போது தம் தந்தையை இழந்து விட்டனர். அத்தகைய அநாதையான குழந்தைகள் திருதராஷ்டிரனாகிய உம்மால் வளர்க்கப்பட்டனர். அதனால் அவர்களின் நன்மைக்கு நீர் காரணமாவீர். தங்களைப் பெற்ற தந்தை உயிரோடு இல்லாவிட்டாலும் தம்மிடம் அன்புள்ள ஒருவர் இருக்கிறார் எனப் பாண்டவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர்." மற்றும் கிருஷ்ணர் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார்: "உங்கள் இயற்கை மக்களைப் போல் இந்த வளர்ப்புப் புத்திரர்களை முன்னேற வைத்துக் காத்தும் வந்தீர்கள். நீங்களே வளர்த்த அந்தக் குழந்தைகளுக்கு எதிராக வெறுப்பைக் காட்டுதல் உங்களுக்குச் சரியானதன்று. குறித்த சில வருடங்களுக்குப் பின் அவர்கள் திரும்பி வந்தால் அவர்களுக்கு அவர்கள் இராச்சியத்தைக் கொடுப்பதாக நீங்கள் அவர்களிடத்தில் சொல்லியிருந்தமையால் உங்களுக்கு கீழ்ப்படிந்து அவர்கள் பன்னிரண்டு வருடம் காட்டில் இருந்தனர்; ஒரு வருடம் மறைந்தும் வாழ்ந்தனர். அவர்கள் இப்போது திரும்பி வந்துள்ளனர். நான் வருவதற்கு முன்பு தர்மராஜர் என்னிடம் சொன்னதை நான் இப்போது உங்களுக்குச் சொல்லப் போகிறேன்: அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ ஏதேனும் தவறு செய்திருந்தால் அவர்கள் மன்னிக்கப்பட வேண்டுமெனவும், அவர்கள் தேடுவதெல்லாம் உம்முடைய அன்பு ஒன்றேதான் எனவும் உங்களுக்குத் தெரிவிக்கும்படி தர்மராஜ என்னைக் கேட்டுக் கொண்டார். தனக்கு இராச்சியம் தந்தாலும் தராவிட்டாலும், எந்த இராச்சியத்தைக் காட்டிலும் உங்கள் அன்பும் பிரியமும் மிகவும் முக்கியமானவை எனவும் தருமர் கூறினார்." பாண்டவர்கள்பால் திருதராஷ்டிரன் வெறுப்புக் கொள்வத ற்குக் காரணங்கள் எவையும் இல்லை. அப்படி ஏதேனும் இருப்பின் அவர்கள் திருதராஷ்டிரனிடம் மன்னிப்புக் கேட்பதற்குத் தயாராக இருப்பதாகவும் தர்மராஜர் சொன்னார். பாண்டவர்களிடமிருந்து அத்தகைய சொற்களை நாம் கேட்கும் போது அவர்கள் எவ்வளவு நல்லவர்களாகவும், புனிதமானவர்களாகவும் இருந்தார்கள் என்பதை நாம் உணர்கிறோம்.

சமாதனத் தூதுவராகச் சென்ற கிருஷ்ணர் எந்த வழியிலேனும் யுத்தம் நடக்க விரும்பவில்லை என்பதையும் அறிகிறோம். சமாதானத்தை உண்டாக்குவதற்காகக் கிருஷ்ணர் எவ்வளவு தூரம் சென்றார், எத்தகைய துன்பத்தை ஏற்றுக் கொண்டார் என்பதை உங்களைப் போன்ற மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவையில் கூடியிருந்த அரசர்களும் முடிமன்னர்களும் இவையனைத்தும் கேட்டனர். சமாதனப் பேச்சுகளுக்கான சூழ்நிலையை எண்ணிப் பார்த்த போது அவர்களது கண்கள் கண்ணீரால் நனைந்தன. ஒவ்வொருவரிடமும் பேரன்பு காட்டியும் பெரியோர்களிடம் பெருமதிப்புக் காட்டியும் இருந்த கிருஷ்ணரின் மிக ச்சிறந்த குணங்களைக் கண்டு அவையில் உட்கார்ந்திருந்த அனைவரும் மிகவும் நெகிழ்வுற்றனர். ஆனால், கௌரவர்கள் என்னும் தீயவர்களின் சூழ்நிலையில் அவர்கள் என்ன செய்ய இயலும்? எவராலும் கௌரவர்கள் செய்து கொண்டிருந்ததை எதிர்க்க முடியவில்லை. அந்த அவையிலிருந்த ஒவ்வொருவரும் பாண்டவர்கள்பால் நல்ல உணர்வுகளைப் பெருக்கிக் கொண்டனர். இத்தகைய வழியில் சமாதானப் பே ச்சுகளுடன் பாண்டவர்களின் நன்மைக்கு உதவும் பல விஷயங்களைக் கிருஷ்ணர் திருதராஷ்டிரனிடம் கூறினார். கிருஷ்ணர் சொன்னதன் உண்மையையும் திண்மையையும் திருதராஷ்டிரன் அறியாதவர் அல்லர், அதிலுள்ள புனிதத்தன்மையை உணராதவர் அல்லர். தம் மக்கள் தீயநெறியொன்றைக் கடைப்பிடிக்கின்றனர்

என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆனால் அவருக்கு வேறு வழியில்லை. அவர் ஒரு பலவீனராக ஆகிவிட்டார்; ஆகையால் தம் மக்களுடைய கொடிய தன்மைக்குத் தம்மையே உட்படுத்திக் கொண்டார். அமைதியை உண்டாக்கும்படி கிருஷ்ணர் அவருக்குப் பல வழிகளில் கூறியபோதிலும், அவரால் அங்கனம் செய்ய முடியவில்லை; ஏனெனில் அவர்தம் தீய மக்களால் சூழப்பட்டிருந்தார். விஷயங்கள் வரம்பு கடந்த நிலையை அடைந்ததும், "ஒருவன் ஓர் இராச்சியத்தில் தனக்கு உரிமையில்லாத போது, அந்த இராச்சியத்தை அடைய அவன் விரும்பினால் அவனை ஒரு திருடனாகக் கருதவேண்டும்," எனக் கிருஷ்ணர் திருதராஷ்டிரனிடம் கூறினார். 'திருதராஷ்டிர' என்பதன் பொருள் 'தனக்குச் சொந்தமில்லாத இரா ச்சியத்தைத் தனதாக நினைத்து அதை அனுபவிப்பவன்' என்பதாம். கிருஷ்ணர் அவரிடம் மேலும் கூறினார்: "உங்கள் பிள்ளைகள் செய்யும் செயலின் விளைவாக நாடு முழுவதும் குழப்பத்திலும் இரத்தப் பெருக்கிலும் ஆழ்ந்தப்படவிருக்கிறது. இந்த இரத்தப் பெருக்கில் சாதுவான பெண்களும் குழந்தைகளும் சம்பந்தப்படப் போகும் ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. காட்டில் தங்கள் தவத்தில் பொதுவாக ஈடுபட்டிருக்கும் துறவோர்களையும் ரிஷிகளையும் கூட இந்த இரத்தப்பெருக்கு இழுக்கும் சூழ்நிலைக்கு நீர் உலகை இட்டுச் செல்கிறீர். யுத்தம் கௌரவர்களுடனுடம் பாண்டவர்களுடனும் மட்டும் நின்று விடுவதல்ல. இந்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் இந்த யுத்தத்தால் கவரப்படுவார்கள். காட்டுத் தீ கொழுந்து விட்டெரியும் போது, பழங்கள் கொடுப்பதால் மாமரங்கள் மட்டும் தீயிலிருந்து காக்கப்பட வேண்டும் என நினைக்காது. இந்த யுத்தம் என்னும் அக்னி ஜனத்தொகை முழுவதுக்கும் பரவும், எல்லா மக்களும் எரிக்கப்படுவர். இந்தச் சூழ்நிலையில், நீர் யுத்தத்தில் இறங்கக்கூடாது" எனக் கிருஷ்ணர் அறிவுரை கூறினார். இந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது என்பதும், என்ன பதிலளிப்பது என்பதும் திருதரஷ்டிரனுக்குத் தெரியவில்லை, யோசனை செய்வதற்குச் சிறிது காலம் கொடுக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். திருதராஷ்டிரன் யோசனை செய்ய விரும்புவதன் உட்பொருளை உணர்ந்து கொண்ட கிருஷ்ணர் அவரை அழைத்துச் சென்று, சூழ்நிலையின் பின்னணியை அவருக்கு விவரித்தார்.

பிறகு கிருஷ்ணர் அவரைத் தேற்றிப் பேசினார். இந்தச் சூழ்நிலையில் தம் பிள்ளைகள் தீயவர்கள் என்பதையும் அவர்கள் தீய நோக்கங்களைக் கொண்டுள்ளனர் என்பதையும் தாம் உணர்வதாகவும், இருந்தாலும் தாம் அவர்களுடைய தந்தையாக இருப்பதால் அவர்களுடைய விருப்பத்துக்கெதிராகப் போக முடியவில்லை எனவும் திருதராஷ்டிரன் சொன்னார். அது சரியான சந்தர்ப்பம் என்று அப்போது கிருஷ்ணர் நினைத்துச் சில கடுமையான சொற்களைக் கூறத் தயாரானார். அவர் கேட்டார்: "நமது உடம்பில் தீய பொருட்கள் உண்டானால் அவைகளை நாம் பாதுகாக்கிறோமோ? அவைகள் தம் சொந்த உடலிலிருந்து வந்தன என்பதால் மட்டும் வைத்துக் கொள்கிறோமோ? மலமும், மூத்திரமும் நம் உடலிலிருந்து வருகின்றன. அவைகளைத் தூர எறிந்துவிட்டு நாம் நம்மை சுத்தப்படுத்திக் கொள்வதில்லையா? அவைகள் உங்கள் சொந்த உடலிலிருந்து வந்தன என்பதால் மட்டும் அவைகளைக் காத்து உங்களுடன் வைத்துக் கொள்கிறீர்களா?" அதற்கு "மலமும், மூத்திரமும் உயிரற்றவை; என் மக்கள் உயிருள்ளவர்கள்," எனப் பதிலளித்தான் குருடன். அப்போது கிருஷ்ணர் சொன்னார்: "நம்மில் தீயகிருமிகள் உற்பத்தியானால் அவைகளை வைத்து நாம் காப்பாற்றுகிறோமோ? இது போலவே, உங்கள் உடலினால் பிறந்த உங்கள் உயிருள்ள மக்கள் தீய மூட்டைப் பூச்சிகளைப் போன்றவர்கள்." கிருஷ்ணருடைய இந்த் வார்த்தைகளால் திருதராஷ்டிரனுடைய மனம் சிறிது மாறியது. தங்கள் தகப்பானருடைய மனதை மாற்றுவதற்குக் கிருஷ்ணர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார் என்பதைக் கௌரவர்கள் ஊகித்தனர். கிருஷ்ணரைப் பிடித்துக் கட்டினால், தம் தகப்பனாரை மாற்ற அவர் மேலும் முயற்சி செய்யமாட்டார் என அவர்கள் திட்டமிட்டனர். கிருஷ்ணரின் உடலுக்கு ஏதேனும் தீங்கு செய்யப்படலாம் என விதுரர் அஞ்சிக் கிருஷ்ணரை அரசவையிலிருந்து அழைத்துச் செல்ல முயற்சிகள் செய்துகொண்டிருந்தனர். ஆனால் கிருஷ்ணருடைய முக்கிய நோக்கம் மக்களின் அமைதியையும் வளமையையும் பெறுவதாகும்; ஆகவே இதற்காகத் தம்

உயிரைக் கூடத் தியாகம் செய்ய அவர் தயாராயிருந்தார். இந்த சமாதானப் பேச்சுகள் அனைத்தினுடைய இன்றியமையாத அடிப்படையை உணராமல், திறனிலா மக்கள் எழுதும் அற்பமான புத்தகங்களை படித்துவிட்டு, ‘கிருஷ்ணர் சமாதானத்தை விட யுத்தத்தை அதிகம் விருத்தி செய்தார்’ என நாம் மயங்குகிறோம். இது முற்றிலும் தவறானது. துரதிருஷ்டவசமாக, சரியான முறையில் சரித்திர நிகழ்ச்சிகளைக் கூட முன்னிலைப் படுத்த விரும்பும் ஆசிரியர்கள் நம் நாட்டில் இல்லாததால், அமைதியின் திருவுருவான கிருஷ்ணரைக் கூட “போர் வணிகன்” எனக் கருத நாம் தயாராயிருக்கிறோம். என்ன பேதமை! பொதுவாக மக்களுக்கு ஸமஸ்க்ருதம் தெரியாது; இது துரதிருஷ்டமே. ஆகையால் அவர்கள் வியாச பகவனால் எழுதப்பட்ட பாரத மூலநூலைப் படிக்கும் நிலையில் இல்லை.

கிருஷ்ணரின் அமைதி விரும்பும் இயற்கையை எடுத்துக்காட்ட இன்னொரு சம்பவம் சொல்லவேண்டியுள்ளது. பாண்டவர்கள் அவையைக் கூட்டி மிகவும் போற்றப்படத்தக்க ஒருவருக்கு மதிக்கத் தகுந்த முதல் மரியாதையைச் செய்ய ஏற்பாடுகள் செய்தனர். அதனால் அந்த அவையில் எல்லோர்க்கும் தலைசிறந்தவர் எனக் கருதப்படுமொருவரைத் தேர்ந்தெடுக்க விரும்பினர். அவையிலிருந்த பீஷ்மர், துரோணர் போன்ற மற்ற பெரியோர்கள் அனைவரும், இந்த கௌரவம் கிருஷ்ணருக்குக் கொடுக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக் காட்டினர். கிருஷ்ணரைக் கௌரவிக்கும் எண்ணத்துடன் அவரிடம் தர்மராஜர் சென்றார். அந்தச் சமயத்தில் அங்கு உட்கார்ந்திருந்த சிசுபாலன் கிருஷ்ணரைப் பொறுப்பற்ற முறையில், சம்பந்தமற்ற முறையில் பேசத் தயாரானன். சிசுபாலனால் கூறப்படும் கடும் வசைமொழிகளை அவையிலிருந்த மக்களைக் கூடச் சகிக்க முடியவில்லை. சிறிது நேரத்தில் அத்தகைய பொறுப்பற்ற சொற்கள் அவை முழுவதும் பரவின. எப்படியிருப்பினும், இந்த வசை மாரியால் கிருஷ்ணர் பாதிக்கப்படவேயில்லை; அவர் சிரித்துக்கொண்டு நின்றார். சிசுபாலன் இதனுடன் நின்றுவிடவில்லை. அவன் எழுந்து கத்தினான்: “உன்னுடைய எந்தப் பெருஞ் செயலுக்குக் கௌரவிக்கப்படப் போகிறாய்? கோபியர்கள் நீராடியபோது அவர்களுடைய உடைகளைத் திருடியதற்கா? மாடு மேய்ப்பவர்களிடம் வெண்ணெய் திருடியதற்கா இன்று நீ கௌரவிக்கப்படப் போகிறாய்?” உடனடியாக அவன் பீஷ்மரிடம் நடந்து சென்றான். கிருஷ்ணரை அவர் புகழ்வதை நிறுத்தும்படி அவரிடம் சொன்னான். அச்சமயத்தில் பீஷ்மர் ஏதோ ஒன்றைச் சொல்ல ஆரம்பித்தார். சிசுபாலன் உடனே எதிர்த்துக் கூறினான்: “செருக்குறாதே, உன் வாயை மூடு” அச்சமூட்டும் இந்த அவமானமான சூழ்நிலையில் அவையிலிருந்த அனைவரும் ஒரு பிரமாதமான கேடு நிகழப்போகிறது எனப் பயந்தனர். அவர்கள் அனைவரும் மிகுந்த கவலையுடனிருந்தனர். ஆனால் கிருஷ்ணர் சிறிதும் சலனப்படாதவராக இருந்தார், புன்முறுவல் பூத்தவராகக் காணப்பட்டார். அவரது திருமுகத்தில் கவலையில்லை, எந்த வெறுப்போ பயமோ காணப்படவில்லை. நடப்பதனைத்தும் சிசுபாலனுடைய அறியாமையால் செய்யப்படுகின்றது என அவர் கருதினார். பாண்டவர்களில் பீமனும் அர்ச்சுனனும் மிகவும் கோபமுற்றனர். அவர்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்ணுற்ற கிருஷ்ணர், அவர்கள் உணர்ச்சி வசப்படாமல் அமைதியோடு இருக்க வேண்டும் என அவர்களுக்குச் சைகை செய்தார்.

இந்தச் சமயத்தில் பீஷ்மருடைய தந்தையராகிய சந்தனு எழுந்து, அவையில் கௌரவிக்கத்தக்க ஒருவர் கிருஷ்ணர் மட்டுமே எனக் கூறினார். (வியாசர் என்பதுமுண்டு) ருக்மிணியினுடைய திருமண காலத்தின்போது உண்டான தனிப்பட்ட பொறாமையால் சிசுபாலன் உணர்ச்சிவசப்படுகிறான் என அவர் கூறினார். கிருஷ்ணரைக் காட்டிலும் கௌரவம் செய்யத் தக்க ஒருவரையேனும் அவையில் காட்டும்படி சிசுபாலனிடம் அவர் அறைகூவினார். அந்த அவையிலிருந்த அரசர் ஒவ்வொருவரையும் கிருஷ்ணரால் ஏற்கனவே அடக்கியாளப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் நற்குணங்களைப் பற்றிப் பேசினால், வேறு யாருக்கும் கிருஷ்ணரை விட நற்குணங்கள் இல்லை. வேதங்கள் அல்லது சாஸ்திரங்கள் அல்லது அறுபத்து நான்கு கலைகள் கூடக் கற்றிருப்பதைப் பற்றிய கேள்வியை எடுத்துக் கொண்டால், யாரும் கிருஷ்ணருக்குச் சமமாக

முடியாது. தர்ம அனுஷ்டானத்தைப் பற்றி நாம் பேசினால், மிக்க உயர்நிலையில் கிருஷ்ணர் விளங்குகிறார். பிரமேயும் அன்பையும் நான் நினைத்தால், கிருஷ்ணருடைய உடலில் ஓடும் முழு இரத்தமும் எல்லாக் காலங்களிலும் அமைதியையும் அன்பையும் எடுத்துக்காட்டுகிறது. அவை முழுவதிலும் இந்தக் கௌரவம் பெறத் தகுதியுடைய இன்னொரு நபரைக் காட்டும்படி மீண்டும் சிசுபாலனிடம் அறைகூவினார் சந்தனு. இந்த வார்த்தைகளுக்கு அவையில் உட்கார்ந்து கொண்டிருந்த எல்லா அரசர்களும் தலையசைத்துத் தம் ஒப்புதலை அளித்தனர். கிருஷ்ணரைக் காட்டிலும் இந்தக் கௌரவத்தை அடையத் தகுதியுடைய வேறு ஒருவரும் இல்லை எனத் துரோணரும் பீஷ்மரும் கூடக் கூறினார்கள். சிசுபாலன் மிகவும் பாதிக்கப்பட்டான்; தனது முடிவு நெருங்கி வருவதால் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டான் இன்னும், ஒரு பைத்தியக்காரனைப் போலவே பேச விரும்பினான். தன் முடிவு நெருங்கி வருவதால், கிருஷ்ணரைத் தொந்த யுத்தத்திற்கு வரும்படி அறைகூவி அழைத்தான்; கிருஷ்ணரின் கையைப் பிடித்து இழுத்தான். அப்போது கூடக் கிருஷ்ணர் சிறிதும் சலனப்படாமல் புன்முறுவல் பூத்தவண்ணமிருந்தார். காலம் செல்ல செல்ல, சிசுபாலனுடைய நடத்தை மேலும் மேலும் ஒப்புக்கொள்ள முடியாதபடி ஆகிவிட்டது. இதைக் கண்ணுற்ற அர்ச்சுனன் கிருஷ்ணரிடம் நெருங்கிச் செல்ல ஆரம்பித்தான். கிருஷ்ணர் அர் ச்சுனனிடம், அவன் உணர்ச்சி வசப்படக்கூடாது என்றும், குறிப்பாக, அது யுத்தகளமல்லாமல் அவையாக இருப்பதால் சிசுபாலன் என்ன சொன்னான் என்பதைப் பற்றி அவன் கவலையுறக்கூடாது என்றும், சிசுபாலன் சொல்வதால் மட்டும் அவர்கள் நற்புகழ் தாழ்த்தப்படமாட்டாது என்றும் புத்தி சொன்னார். ஆனால், நவீன புத்தகங்களில் இந்த நிகழ்ச்சியைப் பற்றிய விவரத்தை நாம் படித்தால், கிருஷ்ணர் மிகவும் கோபமுற்றுத் தம் கையிலுள்ள சக்கரத்தை உடனே சிசுபாலன் மேல் எறிந்து அவனைக் கொன்றார் எனக் கற்கிறோம். இது மிகவும் பொய்யானது. உண்மையில், கிருஷ்ணர் காட்டிய அமைதியான நடத்தையும், அமைதியை விரும்பும் இயற்கையும் அவையிலிருந்த பல்லோருக்கு ஆச்சரியத்தை உண்டாக்கின. இங்கு மீண்டும், அந்த அமைதியை சோதிக்கும் சூழ்நிலைகளுக்கிடையே ஒரு மனிதன் என்ற முறையில் கிருஷ்ணரால் எடுத்துக்காட்டப்பட்ட மனப்பான்மை உலகிற்கு இலட்சிய உதாரணமாகும்.

இன்னொரு சூழ்நிலையில், இன்னொரு அரசன் கிருஷ்ணரைப் பல வழிகளில் 'காப்பி' யடிக்க விரும்பினான்; அவனுடைய பெயர் பௌண்ட்ரக வாஸுதேவன். "என்ன இருந்தாலும், கிருஷ்ணர் ஒருவரே வாஸுதேவன் அல்ல, நானும் ஒரு வாஸுதேவன் தானே" என அவன் நினைத்தான். அந்த நம்பிக்கையுடன் துல்லியமாகக் கிருஷ்ணரைப் போலவே தான் நடக்கவும் உடை உடுக்கவும் ஆரம்பித்தான். கிருஷ்ணர் சென்றவிடமெல்லாம் அவன் உடுக்கவும் ஆரம்பித்தான். கிருஷ்ணர் சென்றவிடமெல்லாம் அவன் சென்று தான் தான் கிருஷ்ணர் எனச் சொன்னான். அவன் கிருஷ்ணருடைய துல்லியமான மூல முன்மாதிரி போல நடந்து கொண்டான். அவன் அதோடு நிற்கவில்லை; மிகுந்த குழப்பத்தை உண்டு பண்ணினான். தான் தான் உண்மையான கிருஷ்ணர்; உண்மையான கிருஷ்ணர் தன்னைப் பின்பற்றி வேஷம் போடுகிறார் எனச் சொல்லிக் கொண்டிருந்தான். இது எல்லா எல்லைகளையும் கடந்து சென்றது. இவையனைத்தின் நோக்கத்தையும் பொருளையும் கேட்பதற்காகக் கிருஷ்ணருடம் பலர் வந்தனர். பூரணமான அமைதியான நடத்தையுடன் சிறிதும் பதட்டப்படாமல் கிருஷ்ணர் அவர்களுக்குப் பதிலளித்தார்: "நான் அணியும் ஒருவகையான உடை என்னால் அணியப்படக்கூடாது என்பதைச் சொல்வதற்கு யாருக்கு உரிமையிருக்கிறது? நான் இந்திந்த செயல்களைச் செய்யக்கூடாது என்பதைச் சொல்ல யாருக்கு உரிமையிருக்கிறது? ஆகையால், யாரோ ஒருவர் நான் அணியும் அதே வகையான ஆடையைத் துல்லியமாக அணிந்ததல், நான் பெற்றுள்ள தோற்றத்தைப் போன்ற தோற்றத்தையே கொண்டால், அதைச் செய்யக்கூடாது என்று அவரிடம் சொல்ல எனக்கு உரிமையில்லை. தான் தேர்ந்தெடுக்கும் உடையைத் தன் உடலில் அணிய ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் இருக்கிறது. இதைப்போன்ற விஷயங்களில் எந்த நடவடிக்கையும் எடுப்பது நன்மையன்று" என அவர் அந்த மக்களிடம் கூறினார். பிறரைப் பார்த்துப் பின்ப

ற்றுவர்கள், தாமே அங்கனம் செய்யாமல் நிறுத்தப் பார்த்துக் கொள்ள வேண்டும்; அதற்கான சரியான நடவடிக்கைகளை அவர்கள் தாமே எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் நாளடைவில் இந்தப் போலிநிலை எல்லா எல்லைகளையும் கடந்தது. போலி வேடம் பூண்ட பௌண்ட்ரக வாஸுதேவன் சத்யபாமையும் ருக்மிணியும் தனக்குச் சொந்தமனாவர்கள் என்று சொல்லுமளவுக்குச் சூழ்நிலை உருவானது. அப்போது கூடக் கிருஷ்ணர் மிகவும் அமைதியுடனும் சலனப்படாமலும் இருந்தார். மற்றொருவருடைய குடும்ப விவகாரங்களில் ஒருவர் தலையிடுவது சரியன்று என்று மட்டும் கூறினார். தன்னைப் பொறுத்தவரை தான் விரும்பியதை ஒருவர் செய்யலாம், ஆனால் இன்னொருவருடைய குடும்பத்தில், குறிப்பாக பெண்களைப்பற்றி, ஒருவர் தலையிடுதல் சரியன்று எனக் கிருஷ்ணர் கூறினார். இத்தகைய விஷயங்களில் பௌண்ட்ரக வாஸுதேவன் மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கிருஷ்ணர் எச்சரித்தார். மிகவும் தீவிரமான இந்தச் சூழ்நிலையில்தான் கிருஷ்ணர் தலையிட்டார். இவ்விதமாகக் கிருஷ்ணர் எப்போதும் பூரணமான அமைதியான நடத்தையையும் அமைதியையும் விரும்பும் மனப்பான்மையையும் எடுத்துக் காட்டினார். கிருஷ்ணருடைய இலட்சிய இயற்கையையும் நல்ல தன்மைகளையும் சரியான நிலையில் நாம் உணர்ந்து கொண்டால்தான் இத்தகைய விஷயங்களில் நமது நாட்டின் இலட்சியங்களைப் பற்றி சரியான மதிப்பீடு செய்யும் நிலையில் இருப்போம். நாட்டின் எதிர்காலம் இளம் மக்களாகிய உங்களை அடுத்து இருக்கிறது. கிருஷ்ணருடைய இந்த அம்சங்களை நீங்கள் உணர்தல் மிகவும் முக்கியமானது. மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்த அரசர்களின் நடுவே மக்களைப் பாதுகாத்துக்கொண்டு, சுயநலமற்ற முறையில் வாழ்ந்து கொண்டு, நாட்டின் க்ஷேமத்தை விரும்பி அரசாட்சியை நல்ல நேர்மையான அரசர்களுக்கு அளிக்கக் கிருஷ்ணர் விரும்பினார். இங்கனம் அவர் ஒருபோதும் தாம் முடிசூட்டிக் கொள்ளவேயில்லை. இந்த எல்லா நன்மைகளையும் செய்து கொண்டு அவர் முடிசூடா மன்னராக இருந்தார்.

இளம் மாணவர்களே! நீங்கள் கிருஷ்ணருடைய உண்மை இயற்கையை உணர விரும்பினால், கிருஷ்ணர் வாழ்ந்த, அவர் பணிபுரிந்த காலப் பின்னணிக்குப் பயணம் செய்து அக்காலத்திய சூழ்நிலைகளை அறிந்தால் தான் உங்களால் உணர முடியும். ஆனால், நமது தற்காலத்திய சூழ்நிலைகளின் பின்னணியில் கிருஷ்ணருடைய குணநலன்களை நாம் உணர முயற்சி செய்தலும், உணர்தலும் சாத்தியமன்று. நான் திரும்பவும் இப்போது உங்களுக்குச் சொல்வது, “நீங்கள் ஒரு படத்தைக் கடவுளாக வழிபாடு செய்யலாம்; ஆனால் ஒருபோதும் கடவுளைப் படமாக நினைத்து விடாதீர்கள்” என்பதே. இதனை நான் அடிக்கடி கூறுவேன். நீங்கள் பார்ப்பதனைத்தையும் கடவுள் நிலைக்கு உயர்த்த நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இங்கனம், நீங்கள் இந்த டம்ளரையோ, மேஜையையோ அல்லது துணியையோ கடவுளாக வழிபடலாம்; ஆனால் கடவுளை இந்த மேஜை அல்லது டம்ளரின் நிலைக்குத் தாழ்த்தும் முயற்சி செய்யாதீர்கள். கிருஷ்ணர் வாழ்ந்து காட்டிய இலட்சியங்களை நீங்கள் உணர்ந்தால், கிருஷ்ணர் வாழ்ந்த சந்தர்ப்பநிலைக்குப் பயணம் செய்து அந்நிலையிலேயே உங்களை வைத்துக் கொள்வதே நீங்கள் செய்ய வேண்டியது ஆகும். நீங்கள் இருக்குமிடத்திலேயே இருந்துகொண்டு, ஐயாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த கிருஷ்ணரின் பலவிதமான அம்சங்களையும் புரிந்து கொள்ள விரும்பினால், அது சரியான வழியன்று. இலட்சியங்களை எடுத்துக் காட்டியவர் வாழ்ந்த காலத்துக்கு மானஸீகமான நீங்கள் பயணம் செய்தால்தான் ஓர் இலட்சியத்தைப் புரிந்து கொள்ள விரும்புவது சாத்தியமாகும். இதற்கு ஒரு சிறு உதாரணம் இருக்கிறது ஒன்பது வயதுள்ள ஒரு சிறுமி பதினொரு வயதுள்ள சிறுவன் ஒருவனுடன் மணம் செய்விக்கப்பட்டாள். ஆனால் துரதிருஷ்டவசமாகச் சிறுவன் விபத்தில் இறந்து விட்டான். சிறுமியிடம் பதினொரு வயதுள்ள பையனுடைய புகைப்படமொன்று இருந்தது. காலம் செல்ல செல்ல, சிறுமி வளர்ந்து எழுபது வயதை அடைந்தாள். இந்த எழுபது வயதுள்ள கிழவி பதினொரு வயதுள்ள பையனுடைய புகைப்படத்தை எடுத்துக்கொண்டு அவன் அவளுடைய கணவன் என்று கூறுகிறாள். நீங்கள் எழுபது வயது கிழவியினுடைய உருவத்தைப் பார்க்கும் போது இந்த வாக்கியம் பரிகசிக்கத்தக்கதாகத் தோன்றுகிறது.

பதினொரு வயது பையயன தன்னுடைய கணவன் என்று அவள் சொல்லும்போது அவள் தன்னை ஒன்பது வயது சிறுமியாகக் கருதும் நிலையில்தான் அவள் கூறும் வாக்கியம் பொருளுடையதாகிறது. எழுபது வயது கிழவி பதினொரு வயதுடைய பையனுடன் மணம் புரிந்து கொண்டாள் என்பது பொருளல்ல. இந்தக் காலக்கட்டத்தில், அவள் ஒன்பது வயது சிறுமி நிலையில் காலத்தால் தன்னைப் பின்னோக்கி வைத்துக்கொண்டால்தான் வாக்கியம் பொருளுடையதாகிறது. அதுபோலவே, இப்போது பிறந்துள்ள நாம் கிருஷ்ணருடைய இலட்சியங்களைப் புரிந்து கொள்ள விரும்பினால், கிருஷ்ணருடைய காலத்திற்கு நம்மையே நாம் எடுத்துச் சென்றால்தான் உணர முடியும்.

கிருஷ்ணர் வாழ்ந்த காலத்திய அரசியல், சமூக, பொருளாதாரச் சூழ்நிலையில் நாம் நம்மை வைத்துக்கொண்டால்தான், அரசியல் துறையிலோ, பொருளாதரத் துறையிலோ, சமூகத் துறையிலோ கிருஷ்ணர் உலகிற்கு எடுத்துக் காட்டிய இலட்சியங்களை இரசிக்க முடியும். ஆகவே, உங்களைப் போன்ற இளைஞர்கள் மகாபாரதப் புனித நூலைச் சரியான முறையில் படித்துப் புரிந்து கொள்ள முயல வேண்டும். புரிந்து கொள்ளும் சக்தியில்லாததன்மை, நமது மூடத்தன்மை – இவற்றின் காரணமாக நாம் மகாபாரதத்தை ச் சிறப்பேயில்லாத ஒரு நூலாகக் கருதி, நாம் சாப்பிடும் வடையைப் போன்ற சாதாரண உணவோடு ஒப்பிடுகிறோம். ஒரு பழமொழி கூறுகிறது: “நீங்கள் ஒரு புத்தகத்தைக் கேட்க விரும்பினால் மகாபாரத நூலைக் கேட்க வேண்டும்; எதையாவது சாப்பிட விரும்பினால் ஒரு வடையைச் சாப்பிட வேண்டும்.” இந்த உவமை பரிகசிக்கத்தக்கது. எந்த நிலையில் மகாபாரதம் எழுதப்பட்டது என நீங்கள் உண்மையாகவே உணர விரும்பினால், நீங்கள் அதன் புனித பொருளை அங்கீகரிக்க வேண்டும். மகாபாரதத்தின் அதன் புனித பொருளை அங்கீகரிக்க வேண்டும். மகாபாரதத்தின் பெருமையையும், அதன் புனிதப் பொருள்களையும் உணர முடியாதவன் அறிவற்றவன், மூடன். இதற்கு ஒரு சிறிய உதாரணம் உள்ளது. ஓர் இடையன் தன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் கூட்டிக் கொண்டு காட்டிற்குச் சென்றான். ஒரு நாள் அவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் கவனித்துக் கொண்டிருந்தபோது, நல்ல மழை பெய்தது. இதன் விளைவாக மலைமேலிருந்த சில கற்கள் பெயர்ந்து உருண்டு விழ ஆரம்பித்தன. ஒரு கல் மிகவும் ஒளிவீசிப் பிரகாசிப்பதை அவன் பார்த்தான். அந்த இடம் வைரங்கள் காணப்படும் இடமாகக் கருதப்பட்டிருந்தது. ஆனால், வைரங்களைப் பற்றி எதுவும் இடையனுக்குத் தெரியாது. அவன் அந்த ஒளிமிகுந்த கல்லை எடுத்து, அதைச்சுற்றி ஒரு நூலைக்கட்டி, ஒரு வெள்ளாட்டின் கழுத்தைச் சுற்றி அந்த பிரகாசமான ஒளி வீசும் வைரத்தைத் தொங்கவிட்டான். வெள்ளாட்டின் கழுத்தைச் சுற்றியுள்ள ஒளி மிகுந்த கல் பிரகாசிப்பது அவனுக்கு மிக மிகக் கவர்ச்சியாயிருந்தது. அவன் அடிக்கடி இந்த வெள்ளாட்டிடம் போய் அதை அன்போடு பார்த்துக் கொண்டிருந்தான். இந்த வெள்ளாட்டின் மேல் அத்தகைய பிரியத்தைக் காட்டிக் கொண்டு அவன் ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது மக்கட் கூட்டமொன்று அவ்வழியே சென்றது. அந்த வழிப்போக்கர்களில் வைரத்தின் பெருமையை அறிந்திருந்த ஒருவன் இருந்தான். அவன் ஒரு வைர வியாபாரி. அவன் வெள்ளாட்டின் கழுத்தைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள வைரத்தின் மதிப்பை விரைவாக உணர்ந்து கொண்டான். இந்தக் கல் பல இலட்சம் ரூபாய் மதிப்புடையது என்னும் உண்மையைத் தெரிந்து கொண்டான். ஏழை இடைப்பையன் கல்லின் மதிப்பை அறியமாட்டான் என நினைத்து வைரத்திற்கு விலையாகப் பத்து ரூபாய் கொடுத்தான். வெள்ளாட்டின் கழுத்தைச் சுற்றி இக்கல் மிகவும் அழகாக உள்ளது, அதைத் தான் தரப்போவதில்லை என இடைப் பையன் கூறினான். வைர வியாபாரி அவனுக்கு நூறு ரூபாய் நோட்டொன்றைக் கொடுத்து அவனைத் தூண்டினான். நூறு ரூபாயால் தான் நூறு கற்களை வாங்கி ஒவ்வொரு ஆட்டின் கழுத்தைச் சுற்றி ஒவ்வொரு கல்லைக் கட்டிவிட முடியும் என இடைப்பையன் நினைத்து ஒரு நூறு ரூபாய்க்காகக் கல்லைக் கொடுத்துவிட ஒப்புக் கொண்டான். வைரத்தின் பெருமையை அறியாத இடைப்பையன் கையில் இருந்தபோது அந்த கல் ஆனந்தமாக, பத்திரமாக, நன்றாக இருந்தது என்பதை நாம் பார்க்கிறோம். வைர வியாபாரிகளின் கைகளுக்கு வைரக்கல் வந்தவுடனே, தான் விலைமதிப்பற்றவொன்றை அடைந்துவிட்டதாக அவன் நினைத்தான்; இந்த எண்ணம் அவன் மனதில் வந்தவுடனேயே கல் பல

துண்டுகளாக உடைந்து விட்டது. கல் இங்கனம் பல துண்டுகளாக உடைந்து நிலத்தில் விழுந்தபோது வியாபாரி வியப்புற்றான். தன் மதிப்பையறியாதவன் கைகளில் இருந்தவரைதான் திருப்தியுற்றதாகவும், தன் மதிப்பை அறிந்த ஒருவன் ஒரு நூறு ரூபாய் மட்டும் விலை கொடுத்துத் தன்னை வாங்கிய போது தன் இதயம் அநீதியான செயலினால் துண்டு துண்டுகளாக உடைந்துவிட்டதாகவும் அந்த வைரம் அசரீரியாகத் தெய்வீகக் குரலில் கூறியது. இந்த உவமையிலுள்ளது போல், தெய்வீகத்தை உணராதவனொருவனுடைய சூழ்நிலையில் செயல்கள் எப்படியிருந்தாலும் பரவாயில்லை. ஆனால், தெய்வீக இயற்கையை அறிந்து கொண்டு, தரங்கெட்ட முறையில் தெய்வத்தோடு தொடர்பு கொண்டு பேரம் பேச முயன்றால், அப்போது நன்கு நடந்து கொள்ளாத நமக்குக் கடவுளின் அருள் எப்படி உண்டாகும்? இங்கனம், கிருஷ்ணருடைய இலட்சியங்களின் மதிப்பையும், பெருமையையும் அறிந்த பின், அவற்றை நாம் அனுஷ்டானத்தில் கடைப்பிடிக்காவிட்டால் நாம் உண்மையில் தவறு இழைத்தவர்களாவோம். ஒருவர் உங்களுடன் பழகும்போது அவரை ஒரு சாதாரண மனிதனாக நீங்கள் கருதுகிறீர்கள். ஏதேனும் அசாதாரணமானதொன்றை அவரிடம் காணும்போது, அவருக்குத் தெய்வீகத்தை ஏற்றிக் கூறுகிறீர்கள். தெய்வீகத்தை உணரும்போது தெய்வீகக் கட்டளைகளைக் கடைப்பிடிக்க நீங்கள் எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். நாம் அவதாரங்களின் வாழ்வைப் படிக்கும்போது, அத்தகைய வரலாறுகள் நமக்குச் சொல்லப்படும்போது, நாம் அவர்களுடைய இலட்சியங்களை கற்றுக்கொண்டு அனுஷ்டானத்தில் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் தெய்வீகத்துக்கு இசைந்து நடப்போம். ஆனால், நம் கைக்கு வந்த நூலை வெறுமனே படித்துவிட்டு, அனுஷ்டானத்தில் கடைப்பிடிக்காமலிருப்பது படித்தவர்களுக்குச் சரியானதன்று. மகாபாரதத்தில் கிருஷ்ணருடைய மனித நலன்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கிருஷ்ணருடைய இந்த உண்மைவடிவைப் புரிந்து கொண்டு, கிருஷ்ணரின் இலட்சியங்களை நீங்கள் கடைப்பிடிக்கவும் செய்வீர்கள் என நான் நம்புகிறேன். நான் உங்களை இந்த வழியில் ஒழுகுமாறு ஆசீர்வதித்து இந்த உரையை முடிக்கின்றேன்.

## ஆறாவது கருத்துரை

### மகாபாரதம் பல விலைமதிப்பற்ற பாடங்களை நமக்குப் புகட்டுகிறது.

உங்களுக்கு ஏன் கரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? அந்தக் கரங்களால் உங்கள் வாய்க்குத் தொடர்ந்து உணவை எடுத்துச் செல்வதற்காக அவை கொடுக்கப்படவில்லை. மலர்களால் இறைவனைப் பூஜிப்பதற்கு கரங்கள் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களே! பரமாத்மா எந்நிலையில் செயல் புரிகிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்வது எளிதானதோ அல்லது சாத்தியமானதோ அன்று. ஏனெனில், நாம் மனித நிலையில் இருக்கிறோம். நாமெல்லாம் செயல் புரியும் சாதாரண மனித நிலையைக் காட்டிலும் வேறுபட்டதும் உயர்ந்ததுமான நிலையில் தெய்வம் செயல் புரிகிறது என்பதை நாம் உணர்ந்தால், நாம் முயற்சி செய்து தெய்வீகத்தை உணரக்கூடிய நிலைக்கு நம்மை உயர்த்திக் கொள்வதற்குச் சாத்தியம் இருக்கிறது. இவ்வுலகில் எந்தவிதமான வேலையைச் செய்வதற்கும் சில ஒழுங்குகளும் சில கட்டுப்பாடுகளும் இருக்க வேண்டும். கட்டுப்பாடு இல்லாமல் நீங்கள் செய்யும் எந்த வேலையும் நல்ல விளைவுகளைத் தராது. உலக நிலையில் இந்தக் குறைப்பாட்டை நீக்குவத ற்குச் சில ஒழுங்குகள் அவசியம். உலகத்தை ஆள்வது இயற்கையின் சட்ட நியதியாகும். ஒருவனைக் கட்டுப்படுத்தி அவனை இயற்கையின் சட்ட நியதிக்கு உட்படுத்தத் தேவையானது கட்டுப்பாடாகும். தன்னைக் கட்டுப்படுத்தும் இது தவம் போன்றதாகும். ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாத

வாழ்வு தோல்வியடையும்; என்றேனும் ஒரு நாள் “பட்” என்று அழிந்து விடும். தீய நெறியில் தவத்தை நீங்கள் செலுத்தினால், அதன் பொருள் நீங்கள் அழியப்போகிறீர்கள் என்பதே. மனித இயற்கைக்கு வரையறைகளும், கட்டுப்பாடுகளும் இருக்க வேண்டும் என்பதை ஒருவன் உணர வேண்டும். உலகத்தை உருவாக்கும் ஐம்பூதங்களால் கூட சில நியதிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. எல்லையற்ற சமுத்திரம் கூட சில நியதிகளின் கீழ், விதிமுறைகளின் கீழ் இயங்குகின்றது. அகில உலகத்தையும் பார்க்குங்கால் மனித வாழ்வு ஒரு பகுதியேயாகும். ஆகையால் மனித வாழ்வு நெறிப்படுத்தப்பட வேண்டும். பிரேமைக்கோ அல்லது வெறுப்புக்கோ அல்லது கோபத்திற்கோ சில ஒழுங்கு முறைகள் தேவையாகின்றன. ஸ்ரீ கிருஷ்ணர் தம் வாழ்வுக்காலத்தில் இத்தகைய ஒழுங்கு முறைகளை நமக்கு உதாரணமாகக் காட்டினார். மகாபாரதக் கதைகளை இலட்சிய உதாரணங்களாக ஒப்புக்கொள்ளுதல் நமது நாட்டின் மரபாக ஆகி இருக்கிறது. வேத காலத்திலிருந்து இந்த விதமான மரியாதையும் மரபு வழிகளும் நமக்கு வந்திருப்பதால் நமது குடிமக்கள் எப்போதும் அத்தகைய கதைகளைக் கவனமாகக் கேட்க ஆவலுடன் இருக்கிறார்கள். அப்படிச் செய்வதற்குரிய நற்சமயத்தை வரவேற்கிறார்கள். அத்தகைய அவதாரங்களின் மானுஷ நலன்களையும் அவர்களைப் பற்றிய வரலாறுகளையும் படித்து ஒப்புக்கொண்டு அவற்றை வாழ்வில் கடைப்பிடித்தல் மிகவும் தேவையானது.

அந்நாள் கார்த்திகை மாத பகுள த்ரயோதசி நாள் குருக்ஷேத்ர புனித பூமி பானிபட்டுக்கு அருகில் உள்ளது. இந்தக் குருக்ஷேத்ர புனித பூமியில் கௌரவர்களுடைய சேனைகள் யுத்தத்துக்காக அணிவகுத்து நின்றன. சேனையின் முன்னால் வெண் குதிரைகளால் இழுக்கப்பட்ட ஒரு வெண்மையான தேரில் வெண்மையான தலைப்பாகையை அணிந்து சிங்கத்தைப்போல் உட்கார்ந்து கொண்டு சேனையைத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டு சென்ற மனிதர் உட்கார்ந்து கொண்டிருந்தார். சிங்கத்தைப் போன்ற அந்த மனிதர்தான் பீஷ்மர். எதிர் திசையில் பாண்டவர்களுடைய சேனையும் யுத்தத்திற்காக அணி வகுத்து நின்றது. பீமன் அந்தச் சேனையை முன்னிட்டு நடத்திச் சென்றான். வயது முதிர்ந்த பீஷ்மர் முந்நூறு அ ச்வமேத யாகங்களைச் செய்திருந்தார். அத்தகைய சக்தி வாய்ந்த மனிதர் சேனைகளுக்குத் தலைமை தாங்குவதைப் பாண்டவர்கள் பார்த்த போது பயத்தால் நிறைந்தனர். தங்களுக்கு ஏதேனும் பெருந்துக்கம் சம்பவிக்கக் கூடும் என எதிர்ப்பார்த்தனர். ஒரு பக்கம் சங்கங்களின் முழக்கம் தொடர்ந்து கேட்டது. குதிரைகள் கனைத்தன; யானைகள் உரக்கப் பிளிறின; ஒவ்வொரு சேனையின் இரத்தத்தையும் சித்திரிக்கும் கொடிகள் பறந்தன; ஒவ்வொரு சேனையினுடைய ஆயுதங்கள் ஒளிவீசிப் பிரகாசித்தன; இந்த ச் சூழ்நிலையில் எங்கிருந்தும் வராதது போல் ஒரு தேர் வந்து யுத்த களத்தின் நடுவில் நின்றது. அத்தேரில் மிகவும் தளர்ச்சியுற்ற, உற்சாகமிழந்த ஒரு மனிதன் இருந்தான். அவனைத் தோளில் தட்டிக் கொடுத்து அவனுக்குத் துணிவூட்டிக் கொண்டிருந்தார் இன்னொருவர். மனிதர்களுள் சிறந்தவனான அர்ச்சுனனும், கடவுளரில் சிறந்த கிருஷ்ணனுமே அவர்களிருவர்கள். அவ்விருவரில் தகுதி வாய்ந்த மனிதனை அர் ச்சுனனும், மிகச் சிறந்த அவதாரத்தைக் கிருஷ்ணனும் குறித்தனர். உபதேசிக்கத் தகுதியுடைய மனிதர்கள் அனைவரிலும் மிகச் சிறந்த நிலைக்கு இந்த அவதாரம் தன்னுடைய மிக உயரிய நிலையிலிருந்து இறங்கி வந்திருக்கிறது என்பதையும், சோகமுற்ற மனிதனுக்குக் கற்பித்து அவனுக்குத் தேவையான உற்சாகத்தை அவதார புருஷர் தந்தார் என்பதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும். சில கணங்களுக்குப் பிறகு கிருஷ்ணர் தம் தேரிலிருந்து இறங்கித் தர்மராஜாவினுடைய தேரை நோக்கிச் செல்ல ஆரம்பித்தார். அந்தச் சமயத்தில் கிருஷ்ணர் தர்மராஜாவிடம் என்ன சொன்னார் என்பது அறியப்படவில்லை; ஆனால், தர்மராஜர் தன்னுடைய கவசத்தையும் ஆயுதங்களையும் கழற்றி வைத்துவிட்டுக் கௌரவர்களை நோக்கிக் கூப்பிய கரங்களுடன் நடந்து செல்ல ஆரம்பித்ததைப் பார்க்க முடிந்தது. கௌரவர்கள் இந்தக் காட்சியைக் கண்ணு ற்றவுடன் ஆரவாரம் செய்ய ஆரம்பித்தனர். பாண்டவர்களின் சார்பில் சமாதானத்தைக் கோரிச் சரணடையத் தர்மராஜர் வந்து கொண்டிருக்கிறார் என்று அவர்கள் நினைத்தனர். இந்தச் சூழ்நிலையைப் பார்த்த அர் ச்சுனனும், பீமனும் கூட மிகவும் கலக்கமுற்றனர். இப்பணியைச் செய்யத் தூண்டிய தர்மராஜாவின்

எண்ணங்களையும் பேருணர்வுகளையும் அர்ச்சுனனும் பீமனும் புரிந்து கொள்ளவில்லை; அடுத்த சில நிமிடங்களில் கிருஷ்ணர் வந்து அர்ச்சுனனும் பீமனும் கூடத் தங்கள் சகோதரரைத் தொடர்ந்து செல்ல வேண்டும் எனச் சைகை செய்தார். தங்கள் மனங்களில் குழப்பமும் உணர்ச்சிப் பெருக்கும் இருந்த போதிலும், அர்ச்சுனனும், பீமனும் இறைவனுடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து தம் சகோதரரைப் பின் தொடர்ந்தனர். தன் சகோதரர்களால் பின் தொடரப்பட்ட தர்மராஜர் பீஷ்மரிடம் நேராகச் சென்றார். பீஷ்மர் அந்தச் சகோதரர்களைப் பார்த்தபோது அவர்கள் மனதில் உள்ளதைப் புரிந்து கொண்டார். சகோதரர்களில் மூத்தவரான தர்மராஜாவின் மனதில் எழும் மிகச் சிறந்த எண்ணங்களை அறிந்து தமக்குள்ளாகத் தர்மராஜாவைப் புகழ்ந்தார். அவர்கள் பீஷ்மரை நெருங்கிச் சென்றனர். அவர் பாதத்தைத் தொட்டு வணங்கினர். அவரைப் "பிதாமகரே!" என விளித்து, "நாங்கள் எங்கள் தந்தையை இழந்ததிலிருந்து நீங்கள் எங்களைக் கவனமாகப் போஷித்து வளர்த்தீர்கள். ஆனால், இன்று துரதிருஷ்டவசமாக நாங்கள் உங்களுடன் போரிட வேண்டியிருக்கிறது. தயவு செய்து இந்த யுத்தம் செய்ய எங்களுக்கு அனுமதி தாருங்கள்" என்றார் தர்மராஜர். அத்தகைய பயங்கரமான யுத்தச் சூழ்நிலையில் கூடத் தர்மத்தினால் ஏற்படும் கடமைகளை நிறைவேற்றத் தர்மராஜா விரும்புகிறார், தம்முடைய அனுமதியை நாடி வந்தார் என்பதைக் கண்ணுற்றுப் பீஷ்மருடைய இதயம் மிக மிக நெகிழ்வுற்றது. பீஷ்மர் தர்மராஜாவை ஆலிங்கனம் செய்து. "யுத்த களத்தில் கூட நீ தர்மத்தை அனுசரிக்கிறாய். இது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. நீ தர்மத்தின் படி ஒழுகுவதால் இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவாய். 'தர்மோ ரக்ஷதி ரக்ஷித:'– இந்த தர்மத்தை காப்பா ற்றுபவர்கள் அதன் விளைவாகத் தர்மத்தால் காப்பாற்றப்படுவார்கள். நீ தர்மத்தைக் காக்கிறாய். ஆகவே தர்மம் உன்னைக் காக்கும். வெற்றி உன்னுடையதே" என்று கூறினார். இதனை அடுத்து உடனே பீமன், அர் ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரும் பீஷ்மருடைய ஆசியைக் கோரினர். அவர்கள் துரோணாசாரியரை நெருங்கி அவருடைய பாதத்தை வணங்கி, "நீங்கள் குரு, நாங்கள் மாணவர்கள். துரதிருஷ்டவசமாக இன்று மாணவர்கள் ஆசிரியருடன் யுத்தம் செய்யும் தீய காலம் வந்திருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் எங்களை ஆசீர்வதிக்கும்படி உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம்" என்று கூறினர். இதில் உள்ள தர்ம நடத்தையைத் துரோணாசாரியர் உணர்ந்து கொண்டார். அவரும் அவர்களை ஆலிங்கனம் செய்து அவர்களின் வெற்றிக்கு ஆசீர்வதித்தார். அத்தகைய முறையான நடத்தை கிருஷ்ணரால் எடுத்துக் காட்டப்பட்டது. "நாம் மனிதர்கள் என்ற முறையில் எந்த வீதியையேனும், ஒழுக்க நெறியையேனும் இதுபோலக் கடைப்பிடிக்கிறோமா" என்று நம்மையே நினைக்க வைக்கிறது இந்த உதாரணம்.

சர்வசக்தி வாய்ந்த, எல்லாவற்றையும் அறியும் கிருஷ்ணர் ஏன் இந்தத் துன்பங்களையும் கடுந்துயரங்களையும் அடைய வேண்டும்? அவர் இத்தனையையும் சுயநல நோக்கத்துடன் தனக்காகவா செய்தார்? இத்தனையும் பிறர் நன்மையின் பொருட்டும். சமாதானத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டும் செய்யப்பட்டன. தம் கருணையையும் உதவியையும் நாடியவர்களுக்கு உதவி செய்து காப்பதற்காக அவர் இந்த எல்லாத் துன்பங்களையும் கடுந்துயரங்களையும் தாங்கிப் பொறுத்துக்கொண்டார். தம் பக்தர்கள் மேல் கடவுள் கொண்ட அன்பின் விளைவாக அவர்களுக்காகக் கடவுள் பலவிதமான துன்பங்களையும் தாமே பட்டார். மேலும், அவர் கீதையை அர்ச்சுனனுக்கு உபதேசித்த போது அர்ச்சுனன் சந்தேகம் கொண்ட பல இடங்கள் இருந்தன; அவன் தளர்ச்சியுற்ற பல சூழ்நிலைகள் இருந்தன. நரனான அர்ச்சுனன் தன் வழியில் வரும் தடைகளை வெற்றி கொண்டு துணிவு பெற்று முன்னேறிச் செல்வதற்கு உதவும் வண்ணம் கிருஷ்ணர் இந்த யோகத்தைக் கற்பித்துக் கொண்டிருந்தார். உங்களுக்குத் துறவுப்பான்மையைக் கற்பித்து உங்களை ஆன்மீகப் பாதையில் எடுத்துச் செல்வதற்கு உதவும் சில உபதேசங்களை மட்டும் கொண்டது கீதை என்று நீங்கள் பொதுவாக நினைப்பீர்கள். இது சரியல்ல. நமது அன்றாட வாழ்வை நடத்துவதற்கும், நமது வாழ்வில் ஏற்படும் சூழ்நிலைகளைச் சந்திப்பதற்கும் உதவும் உபதேசங்களைக் கீதை நமக்குத் தருகிறது என்பதை

நாம் உணர வேண்டும். நமது ஆன்மீக வாழ்வும் நமது அன்றாட லௌகிக வாழ்வும் இரு வேறு துறைகள் அல்ல என்னும் உண்மையைக் கிருஷ்ணர் ஸ்தாபித்தார். ஆன்மீக வாழ்வுடன் ஆழ்ந்து இணைக்கப்பட்டுள்ளதுதான் நம் அன்றாட லௌகிக வாழ்வு என்பதை அவர் எடுத்துக்காட்டினார். மனிதனுடைய எண்ணங்கள், சொற்கள், செயல்கள் இவற்றிற்கிடையே இணைப்பும், இசைவும் இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் காட்டினார். மனிதனுக்கு நல்ல எண்ணங்கள் ஏற்படுவதற்கு அவனுடையது மனது மிகவும் முக்கியமானது என்பதையும், உலகுக்கு இந்த எண்ணங்களைத் தெரியப்படுத்துவதற்கு அவனுடைய சொற்கள் மிகவும் முக்கியமானவை என்பதையும், இதைச் செயல்படுத்துவதற்கு அவனுடைய செயல்களும் முக்கியமானவை என்பதையும் அவர் பிரகடனப்படுத்தினார். கடவுள் எதையும் செய்யமுடியும் எனவும், தம்முடைய சொந்த சங்கற்பத்தினால் இந்த யுத்தத்தைத் தடுத்திருக்க வேண்டும் எனவும் பலர் விவாதிக்கின்றனர். மனித குலத்தின் நன்மைக்காகத் தம் தெய்வீக ஆற்றலை நேரிடையாகப் பயன்படுத்தக் கிருஷ்ணர் திருவுளம் கொள்ளவில்லை என்பதை இங்கு நாம் கவனிக்க வேண்டும். அவர் மனிதர்கள் வாழ்வதுபோல் வாழ்ந்து கொண்டிருந்தார். பலவிதமான செயல்களையும் கட்டுப்படுத்தச் சாதாரண மனிதமுறைகளைப் பயன்படுத்த அவர் விரும்பினார்.

மிகவும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வழியில் இந்த ஆன்மீக விஷயத்தினை எடுத்துக்காட்ட விரும்பும் ஆயிரக்கணக்கான மக்கள் இப்பொழுதும் இருக்கின்றனர். எளிமையான முறையில் வேதசாரத்தை நீங்கள் கடைப்பிடிக்க உதவும் பெரியோர்கள் இருக்கிறார்கள். பெருஞ் செல்வத்தைப் பெற்று நாடுகளை அரசாண்ட அரசர்கள் இருந்ததில்லையா? அந்த அரசர்களும் அரசாட்சிகளும் இப்போது எங்குள்ளன? அவைகள் உலகுக்குக் கற்பித்தது என்ன? இன்று கூட, வேதத்தின் சாரத்தைக் கற்பிப்பதற்குக் குறுக்கு வழிகள் இருக்கின்றன என உபதேசிக்கும் ஏராளமான மக்கள் இருக்கிறார்கள். ஆனால் அவற்றைத் தம் வாழ்வில், அனுஷ்டானத்தில் கடைப்பிடிக்கும் மக்கள் ஒரு சிலரே இருக்கின்றனர். இந்த மக்களும் அவர்கள் கற்பிக்கும் பாடங்களும் வெறும் வழிகாட்டிக் கம்பங்களைப் போல்வன ஆகும். ஒரு வழிகாட்டிக் கம்பம் செய்ய முடிந்ததெல்லாம், “நீங்கள் இந்த வழியில் சென்றால் இந்த இடத்தை அடைவீர்கள்; இன்னொரு வழியில் நீங்கள் பயணம் செய்தால் இன்னோர் இடத்தை அடைவீர்கள்” என்று உங்களுக்குச் சொல்வதுதான்; ஆனால் அந்தப் பாதையில் உள்ள உண்மையான ஏற்றிழிவுகளைப் பயணம் செய்யும் மக்கள் மட்டுமே புரிந்து கொள்வார்கள். ஏற்ற இறக்கங்களைப் பற்றி வழிகாட்டிக் கம்பம் உங்களுக்கு எதையும் சொல்ல இயலாது. ஒருவன் ஒரு கோடி விஷயங்களைப் பேசமுடியும்; ஆனால் வெறுமனே பேசுவதால், அவற்றில் ஒன்றைக் கூட அனுஷ்டானத்தில் கடைப்பிடித்து ஒரு நல்ல உதாரணமாக விளங்க வேண்டும். நீங்கள் சொல்வதையும் கேட்பதையும் அனுஷ்டானத்தில் கடைப்பிடிக்க முழுவதும் தயாராக இருக்க வேண்டும். நாட்டிலுள்ள சூழ்நிலை நீங்கள் அறியாததொன்றல்ல. இன்று நமது வாழ்வின் எல்லா அம்சங்களையும் வெறுப்பு, அநீதி, பயம் இவை நிறைந்து விட்டன. இளம் மாணவர்கள் மட்டுமே இந்தத் தீமைகளை நீக்க வல்லவர்கள். இதைச் செய்யும் ஆற்றல் உங்களுக்கு இருக்கிறது. நமது புனித நூல்களில் அடங்கியுள்ள புனித இலட்சியங்களைப் புரிந்து கொள்வதற்கு நீங்கள் முயல வேண்டும். எல்லாச் சமயங்களிலும், இந்நாட்டின் குடிமக்களின் வாழ்வில் பரவியிருந்த தியாக உணர்வு உங்களிடம் ஓடும் இரத்தத்தில் கலந்து நிறைந்து உள்ளது. இத்தகைய புனிதமான நாட்டில் இலட்சிய உதாரணங்களாக விளங்கும் வழியில் பாண்டவர்கள் தம் வாழ்வை நடத்தினர். அரசியல் துறை, நீதித்துறை மற்ற எல்லாத் துறைகளிலும் தலைவர்களாக இருந்து வழிகாட்டியவர்கள் அவர்கள்.

இன்னொரு சமயத்தில் தர்மராஜாவும், அர்ச்சுனனும், பீமனும் மற்றவர்களும் யுத்தகளத்தில் வேறொரிடத்தில் இருந்தபோது அபிமன்யு பத்மவியூகத்தால் கவரப்பட்டுப் போர்க்குச் செல்லத் தயாரானன். “இந்தக் காலத்தில் உள்ள சூழ்நிலை நிலையற்றதாக இருக்கிறது. நமக்குக் காலமும் மிகவும் நல்லதாக இல்லை. உன் மனைவி கர்ப்பமாயிருக்கிறாள். உன் மாமா கிருஷ்ணரும் இப்போது இங்கில்லை. நீ

யுத்தத்தினால் மட்டும் கவரப்பட்டிருக்கிறாய். நீ யுத்தத்திற்குப் போவதற்கு முன் இருமுறை எண்ணிப்பார்” எனச் சொல்லி அபிமன்யுவின் தாயார் எச்சரித்தாள். யுத்தத்திற்குப் போக வேண்டாம் எனத் தாயார் இங்கனம் வேண்டிக் கொண்ட போது, தைரியமான குலமரபுகளின் படி, தன் இரத்தத்தில் உள்ள தியாக உணர்வுகளின்படி தான் யுத்தத்திற்குப் போவதற்கு வேண்டி கொண்டான். அவன் தன் தாயாரிடம், “சிங்கமாக இருந்து யுத்தகளத்தில் குதிக்கும்படி என்னிடம் சொல்லாமல் என்னை அங்குப் போகாமல் தடுப்பதற்கு நீ முயற்சி செய்கிறாய்” என்றான். தாயாரும் வீரம் நிறைந்தவள்தான். அபிமன்யுவின் வீரத்தின் பெருமையை அவள் உணர்ந்தாள். அவனை யுத்தத்திற்குப் போகும்படி அனுமதித்தால் அது தீமையானது, அவனைத் தடுத்தால் அதுவும் தீமையானது என்று நினைத்தாள். இவ்விரு தீமைகளில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது அவளால் முடியவில்லை. இந்தத் தர்ம சங்கடமான சூழ்நிலையில் அவள் இருந்தாள். இத்தகைய துரதிருஷ்டமான நிலையில் இன்றைய மக்கள் என்ன செய்திருப்பார் என்று நீங்கள் ஊகிக்கக் கூடும். அவர்கள் கடவுளைச் சபித்திருப்பார். “ஓ, கருணையற்ற கடவுளே! என் மகனை இந்தச் சூழ்நிலையில் ஏன் ஆழ்த்தினாய்?” எனக் கதறியிருப்பர். ஆனால் இந்த வீரம் நிறைந்த தாயார் தன் மகன் யுத்த களத்திற்குச் சென்று வெற்றி அடையவேண்டும் எனச் சொல்லி அவனை ஆசீர்வதித்தாள். தன் மகனுக்கு அவள் ஆசி கூறிய விதம் ஒப்பற்ற ஒன்றாக இருந்தது. இப்போது எந்தத் தாயாராவது அது போல ஆசிகூறுவாளா என நம்மையே நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். மகாபாரதத்தின் ஒவ்வொரு பகுதியும் நமக்கு ஓர் இலட்சியமான பாடத்தைப் புகட்டுவதாக உள்ளது. பாண்டவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட, கிருஷ்ணரால் கற்பிக்கப்பட்ட இலட்சியங்கள் இன்றைக்குக் கூட நமது நாட்டு மக்களுக்கு மிகவும் இன்றியமையானதனவாகும். நேற்று நான் விளக்கியது போல், கிருஷ்ணர் சமாதானத்திற்காகத் தூது சென்றபோது, அவரைத் தன் விருந்தினராக இருக்கும்படி துரியோதனன் கேட்டுக்கொண்டபோது, தாம் ஒரு பணியின் பொருட்டு வந்துள்ளதாகவும், அப்பணி முடியும் வரை விருந்தினராகத் தமக்கு உரிமை இல்லை எனவும் கிருஷ்ணர் கூறினார். சமாதான உடன் படிக்கைகள் நிறைவேறும் வரை துரியோதனன் கேட்டுக் கொண்டபடி அவன் விருந்தினராக இருக்க அவர் விரும்பவில்லை. அவர் விதுரருடைய வீட்டுக்குச் சென்று தயங்கினார். அந்நாட்களில் அரசியல் உடன்படிக்கைகள் விஷயமாக அத்தகைய நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன; அந்நெறி முறைகள் எப்போதும் மிக உயர்ந்த நிலையில் இருந்தன. இன்று மற்ற நாடுகளிலிருந்து தூதுவர்கள் வந்தால் விமான நிலையத்திலிருந்து நேரிடையாக ராஜ்பவனத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். உடன்படிக்கை பேச்சுகள் ஆரம்பிப்பதற்கு முன்பேயே விருந்தொன்று ஏ ற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற விதமான விருந்தோம்பும் செயல்களும் விஜயம் செய்பவருக்குச் செய்யப்படுகின்றன. இன்று நிலவும் சூழ்நிலைகளில் மகாபாரதத்தில் எடுத்துக் காட்டப்படும் இலட்சியங்களை நாம் ஒப்புக் கொண்டு அனுஷ்டானத்தில் கடைப்பிடித்தால் நமது நாடு நிச்சயமாக வளமையுறும். வெறும் போரை விரும்பும் மக்கள் மட்டுமே மகாபாரதத்தில் சித்தரிக்கப்பபட்டுள்ளார்கள் என நினைத்துக் கொண்டிருக்கிறோம். இது சரியன்று.

சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு மகாபாரதம் ஓர் இலட்சியமான நூலாகும். மகாபாரதத்தில் நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களையும் நீதி நெறிகளையும்போல் பாகவதத்தில் நாம் கற்றுக் கொள்ளும் லீலைகளும் கதைகளும் அவ்வளவு முக்கியமானவையல்ல. நாம் மனிதர்களாக இருக்கும்வரை மனிதப் பண்புகளோடு வாழ வேண்டியிருக்கிறது; தெய்வத்தின் செயல்களை உணர்ந்து கடைப்பிடித்தல் நம்மால் முடியாது. கடவுளால் ஒரு மனிதன் என்ற முறையில் செய்யப்பட்டுள்ள செயல்களை நாம் ஒப்புக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டும். இரு சேனைகளுக்கும் நடுவே கிருஷ்ணர் இரத்தத்தை நிறுத்தியபோது ஞானவிளக்கம் தரும்படி இறைவனைப் பல முறைகளில் அர்ச்சுனன் வேண்டிக் கொண்டான். கிருஷ்ணர் சொன்னவையனைத்தும் உண்மையெனவும், சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களால் ஊர்ஜிதம் செய்யப்பட்டவையெனவும் அவன் ஒப்புக்கொண்டான். ஆனால் அர்ச்சுனன் ஒரு சாதாரண மனிதனாக

இருந்தால் அவன் கிருஷ்ணருடைய தெய்வீகத் தன்மையை உணர்ந்து கொள்ள முடியவில்லை. தனக்குச் சொல்லப்பட்ட விஷயங்களில் பொதிந்துள்ள திண்மையை உணர்வதற்கான சக்தியைத் தனக்குக் கொடுக்கவேண்டும் என அவன் பிரார்த்தித்தாள். கிருஷ்ணருடைய விச்வரூபதர்சனத்தைத் தனக்குக் காட்ட வேண்டும் என அவள் கேட்டுக்கொண்டான். தன் மனதிலும் உடலிலும் பலவீனங்கள் போக்கப்பட வேண்டும். தன்னைப்போன்ற சாதாரண மனிதனுக்குக் கருணை காட்ட வேண்டும், தான் உயர்த்தப்பட வேண்டும் எனவும் அவன் வேண்டிக் கொண்டான். முழு அடக்கத்துடனும் பக்தியுடனும் அவன் இறைவனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அர்ச்சுனனுடைய தீவிரத்தையும் கவலையும் கிருஷ்ணர் கண்ணுற்றார். அவனுடைய பக்தி உண்மையென நம்பினார். தம்முடைய தெய்வீக வடிவத்தைச் சாதாரண ஊனக் கண்களால் பார்க்க முடியாது என அவர் அர்ச்சுனனிடம் கூறினார். அவர் அவனுடைய நெற்றியைத் தொட்டு அவர் கொடுக்கும் ஞானக் கண்கள் இறைவனைக் காண்பதற்கு உதவும் எனக் கூறினார். கிருஷ்ணருடைய இந்த ஸ்பரிசத்தால் அர்ச்சுனன் ஞானக்கண் பெற்றான். இக்கொடை கருணையால் தான் வந்தது, உரிமையால் வந்ததல்ல. இங்கனம் கருணையால் அர்ச்சுனனுக்கு இக்கொடையைக் கிருஷ்ணர் வழங்கினார். ஞானக் கண்ணினால், படைப்பு முழுவதும் தெய்வீகக் காட்சியில் அடங்கியிருப்பதை அர் ச்சுனன் கண்டு உணர்ந்தான். பட்சிகளையும் பிராணிகளையும் போலவே எல்லா மனிதர்களும் இக்காட்சியின் ஒரு பகுதி என அவன் உணர்ந்தான். எல்லாப் படைப்பிற்கும் கிருஷ்ணர் மூல காரணம் எனவும் அவன் உணர்ந்தான். ஒவ்வொரு நுண்ணிய கூறிலும் கிருஷ்ணர் இருக்கிறார் என்பதை அவன் பார்த்தான். அர்ச்சுனன் தன் கண்களை மூடிக்கொண்டபோது எல்லாத் திசைகளிலும் தெய்வீகக் காட்சி தென்பட்டது. தான் அவருடைய பெருமையையும் அவரது தெய்வீக ஆற்றலையும் பார்த்துவிட்டதாகவும், மேலும் அத்தெய்வீகக் காட்சியைப் பார்க்கும் சக்தி தன்னிடம் இல்லையெனவும் கிருஷ்ணரை விளித்துக் கூறினான். அர்ச்சுனன் கிருஷ்ணரின் முன்னால் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான்; பேருணர் ச்சியால ஆட்கொள்ளப்ப.டுப் பாட ஆரம்பித்தான். அவன் சொன்னான்: “நான் கிருஷ்ணனான உன்னை எங்கனம் அறிய முடியும்? இவ்வுலகில் எல்லாவற்றுள்ளும் பெரியதிலும் பெரியதாய் நீ இருக்கிறாய். இவ்வுலகில் உள்ள எண்பத்து நான்கு கோடி ஜீவராசிகளுக்கும் நீதான் ஆதார அடிப்படை. நீ எல்லையற்ற பெரியவனாய் இருக்கிறாய்; இவ்வுலகில் எல்லாவற்றைக் காட்டிலும் பெரிதான வஸ்துவுடன் கூட உன்னை ஒப்பிட முடியாது. பார்க்கக்கூடிய அனைத்தினுடைய மூலமும் நீதான். இப்போது நான் உன்னைச் சரணடைகிறேன் எந்தக்கேள்வியும் இன்றி நீ என்னை எதையெல்லாம் செய்யச் சொல்கின்றாயோ அதையெல்லாம் செய்வேன்.”

ஓர் அவதார புருஷர் எல்லாக் காலங்களிலும் எல்லாவற்றையும் செய்யக் கூடியவராக இருப்பினும் அவர் எல்லாக் காலங்களிலும் தன் சக்திகளை எடுத்துக் காட்டும் செயல்களைச் செய்யமாட்டார். விதிவிலக்கான சூழ்நிலைகளில், வேண்டப்படும்போது அத்தகைய சக்திகளை எடுத்துக் காட்டும் செயல்களை ஓர் அவதார புருஷர் புரிகிறார்; அவர் தகுதியுடைய மனிதரிடம் மட்டுமே கருணையைப் பொழிவார். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அத்தகைய அவதார புருஷர்கள் இருந்தபோதிலும், அத்தகைய அவதார புருஷர்கள் நமது மக்களுக்கு எடுத்துக் காட்டப்பட்ட போதிலும், ஓர் அவதார புருஷரின் எல்லா அம்சங்களையும் அவர்கள் முழுவதும் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். உருவமற்ற இறைவன் ஒரு மனித உடலைத் தாங்கி மனிதர்களிடையே வருவதேன் எனும் காரணத்தை நாம் ஆராய வேண்டும். மனிதர்களுடன் கலந்து, மனிதர்களுக்கான இலட்சியங்களையும் உதாரணங்களையும் எடுத்துக்காட்டி அவர்கள் கற்க வேண்டிய எல்லா அம்சங்களையும் தெரிவிக்க வேண்டி உருமற்ற கடவுள் மனித வடிவில் வருகிறார். “எல்லாச் சக்திகளையும் பெற்றுள்ள ஓர் அவதார புருஷர் எல்லாத் துன்பங்களுக்கும் ஏன் உட்பட வேண்டும்? அவதார புருஷர் எங்கும் சுற்றியுள்ள பசி, துன்பம் இவற்றை ஏன் சகிக்க வேண்டும்?” என்று பல மக்கள் அறிவற்ற முறையில் கேட்கிறார்கள். “எல்லாச் சக்திகளும் நிறைந்த ஓர் அவதார புருஷர் ஒரே

கணத்தில் எல்லாத் துன்பங்களையும் போக்கும் வல்லமையுடையவராக இருக்க வேண்டும்" என்கிறார்கள். அத்தகைய கேள்விகளில் ஏதேனும் பொருள் உள்ளதா? எதற்காக ஓர் அவதாரம் மனித வடிவில் வரவேண்டும்? அவதாரம் உருவமற்ற தெய்வீக நிலையிலேயே இருந்துகொண்டு இந்த எல்லாச் செயல்களையும் செய்ய முடியும்; சில சூழ்நிலைகளில் விதிமுறைகளின் படி குறிப்பிட்ட காலத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டி மனித நிலையில் வந்து அத்தகைய செயல்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. அநிஷ்டநிவிருத்தியாகச் சில செயல்களைச் செய்யாமல் ஓர் அவதாரம் எல்லாத் துன்பங்களையும் ஒரேடியாகக் களைய வேண்டும் என எதிர்ப்பார்ப்பது மிகவும் மடமையானது ஆகும். எல்லாவற்றிற்கும் முதலாக உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மனச்சக்திகளையும் உடற்சக்திகளையும் நன்கு பயன்படுத்த நீங்கள் முயற்சி செய்ய வேடும். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அச்சக்திகளை நீங்கள் உபயோகப்படுத்தாத போது தெய்வீகச் சக்தியோடு மட்டும் என்ன செய்துவிடப் போகிறீர்கள்? தெய்வீகக் கருணையாலும் இறைவனுடைய ஆற்றலாலும் உங்களுக்கு உணவும் பானமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என வைத்துக் கொள்ளுங்கள். கடவுள் உங்கள் தட்டில் போதுமான உணவு வைத்திருக்கிறார் என்பதால், கடவுள் இந்த உணவை உங்கள் வயிற்றுக்குள் எடுத்துச் செல்வதற்குக் கூட உதவ வேண்டியிருக்கிறது என நீங்கள் நினைப்பது மிகவும் சோம்பேறித்தனமான ஓர் எண்ணமாகும். உணவை உங்கள் வயிற்றுக்கு எடுத்துச் செல்வதற்குக் கடவுள் உங்களுக்குக் கைகள், நாக்கு, வாய் முதலியவற்றைக் கொடுத்திருக்கிறார். நீங்கள் அவற்றை நன்கு பயன்படுத்தவேண்டும். உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மனம், அதன் சக்திகள்—இவற்றைப் பயன்படுத்த முடியாவிட்டால், அந்நிலையில் நீங்கள் வாழ்வதைக் காட்டிலும் இறப்பது மேல். நமது மனச்சக்தி, உடற்சக்தி, மற்ற உறுப்புகள்—இவற்றை பயன்படுத்துவதை நாம் கற்பதற்காகவும், இவற்றை எப்படி பயன்படுத்துவது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவும் கடவுள் மனித வடிவில் வருகிறார். உங்கள் எண்ணம், சொல், செயல் – இவ ற்றைச் சரியாக, நன்கு எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கற்பிப்பது ஓர் அவதாரத்தின் இன்றியமையாத கடமையாகும். நாட்டிலுள்ள நிலைமைகளையும், சூழ்நிலைகளையும் ஒட்டி உங்கள் உறுப்புகளைச் சரியாகப் பயன்படுத்துவதைக் கற்பிப்பதற்கும், காட்டுவதற்கும் அவதார புருஷர் வருகிறார். பூலோக வைகுண்டமாகும் இந்தப் பாரத நாட்டில் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வசதிகளையும் செயல்திறன்களையும் நன்கு நீங்கள் பயன்படுத்தும் வண்ணம் புனித நூல்களான பாகவதமும் மகாபாரதமும் நல்ல உதாரணங்களைத் தருகின்றன என நான் உறுதி கூறுகிறேன். திவ்யாத்ம ஸ்வரூபிகளே! சிறுவர்களே! சிறுமியர்களே! உங்கள் புலனுறுப்புகளுக்கு அடிமையாகாமல் அவைகளை ஒரு குறிப்பிட்ட அளவாவது கட்டுப்படுத்துவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். உங்கள் புலனுறுப்புகளைக் கட்டுப்படுத்துவதால், அடக்கி ஆளுவதால், நமது புராண பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இலட்சிய குடிமக்களாக நீங்கள் ஆவீர்கள் என நான் நம்புகிறேன். மகாபாரதத்தில் நமக்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கு. இலட்சியங்கள், பாண்டவர்களுக்கும் கிருஷ்ணருக்கும் இடையே தெளிவாக இருந்த ஆழ்ந்த உறவுகள், இவ்வுறவிலிருந்து பெறப்படும் பாடங்கள்—இவற்றை நாம் உணர்ந்து நம் அன்றாட வாழ்வில் அனுஷ்டானத்தில் கடைப்பிடிக்க வேண்டும். மகாபாரதம் ஒரு சாதாரண நூலன்று, அது ஐந்தாவது வேதம் என அறியப்பட்டு வந்துள்ளது. மகாபாரதத்தில் உள்ள ஒவ்வொரு தனிப்பாத்திரத்திற்கும் கடவுளுக்குக் கூறப்படும் சில குணங்கள் இருந்தன. அவர்கள் மற்ற சாதாரண மக்களைப் போல் பிறந்தவர்களல்லர்; ஆதலால், அவர்கள் செய்த ஒவ்வொரு செயலும் நல்ல எடுத்துக்காட்டான செயலாகும். அவர்கள் அதிமானுஷ செயல்களை உடையவர்கள் ஆவார்கள். ஆகவே, அவர்கள் செய்தவையனைத்தும் இலட்சியமான செயல்களாகக் கருதப்பட வேண்டும். இந்நிலையில்தான் அந்த நூல் வேதங்களோடு ஒரு சேரக் கூறப்படுகிறது. நாள்தோறும் மகாபாதத்திலிருந்து பல கதைகள் கேட்கப் போகிறீர்கள். கிருஷ்ணர் எப்படித் தம் தெய்வீகத்தை ஒருபுறம் வைத்துவிட்டுத் தாமாகவே மனிதன் என்ற முறையில் நடந்து கொண்டார் என்பதை நீங்கள் அறியப் போகிறீர்கள். அதுதான் மானிடர்களுக்கு வழிகாட்டியாகும்.

இந்நீதிகளை மனதில் நிறுத்தி, அனுஷ்டானத்தில் கடைப்பிடித்து, நமது நாட்டின் பயனுள்ள யோக்கியமுள்ள குடிமக்களாக உங்களை முன்னேற்றிக் கொள்வீர்கள் என நான் நம்பி உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

ஏழாவது கருத்துரை

ஒரு நல்ல அமைதியான மரணத்தை எல்லா தபோஞானியரும் விரும்புகின்றனர்.

உங்களுக்கு அறிவு ஏன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவீர்களா? பணத்தைச் சேர்க்கும் நோக்கத்திற்காக அதைப் பயன்படுத்தக்கூடாது, உங்களைப் பற்றி நீங்கள் பார்ப்பதெல்லாம் மிகவும் அநித்யமான, மாறக்கூடிய இயற்கை என்பதை நீங்கள் உணர்வதற்காக அறிவு உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

பவித்ராத்ம ஸ்வரூபிகளே! மாணவர்களே! சிறுவர்களே! சிறுமியர்களே! மனிதன் ஒரு விதை போன்றவன். விதையானது முளைத்துப் பிறகு செடியாகி முடிவில் உங்களுக்குப் பழம் கொடுக்கும் மரமாவது போல் மனிதன் வளர்ந்து, மலர்ந்து, அமைதி என்னும் மலர்களைப் பூத்து, எஞ்சிய உலகனைத்துக்கும் அம்மலர்களை விநியோகம் செய்ய வேண்டும். மனிதன் தன் வாழ்வில் இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கிறான். ஒன்று அவனுடைய வயிற்றுப் பிழைப்பைப் பற்றியது; இன்னொன்று அவனுடைய சொந்த வாழ்வின் முடிவான குறிக்கோளைப் பற்றியது. முந்தையாவது ஒருவனுடைய வாழ்வி ற்குத் தேவையான பொருள்களை ஈட்டும் சக்தியாகும்; அது பொருளுலகத்துடன் மிகவும் சம்பந்தப்பட்டது. பிந்தியது ஆன்மீக உலகோடு தொடர்புள்ளது. ஆனால், இன்று மனிதன் தன் வயிற்றுப் பிழைப்பிற்குத் தேவையானவற்றை ஈட்டும் சக்திகளை வளர்த்துக் கொள்கிறான்; தன் வாழ்வின் மூலக் குறிக்கோளைத் தேடுவதற்கான சக்தியைப் பெறுவதில்லை. ஆன்மீக உலகமும், அன்றாடப் பொருளுலகமும் இருவேறு உலகங்களாக இருக்க முடியாது. இவ்வுலகத்திற்கேற்ற சக்திகளைப் பற்றி நாம் பேசும்போது இவ்வுடலுக்கு வசதியளிக்கத் தேவையான எல்லாச் சௌகரியங்களையும் பெறுவதற்கான சக்தியைக் குறிக்கிறோம். இவ்வுலகில் நாம் செய்வது, நம்மைச் சுற்றி நாம் பார்ப்பது, நமது உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க நாம் செய்வது எல்லாம் இவ்வுலக சம்பந்தப்பட்ட சக்தி என்றழைக்கப்படுகிறது. உள் உலகம் என்று சுருக்கமாக அழைக்கப்படவல்ல மற்றொரு அம்சம் இருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக இன்று, நாம் படுக்கையிலிருந்து எழுந்தது முதல் மீண்டும் தூங்கப் போகும் வரை இவ்வுலக சம்பந்தப்பட்ட சக்திகளைப் பெறுவதைக் குறித்தே எல்லா முயற்சிகளும் செய்யப்படுகின்றன. நாம் செய்வதனைத்தும் நம் அன்றாட வாழ்விற்கும், நம்மைச் சுற்றி நாம் பார்க்கும் பொருள்களுக்கும் சம்பந்தப்பட்டது. எப்படியிருந்தபோதிலும், உள்ளொளி உதவியின்றிப் புறக்காட்சியை நாம் முன்னேற்ற இயலாதது போல, உள் உலகம் அல்லது ஆன்மீக உலகத்தை நினைக்காமல் அன்றாட வாழ்வுக்கான உலகத்தை நினைத்தல் முடியாது. எல்லாவிதங்களைச் சேர்ந்த மதப்புத்தகங்களும் எப்படி இந்த உள்ளொளியை வளர்ப்பது, முன்னேற்றுவது என்பதைப் பற் றி மக்களுக்கு உபதேசித்திருக்கின்றன. ஆனால் பகவத் கீதை புறக்காட்சிக்கும் உட்காட்சிக்கும் வேறுபாடு காட்டவில்லை; அவை இரண்டும் படிக்கப் படவேண்டும் என சொல்லிக் கொண்டிருக்கிறது. நீங்கள் புறக்காட்சியை வலியுறுத்தினாலும் அக்காட்சியை வலியுறுத்தினாலும், முடிவான குறிக்கோள் ஒன்றே எனக் கீதை நமக்கு உபதேசித்து வந்தது. இதற்கு உதாரணமாகச் சொல்லப்படும் ஒரு சிறிய கதை இருக்கிறது. நீர் நிரம்பிய பானையைத் தன் தலைமேல் சுமந்து செல்லும் ஒரு பெண்ணை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். அவள் மற்ற பெண்களுடன் பேசிக்கொண்டும் கேலி செய்துகொண்டுமிருக்கிறாள்; அவள் வழியில் நடக்கும்போது மிகச்சுதந்திரமாக இருக்கிறாள். ஆனால் தன் தலைமேல் உள்ள நீர் குடத்தைப் பற்றி மிகுந்த கவனம் செலுத்துகிறாள். இந்த உவமையைப் போல், நாம் பொதுவான உலகில் வாழும் போது, நடக்கும்போது, நிகழ்ச்சிகளை அமைதியாக ஏற்றுக்கொண்டு, ஆன்மீக விஷயங்களைப் பற் றி மிகுந்த கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்; அவைகளை நாம் மறக்க முடியாது. நீங்கள் எந்தப்

பணியை, வேலையைச் செய்தாலும் உங்கள் கவனம் தெய்வீகத்தின்பால் இருந்தால் அப்போது கடவுள் உங்களைக் கவனித்துக் கொள்வார்.

இதற்கு இன்னொரு உதாரணம் இருக்கிறது. ஒரு தாயார் தன் குழந்தையைத் தூங்க வைப்பாள்; குழந்தை தூங்கிய பின் அவள் முதல் மாடிக்குச் சென்று தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பாள். இருந்தாலும் எல்லாக் காலங்களிலும் அவள் கவனம் குழந்தையின் மேல் இருக்கும். எப்போது குழந்தை விழித்துக் கொள்ளும் என்பதைப் பற்றியே எப்போதும் அவள் எண்ணுகிறாள். அவள் மிகவும் அவசரமான தீவிரவேலையில் ஈடுப்பட்டிருந்தாலுங்கூட அவள் கவனம் குழந்தையின் மேல் இருக்கும். அவள் குழந்தையின் அழுகுரலைக் கேட்டவுடனேயே ஓடி வருவாள். எந்த ராகத்தில், எந்தத் தாளத்துடன் குழந்தை அழுது கொண்டிருக்கிறது என்பதைக் கவனிக்க நிற்க மாட்டாள். குழந்தையின் அழுகுரலைக் கேட்டவுடன் தன் பணியை விட்டு ஓடி வரும் தாயாரைப்போல், இறைவன் எவ்வளவு வேலைகளிருந்தாலுங்கூடத் தன்னிடத்தை விட்டு வெளிவந்து பக்தனைக் காப்பார். எந்தப் பாதையைப் பக்தன் கடைப்பிடிக்கிறான். அவனால் என்ன பஜனைப் பாடல்கள் பாடப்படுகின்றன முதலியவற்றைப் பற்றிக் கடவுள் கேட்பதில்லை; ஆனால் எத்தகைய தீவிர சிந்தனையோடு தன் பக்தன் கூவியழைத்திருக்கிறான் என்பதை மட்டுமே அவர் நோக்குவார். கடவுள் சர்வ வல்லமையுடையவர்; அவரால் கல் இதயங்களையும் உருக வைக்க முடியும்; ஆனால் அவர் அதைச் செய்யும் பணியை ஏற்கமாட்டார். புருஷார்த்தங்களினால் தன்னுடைய பாதையைச் சரி செய்யும் சக்தி மனிதனுக்கிருக்கிறது; ஆகவே, தன்னுடைய சொந்த முயற்சிகளால் மனிதன் முதலில் தன்னுடைய எண்ணங்களைச் சரியாக்கிக் கொள்ள வேண்டும் எனக் கடவுள் எதிர்பார்க்கிறார். இந்தக் கட்டத்தில் கடவுளுடைய சக்தியைப் பற்றி விவாதம் செய்து கொண்டிருப்பதிலேயே மனிதன் இருக்கக் கூடாது; தன்னுடைய சொந்த சக்தியை ஆராய்ந்து நிலைமைகளைச் சரியாக்குவதற்குப் பயன்படுத்த வேண்டும். கடவுள் மனிதர்கள் நடுவில் வரும்போது ஒரு மனிதனைப் போலவே நடந்து கொள்கிறார்; நடத்தையின் உளவியல் அம்சங்களைப் புரிந்து கொள்கிறார். மனிதனுடைய மனத்தையும் இதயத்தையும் மாற்ற வல்ல முறைகளை ஆராய்கிறார்.

மகாபாரத யுத்தத்தில் பீஷ்மர் பயங்கரமான நிலையில் இருந்தார். யுத்தத்தின் முதல் ஒன்பது நாட்களின்போது ஒரு நாள் துச்சாதனனும் துரியோதனனும் பீஷ்மரிடம் சென்று, அநேகமாக ஒவ்வொரு நாளும் அவர்கள் தோல்விக்குப் பின் தோல்வி அடைந்து வருவதால், வெற்றி பெறாதது ஏன் எனக் கேட்டனர். தான் அரசனுக்கு அப்போது ஊழியம் செய்யும் நிலையில் இருப்பதை உணர்ந்து பீஷ்மர், “ஆம், நான் உன் கஷ்டத்தை உணர்கிறேன் நாளை யுத்தத்தில் நான் வெற்றியை உண்டாக்குவேன்” என்று கூறினார். அப்போது துச்சாதனன், யுத்தத்தில் பாண்டவர்களை வெறுமனே வெல்வதைக் காட்டிலும் அவர்களைப் பிடித்துக் கொல்லுதல் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று பீஷ்மரை வேண்டினான். இந்தக் கட்டத்தில், அடுத்த நாள் சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னால் பாண்டவர்களைக் கொல்வேன் எனப் பீஷ்மர் உறுதியளித்தார். பாண்டவர்கள் இதை அறிய வந்தனர். முது பெருங்கிழவரால் செய்யப்பட்ட வாக்குறுதி அவரால் நிறைவேற்றப்படும் என்பதை பாண்டவர்கள் உணர்ந்தனர். இருந்தாலும் பாண்டவர்களுக்கு வேறு வழியில்லை; தம்மை வளர்த்த முதுப்பெருங்கிழவரால் கொல்லப்படுவதற்குத் தம்மைத் தயார் செய்து கொண்டனர் இந்தச் செய்தி திரௌபதிக்கும் தெரிய வந்தது; அவளால் தூங்கவோ உணவுண்ணவோ முடியவில்லை; அவள் பயத்தால் சூழப்பட்டாள். இருண்ட இரவு தொடங்கி விட்டது. முழு நாடகத்திலும் கிருஷ்ணரும் ஆற்ற வேண்டிய பணியொன்றிருந்தது. ஜாலத்திறங்களை இயக்க நிலைக்குக் கொண்டு வந்து மக்களின் மனங்களை எப்படி மாற்றுவது என்பதை அவர் நினைத்துக்கொண்டிருந்தார். கணநேர உணர்ச்சி வசத்தால் தான் வாக்குறுதி கொடுத்துவிட்டதைப் பீஷ்மர் உணர்ந்தார். பாண்டவர்களின் பெருமையையும் குணநலன்களையும் அவர் நன்கறிந்திருந்தார். ஆகையால் மிகவும் உள்ளக் கலங்கமுற்றார். அவரால் உணவருந்த முடியவில்லை: ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்துக்கு நடந்து கொண்டிருந்தார்.

எப்படியிருந்த போதிலும், கிருஷ்ணர் தெய்வமானதால் இருபக்கமும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்தார். பயங்கர எதிர்காலத்தை எதிர்பார்த்த திரௌபதி கிருஷ்ணரிடம் வந்து அவரது திருப்பாதங்களைப் பணிந்தாள்; கீழே உட்கார்ந்தாள். அப்போது கிருஷ்ணர், "சகோதரி! உணர்ச்சி வசப்பட வேண்டாம். உன்னால் முடிந்ததைச் செய். எஞ்சியதை நான் செய்வேன்." என்று கூறினார். இந்த உறுதிமொழி கொடுக்கப்பட்டாலும் பெண்ணாக இருந்ததால் அவள் மிகவும் மனக் கலக்கமடைந்தாள். நடு இரவில் எல்லோரும்  தூங்கிக் கொண்டிருந்த போது கிருஷ்ணர் திரௌபதியிடம் வந்து, "என்னைத் தொடர்ந்து மட்டும் வா, எந்தக் கேள்வியும் கேட்காதே" என்று கூறினார். அப்போது இருட்டாக இருந்தது; அது யுத்த களம்; தான் யார் என அறியப்படக்கூடாது எனத் திரௌபதி விரும்பினாள். தன்னை ஒரு ஆடையால் மூடிக்கொண்டாள். யுத்த களத்தில் மாளிகைகள் இல்லை; அவர்கள் சமயத்திற்கேற்றபடி திறம்படச் செய்யப்பட்ட சிறு பாசறைகளில் தங்கி வசித்துக் கொண்டிருந்தனர். இருந்தபோதிலும், பீஷ்மர் தங்கிய இடம் மிகவும் பெரியதோர் இடமாகும். நள்ளிரவில், தாம் செய்த வாக்குறுதியை எவ்வாறு நிறைவே ற்றுவது, உண்மையில் மிகவும் துணிவான தார்மீகரான நன்மக்களான பாண்டவர்களை எப்படிக் கொல்வது எனப் பீஷ்மர் நினைத்துக் கொண்டிருந்தார். அவர் மிகவும் கவலையுடன் இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தார். பீஷ்மர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு, மனக்கலக்கற்ற இந்த சந்தர்ப்பத்தைக் கிருஷ்ணர் கண்ணுற்றத் திரௌபதியை நோக்கித் தன் செருப்புகளைப் பின்னால் விட்டு விட்டுப் (அந்நாளில் பணக்கார பெண்களின் செருப்புகள் பெரிய சத்தத்தைக் கிளப்பும்; மிக்க தூரத்திலிருந்தே அந்தச் சத்தத்தைக் கேட்க முடியும்) போய்ப் பீஷ்மரின் பாதங்களில் விழும்படி சைகை செய்தார். அவள் கிருஷ்ணரின் ஆணையின்படியே நடந்து கொண்டாள். அவள் ஓரிடத்தில் தன் செருப்புகளை விட்டு விட்டுத் தன்னை ஆடையால் மூடிக் கொண்டு உள்ளே விரைவாக ஓடிப் பீஷ்மரின் பாதங்களில் விழுந்து, தன் கணவன்மாரின் உயிர்களைக் காப்பாற்றும்படி கெஞ்சினாள். தம் உள்ளார்ந்த நல்ல குணங்களின் காரணத்தால் சிறிதும் நினைத்துப் பார்க்காமல் உடனடியாகப் பீஷ்மர் செயல்பட்டார். "நீ நீண்ட காலம் சுமங்கலியாக வாழ்வாயாக" எனச் சொல்லி அவளை ஆசீர்வதித்தார். நீண்ட காலம் கணவர்களுடன் சுமங்கலியாக வாழ்வாய் என்ற பீஷ்மரின் வாக்குறுதி திரௌபதிக்கு முற்றிலும் போதுமானது. அடுத்த நாள் சூரிய அஸ்தமனத்திற்கு முன் பாண்டவர்களைக் கொல்வேன் எனப் பீஷ்மர் வாக்குக் கொடுத்திருந்தார். அது மட்டுமல்ல, திரௌபதி நீண்ட காலம் சுமங்கலியாக வாழ்வாள் எனவும் இப்போது வாக்குறுதி கொடுத்து விட்டார். பீஷ்மர் இவைகளில் ஏதேனுமொன்றை நிறைவேற்ற வேண்டும். ஏனெனில், அந்தச் சமயத்தில், தான் ஆசீர்வதித்த பெண் திரௌபதி என்பதைப் பீஷ்மர் பார்த்ததும் முற்றிலும் குழப்பத்தில் ஆழ்ந்தார். ஒரு முரண்படும் சூழ்நிலை உருவாகிவிட்டது; தம் வாக்குறுதிகளில் எதை நிறைவேற்றப் போகிறோம் என்னும் முரண்பாடே பீஷ்மரைத் துன்புறுத்தியது. நள்ளிருளில், திரௌபதி தனியே வந்திருக்க முடியாது; ஆதலினால், அவளுக்கு இந்த மாதிரி செயல் திட்டத்தைச் சொல்லிக் கொடுத்தவர் யார் எனப் பீஷ்மர் திரௌபதியைக் கேட்டார்.

அந்தச் சமயத்தில், திட்டம் முழுவதினுடைய தலைமைச் சிற்பியான கிருஷ்ணர் தம் கைகளில் ஒரு துணி மூட்டையுடன் உள்ளே வந்தார். கிருஷ்ணரைப் பார்ப்பதில் உள்ள மகிழ்ச்சியைப் பீஷ்மர் வெளிப்படையாகத் தெரிவித்தார். தம் பக்தர்களைக் காப்பதற்காகக் கிருஷ்ணரால் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதெனவும், தர்மசங்கடமான நிலையிலிருந்து தம்மைக் காக்க வல்லவர் கிருஷ்ணரே எனவும் பீஷ்மர் கூறினார். இந்தச் சமயத்தில் கிருஷ்ணரின் கைகளிலிருந்த துணிமூட்டையை அவர் பார்த்து அந்தத் துணி மூட்டையில் என்ன இருக்கிறது எனக் கேட்டார். துணி மூட்டை திறக்கப்பட்டதும் திரௌபதியின் செருப்புகள் உள்ளேயிருப்பது தெரிந்தது. தம் கருணையையும் அன்பையும் காட்டும்போது தம் பக்தர்களைக் காப்பதற்காக மட்டுமல்ல, தேவை ஏற்பட்டால் தன் பக்தர்களின் செருப்புகளை எடுத்துச் செல்வதற்குக் கூடக் கடவுள் தயாராக இருக்கிறார், கிருஷ்ணரால் காண்பிக்கப்பட்ட இந்த ஒப்பற்ற கருணையைக் கண்டதும் திரௌபதியின் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. அவள் கேட்டாள்: "எங்கள்

வாழ்வை நீங்கள் பாதுகாத்துக் கொண்டிருப்பது போதாதா? நாளை என் கணவர்கள் கொல்லப்படாமல் தப்புவதற்காக நீங்கள் திட்டம் தீட்டியது போதாதா? ஒரு மதிப்புமே பெறாத என் செருப்புகளை நீங்கள் எடுத்து வரவேண்டுமா?" இத்தனைச் செயல்களையும் பூவுலகில் கடவுள் என்ற முறையிலா கிருஷ்ணர் செய்து கொண்டிருக்கிறார்? ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்குத் தேவையேற்படும் காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதைக் காட்டவே கிருஷ்ணரால் இத்தகைய செயல்கள் செய்யப்பட்டன. ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இருக்கவேண்டிய உறவை மனிதனொருவனே எடுத்துக்காட்ட முடியும். ஆகவே கிருஷ்ணர் மனிதனைப் போலவே நடந்து, வாழ்ந்து காட்டினார். ஒருவனுடைய சொந்த வாழ்வில் பிரேமைதான் மிகவும் ஆதாரமானது என்பது கிருஷ்ணரால் எடுத்துக் காட்டப்பட்டது. பீஷ்மர் கிருஷ்ணருடைய இந்த லீலையை முழு அளவில் புரிந்து கொண்டார்; அவர் எதைச் செய்தாலும் பாண்டவர்கள் தீங்குறமாட்டார்கள் என்னும் முடிவுக்கு வந்தார். ஆனால் அவர் உண்மையைக் கடைப்பிடிப்பவரில் மிகப் பெரியவராக இருந்ததால் தாம் கொடுத்த வாக்குறுதியிலிருந்து பிறழ அவர் எந்த முயற்சியும் செய்யவில்லை அடுத்த நாள் தாம் செய்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டுத் தம் முழு தீர்மானத்துடன் அவர் யுத்தகளம் சென்றார். அன்று யுத்தம் மிகவும் பயங்கரமாக இருந்தது; பாண்டவர்களுடைய சேனை இங்குமங்கும் ஓடியது. ஆனால் கிருஷ்ணருடைய தெய்வீகக் கருணையினால் பாண்டவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. மாலை வந்ததும் பீஷ்மர் கீழே விழுந்தார். ஒருவனுடைய உடற்சக்தியும் மனச்சக்தியும் மிகவும் முக்கியமானவையல்ல; ஒருவனுடைய தெய்வீகச்சக்தியே உண்மையான சக்தியாகும் என்பதை எடுத்துக் காட்டக் கிருஷ்ணர் இந்த நாடகமெல்லாம் ஆடவேண்டியிருந்தது.

பீஷ்மர் கீழே விழுந்த நாள் யுத்தத்தின் பத்தாவது நாள். அந்த நாளிலிருந்து யுத்தத்தின் பதினெட்டாவது நாள் வரை கிருஷ்ணர் யுத்தத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார். ஆனால் பீஷ்மர், தமக்காகவே தரமேற்படுத்திக் கொண்டிருந்த அம்புப் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தார். யுத்தத்தின் கடைசி நாளன்று பாண்டவர்கள் பீஷ்மரிடம் வந்தனர். அந்தச் சமயத்தில் நடத்த யுத்தமானது அந்தக் காலத்தில் நிலவிய சட்டதிட்டங்களுக்கும் வரைமுறைகளுக்கும் உட்பட்டிருந்தது. மகாபாரத யுத்தமானது கிறிஸ்து பிறப்பதற்கு 3138 வருடங்களுக்கு முன்னால் நடந்தது. பீஷ்மர் யுத்தத்தில் கலந்து கொண்ட நாட்கள் ஒன்பது. அவர் அடும்புப் படுக்கையில் இருந்த காலம் 58 நாட்களாகும். இவையிரண்டும் சேர்ந்து மொத்தம் 67 நாட்கள் ஆகின்றன. இது நிற்க; பாண்டவர்கள் பீஷ்மரைப் பார்க்கச் சென்று அவரைத் தரிசித்தனர். அம்புப்படுக்கையில் படுத்துக் கொண்டு பீஷ்மர் பாண்டவர்களிடம் மிகவும் அன்பைக் காட்டினார். 'சாந்தி பர்வம்' என்று அறியப்படுவதிலுள்ள அனைத்தையும் அவர்களுக்கு உபதேசித்தார். இந்தச் சூழ்நிலையில், சாந்தி பர்வத்தில் அமைதியைப் பற்றிய நடத்தை விதிகளை அவர் உபதேசித்துக் கொண்டிருந்தபோது, திரௌபதியின் மனதில் ஓர் எண்ணம் உண்டானது; அவள் உரக்கச் சிரித்து எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தாள். பாண்டவர்கள் இதை மிகவும் தகுதியற்றதென நினைத்தனர். பெரியோர்கள் முன்னிலையில் திரௌபதி இந்த முறையில் சிரித்ததை அவர்கள் விரும்பவில்லை. பீஷ்மர் அனைத்தையும் அறிந்தவர்; பாண்டவர்கள் மனதில் உண்டான எண்ணங்களை அவர் அறிந்தார். பாண்டவர்களுக்கு ஓர் ஏற்புடைய விளக்கம் கொடுக்கும் வண்ணம் திரௌபதியைத் தம்பக்கத்தில் வரும்படி அழைத்தார். அவர் அவளை ஆசீர்வதித்தார்; அவள் நீண்ட காலம் சுமங்கலியாக விளங்குவாள் என்று கூறினார். அவள் தகுந்த காரணமில்லால் எதையும் செய்ய மாட்டாள்; ஆகவே அவள் ஏன் சிரித்தாள் என்பதை விளக்கும்படி அவளைக் கேட்டுக் கொண்டார். இதனால் அவளுடைய கணவன்மார்களும் விடையை அறியக்கூடும் என்றும் கூறினார். திரௌபதி பீஷ்மரை மிகவும் பணிவுடனும் அடக்கத்துடனும் விளித்து, "நான் துரியோதனனுடைய சபையில் அவமானப்படுத்தப்பட்ட காலத்தில் நீங்கள் நடத்தையைப் பற்றி, எதுவும் பேசவில்லை. என்னுடைய கணவன்மார்கள் பன்னிரண்டு

வருடங்கள் வனவாசம் செய்ய அனுப்பப்பட்ட போதும் ஒரு வருடம் அஞ்ஞாதவாசம் செய்த போதும் நீங்கள் தர்ம விதிகளை உபதேசிக்கவில்லை. தர்ம ஸ்வரூபிகளாக இருக்கும் பாண்டவர்களிடம் இப்போது நீங்கள் சாந்தி பர்வத்தை உபதேசிக்கிறீர்கள். சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லாத மக்களுக்கு இப்போது ஏன் நீங்கள் உபதேசிக்க வேண்டும்? துரியோதனனுக்கும் அவனுடைய துணைவர்களுக்கும் இது கற்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய ஓர் எண்ணம் என் மனதில் வந்தவுடன் நான் சிரித்தேன். இது மட்டுமல்ல. அன்று அவையிலே சூதாட்டத்தில் தர்மர் தன்னையே பணயம் வைத்துத் தன்னையும் தோற்ற பின்பு என்னைப் பணயமாக வைத்தார். நான் அவமானப்படுத்தப்பட்டேன். இதற்குப் பிறகு பாண்டவர்கள் வனம் செல்லவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இது தர்மமா? நீங்கள் தர்மம், சரியான நடத்தை—இவற்றின் உருவானனர். அன்று தர்மர் தன்னையே சூதாட்டத்தில் தோற்ற பின்பு என்னைப் பணயம் வைக்க அவருக்கு உரிமை இருந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நான் ஐந்து கணவர்களுக்கு மணம் செய்யப்பட்டேன்; இந்நிலையில் அவர்கள் எல்லோருக்கும் சொந்தமாவேன். ஒரு கணவன் என்னைப் பணயம் வைக்க விரும்பினால் அது சரியா? அந்தச் சமயத்தில் நீங்கள் தர்மத்தைக் கடைப்பிடிப்பது பற்றிப் பேசுவதெல்லாம் என்ன ஆயிற்று? இரண்டாவதாக, தன்னைப் பந்தயத்தில் தோற்றபின்பு தர்மராஜர் என்னைப் பணயமாக வைத்தார். இதைச் செய்வதற்கு அவருக்கு உரிமை கிடையாது; நான் அன்றே, தர்மராஜர் முதலில் தன்னைத் தோற்ற பின்பு என்னைப் பணயம் வைத்தாரா, அல்லது, முதலில் என்னைப் பணயம் வைத்த பின்பு தன்னையே தோற்றாரா என்ற கேள்வியைக் கேட்டேன். அப்போது நீங்கள் எனக்குப் பதில் அளிக்கவில்லை. அந்தச் சமயத்தில் உங்கள் தர்மத்திற்கு என்ன ஏற்பட்டது? இன்று தேவையே இல்லாதபோது நீங்கள் இதையெல்லாம் பாண்டவர்களுக்கு உபதேசிக்கிறீர்கள். இது உண்மையில் சிரிக்கத் தகுந்த விஷயமாகும். ஆகவே என்னுள் இது சிரிப்பைத் தூண்டியது" என்றாள். பீஷ்மர் வாழ்விற்கும் மரணத்துக்கும் இடையே போராடிக் கொண்டிருந்த போது திரௌபதி இவ்வளவு தீவிரத்துடன் வாதம் செய்வதும், இந்தச் சமயத்தில் கேட்கக் கூடாத கேள்விகள் கேட்பதும் தர்மராசுரைக்கூட நிலைகுலையச் செய்தது. எப்படியிருந்த போதிலும், பீஷ்மர் உரக்கச் சிரித்தார்; திரௌபதி அத்தகைய கேள்விகள் கேட்பதைப் புகழ்ந்தார்; அத்தகைய கேள்விகளுக்கு விடைகள், வரக்கூடிய கலிகாலத்திற்கு மிகவும் முக்கியமானவையாயிருக்கும் என்று கூறினார் பாண்டவர்களை அமைதியாயிருக்கும்படி கேட்டுக்கொண்டார் "பல வருடங்களாக நான் தீய அரசர்களுக்கும் பாவிகளுக்கும் ஊழியம் செய்து கொண்டிருந்தேன்; அவர்கள் கொடுத்த உணவினால் வாழ்ந்து கொண்டிருந்தேன். ஆகையால் என்னுள் உள்ள தர்மமும் நேர்மையும் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. உன்னுடைய கணவன் கையிலிருந்து ஏவப்பட்டு என்மேல் வைத்த அம்புகளின் விளைவாக எல்லாத் தீய இரத்தமும் வெளியே ஓடிவிட்டது. மூழ்கடிக்கப்பட்ட தர்மம் இப்போது வெளியே வந்துவிட்டது. ஆகையால் சரியான நடத்தைக்கான அவசியத்தை நான் உபதேசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று பீஷ்மர் கூறினார். பீஷ்மரால் உபதேசிக்கப்பட்ட இந்த சாந்தி பர்வத்தி பர்வத்திலிருந்து, தீய கெட்ட வழிகளில் சேர்க்கப்படும் பணத்தின் உதவியால் யாரேனும் ஒருவன் தன்னையே உயர்த்திக் கொண்டால் அப்போது அவனுள் இருக்கக்கூடிய தீய இரத்தத்தின் விளைவாக அவனிடம் இருக்கும் நல்ல தன்மை மூழ்கடிக்கப்பட்டு விடும் என்ற பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்தில்தான், நீங்கள் சமைக்கும் பானை, நீங்கள் சமைப்பதற்குப் பயன்படுத்தும் பொருட்கள், உணவு—எல்லாமே தூய்மையாக இருக்க வேண்டுமென்று கிருஷ்ணர் க ற்பித்திருக்கிறார்.

இந்த ஸம்வாதத்தில் நீங்கள் உண்ணும் உணவில் தீயது இருக்க முடியும் என்பதைப் பீஷ்மர் உலகிற்குக் கற்பித்தார். நீங்கள் உண்ணும் உணவிலிருந்து எண்ணங்கள் ஏற்படுகின்றன. நம்முள் உண்டாகும் எண்ணங்களிலிருந்து செயல் வெளிப்படுகிறது. பாண்டவர்களுக்கேற்ற நீதிபோதனைகளைத் தந்த பின்பு பீஷ்மர் தம் உயிரை வகுத்தார். அந்நாளுக்கு முந்தைய நாள் மிகவும் மங்களகரமான நாள்.

ஏனென்றால், அந்நாளன்று சூரியன் தன் வடதிசைப் பயணத்தைத் தொடங்குகிறான். அந்த நாள் 'ரதஸப்தமி' என்றும் அழைக்கப்படுகிறது. பீஷ்மர் இறப்பதற்கு முன்தினமான ரதஸப்தமி ஒரு புனிதமான நாளாகும். அந்நாளில் அவரருகே எல்லாப் பாண்டவர்களும் வந்தனர். அன்று பீஷ்மர் தம் முன்னோர்களுக்கான சடங்குகளைச் செய்தார். அடுத்த நாள் தம் உயிரை உகுத்தார். ஆனால் இந்தச் சமயத்தில், நமது பஞ்சாங்கப்படி பீஷ்மர் ஏகாதசி அன்று இறந்ததாக நாம் நினைத்து அதை 'பீஷ்ம ஏகாதசி' என்றழைக்கிறோம். உண்மையில் இது சரியன்று. பீஷ்மர் இறந்த தினம் அஷ்டமி திதி ஆகும். அப்போது இருந்த நட்சத்திரம் ரோகிணி ஆகும். கிருஷ்ணர் கூட ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தார். இங்கனம் கிருஷ்ணர் பிறந்த தினத்தி ற்கொப்பான ஒரு நாளில் பீஷ்மர் இறந்தார். மேலும், அவர் இறந்த காலம், ஆண்டின் மிகவும் மங்களகரமான காலத்தின் ஆரம்பமாகும். அவர்கள் அந்நாளை, இறப்பதற்கு மிகவும் மங்களகரமான நாளென்று கருதினர். சூரியன் தன் வடதிசைப் பயணத்தைத் தொடங்கும் வரை பீஷ்மர் 58 நாட்கள் காத்துக் கொண்டிருந்தார். இந்த நாட்கள் முழுவதும் அவர் கடவுளைப்பற்றி நினைத்துக் கொண்டு, இறப்பதற்கு ஏற்ற காலத்தி ற்காகக் காத்துக் கொண்டிருந்தார். இந்த அம்சத்தைப் பொறுத்தவரை, இறப்புக் காலம் பிறப்புக் காலத்தைக் காட்டிலும் மிகவும் முக்கியமானது என்பதை உலகிற்குப் பீஷ்மர் கற்பித்தார். ஒருவன் மங்களகரமான நாளன்று பிறப்பதைக் காட்டிலும் மங்களகரமான நாளன்று, மங்களகரமான நேரத்தில் இறக்க வேண்டும் என்பது விரும்பப்பட வேண்டியதொன்று. ஒருவன் அங்கனம் இறந்தால் மறுபிறப்பும் நல்லதொன்றாக இருக்கும். இன்று நாமெல்லோரும் நல்ல பிறப்பை விரும்புகிறோம்; ஆனால் நல்ல இறப்பைத் தேடிக் கொண்டிருப்பதில்லை. நல்ல மரணத்தை அடைவதற்கு ஒருவனுக்கு உதவி செய்வதே, நல்ல பிறப்பின் உட்பொருளாகும். நாம் செய்யும் சாதனைகளனைத்தும் இன்பகரமான வாழ்விற்கன்று, ஆனால், ஒரு நல்ல அமைதியான இறப்பிற்காகத்தான் என்னும் உண்மையை நாம் உணர வேண்டும். எல்லாப் பெரிய ஞானியரும் யோகியரும் ஓர் எளிதான நல்ல மரணத்தை அடைவதைக் குறித்தே தம் எல்லாப் பிரார்த்தனைகளையும் செய்கின்றனர். தாம் இறைவனுள் எளிதாக ஐக்கியமாவதற்குத் தங்களுக்கு உதவ வேண்டும் என்று அவர்கள் பிரார்த்தனை செய்கின்றனர். முடிவாக, தெய்வீகத்துள் ஐக்கியமாகும் குறிக்கோளை அடைவதற்காக நமது முயற்சிகள் செலுத்தப்பட வேண்டும். இது சாந்தி பர்வத்திலுள்ள புனிதமான பாடமாகும். நீங்கள் இதைப் புரிந்து கொண்டு அனுஷ்டானத்தில் கடைப்பிடிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

## எட்டவாது கருத்துரை

## மனிதன் தன் உள்முகக் காட்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு வாய் ஏன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவீர்களா? அது எல்லா விதமான சொற்களைச் சொல்வதற்கா? இல்லை. நீங்கள் ஆண்டவனுடைய புகழைப் பாடுவதற்காக அது கொடுக்கப்பட்டிருக்கிறது.

பவித்ராத்ம ஸ்வரூபிகளே! இன்று மனிதன் உலகத்தின் எல்லாத் திசைகளிலிருந்தும் வரும் செய்திகளைக் கேட்க மிகவும் ஆவலுடையவனாக இருக்கிறான். நடந்து கொண்டிருக்கும் அனைத்தையும் அறிவது தன் பணி என அவன் நினைக்கிறான்; ஆனால் தன்னுள்ளிருந்தே வருவதைக் கேட்க அவன் முய ற்சி செய்வதில்லை. தன்னியற்கையைப் புரிந்து கொள்ள, உணர இயலாத ஒருவன் எதையும் சாதித்துவிட முடியாது. கல்வி என்ற முறையில் அவன் கற்பதெல்லாம் தெளிவாக வயிற்றுப் பிழைப்பின் பொருட்டே. இது நமக்குப் பொதுவானதாகவும் நமது மனதின் மயக்கமாகவும் ஆகிவிட்டது. இது தெரிவிப்பதற்குக் கூட யோக்யதையற்றது. இந்த விதமான மனப்பான்மை கிருஷ்ணரால் மிகவும் கடினமான முறையில் விமரிசனம் செய்யற்பட்டது. தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையிலிருந்து தன்னை வேறாக நினைக்குமொருவனிடம்

இந்தப் பற்றும் வெறுப்பும் பொதுவாகக் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட கார் அல்லது வீடு அல்லது நிலம் ஒருவனுக்குச் சொந்தம் என ஒருவன் நினைத்தால், அவனுக்குச் சொந்தமானது என நினைக்கும் எல்லாவற் றின் மேலும் பற்று இருக்கும்; அவனுக்குச் சொந்தமில்லாத பொருட்களிடம் வெறுப்புக் கொள்வான். தனக்கு ச் சொந்தமான பொருள்களையும் சொந்தமில்லாத பொருள்களையும் பிரித்துணரும் ஆற்றல் மனிதனுக்கில்லை. மனித உடலில் பல உறுப்புகள் இருக்கின்றன; இந்தப் பல உறுப்புகளால் தான் உடலே ஆக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பல உறுப்புகளில் ஒன்று தீங்குற்றாலும், பாழடைந்தாலும், வலி முழு உடலாலும் அனுபவிக்கப்படுகிறது. இந்தக் காரணத்தினால் தான், மனிதன் எல்லா உறுப்புகளையும் சரிசமமாகக் கருதி, உடலிலுள்ள எல்லா உறுப்புகளின் க்ஷேமத்தை விரும்புகிறான். இது போலவே, படைத்தவனின் கருணையும், அன்பும், ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற மூன்று குணங்களோடு கூடிய உயிருள்ள பொருள்கள், உயிரற்ற பொருள்களின் மீது சமமாக இருக்கும் ஒரே விளக்கிலிருந்து வெளிச்சம் வந்தாலும், அது வெண்மையான கண்ணாடித் துண்டுகளின் தொகுதியின் மேல் படும்போது பல்வேறு விதமான திசைகளில் மாறும்; அக் கண்ணாடித் துண்டுகள் பல இடங்களிலிருந்து ஒளியைப் பெறுகின்றன என நாம் நினைக்கிறோம். அதே வெளிச்சம் நிறமுள்ள பல கண்ணாடிகளின் மீது விழுந்தால் நாம் ஒளியைப் பார்க்க முடியாது; ஏனெனில் நிலம் தடுத்து ஒளியை உட்கிரத்துக் கொள்கிறது. இதுபோலவே, ஈச்வரனுடைய பிரகாசிக்கும் ஒளி மிகுந்த கருணை ஒரு ஸாத்வீக மனிதனுக்குக் கிடைக்கும்போது அவன் ஒளிவீசிப் பிரகாசிக்கிறான். ராஜஸ குணங்களோடு கூடிய ஒருவனுக்கு அதே ஈச்வர கருணை கிடைத்தால் அது அவனிடம் பல விதமான உலக ஆசைகளை வளர்க்கச் செய்கிறது. அதே கருணை தாமஸ குணங்களுடையவனுக்குக் கிடைத்தால் அது விதப் பயனுமில்லாமல் போய்விடுகிறது; அது தன்னுடைய ஒளியைக் கூடச் சிறிது இழக்க நேரிடலாம். எப்படி வைரத்தின் பல முகங்கள் பல திசைகளில் ஒளி வீசுகின்றனவோ, அது போலவே கிருஷ்ணருடைய பெருமை எல்லாத் திக்குகளிலும் பரவியது.

நாம் வைரத்தை அறுத்துப்பட்டை தீட்டும்போது வைரத்தின் மதிப்பு உயர்ந்து கொண்டே போகிறது. அது போலவே பாரத நாட்டின் கலாசாரம் மிகப்பெரும் உபதேசங்களினாலும் அனுபவங்களினாலும் மேலும் மேலும் வளர்ந்திருக்கிறது. நம் அனுபவம் அதிகரிக்குமளவுக்கும் நாம் நம் கலாச்சாரத்தைக் க ற்றுக் கொள்கிறோம்; புது எண்ணங்கள் நமக்கு வருகின்றன. மற்ற மனிதர்களுக்குப் பாடமாய் கிருஷ்ணருடைய உபதேசங்கள் இருக்கும் விதத்தை நாம் பார்க்கும்போது, கிருஷ்ணருடைய உபதேசங்களின் புனிதத் தன்மையை மேலும் மேலும் நாம் அறிவோம். உங்களுடைய காலிலிருந்து ஒரு முள்ளை நீக்க விரும்பினால், இன்னொரு முள்ளின் உதவியால் நீங்கள் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. உங்கள் கால்களிலிருந்து முள்ளை நீக்குவதற்கு நீங்கள் கோடாரியைப் பயன்படுத்த முடியாது. வைரத்தால் வெட்ட உங்களுக்கு ஒரு வைரம் தேவைப்படுகிறது. நீங்கள் ஒரு மனிதனுடைய அடிப்படையான தன்மைகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. யோகேச்வரராகப் பிறந்த கிருஷ்ணர், தம் ஆயுதமான காண்டீபத்தைக் கையில் பிடித்துக் கொண்டிருந்த, மனிதர்களில் மிகச் சிறந்தவனான அர்ச்சுனனுக்கு உபதேசிக்கும்போது மனித நிலைக்கு இறங்கி வந்தார். ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் பழகுவது போல் கிருஷ்ணர் அர்ச்சுனனைச் சரி செய்ய முயன்றார். முதல் நாளன்றே, “யுத்தத்தில் யார் வெற் றி பெறுவர்?” என்று சஞ்சயனைத் திருதராஷ்டிரன் கேட்டான். சஞ்சயன், “எங்கு யோகேச்வரர் இருக்கின்றாரோ, அவர் முன்னிலையில் எங்கு அர்ச்சுனன் கையில் ஆயுதமேந்திச் செயல்புரியத் தயாராயிருக்கின்றானே அங்கு வெற்றி, நன்மை, வளமை, சிறந்தனைத்தும் இருக்கும்” என்று பதிலளித்தான். இந்த நெருங்கிய ஆழ்ந்த உறவை மனிதர்களில் மிகச்சிறந்த அர்ச்சுனனும், அவதாரங்களில் மிகச்சிறந்த கிருஷ்ணரும்தான் புரிந்து கொள்ள முடியும். இங்கு மனிதர்கள் எல்லோரிலும் மிகவும் தகுதியுடையவனை அர்ச்சுனன் குறிக்கிறான். நீங்கள் கிருஷ்ணருடைய உபதேசங்களைப் புரிந்துகொண்டு உணர விரும்பினால், ஒன்று நீங்கள் மனிதர்களில் மிகச்சிறந்தவராக ஆகவேண்டும்; இல்லையென்றால் அவைகளை உணரும்

உரிமையையாவது பெற வேண்டும். அர்ச்சுனனுக்கு உரிமையயிருந்தது; அவன் மனிதர்களனைவரிலும் மிக ச்சிறந்தவனாயுமிருந்தான்; ஆகையால் அவனுக்குக் கடவுளின் விச்வரூபதரிசனம் கிடைத்தது. பிரபஞ்சத்தோடு இணைந்துள்ளபோதும் தெய்வீகம் ஒவ்வொரு மனிதனிலும் உள்ளாந்து இருக்கிறது என்னும் உண்மையை நாம் உணர வேண்டும். நீங்கள் பல மரங்களைப் பார்த்திருப்பீர்கள். சில ஆலமரங்கள் மிகப் பெரியவைகள் போலத் தோன்றுகின்றன. அவைகளுக்குப் பலகிளை மரங்களும் உள்ளன; அவை ஒரு பெரிய மாளிகைபோலத் தோற்றமளிக்கின்றன. பல கிளைகளோடு கூடிப்பெரியது என்னும் உணர்வை நமக்குத் தருகிற அத்தகைய ஆலமரத்தின் விதையை நாம் எடுத்துக்கொண்டால் அது கடுகைப்போல் மிகச் சிறிய வடிவோடிருப்பதை நாம் பார்க்கிறோம். அவ்வளவு பெரிய மரம். இவ்வளவு ஒரு சிறிய விதையில் அடங்கியுள்ளது உண்மை. இல்லையெனில் அது நம்மிடமுள்ள மாயையா? இல்லை, இது மாயை அன்று; இது ஓர் உண்மை. ஆனால் எந்த வடிவில் இந்த விதை காணப்படுகிறது? அது மிகச்சிறிய வடிவிலுள்ளது. இந்தச் சிறிய விதையை நாம் பூமியில் போட்டுப் போஷித்து வளர்ததால் அது முளைத்துப் பெரிதாகி வளருகிறது. பழங்கள், மரங்கள், இலைகள் எல்லாம் இந்தச் சிறிய விதையிலிருந்து வெளிவருகின்றன. ஆகையால், கிளைகள், பழங்கள் இலைகள் எல்லாம் வேறானவைகள் அல்ல. அவைகள் எல்லாம் இந்த விதையின் பகுதிகள். இங்கனம், பிரபஞ்சம் என்னும் இந்தப் பெரிய மரத்தில் நீங்கள் பார்ப்பவையனைத்தும் தெய்வீகம் என்னும் விதையிலிருந்து வந்திருக்கின்றன. அதுபோலவே, உங்களுடைய இந்தப் பெரிய உடலில் ‘ஆத்மா’ என்றழைக்கப்படும் மிகமிகச் சிறிய விதைபோன்றது உள்ளது. உங்களுள் உள்ள இந்த விதையை எடுத்து அதைப் போஷியுங்கள்; அது வளர்ந்து வளமையாகட்டும்; அப்போது பிரபஞ்சத்தின் தெய்வீக வடிவை அது காட்டும். ஆனால் எங்கு நாம் அந்த விதையைப்போட வேண்டும்? அதை எப்படிப் பாதுகாப்பது? அதை வளர்த்து ஒரு பெரிய மரமாக்குவது எப்படி? அதை நமது உள்ளங்கையில் இட்டு அதன்மேல் நீர் ஊற்ற முடியுமா? அது ஒரு மரமாகுமா? ஒரு விதையை மண்ணிலிட்டுத் தகுந்தபடி நீர் பாய்ச்சினால் தான் அது மரமாகும். அதுபோலவே, இதயம் என்னும் மண்ணில் நாம் கடவுளுடைய நாமம் என்னும் விதையை இட்டுப் பிரேமை என்னும் நீர் பாய்ச்சினால் அது நல்ல மரமாக வளரும். இந்நிலையில், விச்வவிராட் புருஷனுக்கு ஆயிரக்கணக்கான தலைகள், கால்கள், கைகள் உள்ள தெய்வீகக் காட்சி விவரிக்கப்படுகிறது. எங்கிருந்து இந்த விச்வ விராட் காட்சி வருகிறது? நம்மில் உள்ள காட்சியின் பெருக்கம் தான் இது. நான் என் கண்களைத் திறக்கும்போது பல்லாயிரக் கணக்கான தலைகளைப் பார்க்கிறேன்; ஆனால் கண்கள் மூடப்பட்டால் நான் ஒரு தலையைக் கூடப் பார்ப்பதில்லை. என் கண்கள் திறந்துள்ளபோது நான் இந்த ஆயிரக்கணக்கான தலைகளை மட்டுமல்ல, இந்தச் சுவர், இந்த ஜன்னல், எல்லாப் புகைப் படங்கள், என்னை ச் சுற்றியுள்ள அனைத்தையும் கூடப் பார்க்கிறேன். ஒருவன் வெளியே போய் திறந்த கண்களோடு பார்த்தால் அவன் மலைகள், ஆகாயம், நதிகள், தூரத்திலுள்ள நிலம் இவற்றைப் பார்க்கிறான். ஆனால் ஒருவன் தன்னுடைய கண்களை மூடிவிட்டால் இந்தப் பரந்த படைப்பில் ஒரு சிறு எறும்பைக் கூட, அவனால் பார்க்க முடிவதில்லை. ஏன்? கண்கள் திறந்துள்ளபோது முழுப் படைப்பையும் பார்க்கிறோம்; கண்கள் மூடப்பட்டால் படைப்பில் நாம் எதையும் பார்ப்பதில்லை. இங்கனம், படைப்பு முழுவதும் நம் பார்வையால் உண்டாகிறது என முடிக்கிறோம். காட்சியுள்ள போது படைப்பிருக்கிறது, காட்சியில்லாதபோது படைப்பில்லை. புறக் காட்சியால் உதவியால் நாம் உள் ஆத்மாவைப் பார்க்க முடியும். இதைக் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கற்பித்தார். இந்த உள்முகக் காட்சியை அபிவிருத்தி செய்வதற்கு உதவும் எண்ணத்துடன் ஆண்டவன் அவனுக்குப் பல வழிகளைக் காட்டினார்.

ஓடாதது நீரல்ல, எரிக்காதது நெருப்பல்ல. இந்த உவமைகள் போல், உள்முகக் காட்சியில்லாதவனை மனிதன் என்றழைக்க முடியாது. எரிக்கும் சக்தி நெருப்புக்கு இயற்கையானது. இயற்கையாகவே ஓடும் சக்தி நீருக்கிருக்கிறது. அதுபோல், உள்முகக் காட்சியென்னும் இயற்கையான சக்தியை மனிதன் பெற வேண்டும். ஒரு மிருகத்துக்குப் புறக்காட்சி மட்டும்தான் இருக்கிறது.

நாம் பார்ப்பது உள்முகமாக இருப்பதின் பிரதிபிம்பம்தான் என வேதங்கள் நமக்குச் சொல்லியிருக்கின்றன. நாம் உள்ளே பார்ப்பதும் வெளியில் பார்ப்பதும் அடிப்படையில் ஒன்றுதான், அதேதான் என்பது நாராயணனுடைய விச்வரூப தரிசனத்தால் நமக்குக் கற்பிக்கப்படுகிறது. ஒரே ஒரு பொருள்தான் உள்ளது. அந்த ஒரு பொருள் பல வழிகளில் பார்க்கப்படுகிறது. இதுதான் இவ்விச்வரூப காட்சியால் எடுத்துக் காட்டப்படுகிறது. "ஏகோஹம் பஹுஸ்யாம்" என்பதை விளக்குவதும் இதுவே. இரவில் நீங்கள் தூங்கச் செல்கிறீர்கள். கோடை வகுப்பின் ஒரு பகுதியாக நீங்கள் இருப்பதைக் கனவு காண்கிறீர்கள். ஸ்வாமி பேசுவதைக் கூட நீங்கள் கனவில் காண்கிறீர்கள். உங்கள் கனவில் உங்கள் முன்னால் இதையெல்லாம் யார் கொண்டு வந்திருக்கிறார்கள் என நீங்கள் கேட்டுக் கொள்ள வேண்டும். யாரும் அவற்றைக் கொண்டு வரவில்லை. உங்கள் சொந்த மனமானது, ஸ்வாமியின் உருவம், இந்த மாளிகை, உங்கள் நண்பர்கள் எல்லாவற்றையும் படைத்திருக்கிறது. அதெல்லாம் உங்கள் சொந்த மனத்தின் படைப்பு, மனிதனுடைய பந்தத்திற்கும் அவனுடைய முக்திக்கும் மனிதனுடைய மனதுதான் காரணம். எல்லாவற்றிலும் மிக முக்கியமானது ஒருவனுடைய மனதைக் கட்டுப்படுத்தலே என்பதை முதன்முதலில் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கற்பித்தார். இங்கனம், முதலில் செய்யவேண்டியது உங்கள் மனதைக் கட்டுப்படுத்தலே. நாம் செய்ய வேண்டிய முதல் செயல் மனதில் வரும் ஆசாபாச எண்ணங்களை முயற்சி செய்து எரித்தலே. உங்கள் மனதிலுள்ள ஆசை எண்ணங்களை மற்றவர்கள் அறியக்கூடும், அறியாமலிருக்கலாம்; ஆனால் என்றேனுமொரு நாள் அவை வெளி வந்தே தீரும். உங்கள் மனதில் ஆசைகளில்லாதது போல் நீங்கள் நடிக்கலாம்; ஆனால் தம்மை மறைக்க ஆசைகள் உங்களை ஒருபோதும் அனுமதிக்கா. அவைகள் எப்போதும் வெளியே வந்து விடும். இந்த ஆசைகள் நெருப்புப் போன்றவை. நீங்கள் நெருப்பை எடுத்துக்கொண்டு ஒரு துணியில் மறைக்க முயற்சி செய்தால் அந்த நெருப்பு துணியை எரித்துவிட்டு வெளியே வந்துவிடும். உங்கள் ஆசைகளும் எண்ணங்களும் வெளிவந்து தம்மைக் காட்டிக் கொள்வது உறுதி. ஆசைகளை மறைத்து வைப்பதைக் காட்டிலும் அவைகளைத் தூர எறிதல் நன்று எனக் கிருஷ்ணர் அர்ச்சுனனிடம் கூறினார்.

கௌரவர்களைக் கொல்லப் போகும் மக்கள் அவனே இதர பாண்டவர்களளோ அல்லர் என அர்ச்சுனனுக்கு முதலில் கூறப்பட்டது. அர்ச்சுனனுக்கோ, பாண்டவருக்கோ, கிருஷ்ணருக்கோ பிறப்பும் இறப்புமில்லை. நம்முள் இன்றியமையாத ஆத்மாவுக்குப் பிறப்பும் இறப்புமில்லை. ஆகையால், நம்முள் உள்ள அழியாத ஆத்மாவை மறந்து விட்டு ஒரு தோல் பை போன்ற இந்த உடலுக்கு நம்மை அடிமையாக்குதல் சரியன்று. கிருஷ்ணரால் அர்ச்சுனனுக்குக் கற்பிக்கப்பட்ட கடினமான தெய்வீக அம்சத்தை நாம் மனிதர்களாக இருக்கும் வரை உணர்தல் கடினம். அதனால்தான் கிருஷ்ணர் ஒரு மனித வடிவில் வந்தார். அவர் வந்தக் காரணம் இதுவே. உடலால் ஏற்படும் உறவை அர்ச்சுனனுடனும் மற்ற பாண்டவர்களுடனும் ஏற்படுத்திக்கொண்டு, அவர் அர்ச்சுனனுடைய அம்மான் சேயாகவும், அர்ச்சுனன் அத்தை மைந்தனாகவும் இருப்பது போல் நடித்தார். சாதாரண அன்றாட விஷயங்களில் கூட கிருஷ்ணர் எப்போதும் ஒரு புனிதமான வாழ்வையே வாழ்ந்தார். நாம் மகாபாரதத்தில் அல்லது பாகவதத்தில் பார்ப்பதுதான் கிருஷ்ணருடைய உண்மையான வாழ்க்கை. சினிமாவில் நாம் பார்ப்பது அவருடைய வாழ்வின் உண்மையான ஸ்வரூபத்தைத் தராது. இன்று நாம் பார்ப்பது செயற்கையாகப் படைக்கப்பட்டிருக்கிறது; ஆனால் கிருஷ்ணருடைய நடத்தையை நாம் முழுவதும் ஆராய்ந்தால் அவர் தூய்மையாகவும், திடமுடையவராகவும், உண்மையானவராகவும் இருந்தார் என்பதை உணர்வோம். அவா எப்போதும் உண்மையை ஆதரித்து அதைக் கடைப்பிடித்தார். அதனால் தான் கிருஷ்ணரைத் தன் அம்மான் சேய் என்பதைவிட 'உண்மையின் ஸ்வரூபமே!' என அர்ச்சுனன் எப்போதும் விவரித்தான். யுத்தம் முடிந்தபின், கிருஷ்ணர் துவாரகைக்குச் சென்றார்; தம் தந்தை வஸுதேவர் வாழ்ந்து கொண்டிருந்த இடத்திற்குச் சென்றார். வஸுதேவர் அவரைக் கேட்டார்: "நீ எப்போதும் உண்மை பேசியிருக்கிறாய். உண்மையைக் காப்பவன் என்ற முறையில்,

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் ஏற்பட்ட உண்மையான மாற்றங்கள் எவை என உன்னிடமிருந்து அறிய விரும்புகிறேன்." ஒரு மகன் எப்போதும் உண்மையைப் பேசினால் கூட தன் மகன் உண்மையைப் பேசுகிறான், உண்மையைக் காக்கிறான் என எந்தத் தந்தையும் முன் வந்து சொல்லமாட்டான். இந்நிலையில், தந்தை தன் மகனை விளித்து, அவன் எப்போதும் உண்மையைப் பேசியிருப்பதாகவும் உண்மையைக் காத்திருப்பதாகவும் சொல்வதன் ஆழ்ந்த குறிப்பை நாம் உண்மையில் முயற்சி செய்து உணர வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக நாம் படிக்கும் புத்தகங்களிலும், பார்க்கும் திரைப்படங்களிலும் கிருஷ்ணர் ஒரு தந்திரம் நிறைந்த கபடதாரி எனச் சித்தரிக்கப்படுகிறது. இம்முறையில் கிருஷ்ணரை மதிப்பீடு செய்தல் சரியன்று. இது மகாபாரதத்தில் உள்ளதன்று. பணம் சம்பாதிப்பதற்கும் தங்கள் கதைகளை மிகவும் கவர்ச்சியாக்குவதற்கும் மக்கள் அத்தகைய கதைகளை எழுதுகிறார்கள். நமது சொந்த நாட்டு மக்களே இதைச் செய்து உண்மையைத் திரித்துப் பணம் சம்பாதிப்பது மிகவும் வருந்தத்தக்கது.

கிருஷ்ணர் மட்டும் உண்மையைப் பேசிக்கொண்டு உண்மையைக் காத்துக் கொண்டிருந்தார் என்பதல்ல; பாண்டவர்களும் உண்மையை மிகவும் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள். உண்மையின் பெரும் பாதுகாவலர்களான கிருஷ்ணரும் பாண்டவர்களும் புனித நூலான பாரதத்தை இந்நாட்டிற்குத் தந்தனர். பாண்டவர்கள் காட்டிய சகிப்புத்தன்மையும், மிகப்பரந்த மனப்பான்மையும், அவர்கள் நன்னடத்தையின் பலமும், தங்கள் நடத்தையில் காட்டிய உறுதியும் இந்நாட்டின் எந்தக் குடிமகனிடமும் பார்க்க முடியாத வண்ணம் இருக்கின்றன. பாண்டவர்கள் எப்போதும் கிருஷ்ணருக்குக் கீழ்ப்படிந்ததால் அவர்கள் நேரடியாகக் கிருஷ்ணரிடமிருந்து உண்மை, சகிப்புத்தன்மை என்னும் புனித குணங்களைக் கிரகித்துக் கொண்டார். உபபாண்டவர்களைக் கொன்ற அச்வத்தாமன் திரௌபதியின் முன் கொண்டுவரப்பட்ட போது, தன் குழந்தைகளை இழந்த பெருந் துக்கத்திலும் திரௌபதி முன் சென்று அவனுடைய பாதத்தை வணங்கி அவனுக்கு மரியாதை செலுத்தினாள். பாண்டவர்களிடம் அத்தகைய உண்மை, சகிப்புத்தன்மை என்னும் பெருங்குணங்களை நாம் நோக்க வேண்டும். திரௌபதி இருந்த துயரத்தில் இருந்த தாய்மார்கள் இருந்திருந்தால், தாம் செய்யச்சக்தி இல்லாமலிருந்தால் கூட அவர்கள் அ ச்வத்தாமனின் மேல் பாய்ந்து அவன் கழுத்தை இறுக்கிக் கொன்றிருப்பார்கள். ஆனால் மிகப்பெரும் துன்பத்திலும், அத்தகைய தங்கம் போன்ற குணமிருந்த திரௌபதி கேட்டாள்: உங்களால் கொல்லப்பட்ட உபபாண்டவர்கள் உணர்ச்சியோடோ, உணர்ச்சி வசத்தாலோ உங்களிடம் வரவில்லை. அவர்கள் கையில் எந்த ஆயுதமும் வைத்திருக்கவில்லை. அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது நீங்கள் எப்படி அவர்கள் கழுத்தை வெட்டிக் கொல்லத் துணிந்தீர்கள்?". தம் பிள்ளைகள் அனைவரும் அச்வத்தாமனால் கொல்லப்பட்டிருந்தாலும், மிகுந்த சகிப்புத் தன்மையுடனும் சமமான மன நிலையுடனும் அவனிடம் "என் கணவன்மார்கள் உங்கள் தந்தை துரோணாசாரியாரின் சிஷ்யர்கள். அவரிடமிருந்து அவர்கள் போர்க்கலையின் எல்லா அம்சங்களையும் கற்றுக் கொண்டனர். அவரிடமிருந்து அவர்கள் போர்க்கலையின் எல்லா அம்சங்களையும் கற்றுக் கொண்டனர். துரோணாசாரியரின் மகனாகிய நீங்கள் உங்கள் சிஷ்யர்களாக இருக்க வேண்டிய என் பிள்ளைகளைக் கொன்றீர்கள்" என்று கூறினாள். அவள்அச்வத்தாமனிடம் முறையிட்ட விதம் இதுவே. பீமன் அத்தகைய துன்பத்தைப் பொறுக்க இயலாதவன்; இதனால் அவன் உலகத்திற்குத் தன் உடற்சக்தியைக் காட்டுமளவிற்குத் தன்னைத் தூண்டிய பெரும் உணர்ச்சியோடு கோபமாய் இருந்தான். உண்மையில், திரௌபதியும் சகிப்புத் தன்மையைப் பரிகசிக்கத்தாகவே அவன் எண்ணினான். திரௌபதியின் அமைதியான மனப்பான்மையைக் கண்டு பீமன் மிகவும் ஆச்சரியம் அடைந்தான். தன் குழந்தைகளை இழந்த துன்பம் அவளைப் பைத்தியமாக்கி விட்டிருக்கிறது என அவன் நினைத்தான். இல்லையென்றால், தன் குழந்தைகளைக் கொன்றவன் தன் முன் நின்று கொண்டிருக்கும்போது ஓர் உண்மையான தாய் எப்படி அத்தகைய சகிப்புத் தன்மையைக் காட்டமுடியும் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை அவன், "நீங்கள் அச்வத்தாமனைக் கொல்லாவிட்டால்

நான் என் முஷ்டியால் அவனைக் கொல்வேன்" என்று சொன்னான். திரௌபதி எல்லோரும் கடைப்பிடிக்கத்தக்க நடத்தையுடைய மிகச் சிறந்த பெண்மணி. இன்றைய பெண்கள் அவளை உதாரணமாக மிகச் சிறந்த பெண்மணி. இன்றைய பெண்கள் அவளை உதாரணமாக எடுத்துக்கொண்டு அவளுடைய சகிப்புத்தன்மை, அமைதி என்னும் குணங்களைக் கடைப்பிடித்தால் நமது நாடு மிக மிக முன்னேறும். மிகச் சக்திவாய்ந்த பீமன் அச்வத்தாமனைத் தன் முஷ்டியால் கொல்லத் தயாரானபோது, திரௌபதி போன்ற பலம ற்றவளால் பீமனைச் சென்று தடுக்க முடியுமா? எனினும் தூய சிந்தனையின் உறுதியே அவளுடைய பலமாகும். அவளுக்கு உடல் பலமில்லை; உள்ளமைதியிருந்தது. அப்போது அவள் பீமனிடம், "பயந்தவன், தஞ்சம் கேட்டு வந்தவன், தூங்குபவன் குடித்துத் தன்னை மறந்தவன்–இவர்களைக் கொல்வது தர்மமன்று" என்று கூறினாள். தார்மீகமான நடத்தையைக் காப்பாற்றுவதற்காகத் தன் கணவன்மார்களைக் கூட எதிர்க்கும் மிகச் சிறந்த பெண்மணி திரௌபதி. தன் எந்தச் செயலாலும் தன் கணவன்மார்களுக்கோ அல்லது தன் தந்தைக்கோ அல்லது தன் பிள்ளைளுக்கோ அபகீர்த்தி கொண்டுவராத பெண்மணி அவள். தன் செயல்களால் யாரும் துன்பமுறக் கூடாது என அவள் விரும்பினாள்.

பாண்டவர்கள் காட்டிற்குப் போவதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தபோது, தர்மராஜர் திரௌபதியைக் கூப்பிட்டனுப்பித் தன் பக்கத்தில் உட்காரும்படி அவளிடம் சொன்னார். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையே உள்ள சில தனிப்பட்ட வேறுபாடுகளின் காரணமாகத் தாங்கள் காட்டிற்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று தர்மராஜர் அவளிடம் கூறினார். இந்தத் துன்பங்களும் சோதனைகளும் அவர்களால் தவிர்க்க முடியாதவை; காட்டில் பன்னிரண்டு வருடங்கள் வாழ்வதும், அதைத்தொடர்ந்து ஒரு வருடம் அஜ்ஞாத வாசம் செய்வதும் மிகவும் கடினமான செயலாகும். ஆண்கள் எப்படியாவது துன்பங்களைத் தாங்கிக் கொள்வார்கள். பெண்கள் காட்டிற்குச் செல்லும் தருணம் அதுவன்று எனத் தர்மராஜர் கூறினார். அவள் (அஸ்தினாபுரத்திலேயே) தங்கி திருதராஷ்டிரனையும் காந்தாரியையும் பார்த்துக்கொள்ளும்படி பாண்டவர்கள் கேட்டனர்! இது பாண்டவர்களிடம் உள்ள அரும்பெரும் குணமாகும். இந்த நடத்தையிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டும். பாண்டவர்கள் உண்மையில் கௌரவர்களை வெறுத்திருந்தால் இந்தச் செயலில் ஏதேனும் பொருளுள்ளதா? பாண்டவர்கள் திரௌபதியைத் தங்கிக் கௌரவர்களுக்குச் சேவை செய்யக் கேட்டுக் கொண்ட உண்மையை நாம் எப்படி நியாயம் எனச் சொல்ல முடியும்? இதன் நீதி என்னவெனில், ஒருவன் வாழ்வில் நடக்க வேண்டியது நடந்தே தீரும்; அத்தகைய தவிர்க்க முடியாத சம்பவங்களை மனதில் வைத்துக்கொண்டு வெறுப்பை வளர்ப்பதற்கு அவற்றை பயன்படுத்துதல் சரியான செயலன்று, நன்மையான மனித குணமில்லை. நாம் அனுபவிக்க வேண்டிய துன்பம், நமக்கு நேரும் துரதிருஷ்டமான சம்பவங்கள், நமக்குள்ள துன்பங்கள் அனைத்தும் புறத்தில் ஏற்படுபவை அல்ல. கடவுளால் கொடுக்கப்படுபவை அல்ல. அவைகள் நமது சொந்த செயலின் வெறும் விளைவுகள்தாம். தன்னுடைய சொந்த பலவீனத்தின் காரணத்தினால்தான் தனக்கு வரும் துயரங்களுக்கும் துரதிருஷ்டங்களுக்கும் காரணமாக யாரேனுமொருவரை மனிதன் குறை கூறுகிறான். இது சரியான மனப்பான்மையன்று. நமது துயரங்களுக்கு மற்றவர்களைக் குறை கூறுதல் சரியன்று என மகாபாரதம் நமக்குக் கற்பிக்கிறது. மிகவும் நல்லதாகவும் ருசியாகவும் உள்ள உணவையும் பழத்தையும் நீங்கள் சாப்பிட விரும்புகிறீர்கள்; அத்தகைய பழத்தைப் பெறுவதற்கு விஷச்செடிகளைத் தரும் விதைகளை நீங்கள் பயன்படுத்த முடியாது. நீங்கள் வளர்க்கும் மரத்தில் நீங்கள் பெறும் பழங்கள் நீங்கள் விதைக்கும் விதைகளைப் பொறுத்து அமையும். நீங்கள் விஷச்செடியின் விதைகளை விதைத்துவிட்டு ருசியான பழங்களை எதிர்ப்பார்த்தால் எப்படிப் பெறமுடியும்? இப்போதுள்ள உங்கள் முற்பிறவியில் செய்திருக்கிற செயல்களை ஒட்டி அமைந்துள்ளன. இதை உணராமல் மற்றவர்களைக் குறைகூறுதல் சரியன்று. நமது துன்பங்களுக்கும் இன்பங்களுக்கும் காரணமானவை நமது செயல்களே என்று நாம் கருதவேண்டும் என மகாபாரதம் நமக்குப் பாடம் கற்பித்திருக்கிறது. ஆனால் ஒரு மனிதன் என்ற முறையில் நீங்கள்

செய்யவேண்டிய செயல்களனைத்தையும் செய்யவேண்டும். புருஷார்த்தங்கள் என்ற பெயரில் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சக்திகள் முழுவதும் பயன்படுத்த வேண்டும். “இதைச் சாதிப்பேன் அல்லது அதைச் சாதிப்பேன்” என நினைக்காதீர்கள். கடவுளுடைய அருளின்றிப் பெருஞ்செயல்களை நீங்கள் செய்யமுடியும் என நினைக்காதீர்கள். இந்தச் செயல் முறையில் தளர்ந்தும் விடக்கூடாது. நீங்கள் போட்டிருக்கிற விதைகளின் தன்மைதான் இன்றைக்கு நீங்கள் உள்ள நிலைக்கு உங்களைக் கொண்டு வந்துள்ளது; மேலும், நீங்கள் பின்னால் அடையப்போகும் விளைவுகளைத் தீர்மானிக்கிறது. விதை ஒரு விதமான பழத்தை அடைய எவ்வாறு ஆசைப்பட முடியும்? ஆகவே, நீங்கள் பயன்படுத்தும் விதையின் தன்மை நீங்கள் பெறப்போகும் பழத்தின் தன்மையைத் தீர்மானிக்கும்; நீங்கள் அந்தப் பழத்தை ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கும்; நீங்கள் மிகவும் புத்திசாலியாகவும், புத்தி சாதுரியமுடையவராகவும் இருக்கலாம். உங்கள் புத்திசாலித்தனம், புத்தி சாதுரியம் எல்லாம் உங்கள் சொந்த கர்மத்தை (வினையை) வெற்றி கொள்ள உங்களுக்கு உதவாது. படைப்புக் கடவுளான பிரம்மன் நீங்கள் செய்திருக்கின்ற நன்மை தீமை அனைத்தையும் மாறுதல் எதுவும் செய்யாமல் ஒரு மாலையாக்கி உங்கள் கழுத்தைச் சுற்றிப்போட்டு, நீங்கள் இவ்வுலகில் பிறக்கும்போது உங்களுடன் அதையும் அனுப்பி வைப்பார்.

இந்தக் காரண—காரிய சம்பந்தத்தை நாம் உணர்தல் அவசியமாகிறது. நாம் செய்யும் நன்மைக்கோ தீமைக்கோ நாமே காரணம்; நமக்க வரும் ஆசைகள் இதன் விளைவுகளேயாகும். மகாபாரதம் நமக்கு இந்தப் பாடத்தை கற்பித்து வருகிறது இது எப்படியிருந்தாலும் இருக்கட்டும். தன் கணவன்மார்கள், பெற்றோர்கள், மாமன், மாமி—இவற்களுடைய நற்பெயரைக் காப்பாதற்காகத் தர்ம நடத்தையைப் பற்றிப் பேசினாள் திரௌபதி. அவள் சொன்னாள்: ‘நான் பேரரசன் துருபதனுக்குப் பிறந்தேன். உலகப்புகழ் பெற்ற பாண்டுராஜாவின் மருகளாக ஆனேன். நம்முள் நிறைவு பெற்ற சிறந்த பாண்டவர்களை மணந்துள்ளேன். வீரர்களாக உள்ள பிள்ளைகளைப் பெற்றுள்ளேன். நான் எப்படி வேலைக்காரியாக இருக்க முடியும்?’’ திரௌபதியின் இந்த வார்த்தைகள் ஒருவருடைய இதயத்தை உருக்கும். தன் பெற்றோர்கள் தன்னைப் பற் றிப் பெருமைப்பட வேண்டும், தன் குழந்தைகள் ‘தாம் சிறந்ததொரு தாய்க்குக் குழந்தைகள்’ என உணர வேண்டும், தன் மாமன், மாமியார் தன்னைப்பற்றிப் பெருமைப்பட வேண்டும் எனத் திரௌபதி விரும்பினாள். அவர்களைச் சந்தோஷப்படுத்த அவள் விரும்பினாள். மகாபாரதம் பெரும் நிகழ்ச்சிக்குள்ள ஒரு நூலாகும். தன் சிறந்த குடும்பத்தின், தான் பிறந்த நாட்டின், நற்பெயரைப் பாதுகாக்கும் வழியில் தானாகவே திரௌபதி எப்போதும் நடந்துகொண்டாள். உண்மையில், பாண்டவர்கள், கிருஷ்ணர் இவர்களுடைய நற்குணங்களின் உண்மையான பிரதிபலிப்பாக நாம் பாரதத்தைக் கருதலாம். அமைதி, தெய்வீகம், மனிதகுல பாதுகாப்பு—இவ ற்றை மதிக்காத போர் விரும்பிகள் கூட்டமொன்றின் கதை மகாபாரதம் எனக்கருதுதல் நமக்கு வழக்கம். கிருஷ்ணர் பரமாத்மா; படைப்பிற்கு ஆதாரமான பஞ்சபூதங்களகப் பஞ்ச பாண்டவர்களையும், ஜீவனாகத் திரௌாதியையும் அவர் எடுத்துக் கொண்டு நமக்காக மகாபாரதம் என்னும் நூலைப் படைத்திருக்கிறார். மகாபாரதத்தில் கிருஷ்ணர் மனித வடிவை ஏன் எடுத்து கொண்டார் என்பதை நாம் முயற்சி செய்து உணர வேண்டும்; அவர் மற்ற மனிதர்களுக்குத் தார்மீக வழியைப் பற்றிய போதனைகளை எந்த முறையில் க ற்பித்தார் என்பதை நாம் ஆராய வேண்டும். மகாபாரதத்தின் எந்தப்பகுதியை நாம் படித்தாலும், கிருஷ்ணரைக் கடவுள் எனக் கருதிப் படித்தால், மகாபாரதத்தின் அந்தப் பகுதியின் உட்பொருளை நாம் ஒரு போதும் நன்கு உணரும் நிலையில் இருக்கமாட்டோம். நாம் கிருஷ்ணருடைய மனிதநலன்களைக் கருத்தி ற்கொண்டு கவனம் செலுத்தினால்தான், கிருஷ்ணரை மனித வடிவில் வைத்து செலுத்தினால்தான், கிருஷ்ணரை மனித வடிவில் வைத்து முழுக்கதையைப் பார்ததால்தான், நாம் அவருடைய பெருமையை உணர்வோம். பாரத வரலாறு நடைபெற்ற காலத்துக்கு — கிருஷ்ணர் வாழ்ந்த காலத்துக்கு— உங்கள் கொள்கைகளும் எண்ணங்களும் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அப்போதுதான் நீங்கள் அவைகளினுடைய உண்மை உட்பொருளை உணர்வீர்கள். நீங்கள் இப்போது இருக்கும் நிலையிலேயே

மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தால், ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னால் நடைபெற்ற மகாபாரத வரலாற்றின் உண்மைப் பொருளை உணர்ந்து ரசிக்க உங்களால் முடியாது. நேற்று உங்களுக்குக் கூறியதுபோல், ஒரு படத்தைக் கடவுளாக வழிபடுங்கள். ஆனால் கடவுளை ஒரு பாடமாக வழிபடாதீர்கள். ஒரு டம்ளர் அல்லது மேஜை அல்லது துணியின் நிலைக்கு அவரைத் தாழ்த்தாதீர்கள். நீங்கள் கிருஷ்ணரைப் புரிந்துகொள்ள விரும்பினால் கிருஷ்ணர் வாழ்ந்த பணிபுரிந்த நிலைக்கு உங்களை உயர்த்திக் கொள்ளுங்கள், அவரை உங்கள் நிலைக்குத் தாழ்த்தாதீர்கள். நீங்கள் உயர்ந்து, மேலும் உயர்ந்த இடத்துக்குப் போகவிரும்பினால், நல்ல கதைகளைப் படித்து அவைகளை உணர்ந்தால் தான் சாத்தியமாகும். ஆகவே, மாணவர்களே! சிறுவர்களே! சிறுமியர்களே! உங்கள் புனித இதயங்களின் உதவியால் பாரதத்தில் சித்தரிக்கப்படும் இலட்சிய வாழ்க்கை முறைகளை உணருங்கள்; உங்கள் சொந்த வாழ்வில் அவ ற்றைக் கடைப்பிடியுங்கள்! மகாபாரதத்தில் தெரிவிக்கப்படும் நற்பாதைகளைப் பின்பற்றுங்கள். நீங்கள் இதை ச் செய்ய முடியும் என நான் நம்புகிறேன்; நம்பி என் உரையை முடிக்கின்றேன்.

ஒன்பதாவது கருத்துரை.

நல்லொழுக்கம், நற்செயல், நற்காட்சி.
இவைகளே கடவுணெறியாகும்.

உங்கள் காதுகள் ஏன் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? உங்களருகே சொல்லப்படும் எல்லாச் சத்தங்களையும் கேட்பதற்காகவா? இல்லை. கடவுளின் பெருமையைக் குறித்த பாடல்களை நீங்கள் கேட்பதற்காக உங்களுக்குக் காதுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

திவ்யாத்ம ஸ்வரூபிகளே! நீங்கள் பார்க்கும் படைப்பனைத்தும் கடவுளிடமிருந்து உண்டாகிறது. நாம் பார்க்கும் மிகப் பெரும் விதங்கள் அனைத்தும் நம் சொந்த குணங்களில் உள்ள மாற்றங்களின் விளைவுதான் என்னும் உண்மை புனித நூல்களால் வலியுறுத்திச் சொல்லப்படுகிறது. மனிதன் சில சமயங்களில் மிகவும் சந்தோஷமாக உள்ளான்; மற்ற சில சமயங்களில் பயப்படுகிறான்; மற்ற சில சமயங்களில் துணிவுடையவனாக இருக்கிறான். இந்த மாற்றங்கள் இயற்கையாகவே அடுத்தடுத்து விரைவாக ஏ ற்படுகின்றன. இந்த எல்லா மாற்றங்களுக்கும் முக்கியமான காரணம் என்பதை நாம் ஆராய்வோமாக. இந்த எல்லா மாற்றங்களுக்கும் முக்கிய காரணம் நம் சொந்த மனப்பான்மையில் ஏற்படும் மாற்றமே. இவை ஒருவனுடைய சொந்த குணங்களின் உருவகங்களாகும். மனிதனுக்கு மூன்று வேறான குணங்கள் அல்லது தன்மைகள் உள்ளன. அவைகள் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பவையாகும். இந்த மூன்று குணங்களும் சமமான முறையில் இணைந்திருந்தால் ஒருவனுடைய இயற்கையில் குறிப்பிடத்தக்க பெரும் மாற்றமிருக்காது. சூரிய ஒளி ஏழு வேறு நிறங்களால் ஆக்கப்பட்டது. இந்த நிறங்கள் விவிகதாசாரத்தில் இணைந்திருந்தால் சூரியன் மாற்றமில்லாமல் தன் இயற்கையான நிறத்துடன் பிரகாசிக்கும். மாறாக இந்த நிறங்கள் இணையும் விகிதத்தில் சமமற்ற நிலை ஏற்பட்டால் அப்போது சில தனி நிறங்கள் தம்மைக்காட்டிக் கொள்வதை நீங்கள் காண்பீர்கள். அதுபோலவே, ஸத்வ, ரஜோ, தமோ குணங்கள் சமமான விகிதாசாரத்தில் இணைந்திருந்தால் நம்மைச் சுற்றியிருப்பதில் பெரிய மாற்றமிருக்காது; ஆனால் சமமற்ற நிலை இருந்தால், குணங்களில் ஏதேனும் ஒன்று உயர்நிலையடைந்தால், அப்போது குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுவதை நீங்கள் காண்பீர்கள். இந்தக் குணங்களுக்குச் சில இயற்கையான தன்மைகள் இருக்கின்றன. அமைதியின் அடிப்படை சாரம் போல ஸாத்வீக குணத்தின் இயற்கை தோன்றுகிறது. ஒரு மங்கிய ஜோதி போன்ற ராஜஸ குணம் தோன்றுகிறது. புகையால் மறைக்கப்பட்ட ஜோதி போல தாமஸ குணம் தோன்றுகிறது. இந்தக் குணங்கள் இணைந்துள்ள சந்தர்ப்பத்தையொட்டிச் சில மாற்றங்கள் இருப்பதை நாம் காண்கிறோம்.

உதாரணமாக, தான் துன்பமுற்றபோது ஒரு சிங்கத்தால் காப்பற்றப்பட்ட சுண்டெலியானது பின்னால் சிங்கம் துன்பமுறும்போது உதவித் தன் நன்றியறிதலைக் காட்டுகிறது என்பதை நாம் படித்திருக்கிறோம்.

தன்னுடைய சொந்த சகோதரன் தன்னுடைய அரசாட்சியை எடுத்துக்கொண்டு தன்னைக் காட்டி ற்குத் தூர அனுப்பிவிட்டுத் தன் மனைவியை அபகரித்தான் என்பதைச் சுக்ரீவன் உணர்ந்து, பழிக்குப் பழி வாங்க விரும்ப இராமரிரின உதவியை நாடினான். இது அவனுடைய குணங்களின் வெளிப்படையாகும். இது மட்டுமல்ல, மனத்தின் சலனமின்மை போன்ற பல விதமான மனப்பான்மைகள் இக் குணங்களிலிருந்து உண்டாகின்றன. புளிப்பான மோரை இனிய பாலில் நாம் கலந்தால், நாம் சுவையான வெண்ணையையும் தயிரையும் பாலிலிருந்து பெறமுடியும். அதுபோலவே, சில சமயங்களில் தீய மக்கள் நன்மக்களோடு சேர்ந்து அவர்கள் கூட்டுறவால் நன்மக்களாகிறார்கள். நற்குணங்கள் உள்ள மக்கள் சில சமயங்களில் தங்களுடன் சேரும் தீய மக்களுக்கு நற்குணத்தை உண்டாக்குகிறார்கள். உலகிலுள்ள தீய மக்களுக்குக் கூட நன்மக்கள் நன்மையே செய்கின்றார்கள். சந்தன மரத்தை வெட்டப் பயன்படுத்தும் தீயதான கோடாரி என்பதனோடு தீய மக்களை ஒப்பிடலாம். இந்நிலையில் சந்தன மரத்தின் மணம் கோடரிக்கும் வருகிறது. வெந்நீரோடு குளிர்ந்த நீரை நாம் கலக்கும்போது வெந்நீரும் குளிர்ந்த நீருலம்மமால் வெதவெதப்பான நீரை நாம் பெறுகின்றோம். அதுபோலவே, நாம் இரு குணங்களை இணைக்கும்போது, தீவிரங்கள் குறைந்து மிதமான நடுத்தரக் கலப்பை நாம் பெறுகிறோம். இந்நிலையில் நன்மையோ, தீமையோ, இன்பமோ, துன்பமோ, அமைதியோ, அமைதியின்மையோ தன்னிடமுள்ள குணங்களின் விளைவாக மனிதனுக்கு ஏற்படுகின்றன. குணங்களைக் காப்பது மனிதனுக்கு மிகவும் இன்றியமையாததாகும். கிருஷ்ணருடைய வாழ்வு மனிதனுக்குக் காட்சிப் பொருளல்ல; ஆனால் இலட்சிய எடுத்துக் காட்டாகும். மதிக்கத்தக்க எடுத்துக்காட்டாகக் கொண்டு அவருடைய வாழ்வை மனிதர்கள் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் முன்பு அவருடைய வாழ்வு இலட்சிய எடுத்துக்காட்டாக வைக்கப்பட்டிருக்கிறது. சமாதானப் பேச்சுகள் நடந்தபோது பல சமயங்களில் கிருஷ்ணர் இந்த வார்த்தைகளைத் திருதராஷ்டிரனிடம் கூறியுள்ளார். இது மட்டுமல்ல, உத்தவர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த வந்தபோது, நீதி என்பது மனிதனுக்கு இயற்கையானது என்பது எடுத்துக் காட்டப்பட்டது. ஒவ்வொருவனும் தன் கடமையைச் செய்ய விரும்பும்போது தன் கடமையைச் செய்ய விரும்பும்போது தன் கடமையைச் செய்யத் தான் அனுமதிக்கப்பட வேண்டும் எனக்கோருவதற்கு உரிமையுண்டு என அவர் விவாதித்தார். சரியானதாகவும், நீதியானதாகவும் தன்னுடைய உரிமையை மனிதன் கொண்டாடுவதற்காக, தன் சொந்த பொறுப்புகளைக் காப்பாற்றுவத ற்காக, தன் கடமைகளைச் சரியாகச் செய்வதனை வலியுறுத்த அவனுக்கு அதிகாரம் உண்டு. தாம் பெறத் தகுதியில்லாத எதையும், தாம் கேட்பதற்கு உரிமையில்லாத எதையும் அடையப்போகும் அநீதியைச் சகித்ததில்லை. தங்களது பொறுப்புகள், கடமைகள் இவை இரண்டினையும் உணர்ந்து வாழ்ந்தவர்கள் தங்கள் உரிமையை எப்போதும் வலியுறுத்துகின்றமை சகஜமே எனக் கிருஷ்ணர் கௌரவர்களிடம் மிகத் தெளிவான சொற்களில் கூறினார். சில சமயங்களில் நாம் இதற்குத் தவறான விளக்கம் தந்து, கிருஷ்ணர் செய்தது யுத்தத்தை அதிகரித்ததல்ல. கிருஷ்ணர் ஒரு இலட்சிய உதராணமாக விளங்கியவர். அவர் எப்போதும் ஒருவருடைய உரிமைகளையும் பொறுப்புகளையும் வலியுறுத்தி வந்தார்.

ஒருவருடைய உரிமைகளையும் கடமைகளையும் அவர் தெளிவாக எடுத்துக்காட்டி வரையறை செய்வார் என்பதை விளக்கும் ஒரு சம்பவம் இருக்கிறது. கிருஷ்ணருக்கும் அர்ச்சுனனுக்கும் இடையே எப்போதும் நெருங்கிய, ஆழ்ந்த உறவு இருந்தது. நெருங்கிய நட்பைப் பயன்படுத்தி ஓரிரவு அர்ச்சுனன் கிருஷ்ணரிடம் சென்று தன் சில சந்தேகங்களுக்குப் பதில்களைப் பெற முயற்சி செய்தான். அர்ச்சுனன் கிருஷ்ணரைக் கேட்டான்: "குறிப்பாக நான் அகங்காரத்தால் அவதியுறும்போது, எனக்கு எந்த உயர் ஞானமும் இல்லை என நான் அறியும்போது, உங்கள் மூலம் கீதையைப் போன்ற ஒரு புனிதமான நூலைக் க ற்பதற்கு எனக்கு யோக்யதையிருக்கிறதா? மிகவும் ஞானியான, எல்லாவற்றையுமறிந்த பீஷ்மர் இருக்கிறார்.

அவர் முன்னர், ஒரு பேரொளியின் முன்புள்ள ஒரு சிறு விளக்குப் போன்றவன் நான். இத்தகைய சூழ்நிலைகளிடையே உங்களிடமிருந்து கீதையைக் கற்பதற்கு எனக்கு உரிமையிருக்கிறதா? என்னைத் தேர்ந்தெடுத்து எனக்குக் கீதையைக் கற்பித்ததன் பொருளென்ன? ஒருவேளை கௌரவர்கள் பக்கமுள்ள பீஷ்மர் தகுதியற்றவராயிருக்கலாம். ஆனால் தர்மத்தின் திருவுருவான தர்மராஜர் நம்முடனிருக்கிறார். எல்லா நிலைகளிலும் கீதையைக் கற்க அவர் தகுதி வாய்ந்தவர். எந்தக் காரணத்தால் அவர் ஒதுக்கித் தள்ளப்பட்டார்? பீஷ்மர், தர்மராஜர், பீமன் ஆகிய பெருமக்கள் அங்கிருக்கும்போது ஏன் அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர்? எப்போதும் உலக லாபங்களை நாடுவதில் ஆழ்ந்துள்ள நான் ஏன் இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்? இங்கனம் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எனக்குத் தகுதியிருக்கிறதா?"

அப்போது கிருஷ்ணர் அர்ச்சுனனைத் தன்னருகே அன்புடனழைத்துச் சொன்னார்: "என் தெய்வீகக் கருணையினால் நான் உனக்கு சலுகை காட்டுவதாக நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். இது உண்மையன்று. உன் அரிய மனித குணநலன்களை நீ அறிய இயலாமல் இருக்கிறாய். அதனால் நான் உனக்குச் சலுகை காட்டுதாக நீ நினைக்கிறாய். இது சரியன்று. நீ கூறியது போல் பீஷ்மர் மிகவும் நன்கு க ற்றவர். தமக்கு நல்ல ஞானமிருந்த போதிலும், பாண்டவர்கள் உண்மையின் திருவுருவங்கள், அவர்கள் தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என்பதை உணர்ந்திருந்தும், கௌரவர்கள் அதர்மத்தைக் கடைப்பிடிக்கிறார்கள் எனத் தெரிந்து கொண்டிருந்தும் அவர் கௌரவர்கள் பக்கம் சென்று சேர்ந்துவிட்டார். இதன் பொருளென்ன? ஒரே சமயத்தில் இரு குதிரைகளின்மேல் சவாரி செய்யும் இந்தப் போக்கை நான் விரும்பவில்லை. நான் இதை ஒப்புக்கொள்ளவில்லை. நீங்கள் எல்லோரும் பீஷ்மரை ஒரு மகாத்மாவாகக் கருதியிருக்கிறீர்கள். நான் உங்கள் மனப்பான்மையை ஒப்புக்கொள்ளவில்லை. எண்ணம், சொல், செயல்—இவை யாரிடம் முற்றிலும் இசைந்திருக்கின்றனவோ அவரை மகாத்மா என்று அழைக்க முடியாது. அவர் துராத்மா என அழைக்கப்படுவார். 'பாண்டவர்கள் நல்லவர்கள், உயர்ந்தவர்கள், அவர்கள் பக்கமே வெற்றியுண்டாகப் போகிறது' என ஒரு பக்கம் கூறிக்கொண்டு, ஆனால் அதே சமயத்தில், தீய மக்கள் என் அவரால் கருதப்படும் கௌரவர்களுடைய சேனைக்குத் தலைமை தாங்கும் தஞ்செயலின் பொருளையும் உட்குறிப்பையும் அவர் உணர இயலாதவராக இருக்கிறார். இப்போது தர்மராஜா விஷயத்திற்கு வருவோம். அவர் முன்யோசனையில்லாத செயலைச் செய்து விட்டுப் பின் எப்போதும் தன் செயலுக்காக இரங்குபவர். தம் செயலுக்காகக் கழிவிரக்கங்கொள்ளுதல் அவர்க்குச் சர்வசாதாரணமானதாகும். ஆகவே அவரிடம் பிரத்தியேகமான சிறப்புத் தன்மை என்ன இருக்கிறது? தம் செயலுக்கா இரங்குதல் பல மக்களிடம் காணப்படும் பொதுக் குணமாகும்; அது அவரிடமும் காணப்படுகிறது. அவர் எப்போதும் நீதியையும் தர்மத்தையும் பற்றிப்பேசுகிறார். இவை எப்போதும் அவர் கவனத்தை ஈடுபடச் செய்கின்றன. சரியான காலத்தில் அவர் கடமையை உணர்வதில்லை. தான் உடனடியான கடமையைச் செய்வதை உணராத ஒருவனுக்குக் கீதையைப் போன்ற ஒரு புனித நூலைக் கேட்பதற்கு உரிமையில்லை. உன் சகோதரன் பீமனைப் பொறுத்தவரை, பீமனுக்கு மிருக பலம் அல்லது உடல் பலமிருக்கிறது. ஆனால் அவனுக்கு அறிவு பலமும், மன பலமும் இல்லை. செய்த செயலுக்கு இரங்குவதை விட முன் யோசனையோடு கூடிய செயல்களை உடையவன் நீ. எப்படி உற்றாரையும் உறவினரையும் கொல்ல முடியும் என்றும், இவ்வளவு இரத்தப் பெருக்கிற்குப் பின் அரசாட்சி கிடைத்தாலும் அதை எப்படி அனுபவிக்க முடியும் என்றும் முன் யோசனையோடு ஏற்கனவே நீ என்னைக் கேட்டிருக்கிறாய். உறவினரைக் கொன்று அரசாட்சியை அடைவதை விட இரந்துண்டு வாழ்வது மேல் என்று நீ சொன்னாய். இங்கனம், உனக்கு முன் யோசனையிருக்கிறது. நீ அரசாட்சியைத் தேடி ஓடும் மனிதனல்ல. நாட்டை ஆளும் விருப்பம் உனக்கில்லை. நீ உனது கடமையை உணர்ந்திருக்கிறாய். இதுவரையும் உன்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது உன் தகுதியைப் பெற்ற அம்சமே. ஓரளவிற்கு எது நீதி, எது அநீதி என்பதை நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய், நீதியைக் கடைப்பிடித்து நீதியான வழியில் நடப்பதற்கு அனைத்தையும் தியாகம் செய்வதற்கு

வல்லமையுடையவனாயிருப்பது மனிதனுடைய கடமை. தன்னுடைய புனிதமான கடமையை உணரும் மனிதனுக்கு இந்தப் புனிதமான நூலான கீதையைக் கேட்பதற்குத் தகுதியிருக்கிறது."

இன்று மனிதர்களிடமுள்ள மிகப்பெரிய குறை என்னவெனில் நீதி எது என்பதை அவர்கள் உணருவதில்லை. தங்கள் உரிமையையும், தாங்கள் செய்யவேண்டிய கடமையையும் மனிதர்கள் உணருவதில்லை தனக்குச் சொந்தமில்லாத, உரிமையில்லாத ஏதேனுமொன்றை மனிதன் எப்போதும் நாடுகிறான். அநீதியான முறையில் பல பொருட்களையும் அடைவதற்கு மனிதன் முயன்று தத்தளிக்கிறான். தன் உண்மைக் கடமையை மனிதன் ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தன்னுடைய அப்போதைய சௌகரியத்தை மட்டும் நினைக்கிறான். கிருஷ்ணருடைய நடைமுறையும் இலட்சியமும் உங்கள் கடமையை நீங்கள் உணரச் செய்வதாகும். நீதிக்காக மக்கள் அனைத்தையும், ஏன், உயிரையும்கூட, தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்பதை அவர்களுக்குக் காட்டுவதே அவரது இரண்டாவது இலட்சியம். இந்நிலையில், அர்ச்சுனனுக்கும் கிருஷ்ணருக்குமிடையில் நடந்த சம்பாஷணையின் உட்பொருளை நாம் புரிந்துகொள்ளுதல் அவசியம். கிருஷ்ணர் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகச் செல்லும்போது அர்ச்சுனன் மிகவும் பயந்து "கௌரவர்கள் எந்த வழியிலும் அமைதியை ஒத்துக்கொள்ளப் போவதில்லை. நீங்கள் ஏன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்தி, எந்த வழியிலும் ஏற்படுத்த முடியாத சமாதானத்திற்காக அதிக காலத்தைச் செலவிடுகிறீர்கள்?" என்று கிருஷ்ணரைக் கேட்டான். "தர்மம் அதர்மத்தால் வெல்லப்படுவதை, உண்மை பொய்மையால் அழிக்கப்படுவதை ஓர் ஓரமாக நின்று பார்த்துக்கொண்டிருப்பவன் செத்தவனேயன்றி உயிரோடிருப்பவன் அல்ல. அநீதியை ஒரு புறம் தள்ளும்போது ஒருவன் அமைதியாக இருக்கக்கூடாது" எனக் கிருஷ்ணா கூறினார். அதற்கு அர்ச்சுனன், "அழிவற்ற தன்மையளிக்கும் அமிர்தத்தை விஷத்திலிருந்து பெறுவது இயலுமா? கொழுத்து விட்டெரிகின்ற நெருப்பில் மலர்களையிடுவது சாத்தியமா? இத்தகைய முடியாத நிலைகளில் அமைதியைப்பற்றி பேசுவதில் என்ன பயன்? கௌரவர்களுக்கு இத்தகைய குறுகிய மனப்பான்மை இருக்கிறது. அவர்கள் வந்து நமது அமைதிப்பேச்சுகளை ஏற்பாரா? நீங்கள் இங்கேயே நிற்பது நல்லது. வடதுருவத்தையும் தென்துருவத்தையும் ஒரு சேர இணைப்பது சாத்தியமா? இது முடியாத ஒரு காரியம். எல்லாம் யுத்தத்திற்குத் தயாராயிருப்பதால் நாம் யுத்தத்தை மேற்கொள்ள வேண்டும்" என்று சொன்னான். அர்ச்சுனனுடைய இந்த வார்த்தைகளை நாம் கேட்கும்போது, எப்படி அமைதி உண்டாக்குவதை ஒரு முடியாத சாதனையாக அர்ச்சுனன் கருதினான். என்பதை நினைத்துப்பார்க்கும்போது அமைதியை உண்டாக்குவதற்குக் கிருஷ்ணர் எவ்வளவு தூரம் பாடுபட்டுச் சென்றார் என்பதை நாம் உணரமுடியும் அமைதிக்காக அவர் செய்த முயற்சிகளை உணராமல் இந்தியாவில் பல எழுத்தாளர்களும் குடிமக்களும் கிருஷ்ணரை எப்போதும் அமைதியைப் பொருட்படுத்தாத ஒருவராகச் சித்தரிக்கிருக்கின்றனர். அவர் யுத்தத்தை அதிகரிக்க விரும்பினார் என அவர்கள் நினைத்தனர். இது சரியன்று. அமைதியை முடியாது என்று கருதிய அர்ச்சுனன் யுத்தம் ஆரம்பிப்பதற்குச் சற்று முன்னால், "என்னுடைய உறவினராயிருக்கும் பல்லோரை நான் எப்படி கொல்லப்போகிறேன்? இது முடியாது. என் தலை சுற்றுகிறது. நாம் யுத்தகளத்தைத் துறந்து வீட்டிற்குப் போவோம்" எனக் கூறினான். இங்கு கிருஷ்ணர் மாறுதலான கொள்கையைக் கொண்டிருந்தார். அவர், "ஒரு வீரனைப் போன்று நீ யுத்தகளத்திற்கு வந்தாய். இப்போது ஒரு கோழையைப் போன்று பேசுகிறாய். இந்தக் கணத்தில் திடீரென்று வந்ததல்ல யுத்தம். இதற்கு ஒரு நீண்ட பின்னணி இருக்கிறது. ஒரு வாரம் முழுவதும் யுத்த ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. உங்கள் துருப்பிடித்த ஆயுதங்களனைத்தையும் எடுத்துச் சுத்தம் செய்துவிட்டு அவைகளைத் தயாராக வைத்தீர்கள். ஒட்டடை சேர்ந்திருந்த எல்லா அம்புகளும் சுத்தம் செய்யப்பட்டன. யுத்தத்திற்காக உங்கள் உறவினர்களின் உதவிகளை நாடினீர்கள். இன்று எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு யுத்தம் செய்யாமல் வீட்டிற்குத் திரும்பும் இந்தப் பேச்சின் பொருளென்ன? நீ இதை எனக்கு முன்பே சொல்லியிருந்தால் நான் இவ்வளவு

துன்பங்களை ஏற்றுக் கொண்டிருக்கமாட்டேன். இது நிந்திக்கத் தக்கது. நீ கோழையாக மாறுகிறாய். உன் கடமையை நீ நிறைவேற்ற வேண்டும். கோழையாகக் கூடாது" என்று அர்ச்சுனனைக் கண்டித்தார். இங்குத் தன் கடமையை நிறைவேற்றுவதற்கு எப்படித் தயாராக இருக்கவேண்டும் என அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணர் உபதேசித்தார். இங்கு முரண்பாடொன்றை நாம் பார்க்கிறோம். இதுவரையில் யுத்தத்தைத் தவிர்த்துச் சமாதானத்தை உண்டாக்கக் கிருஷ்ணர் முயற்சி செய்துகொண்டிருந்தார். ஆனால் யுத்தத்தைத் தவிர்க்க விரும்பிய அதே கிருஷ்ணர் இக்கட்டானதொரு சூழ்நிலையில் அர்ச்சுனன் யுத்தத்தில் பங்கு பெற வேண்டும் என அவனிடம் சொன்னார். நாம் இதன் உட்பொருளைப் புரிந்து கொள்ளவேண்டும். முதலில் அமைதியை உண்டாக்கி அதன் விளைவாக உலகத்தில் உயிரிழப்பைத் தவிர்க்கக் கிருஷ்ணர் விரும்பினார். இங்கனம் உலகத்திற்கு வளமையை அளிக்க அவர் விரும்பினார். இது கிருஷ்ணருடைய முதல் முயற்சியாக இருந்தது. காலம் செல்லச் செல்ல நீதியையும் உரிமையையும் வலியுறுத்தினார். நீதியையும் உரிமையையும் பொறுத்தவரையில் ஒருவன் தன் கடமையை நிறைவேற்ற வேண்டுமெனப் பாண்டவர்களிடம் கூறினார். இங்கனம் ஒருவனுடைய கடமையைச் செய்வதிலும், ஒருவனுடைய உரிமையை ஒப்புக்கொள்வதிலும் கிருஷ்ணருடைய வாழ்வு இலட்சிய எடுத்துக்காட்டாக இருப்பதை நாம் பார்க்கிறோம். 'கடமை', 'நீதி', 'உரிமை' என்னும் சொற்களைப் பயன்படுத்துவதன் உட்குறிப்பை உங்களைப் போன்ற இளைஞர்கள் உணர்வது மிகவும் அவசியமாகிறது.

இன்று மாணவர்கள் முற்றிலும் தேவையில்லாத ஏராளமான புத்தகங்களைப் படிக்கிறார்கள். இலட்சியங்களைத் தராத பயனற்ற ஏராளமான புத்தகங்களை அவர்கள் படிக்கிறார்கள். உங்களுக்கு அறிவையும் வித்யையும் கொடுக்கும் உண்மையான கல்வியைப் பெற முயற்சி செய்யாமல் பொருட்களைப் பற்றிய விவரங்களை மட்டும் பெற்று வித்யார்த்தி ஆகிறீர்கள். சில நிமிடங்களுக்கு முன்னால், கல்வியைப் பற்றிப் பேசும்போது பேச்சாளர்களில் ஒருவர் உண்மைக் கல்வியின் சாரம் எப்படியிருக்க வேண்டும் எனக் கூறி அதற்குச் சில நல்ல உதாரணங்களையும் கொடுத்தார். உண்மையாக, நாம் நாட்டைச் சுற்றி பார்க்கும்போது உண்மையான கல்வி என்று அழைக்கப்படத்தக்க கல்வி ஏதேனுமிருக்கிறதா என்னும் சந்தேகத்தையும், யாரையேனும் ஆசிரியர் என்னும் சொல் உணர்த்தும் உண்மையான பொருளில் அழைக்க முடியுமா என்னும் சந்தேகத்தையும் நாம் பெறுவோம். நமது பல்கலைக்கழகமொன்றில் உண்மையாக நடைபெற்ற உதாரணமொன்றை நான் தருகிறேன். தாம் கற்பிக்க வேண்டிய வகுப்புகளுக்குச் செல்வதற்கு விரும்பாத அளவுக்கு இன்றைய ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் டேப் ரிகார்டரை இயக்கிவிட்டு ஆசிரியர் அறைக்குச் சென்று தூங்கிக் கொண்டிருந்தார். அன்று பாடங்கள் டேப் ரிக்கார்டரால் தரப்பட்டதால் மாணவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றனர். இரண்டாம் நாள் மீண்டும் அதே ஆசிரியர் டேப் ரிக்கர்டரைக் கொண்டு வந்தார்; டேப் ரிக்கார்டர் மூலம் ஆசிரியர் சொல்வதைப் பதிவு செய்யத் தங்கள் டேப் ரிக்கார்டர்களை இயக்கி விட்டு வகுப்பறையை விட்டகன்றனர். நல்ல அதிருஷ்ட வசத்தால் அன்று முதல்வர் வகுப்பறைக்குள் வரநேர்ந்தது. எல்லா மேஜைகள் மீதும் டேப் ரிக்கார்டர்கள் மட்டும் இருப்பதையும் மாணவர்கள் யாரும் இல்லாததையும் கண்டு ஆச்சரியப்பட்டார். கல்வி இப்படி இருந்தால் அதைக் கல்வி என்றே நாம் அழைக்க முடியுமா? ஆகையால் நீங்கள் இலட்சியக் குடிமக்களாக வளரும் வண்ணம் நமது நாகரிகத்தின் அடிப்படை அம்சங்களைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. உங்களை மனிதன் என்றழைப்பதற்கு உதவும் குணங்களை நீங்கள் தெரிந்து கொள்ளுதல் மிகவும் அவசியம். நீதி, உண்மை, இதயத்தின் புனிதத்தன்மை, ஆத்ம விசாரம் –இவைகளே நீங்கள் பெற வேண்டிய குணங்களாகும். இந்தக் குணங்கள் உங்களை மனிதன் என்றழைக்கத்தக்க தகுதியை நல்கும். பாவ பயமும் கடவுள் மேல் அன்பும் இழந்த மனிதன் வடிவத்தில்தான் மனிதன், அடிப்படையில் மனிதனல்லன் என்று யாதொரு மறுப்புமின்றி நாம் வலியுறுத்திக் கூறமுடியும்.

கடவுளுடைய லீலைகளும் செயல்களும் மிகவும் ஆச்சரிய மூட்டுபவை. ஒரு சாதாரண மனிதன் எளிதாக அவைகளைப் புரிந்து கொள்ள முடியாது. இந்நிலையில், கடவுளே அவதார வடிவில் கீழிறிங்கி அடிப்படைகளைப் போதிக்கிறார். உணராத பல மக்கள் அவரது சொற்களையும் செயல்களையும் தவறாக விளக்க ஆரம்பிக்கின்றனர்; உண்மையான பொருள் ஒவ்வொருவருடைய மனதிலிருந்தும் முற்றிலும் மறைந்து விடுகிறது. உண்மையைப் பரப்புவதற்காக, உண்மையைப் பிரகடனம் செய்வதற்காக, உண்மையை நீங்கள் கடைப்பிடிக்கச் செய்வதற்காக அவதாரங்கள் வருகின்றன. இதனை எடுத்துக் காட்டும் மகாபாரத நிகழ்ச்சி ஒன்றுள்ளது. அரசவையின் சக்தி வாய்ந்த, வீரமுள்ள கணவர்கள் ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டிருந்தனர். திரௌபதியை அவமாப்படுத்த முயலும்போது அவள் தம் கணவர்கள் தம்மைக் காப்பாற்ற முடியாது என்பதை உணர்ந்து கிருஷ்ணரிடமிருந்து உதவி கேட்டுப் பிரார்த்தித்தாள். எவ்வளவு தூரம் ஆழ்ந்து அவள் பிரார்த்தித்த போதும் கிருஷ்ணர் காணப்படவேயில்லை. பல வழிகளில் கிருஷ்ணரையும் அவரது பெருமையையும் விவரித்தாள். “துவாரகையில் வசிப்பவனே!” என்றும், “மதுராபுரியில் வாழ்பவனே!” என்றும் பலவாறு அவரை விளித்தாள். ஆனால் எந்த நல்விளையும் ஏற்படவில்லை. மிகுந்த வெறுப்புடன் கடைசி புகலிடமாகக் கிருஷ்ணரை “ஹ்ருதயவாசி!” (என்னுடைய இதயத்தில் வாழ்பவரே) என்று விளித்தாள். அடுத்த கணமே கிருஷ்ணர் காட்சியளித்து, வேண்டிய விதத்தில் அவளைக் காப்பாற்றி அவள் மானத்தைக் காத்தார். எல்லாத் துன்பமும் முடிந்த பின்பு, சகோதரனும் சகோதரியும் போல் அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது, கௌரவர்கள் சபையில் தான் அவமானப்படுத்தப்பட்ட போது, கௌரவர்கள் சபையில் தான் அவமானப்படுத்தப்பட்ட போது கிருஷ்ணர் ஏன் தன்னுடைய பல பிரார்த்தனைகளுக்குச் செவி சாய்க்கவில்லை எனத் திரௌபதி கேட்டாள். எந்த விதத்தில் தன்னை அவள் கூப்பிட்டாள் எனக் கிருஷ்ணர் அவளைக் கேட்டார். அவரை, “துவாரகவாசி!” என விளித்ததாக அவள் பதிலளித்தாள். அப்போது கிருஷ்ணர், “ஓ சகோதரியே! அது என்ன தவறு தெரியுமா? துவாரகை எவ்வளவு தூரம்? குறிப்பாக உன்னுடைய அழைப்பு அவ்வளவு தூரம் போகவேண்டியிருந்தது. நான் அவ்வளவு தூரம் வரவேண்டியிருந்தது. நான் எப்படி உடனடியாக உன் அழைப்புக்கு இணங்க முடியும்? நீ என்னை ‘மதுராபுரி வாசி!’ என விளித்ததாகவும் கூறுகிறாய். மதுராபுரி கூட மிகத்தூரத்திலிருந்தது. உன் அழைப்புக்கு இணங்கி நான் வருவதற்கு அதிக நேரம் தேவைப்பட்டது. நீ அஸ்தினாபுரத்தில் இருந்தாய்; மதுராபுரியிலிருந்து என்னை அழைக்க விரும்பினாய். நான் சீக்கிரம் வர எப்படிச் சாத்தியமாகும்? நீ என்னைக் ‘கோகுலவாசி!’ என விளித்ததாகவும் கூறுகிறாய். கோகுலம் கூட வெகுதூரம் தள்ளியிருக்கிறது. நான் வருவதற்கு அதிகநேரம் ஆகியிருக்கும். ஆனால் என்னை நீ ‘ஹ்ருதய வாசி!’. இதயத்தில் வாழ்பவனே!– என விளித்த போது நான் உடனடியாகச் செயல் புரிந்து உன்னைக் காப்பாற்றுவதற்கு வந்தேன்” என்று சொன்னார். நீங்கள் புட்டபத்திக்கு ஒரு கடிதம் எழுதினால் அது புட்டபர்த்திக்குப் போகும்; ஆனால் சில சமயங்களில் நான் தங்கியிருந்த பெங்களூருக்கு வராது. அதுபோலவே கிருஷ்ணர் உண்மையில் ஹ்ருதயவாசியாக இருக்கும்போது அவரைத் துவாரகவாசி என விளித்தால் அவர் பிரார்த்தனையை ஏற்கமாட்டார். பக்தர்களுக்கு உண்மையான நம்பிக்கையையும் உறுதியையும் காட்டும் வண்ணம் கடவுள் சில சமயங்களில் அத்தகைய செயல்களைச் செய்கிறார். ஆகவே எந்தச் சமயத்திலும் சாசுவதமான விலாசத்தைக் காட்டிலும் முகாம் விலாசம் அவ்வளவு முக்கியமானதன்று. அப்போது கிருஷ்ணர், “இப்போது நான் உனக்கு என்னுடைய விலாசத்தைத் தருகிறேன்; அதைக் கவனித்துக் கேட்பாயாக. எங்கெல்லாம் என் பக்தர்கள் என் புகழ் பாடுகிறார்களோ அங்கெல்லாம் நான் சாசுவதமாக நிலைபெற்றுள்ளேன். இதுதான் என்னுடைய சரியான விலாசமாகும்” என்று கூறினார். மல்லிகை மலர்களால் எழுதப்பட்டது போல் மகாபாரதம் அத்தகைய அழகான கதைகளைக் கொண்டுள்ளது.

அத்தகைய புனிதமான பொருள்களை ஒரு புறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அறியாத மக்கள் தரும் தவறான விளக்கங்களைக் கொள்ளுதல் சரியன்று. நாம் கடைப்பிடிக்க வேண்டிய இலட்சியம்களாகட்டும்,

நாம் பெறவேண்டிய உரிமைகளாகட்டும், எல்லாம் மகாபாரதத்தில் உள்ளடங்கியுள்ளன. அவையெல்லாம் நல்ல உதாரணங்கள். சில சமயங்களில் கடவுளுடைய லீலைகள் மிகவும் ஆச்சரியம் தருபவையாயிருக்கின்றன. அத்தகைய ஆச்சரியமூட்டும் செயல்களின் விளைவாகப் பல சந்தேகங்கள் மக்கள் மனங்களில் எழுகின்றன. இதற்கு ஒரு சிறிய உதாரணம் உள்ளது. ஒரு சமயம் மகாபாரத யுத்தம் மிகவும் பயங்கரமாக யுத்த களத்தில் எல்லா மூலைகளிலும் நடந்து கொண்டிருந்தது. ஒரு திசையில் அசுவத்தாமன் பத்மவியூகம் அமைத்திருந்தான். இன்னொரு பக்கம் பீஷ்மர் பயங்கரமான சண்டைக்குத் தயாராகிக் கொண்டிருந்தார். மற்றொரு பக்கம் யுத்தத்திற்குத் தயாராக யுத்தவீரர்கள் இருந்தனர். கர்ணன் யுத்தம் செய்வதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தான். பாண்டவர்கள் பக்கம் சில வீரர்கள் கர்ணனுடன் யுத்தம் செய்வதை மேற்கொண்டனர். தர்மராஜரும் சகாதேவனும் இன்னொரு திசையை அடைந்து யுத்தம் செய்ய ஆரம்பித்தனர். அர்ச்சுனன் மற்ற வீரர்களுடன் போர் புரியத் தயாரானான். இவ்விதமாக யுத்தம் எல்லாத் திசைகளிலும் பயங்கரமாயிற்று. பாசறை வீட்டில் இளம் அபிமன்யு இருந்தான். பத்மவியூகம் தாயாராக இருக்கிறது எனவும், அதை எதிர்த்துப் போரிடவேண்டும் எனவும் துரோணாசாரியர் செய்தி அனுப்பினார். யுத்தமொன்றில் வந்து பங்கு பெறும்படி ஒருவனுக்கு அழைப்பு அனுப்பப்பட்டால் சவாலை மறுப்பது சரியன்று. சவாலை அவன் ஏற்றுக் கொண்டிராவிடில் அவன் தன் தந்தைக்கு அபகீர்த்தியை உண்டாக்கியவனாவான்; எனவே தன் தந்தைக்கு அபகீர்த்தியை வராவண்ணம் உடனடியாக அவன் சவாலை ஏற்றுக்கொண்டான். தான் இளைஞனாக இருப்பதாலும் தன் தந்தையினுடைய அனுமதியைப் பெறாததாலும் தான் யுத்தத்திற்குப் போகாமல் இருந்தால் தன்னுடைய தகப்பனார் தன்னைப்பற்றிக் கவலையுறுவார், சவாலை கொண்டு வந்துவிட்டான் என்று சொல்லுவார் என்று அபிமன்யு நினைத்தான். தன் மனதில் ஏற்படும் எண்ணங்களின் முரண்பாட்டால், தன் மனதில் ஏற்படும் எண்ணங்களின் முரண்பாட்டால், எது நிகழ்ந்தாலும் தான் தந்தையினுடைய நற்பெயரைக் காப்பாற்றுவது என்ற முடிவுக்கு அவன் வந்தான். அவன் பத்மவியூகத்திற்குச் சென்று தன் உயிரையிழந்தான்.

உண்மையில் அபிமன்யு பத்ம வியூகத்தில் சென்று உயிரை இழந்ததைக் கிருஷ்ணர் அறிவார். அர்ச்சுனனும் கிருஷ்ணரும் சேர்ந்து திரும்பி வந்தனர். அவர்கள் பாசறையை அடைந்த போது அர்ச்சுனன் தன்னை ஏதோ தடுமாற்றமுள்ளவனாக உணர்ந்தான்; தீய சகுனங்களைக் கண்டான். தன்னை வழக்கமாக வரவேற்க வரும் அபிமன்யு அன்று வராமல் இருப்பதை அர்ச்சுனன் உணர்ந்தான். தீய சகுனங்கள் காணப்பட்டதால் ஏதேனும் தீமை இருக்கக்கூடும் என அர்ச்சுனன் உணர்ந்தான். அப்போதே, அங்கிருந்த கிருஷ்ணர் வேதாந்தத்தைத் போதிக்க ஆரம்பித்தார். அவர் சொன்னார்: "உடல் அநித்தியமானது. அது பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது. என்றேனும் ஒருநாள் அது விழுவது உறுதி. சாசுவதமான அம்சம் ஆத்மாவே" அவர் எல்லா உறவுகளைப் பற்றியும் கூடப் போதித்தார். திருமணத்திற்கு முன்னால் ஒரு மனைவி கணவனால் அறியப்படுவதில்லை; திருமணத்தாலன்றி ஒரு மகன் சம்பந்தப்படுவதில்லை. அத்தகைய உடல் சம்பந்தமான உறவுகளுக்கு நாம் ஒருபோதும் எந்த மதிப்பும் தரக்கூடாது. எந்தக் கணத்திலும் இறப்பு நிகழலாம். ஒருவன் எந்தச் சமயத்திலும் தன் உடலைத் துறப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். அத்தகைய வேதாந்த உண்மைகளை அர்ச்சுனனுக்குப் போதித்த போது அவை உண்மையா இல்லையா என்பதைக் கிருஷ்ணர் அர்ச்சுனனிடம் கேட்டார். அதற்கு அர்ச்சுனன் அவை உண்மைதான், உண்மையில் ஒருவன் தான் எப்போது இறப்போம் என்பதை அறிவதில்லை எனப் பதிலளித்தான். இதை அவன் உண்மையென்று ஒப்புக்கொண்டான். இவைகளை மனப்பூர்வமாக நம்பித்தன் உள்ளத்தின் அடிப்படையிலிருந்து உண்மை என்று சொல்கிறானா, இல்லையென்றால், தான் அவைகளைச் சொல்வதால் தான் அவைகளை உண்மையென்று சொல்கிறானா என்பதையும் கிருஷ்ணர் அர்ச்சுனனிடம் கேட்டார். திட நம்பிக்கையில்லாமல் வெறுமனே பேசுபவர்களல்லர் கிருஷ்ணரும் அர்ச்சுனனும். தன்னுடைய உள்ளத்தில் அடிப்படையில் உண்மை என்று உணந்தாலொழியக் கிருஷ்ணர் சொல்லுவதை ஒத்துக்கொள்ளும் மனிதனல்லன் அர்ச்சுனன். கிருஷ்ணர் அப்போது, 'நீ இதையெல்லாம் உன் உள்ளத்தின் அடிப்படையில் திட

நம்பிக்கையோடு ஒப்புக்கொள்வதானால், ஒருவேளை உன் மகன் அபிமன்யு இறந்து விட்டான் என்று செய்தி உனக்குக் கிடைத்தால் நீ அழப்போகிறாயா? என்று கேட்டார். அர்ச்சுனன் குழப்பத்தில் ஆழ்ந்தான்; அபிமன்யு பத்திரமாக இருக்கிறானா இல்லையா எனக் கிருஷ்ணரைக் கேட்டான். அப்போது கிருஷ்ணர், "அர்ச்சுனா! உன் மகன் அபிமன்யு யுத்த வீரர்கள் அடையும் வீர சுவர்க்கத்தை அடைந்து விட்டான்" என்று கூறினார். இதைக் கேட்டவுடன் அர்ச்சுனன் ஒரு கணமும் காந்திராமல் ஒரு முழுக் குடும்பத்தையும் அழிந்து விட்டதாகக் கிருஷ்ணரைக் குற்றம் சாட்டினான். அவன், "ஓ கிருஷ்ணா! உன் மேல் பெரும் நம்பிக்கை வைத்து உன்னைச் சரணடைந்த பாண்டவர்களுக்கு நீ என்ன செய்திருக்கிறாய்? பாண்டவர்கள் வம்சம் தொடர்வதிற்கில்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது" என்று சொன்னான். அவர்கள் அஸ்தினாபுரம் அடையும் வரை வழி முழுவதும் அவன் கிருஷ்ணரைக் குற்றம் சாட்டினான். கிருஷ்ணர் எந்தப் பதில் சொன்னாலும், எந்தத் தத்துவ உண்மையைத் தெரிவித்த போதிலும், அர்ச்சுனனுக்கு எந்த நல்விளையும் ஏற்படாத அளவுக்கு அந்தச் சமயத்திலிருந்த துக்க சூழ்நிலை இருந்தது. ஆகவே, தன்மேல் பொழியப்பட்ட எல்லா நிந்தனைகளையுங்ம கிருஷ்ணர் வெறுமனே கேட்டுக் கொண்டார்; அர்ச்சுனன் அவரைப் பல வழிகளில் கு ற்றம் சாட்டிய போதிலும், திருப்பிப் பதிலளிக்க அது சரியான தருணமன்று என்பதை உணர்ந்து வழி முழுவதும் அமைதியாக இருந்தார். ஒருவன் எந்த வினாவைக் கேட்டாலும், சந்தேகங்களை எடுத்துரைத்தாலும் தகுந்த பதில் தருவதற்குத் தகுதியான காலம் வர வேண்டும். அந்தத் தகுதியான காலம் வரும்வரை அவதாரங்கள் ஒரு போதும் பதிலளிக்கமாட்டா.

நீங்கள் அவதாரங்களிடம் குற்றம் காணும்படியான சூழ்நிலை ஒருபோதும் இருக்காது. அவதாரத்தைக் குறை கூறுமொருவன் தன் விரலால் தன் கண்ணைக் குத்தித் தீங்கு செய்து கொள்பவனான். கடவுள் எப்போதும் உலக விஷயங்களில் தலையிடாத சாட்சியாக இருக்கிறார். தன்னிய ற்கையின் படி நடக்கும் செயல்களை அவர் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கிறார். இதனால்தான் சாதாரணமாகக் கடவுள், தன்மைகளும் குணங்களுமில்லாதவர் என்று எப்போதும் விவரிக்கப்படுகிறார். வீட்டை அடைந்த பின்பு, அபிமன்யு இறந்து விட்டதால் எல்லா உறவினர்களும் மிகவும் துக்கத்துடனிருப்பதையும் அழுது கொண்டிருப்பதையும் அவர்கள் பார்த்தனர். ஆனால் துன்பமோ இன்பமோ எப்போதும் சாசுவதமாக இருக்கமுடியாது. துக்கம் எல்லாச் சமயங்களிலும் நீடித்திருக்க முடியாது; துன்பத்தி ற்குப் பிறகு இன்பம் வந்தாக வேண்டும். துன்பமும் இன்பமும் எப்போதும் சேர்ந்தே வருகின்றன. அவற்றில் ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரிப்பது யாருக்கும் சாத்தியமன்று. துன்பம் கலவாத இன்பத்தை மட்டும் ஒருபோதும் பார்க்க முடியாது. துன்பம் முதிரும்போது, அத்துன்பம் இன்பம் என்றழைக்கப்படுகிறது. ஆகவே துன்பத்துக்கும் இன்பத்துக்கும் இடையே நாம் சில இன்பங்களையும் சில துன்பங்களையும் பற்றிப் பேசுகிறோம். காலம் செல்லச் செல்ல சுபத்திரை மிகவும் துக்கத்தை அனுபவித்தாள். அந்தச் சமயம் உத்தரை கர்ப்பமாக இருந்தாள். அவள் பிரசவ காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனால் உத்தரைக்குப் பிறந்த மகன் ஏறக்குறைய செத்தே இருந்தான். அந்தச் சமயத்தில் இருந்த சூழ்நிலை எப்படியென்றால், திரௌபதி முதியவளாகி விட்டாள்; சுபத்திரை முதிய வயதை நெருங்கிக் கொண்டிருந்தாள்; பாண்டவர்களுடைய வம்சம் தழைப்பதற்கு ஒரே வழி உத்தரைக்குப் பிறக்கப்போகும் மகனால்தான். உத்தரையின் குழந்தை பிரசவமாவதைப் பற்றிய செய்திக்காகப் பாண்டவர்கள் ஆவலோடு காத்திருந்தனர். ஒரு மகன் மட்டும் பிறந்து விட்டால் அது பாண்டவர்களுக்கு நல்ல செய்திக்காகப் பாண்டவர்கள் ஆவலோடு உட்கார்ந்திருந்தனர். திரௌபதி, நடைமுறைப்படி நோக்கின் உயிரற்ற பையனைப் பாண்டவர்களிடம் கொண்டு வந்தாள்; அவளும் கண்ணீர் சிந்திக் கலங்கினாள். அசுவத்தாமனும் அர்ச்சுனனும் ஒருவரோடொருவர் போரிட்ட நாள், அசுவத்தாமன் கையாண்ட பெருஞ்சக்தியும் தீவிரமுமுடைய ஆயுதங்கள் உத்தரையின் கருவின் தேசத்திற்குக் காரணமாயிருந்திருக்கின்றன. நாம் ஒரு அணுகுண்டைப் பயன்படுத்தும்போது தாய்மார்கள் கர்ப்பத்திலுள்ள கருக்கள் அழிக்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது.

இது இப்போது கண்டுபிடிக்கப்பட்ட எல்லாச் சக்தியும் இயந்திரத்தினுடையது மட்டுமே. நாம் ஒரு அணுகுண்டைச் செலுத்தும்போது அதைத் திரும்பப் பெறுவதற்கு வழியில்லை; சேதம் சாசுவதமாக உண்டாக்கப்படுகிறது. ஆனால், அந்நாட்களில் அது பெரும்பாலும் மந்திர சக்தியாக இருந்தது. ஒரு முறை மந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கும்போது, விரும்பினால், அதைத் திரும்பப் பெற முடியும். ஆனால் இன்று, ஒரு குண்டைப் பயன்படுத்திவிட்டால் அதைத் திரும்பப் பெறும் வழியில்லை. பாண்டவர்கள் உயிரற்ற மகனின் காட்சியைக் கண்ணுற்றபோது துக்கத்தால் மிகவும் பீடிக்கப்பட்டனர். அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கிருஷ்ணரை அவ்விடத்திற்கு கூட்டி வரும்படி தர்மராஜர் உடனடியாக அர்ச்சுனனை அனுப்பினார். கிருஷ்ணர் அங்கு வந்தார்; பாண்டவர்கள் பெருந்துன்பத்திலிருப்பதைப் பார்த்தார். சுண்டெலி வாழ்வுக்கும் மரணத்துக்குமிடையே போராடும்போது ஒரு பூனை அச்சூழ்நிலையை ரசிப்பதுபோல், பாண்டவர்கள் உண்மையாகத் துயரத்தில் தோய்ந்திருந்தபோது, கிருஷ்ணர் புன்முறுவல் பூத்துக்கொண்டிருந்தார். அவர் மிகவும் எளிதான முறையில் பேசிக்கொண்டு தர்மராஜாவையும் அர்ச்சுனனையும் அவர்கள் ஏன் துக்கமாகவும் வருந்தமிகுந்தும் இருக்கின்றனர் எனக் கேட்டார். இதைக் கேட்டவுடனே, உயிரற்ற குழந்தை வைக்கப்பட்டிருந்த தொட்டிலைத் திரௌபதி கொண்டுவந்து கிருஷ்ணர் முன் வைத்து, அவர்கள் குடும்பத்திற்குச் சோகமான செயலை அவர் ஏன் செய்துள்ளார் எனக் கேட்டாள். கிருஷ்ணர் தொட்டிலைக் கையில் எடுத்துக்கொண்டு குழந்தையைப் பார்க்க ஆரம்பித்தார். குழந்தையின் மூக்கு அபிமன்யுவின் மூக்கைப்போன்றும், முகம் அர்ச்சுனனைப் போன்றும் உள்ளன என அழகான சொற்களில் குழந்தையை விவரிக்க ஆரம்பித்தார். தர்மராஜா இந்தக் குறிப்பை எடுத்துக்கொண்டு, “ஆம், இவனுடைய மூச்சுகூட அபிமன்யுவைப் போன்றுள்ளது” எனக் கூறினார். அப்போது கிருஷ்ணர், “ஏன், குழந்தைக்கு உயிரில்லையா?” என அதிசயித்து, குழந்தையை மிக வேகமாக அசைக்க ஆரம்பித்தார். குழந்தை அழ ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில் பாண்டவர்களுடைய இன்பமும் ஆனந்தமும் எல்லை கடந்தன. அர்ச்சுனன், “ஓ கிருஷ்ணா! எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றியவனே!” எனக் கூவினான். அவர்கள் இவ்வழியில் அவரைப் புகழ்ந்தனர். கிருஷ்ணர் புன்முறுவல் செய்து, அர்ச்சுனனிடம் வந்து, “நீ எதைச் சொன்னாலும் சொல்வதைப் பற்றிக் கவனமாக இருக்கவேண்டும். இப்போது, உன் குடும்பம் தழைப்பதற்கு நான் காரணம் என்று நீ சொல்கிறாய். அன்றே, உன் குடும்பம் முழுவதையும் நான் அழித்துவிட்டேன் என நீ விவரித்தாய். இன்று, உன் குடும்பத்தைக் காப்பாற்றியவன் நான் என என்னைப் புகழ்கிறாய். அது உண்மையா? இல்லை இது உண்மையா?” எனக் கேட்டார். தான் சொன்னதை அர்ச்சுனன் மறந்துவிட்டிருந்தாலும் கிருஷ்ணர் மறக்காமல் பழைய நிகழ்ச்சியை நினைவூட்டினார். நாம் அறிந்தோ அறியாமலோ, நன்மையோ தீமையோ எதைச் செய்தாலும் எப்போதும் விளைவு ஏற்பட்டே தீரும். ஆகவே நன்மையைச் செய்தல் அவசியம்; இதனால் இதன் விளைவுகளும் நன்மையாக இருக்கும். ஒரு தாயின் கருவிலிருந்து ஒருவன் பிறந்தவுடன் மாலையுடன் வருவதில்லை. மாதிரியாகக் கூட உங்கள் கழுத்தைச் சுற்றி ஒரே ஒரு சங்கிலியுள்ளது. உங்கள் முந்தைய பிறவிகளில் நீங்கள் செய்த எல்லாச் செயல்களும் உங்கள் கழுத்தைச் சுற்றி ஒரே தங்கச்சங்கிலியாக அமைகின்றன. ஆனால் இந்தக் கழுத்தணி கண்ணுக்குக் காணப்படுமொன்றல்ல. நாம் பிறந்ததும் நமது கழுத்தைச் சுற்றித் தீய செயல்களான சங்கிலி இல்லாவண்ணம் நமது அன்றாட வாழ்வில் நாம் நல்ல செய்திகளைச் செய்ய வேண்டும் என்கின்ற மகாபாரதத்தின் முதன்மையான பாடத்தை நாம் உணர்வது அவசியம். இந்நிலையில்தான், நல்லதைச் செய்யுங்கள், நல்லவர்களாக இருங்கள், நல்லதைக் காணுங்கள் என்று சொல்லப்படுகிறது. நல்லொழுக்கம், நற்செயல், நற்காட்சி—இவைகளே உங்கள் மாதவனிடம் (கடவுளிடம்) அழைத்துச் செல்லும்.

பத்தாவது கருத்துரை

மனிதன் எந்தச் சமயத்திலும் ஒரு மிருகத்தைப்போல
நடந்துக் கொள்ளக்கூடாது.

உங்களுக்கு ஏன் மனித உடல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? அதைக்கொண்டு உலகின் எல்லாத் திசைகளுக்கும் செல்வதற்காகவா? இல்லை, அது நோக்கமன்று. ‘உடல் எடுத்ததன் பயன் மற்ற மக்களுக்கு நன்மை செய்வதற்காக’ என்னும் வாக்கியத்தின் உண்மையை எடுத்துக் காட்டுவதற்காகவாகும்.

திவ்யாத்ம ஸ்வரூபிகளே! நாம் காட்ட வேண்டிய இரக்க உணர்ச்சியை எல்லாவுயிர்களுக்கும் காட்டுதலே நம்மை ஆத்மவுணர்வு அடைவதற்றத் தகுதியுடையவர்களாக ஆக்கும். இதுவே சாரமாக உணர்தல் வேண்டுவது. எல்லாவுயிர்களிடத்திலும் இரக்கவுணர்ச்சியை ஒரு சேரக் கொண்டிருத்தல் எல்லாவற்றிலும் மிக உயர்ந்த தவமாகும். ஒரு மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாழ்வின் புனிதத்தன்மை மிகவுயர்ந்த நிலையிலிருக்கிறது. பசு, குதிரை, யானை—இவற்றின் வாழ்வு, தாழ்ந்த நிலையிலிருக்கிறது. மிகவுயர்ந்த நிலையிலுள்ள மனிதனால் இந்தக் கீழ்நிலை உயிர்கள் காக்கப்படுகின்றன. சில சமயங்களில் இந்த வடிவங்கள் மனிதர்களால் வழிபாடும் செய்யப்படுகின்றன. அவைகள் சாத்வீகமாக வாழ்வதே இதற்குக் காரணம். சிங்கம், புலி, போன்ற மற்றவிதமான விலங்குகளை நாம் பார்க்குமிடத்து, மனிதன் அவற்றை வெறுக்கிறான்; அவற்றைக் கொல்வதற்கு முயற்சியும் செய்கிறான்; ஒரு வகையான விலங்குகளை மதித்து நாம் போற்றுவதும், சில விலங்குகளை கொல்வதற்கு நாம் முயற்சி செய்வதும் ஏன் என்பதன் குறிப்பையும் உட்பொருளையும் நாம் உணர்தல் இன்றியமையாதது. பசுவினால் குறிக்கப்படும் விலங்குக் கூட்டமொன்றின் சாத்வீக குணங்களும், புலியினால் குறிக்கப்படும் விலங்குக் கூட்டமொன்றின் ராஜஸ குணங்களும் நம் அணுகுமுறை வேறுபாட்டிற்குக் காரணமாகின்றன. இவ்வுலகிலுள்ள எல்லா மிருகங்களும் மனிதனாகப் பிறவியெடுத்து மிகவும் கடினமானதொரு செயல் என்பதை நாம் அறிவோம். இந்த அரிய மனிதப்பிறவியை அடைந்த பின்பு நாம் எந்தச் சமயத்திலும் ஒரு விலங்கைப் போல் நடந்து கொள்ளக் கூடாது. நாம் இதை நினைத்துப் பார்த்துக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் முக்கியமாக நாம் உண்ணும் உணவேயாகும். நாம் உண்ணும் உணவு நாம் நடந்து கொள்ளும் செயல்முறைகளைத் தீர்மானிக்கிறது. ஒரு புலி பசுக்கூட்டமொன்றில் நுழைந்தால் அப்போது பசுக்கள் உயிர்தப்ப இயாது; உயிரோடு இருக்க முடியாது. அதேபோல, இவ்வுமைப்படி, மனித இதயத்தில் ஒரு பசுவின் குணங்களுக்கு ஒப்பான நல்ல சாத்வீக குணங்கள் இருக்கின்றன; அந்த நல்ல குணங்களின் கூட்டத்திலே புலியின் ராஜஸ குணங்களைக் குறிக்கும் உணவை நாம் அனுப்பினால், நன்மையானவை இனியும் தப்பிப்பிழைக்கமுடியாது. வளமில்லாத நிலத்தில் நீங்கள் விதைகளை விதைத்தால் அவை முளைக்கப் போவதில்லை அதுபோலவே, தன் இதயத்தில் ராஜஸ குணங்கள் உள்ள ஒரு மனிதரிடம் பூஜை, இரக்கவுணர் ச்சி போன்ற சாத்வீக குணங்கள் செழிப்படையாது. ஆகவே தன் இதயத்தைத் தூய்மை செய்து சுத்தமாக்க வல்ல செயல்களை மனிதன் புரிதல் தேவையானது. ஆகவே மனிதன் இவ்வாழ்வில் துணிவு கொள்ள வேண்டும்; நம் வாழ்க்கைப் பயணத்தில் மேலும் முன்னேற வேண்டும்.

கர்மத்தின் தூய்மை மிகவும் முக்கியமானதென்று கிருஷ்ணர் கீதையில் கற்பித்திருக்கிறார். நாம் செய்யும் செயல்வகை நாம் பெறும் விளைவின் இயற்கையைத் தீர்மானிக்கிறது. நாம் உண்ணும் உணவு நாம் விடும் ஏப்பத்தின் மணத்தைத் தீர்மானிக்கிறது. நாம் தயாரிக்கவல்ல ரொட்டியின் தன்மை நாம் பயன்படுத்தும் மாவின் தன்மையை ஒட்டி அமைந்திருக்கும். தமக்கு நல்ல காரணங்களில்லாத செயல்களைக் கடவுள் ஒருபோதும் செய்வதில்லை. பொருளில்லாத சொற்களைக் கடவுள் ஒருபோதும் சொல்வதில்லை. அவர் எதைச் செய்தாலும், பார்த்தாலும் சொன்னாலும் அது ஆழ்ந்த ஆத்மீக உட்பொருளை உள்ளடக்கியிருக்கிறது; இதற்கு ஒரு சிறிய உதாரணம் இருக்கிறது. கௌரவர்கள், பாண்டவர்கள்

இவ்விருவர்களுடைய சேனைகளும் வெவ்வேறு பக்கங்களில் நின்று கொண்டிருந்தன. பாண்டவர்கள் பக்கம் ஏழு அக்குரோணி சேனைகளும், கௌரவர்கள் பக்கம் ஏழு அக்குரோணி சேனைகளும் இருந்தன. கௌரவர்கள் பக்கமும், பாண்டவர்கள் பக்கமும் எவ்வளவு எண்ணிக்கையுடைய சேனைகள் இருக்கின்றன என்பதை அர்ச்சுனன் அறியாதவனல்லன். இதை முற்றிலும் நன்கறிந்தே தன்னுடைய தேரை இரு சேனைகளுக்குமிடையே நடுவில் நிறுத்தும்படி கிருஷ்ணரை அர்ச்சுனன் கேட்டுக்கொண்டான். இந்த நடத்தைக்குக் காரணம் என்னவென்று கிருஷ்ணர் கேட்டபோது, தான் யுத்தம் செய்ய நேர்ந்ததேயானால் உண்மையில் யாருடன் யுத்தம் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவே என அர்ச்சுனன் பதிலளித்தான். அவன் எந்தச் சூழ்நிலையில் இந்த வாக்கியத்தைக் கூறினான் என ஆராய்ந்தால், அவன் யுத்தம் செய்யும் எண்ணத்தோடு சென்ற பின்பு தான் இதைக் கூறினான் என்று நாம் உணர்கிறோம். கிருஷ்ணர் தேரைத் தயார் செய்தார்; அர்ச்சுனன் காண்டீபம் உள்பட தன் ஆயுதங்கள் அனைத்தையும் தயார் செய்தான்; அவைகளெல்லாம் யுத்தத்திற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டன. யுத்த களம் வந்த பின்பு தன் மனதை ஏன் அவன் மாற்றிக் கொண்டான்? அது அவன் பலவீனமா? அல்லது அவள் தளர்ச்சியுற்று விட்டானா? யுத்தத்தில் யார் பயன் பெறுவர், யார் வளமையுறுவர் என்பதைப் பற்றிய கேள்வியைக் கேட்க அவன் ஆரம்பித்தான். யாருக்காக யுத்தத்தைச் செய்கிறானோ அவர்கள் ஒருவேளை கொல்லப்படக்கூடும் என்பதை உணர்ந்தான். ஆகவே யுத்தஞ்செய்து ஒரு பயனுமில்லை என்பதை அவ. உணர்ந்தான். அரசர்கள் மக்களை ஆட்சி செய்து மக்களின் வளமையை அதிகரிக்க விரும்புகின்றனர். ஒரு யுத்தத்தில் அரசாட்சியழித்து, மக்களும் கொல்லப்படப் போகிறார்கள் என்றால் வளமை, அரசாட்சி–இவைகளைப் பற்றிய கேள்விகள் எங்கனம் எழும்? குடும்பம் முழுவதும், மக்கள் குலமும் அழிக்கப்பட்ட பின்பு யாருக்காக அவன் நாட்டை நிறுவி ஆட்சி செய்யப் போகிறான்? தம் உற்றார் உறவினர்கள் மேலுள்ள அவனுடைய இந்த மோகத்தைச் சிலர் விவரித்துக் கீதையின் முதல் அத்தியாயத்திற்கு “விஷாத யோகம்” எனவும் பெயரிட்டனர்.

இதனை உள்முகமான மனப்போராட்டமென்றே, விவாதமென்றே விவரிக்க முடியாது. உண்மை எது, பொய் எது, தகுதி உடையது எது, தகுதியில்லாதது எது என்பதையும் முடிவு செய்ய அவன் தனக்குள்ளேயே வாதம் செய்துகொண்டான். கௌரவர்கள் அநீதியாக ஆண்டு கொண்டிருக்கின்றனர், பொய்யையும் தகுதியின்மையும் தம்பால் கொண்டுள்ளனர் என்னும் உண்மையையும், தானும் அதேபோல் தகுதியின்மையையும் பொய்யையும் கடைப்பிடிக்க விரும்பவில்லை என்பதையும் தனக்குள்ளேயே விவாதித்தான். பாண்டவர்கள் பால் வேறுபடுத்திப் பார்க்கக்கூடிய அளவிற்குச் சில தனிப்பட்ட நற்குணங்கள் இருந்தன. ஆகவே, கிருஷ்ணர் அவர்கள் பக்கமிருந்தார் என்பது நமக்கு இங்குத் தெளிவாகிறது. நாம் இந்தச் சூழ்நிலையைச் சற்று மேலோட்டமாகப் பார்க்குமிடத்து, அர்ச்சுனன் இந்தத் தளர்ச்சியான, குழப்பமான சூழ்நிலையில் ஆழ்த்தப்பட்ட காரணத்தினால் தான் பகவத் கீதை என்னும் புதிய நூலை உபதேசிக்கும் வாய்ப்பு கிருஷ்ணருக்கு ஏற்பட்டது என்பதை நாம் உணர்கிறோம். அர்ச்சுனன் அதுபோன்ற உள்முக நோக்குடைய தளர்ச்சியான சூழ்நிலையில் ஆழாவிட்டால் புனிதமான பகவத் கீதையை உபதேசிக்கும் வாய்ப்பு கிருஷ்ணருக்குக் கிடைத்திருக்காது. இரு துன்பங்களின் இடையே ஏற்படுவது இன்பம் என்பதை நாம் எப்படி அறிகிறோமோ அப்படியே இரு துன்பமான சூழ்நிலைகளின் இடையே சில சமயங்களில் நன்மை வெளிப்படுகிறது. இங்குக் கிருஷ்ணர் எடுத்துக்காட்டான ஒரு மனிதனைப் போல் நடந்து கொள்கிறார். அர்ச்சுனனையும் எடுத்துக்காட்டான ஒரு மனிதன் போல் நடந்துக் கொள்ளச் செய்து, கீதையை அவனுக்கு உபதேசிக்கவல்ல சூழ்நிலையைக் கிருஷ்ணர் உருவாக்கினார். மனிதனுடைய வாழ்வு மாறக் கூடிய தன்மையுடையது, தற்காலிகமானது. இந்நிலையில் சாசுவதமான உண்மையை உணரும் வாய்ப்பை அர்ச்சுனன் பெற்றான். ஒரு பக்தனின் இதயத் தூய்மையை அறிவதற்கு இயலும் வண்ணம் உதாரண புருஷர்களாகப் பாண்டவர்கள் எடுத்துக் காட்டப்பட்டனர். சில சமயங்களில் கஷ்டங்களின்

விளைவாகப் பக்தருடைய உள்ளங்கள் துன்பத்திலாழ்கின்றன. இதன் விளைவாக அவர்கள் உள்ளங்களில் உள்ளங்களிலிருந்து அத்தகைய அஹங்காரம், பொறாமை, தீய குணங்கள் இவைகளை அகற்றுவதற்காகக் கடவுள் சில சமயங்களில் சில செயல் முறைகளை மேற்கொள்கிறார்.

ஒரு சமயத்தில் அர்ச்சுனன் அசுவமேதயாகத்தைச் செய்ய எண்ணிக் குதிரையைப் போக்கி விட்டான். அசுவமேதயாக விதிகளின் படி ஒரு குதிரையைப் போக்கிவிடும்போது யாரேனும் அந்தக் குதிரையைக் கைப்பற்றினால், அப்போது குதிரையின் எஜமானன் யுத்தத்தில் தோல்வியுற்றால் வெற்றிபெற்றவனிடம் தன் அரசாட்சியை ஒப்புவித்துவிட வேண்டும். மயூரத்வஜன் என்ற அரசன் அர்ச்சுனன் போக்கிய குதிரையைப் பிடித்துக் கொண்டான். பற்றிய குதிரையை எப்படி நடத்த வேண்டும் என்ற ஒழுக்க நெறிகளை அவன் முற்றும் அறிந்திருந்தான். குதிரையைத் தேடிக் கிருஷ்ணரும் அர்ச்சுனனும் சென்றனர். குதிரை மயூரத்வஜனுடன் யுத்தம் செய்யலாமா என்பதை ஆலோசித்தனர். மயூரத்வஜன் சாதாரண மனிதன் அல்லன், அவன் தன்னுடைய மிகப்பெரும் பக்தன், அவனுடைய யுத்தம் செய்வது அர்ச்சுனனுக்கு எளிதன்று என அர்ச்சுனனிடம் கிருஷ்ணர் கூறினார். நெறிகளின்படி குதிரையைப் பிடித்து வைத்திருப்பவனிடம் தான் யுத்தஞ்செய்யவேண்டியிருக்கிறது என அர்ச்சுனன் சொன்னான். அப்போது அர்ச்சுனனை யுத்தஞ்செய்யும்படி கிருஷ்ணர் கட்டளையிட்டார். அர்ச்சுனன் மயூரத்வஜனுடன் பல வழிகளில் போர் புரிந்தான்; ஆனால் தன் எதிராளியைத் தோற்கடிக்க அவனால் முடியவில்லை. அவனுடைய முதன்மையான ஆயுதமான காண்டீன்பம் கூட யுத்தத்தில் சேதமுற்றது. அர்ச்சுனன் கிருஷ்ணரிடம் உதவி கோரியதால் அவரும் யுத்தத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்தார். சந்தேகத்திற்கிடமின்றிக் கிருஷ்ணரின் பெருமையை மயூரத்வஜன் அறிந்திருந்தான். ஆனால் தர்மவிதிகளின்படி அவன் யுத்தத்தில் ஈடுபட்டான். ஆகவே தன்னுடைய ஒவ்வொரு ஆயுதத்தையும் வெளியே எடுத்துக் 'கிருஷ்ணா' என்னும் புனித நாமத்தைச் சொல்லிக் கிருஷ்ணரின் மேற்செலுத்தினான். கிருஷ்ணரை இங்குமங்கும் ஓடவைக்கும் அளவுக்கு அம்புகள் கடினமானவையாகவும், சக்தியுடைவையாகவுமிருந்தன. கிருஷ்ணர் தம் புனித சக்கரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று அவரைக் கூவி அழைத்து அர்ச்சுனன் சொன்னான். ஆனால் மயூரத்வஜனுக்கு எதிராக அர்ச்சுனனின் காண்டீன்பமோ, கிருஷ்ணரின் சக்கரமோ எந்தப் பலனும் அளிக்காது என்று கிருஷ்ணர் கூறினார். அர்ச்சுனன் இந்த விஷயத்தை முக்கியமானதாகக் கருதவில்லை; கிருஷ்ணர் வேடிக்கையாகத்தான் பேசுகிறார்; உண்மையில் அவருக்கு யுத்தம் செய்வதில் விருப்பமில்லை என்று அர்ச்சுனன் நினைத்தான். மயூரத்வஜன் உண்மையில் கிருஷ்ணருடைய பக்தனாக இருந்தால் அவன் கிருஷ்ணருக்கு எதிராகச் சண்டை போடுவானா எனவும், அவன் உண்மையாகக் கிருஷ்ணரின் பக்தன் அல்லன் எனவும் அர்ச்சுனன் நினைத்தான். ஆனால் உண்மையில் மயூரத்வஜன் ஒரு சிறந்த பக்தன் என்பதை அர்ச்சுனனுக்கு எடுத்துக் காட்டக் கிருஷ்ணர் விரும்பினார். ஆகவே கிருஷ்ணரும் அர்ச்சுனனும் தம்மைப் பிராமணராக வேடமிட்டுக் கொண்டு மயூரத்வஜனுடைய வீட்டுக்கு வந்தனர்.

மரபு வழிப்படி விருந்தினரை வரவேற்று அவர்களைக் கௌரவித்தல் இல்லறத்தானுடைய கடமையாகும். இந்த விஷயத்தில் மயூரத்வஜனைக் காட்டிலும் சிறந்தவர் எவருமிலர். இந்த பிராமணர்கள் வந்துகொண்டிருப்பதை மயூரத்வஜன் பார்த்தவுடனேயே தன் அரசவுடையைக் களைந்தெறித்துவிட்டுப் பிராமணர்களுக்கான ஆடையை உடுத்துக் கொண்டான். அவன் நீரைக் கொண்டுவந்து தன் விருந்தினருடைய பாதங்களைக் கழுவி அவர்களைத் தம் விருந்தினராக இருக்கும்படி மயூரன் வேண்டிக்கொண்டான். மயூரனுடைய பக்தியின் ஆழத்தை அர்ச்சுனனுக்கு உணர்த்தும் எண்ணத்துடன் சிறிது காலமாகவே கிருஷ்ணர் இந்தச் சந்தர்ப்பத்திற்கான திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார். தன் விருந்தோம்பலை ஏற்றுக்கொண்டு உணவருந்த விருந்தாளிகளாக இருக்கும்படி கிருஷ்ணரையும் அர்ச்சுனனையும் மயூரன் வேண்டிக் கொண்டபோது கிருஷ்ணரையும், அர்ச்சுனனையும் மயூரன் வேண்டிக் கொண்டபோது கிருஷ்ணர், "உங்கள் விருந்தோம்பலை ஏற்பதற்கு எங்களுக்கு நேரமில்லை. ஒரு

குறிப்பிட்ட பிரச்சினைக்காக நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். நாங்கள் உங்கள் உதவியை வேண்டுகிறோம். உங்கள் வீட்டிற்கு வரும்வழியில் ஒரு புலியால் என் மகன் விழுங்கப்பட்டான்; இந்தச் சமயத்தில் என் மகனுடைய பாதி உடல் மட்டும்தான் விழுங்கப்பட்டது; மீதி உடல் வெளியேயிருக்கிறது. என் மகனுடைய உடல் விடுவிக்கப்படவேண்டுமானால் புலிக்கு உணவாக அரசன் மயூரத்வஜனுடைய பாதி உடலை நான் பெறவேண்டியிருக்கிறது என்றும், அப்போதுதான் எனது மகன் விடுவிக்கப்படுவான் என்றும் அசரீரி கூறியது" என்று பதிலளித்தார். இதை மயூரன் கேட்டவுடனேயே தன் விருந்தினருக்குச் சிறிது தொண்டாவது செய்யக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தைக் கண்ணுற்றான். "தியாகத்தினால் அழியாத தன்மை உண்டாகிறது" என்பதை அவன் மிகவும் நன்றாக உணர்ந்திருந்தான்; தன் உடலைத் தியாகஞ்செய்வதற்குத் தயாரகவிருந்தான். மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் தனக்கு மனித உடல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவன் நன்கு உணர்ந்திருந்தான். மனித உடல் என்றேனும் ஒரு நாள் சரிந்து விழும் என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே மற்றவர்களைத் திருப்தி செய்யத் தன் உடலைத் தியாகஞ்செய்ய அவன் தயாராயிருந்தான். அவன் தன் மனைவியையும் மகனையும் அழைத்து ஒரு வாளால் தன் உடலை இரண்டாக வெட்டும்படி சொன்னான். அவனுடைய மனைவியும் மகனும் மயூரன் ஒரு புனிதமான பணியை நிறைவேற்றுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறான் என நினைத்தனர்; எனவே அவர்களும் அவனுடலை ஒரு துண்டுகளாக வெட்டுவதற்குத் தயாராயினர்.

தம் கண் இமைகளை ஒரு தடவைகூடக் கொட்டாமல் அர்ச்சுனனும் கிருஷ்ணரும் கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கும்போது மயூரனுடைய இடக்கண் ஒரு சொட்டுக் கண்ணீர்த்துளி விடுவதைப் பார்த்தனர். முற்றிய அச்சூழ்நிலையைப் பார்த்துக் கொண்டே அவனை மேலும் சோதனை செய்யக் கிருஷ்ணர் விரும்பினார். அவர், "துன்பத்துடனும் கண்களில் நீருடனும் கொடுக்கப்படும் கொடைக்கு என்ன மதிப்புள்ளது? அத்தகைய கொடையை நான் விரும்பவில்லை. கொடையானது கைம்மாறு பாராமலும் முழு விருப்பத்துடனும் கொடுக்கப்பட வேண்டும்" என்றார். மூடிய கண்களுடன் பாதிக்கப்படாமல் அமைதியாக உட்கார்ந்திருந்த மயூரன் தன் கண்களைத் திறந்து தன் உடலைக் கொடுப்பதில் தனக்குத் துன்பமில்லை என்று சொன்னான். "தனக்கு ஏதேனும் துன்பம் இருந்ததென்றால் இரு கண்களும் கண்ணீர் விட வேண்டும். ஆனால் ஏன் ஒரே ஒரு கண்ணில் மட்டும் கண்ணீர் வருகிறது? இதனை நீங்கள் ஆராய வேண்டும்" என்றான். இதன் அடிப்படை உண்மையைக் கிருஷ்ணர் அறியாதவரல்லர். அவர் மயூரனுடைய பக்தியின் ஆழத்தை அர் ச்சுனனுக்குக் காட்ட மட்டும் விரும்பினார். மயூரன், "ஓ பிரபுவே! இவ்வுடல் இரு கூறுகளாக வெட்டப்படப் போகிறது. வலப்பக்கம் ஒரு புனிதமான காரியத்திற்காக உங்களுக்குக் கொடுக்கப்படவிருக்கிறது. இடப்பாகம் அழுதுகொண்டு கண்ணீர் விடுகிறது. ஏனெனில், அது வீசப்பட்டுப் பிறகு காக்கைகளுக்கு உணவாக மட்டும் ஆகப்போகிறது. புனிதமற்ற வழியில் வீசப்படப்போகிறோமோ என்பதால் அது அழுதுகொண்டிருக்கிறது" என்று பதிலளித்தான். அர்ச்சுனன் இந்த வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டவுடன் வருந்த ஆரம்பித்தான். இது தனக்குக் கற்பிக்கப்பட்ட பாடம் என்பதையும், தன்னைக் காட்டிலும் மிகச்சிறந்த கிருஷ்ண பக்தர்கள் இருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்தான். இவ்வுலகம் பலவிதமான பக்தர்களால் நிறைந்தது. பக்தன் என்ற முறையில் தன்னுடைமையாகவிருந்த அனைத்தையும் இறைவனுடைய பாதங்களில் மயூரன் அர்ப்பணித்தான். இல்லறந்தான் என்ற கோணத்திலிருந்து நாம் பார்க்கும்போது தன் வீட்டிற்கு வந்த எந்த விருந்தாளிக்கும் எதையும் கொடுத்துக் கௌரவிப்பான் என்பதை நாம் பார்க்கிறோம். அரசன் என்ற முறையில் நாம் பார்க்குமிடத்து, அவன் ஒழுக வேண்டிய சரியான நெறிமுறைகளை முழுவதும் கடைப்பிடித்து, யுத்தஞ்செய்து, நெறிமுறைகளை நிறுவதற்குக் கூட முழுவதும் தயாராகவிருந்தவ மயூரன் ஆவான். பல்வேறு துறைகளிலும்

ஒருவன் தன் கடமையைச் செய்யும் இந்த அம்சத்தைப் பிரகடனம் செய்வதற்காகக் கிருஷ்ணர் உலகிற்கும் அர்ச்சுனனுக்கும் இந்த உதாரணத்தைக் காட்டினார்.

பல நூற்றாண்டுகளாக அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு நமது சொந்த முயற்சிகளால் சுதந்திரத்தைப் பெற்றபின், ஐயாயிரம் வருடங்களுக்கு முன்புள்ள நமது மரபு வழிகளையேனும் நாம் அறியாவிட்டால், கிருஷ்ணரால் காட்டப்பட்ட உதாரணங்களால் ஸ்தாபிக்கப்பட்ட இலட்சியங்களின் புனிதத்தன்மை நாம் உணர முடியாவிட்டால் நாம் இப்போதுள்ள இத்தகைய துரதிருஷ்டமான சூழ்நிலையிலிருப்பது அதிசயமன்று. நீதிக்காக ஒருவன் எதையும் தியாகம் செய்ய வேண்டும் என்பதைக் க ற்பித்தவர் கிருஷ்ணர். கிருஷ்ணர் இதை வேதாந்த வடிவில் கற்பித்தார். ஒரு கன்னத்தில் அடிவிழும்போது ம ற்றொரு கன்னத்தைக் காண்பிக்கும் அளவு பொறுமையுடன் இருக்க வேண்டும் என உபதேசம் செய்துகொண்டு, அதே சமயத்தில், மேற்சென்று நடைமுறையில் ஓர் அணுகுண்டை உற்பத்தி செய்யச் சொல்வது போன்றவையல்ல கிருஷ்ணருடைய உபதேசங்களாகும், இலட்சியங்களும். உபதேசத்திற்கு அனுஷ்டானத்திற்கும் பொருந்தாத தன்மை கிருஷ்ணரிடம் பொருந்தியிருக்கவில்லை. ஒரு கையில் அணுகுண்டை வைத்துக்கொண்டே மற்றொரு கையைத் தூக்கி மக்கள் அமைதிக்காகக் கோஷமிட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அடைய விரும்பும் அமைதியை அவர்களுக்குச் சந்திரனுக்குச் சென்றாலும் அடையமுடியாது. எல்லாக் காலங்களிலும் யுத்தத்திற்குத் தயார் செய்து கொண்டு, கிளர்ச்சியையும் புரட்சியையும் தலைமையாகவிருந்து நடத்திக் கொண்டு உலகில் அமைதியைப் பற்றி நாம வெறுமனே பேசுகின்றோம். கிருஷ்ணர் கற்பித்த தத்துவமுறை இதுவன்று. அந்தச் சமயத்திலிருந்த பல்வேறு கிருஷ்ணர் கற்பித்த தத்துவமுறை இதுவன்று. அந்தச் சமயத்திலிருந்த பல்வேறு விதமான பதினெண் அரசர்களையும், அரசாட்சிகளையும் ஒரே ஆட்சியின் கீழ்க்கொணர்வதற்கு முயற்சி செய்தவர் கிருஷ்ணர். கிருஷ்ணர் வாழ்ந்து காட்டிய இலட்சியம் அத்தகையது. எந்த அரசனின் ஆட்சிக்குக் கீழ் எல்லா வேறுபட்ட அரசாட்சிகளையும் கிருஷ்ணர் கொண்டு வந்தார்? தர்மராஜாவின் ஆட்சிக்குக் கீழ். கிருஷ்ணர் தானே அரசனாக விரும்பவில்லை. கிருஷ்ணரின் இலட்சியங்களிலோ அல்லது கிருஷ்ணரின் செயல் முறைகளிலோ நாம் உண்மையில் கவனம் செலுத்துவோமேயானால், இன்று நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கக்கூடிய துரதிருஷ்டமான சூழ்நிலையில் நாம் இருக்கமாட்டோம். சிறுவர்களே! சிறுமியர்களே! இந்த நாட்டின் இலட்சியங்களையும் அது வேண்டும் தர்ம இராச்சியத்தினையும் உணருங்கள். உங்கள் உடற் சக்தி, மனச் சக்தி முழுவதையும் இந்தப் புனிதமான தர்ம இராச்சியத்தை மீண்டும் பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள். இது சாத்தியமாகும் என நான் நம்புகிறேன். உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

## பதினோராவது கருத்துரை

### மனித உடம்பு ஒரு நீர்க்குமிழி போன்றது.

தத்துவங்களைப் பற்றியும் நீதிநெறிகளைப் பற்றியும் பேசுவது எளிதானது; ஆனால் அவைகளை அனுஷ்டானத்தில் கொண்டு வருதல் மிகவும் கடினமானது. இளைஞர்களாலும் பாட்டான்மார்களானாலும் இதே நிலைதான். இந்த உண்மைதான் உங்களுக்கு நான் கொடுக்கும் எளிய உண்மையாகும்.

மாணவர்களே! சிறுவர்களே! சிறுமியர்களே! இன்றைக்கு உங்கள் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டது. உண்மையில் சந்தோஷமான செய்தியே. நமது சமூகம், வழி மரபுகள் இவற்றின் வளமையை அதிகரிக்க வேண்டி பலத்தைத் தராத, உங்கள் அறியாமையை மட்டும் வளர்க்கிற கல்வியை

நீங்கள் பெறும்வரை அப்படிப்பு பயனற்றதே. கல்வியின் எல்லாத் துறைகளிலும் ஆன்மீகத் கல்வியே உண்மையான கல்வியாகும். இதைக் கல்வியின் மற்ற துறைகளோடு ஒப்பிடும்போது, ஆன்மீகக் கல்வி சமுத்திரம் போன்றது, மற்ற துறைகள் நதிகளைப் போன்றவை என்பதை நாம் பார்க்க முடியும். நதிகள் போய்ச் சமுத்திரத்தில் ஐக்கியமாகும் போது கரை காண சமுத்திரத்தின் ஆழத்தையும் பெருமையையும் அடைகின்றன. இதுபோலவே கல்வியின் மற்ற வடிவங்கள் ஆன்மீகக் கல்வியுடன் இணைந்து ஐக்கியமாகும்போது அவை ஆன்மீகக் கல்வியின் வடிவையும் பெருமையையும் பெறுகின்றன. உங்கள் கல்வி தபசுடன் இணைக்கப்படும்போது தான் உங்கள் இதயம் மலர்ந்து எண்ணங்கள் மேம்பாடடையும் சாத்தியம் இருக்கும். நீங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டுக் காட்டிற்குச் சென்று தலைகீழாக நிற்பது தபசின் பொருளல்ல. உங்கள் எண்ணம், சொல், செயல் இம்மூன்றினுடைய இசைவிற்கு உதவுவதுதான் தபஸ். சரியான பண்பாட்டுடன் அத்தகைய புனிதமான கல்வி கொடுக்கப்பட்டால்தான் உங்களுள் மாபெரும் எண்ணங்கள் சரியாக மலர்வதற்கான வாய்ப்பு ஏற்படும். அப்போதுதான் உங்களுள் உள்ள சிறந்த கல்வி எண்ணங்களைச் சரியாக வெளிப்படுத்த முடியும். கல்வி உங்கள் நன்னடத்தையை முன்னேற்ற வேண்டும். அத்தகைய புனிதக் கல்வியை மாணவர்கள் இன்று பெறுதல் அவசியமாகிறது; அதுதான் நமக்கு நல்ல விளைவுகளைக் கொடுக்கும் இன்று நாம் உண்மையில் நமது சரித்திரத்தையும் கலாச்சாரத்தையும் உணர விரும்பினால், நமது வேதாந்தத்தின் பகுதிகளாயுள்ள வேதங்களையும் இதிகாசங்களையும் கற்பது நமக்கு அவசியமாகிறது. நாம் அத்தகைய நூலைப் படிக்கும்போது, நமது சொந்த எண்ணங்கள், கொள்கைகள், விருப்பு, வெறுப்புகளை நாம் படிப்பதில் ஏற்றிவிடக்கூடாது. முடிந்தவரை மூலத்தின் பொருளை உணர நாம் முயற்சி செய்ய வேண்டும். அத்தகைய நூல்கள் படைக்கப்பட்ட காலத்திலிருந்து பல நூற்றாண்டுகள் கழிந்து விட்டன; பல பகுதிகள் பெருமளவிற்கு மாறுதல் அடைந்து விட்டன. காலப்போக்கின் விளைவாக, பூவுலகில் உள்ள கண்டங்கள், கடல்கள், நதிகளின் மூலங்கள் முதலியவையும் பல மாறுதல்களை அடைந்து விட்டன என்பதைப் பார்க்கிறோம். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஒரு குறிப்பிட்ட திசையில் ஓடிய ஒரு நதி இப்போது வேறு திசையில் ஓடிக் கொண்டிருக்கலாம்; அந்த நதிதான் செல்லும் வழியை மாற் றிக்கொண்டிருக்கலாம். சில நூற்றாண்டுகளுக்கு முன்னால ஒரு நதி ஓடிய வழிக்கும் இப்போது அந்த நதி ஓடுகின்ற வழிக்கும மிகப்பெரும் வேறுபாடு இருப்பதை நாம் பார்க்கலாம். ஆனால் இன்றைய மனிதன் இன்று அந்த நதி ஓடும் வழியைப் பார்த்துவிட்டு அதைத் தன் கொள்கையில் ஏற்றிச் சில நூ ற்றாண்டுகளுக்கு முன்பு கூட அந்த நதி இன்று ஓடும் வழியிலேயே ஓடியது என நினைக்கிறான். இது சரியன்று. இதற்கு ஒரு சிறிய உதாரணம் இருக்கிறது. திரேதா யுகத்தில் இராமர் ஆண்ட காலத்தில் இராவணனால் ஆளப்பட்ட இலங்கையும் இப்போது நாம் இலங்கை என்றழைக்கும் நாடும் ஒன்றா என்னும் கேள்வியை நம்மையே கேட்டுக்கொள்ளலாம். இல்லை. அப்போதிருந்த இலங்கை இந்த இலங்கை அன்று, அந்தச் சமயத்தில் இலங்கை இந்தியாவின் கோடியிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தது; அந்தச் சமயத்தில் அது பூமத்திய ரேகையில் இருந்தது. காலம் செல்லச் செல்லத் திரேதாயுகத்திலிருந்து கலியுகத்திற்கு வரும்போது இந்தக் குறிப்பிட்ட தீவானது பூமத்திய ரேகையிலிருந்து வடக்கு நோக்கி நூற்றுக்கணக்கான மைல்கள் இழுத்துச் செல்லப்பட்டது. இப்போது நாம் இலங்கையென்றழைக்கும் இந்தத் தீவை நாம் பார்க்கும்போது, பூமத்திய ரேகைக்கு வடக்கே அது மாறியிருக்கிறது என்பதைக் காண்கிறோம். இப்போது நாம் இலங்கையென்றழைக்கும் இந்தத் தீவு அட்லாண்டிஸ் எனப்படும் 'கடல்கோள்' ஏற்பட்ட போது நீரினுள் முழுவதும் மூழ்கடிக்கப்பட்டது எனக் கிரேக்க சரித்திரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சாதாரண மக்களல்லர். அவர்கள் விஞ்ஞானிகளிலே மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள்; பல துறைகளிலே மிக்க அறிவு படைத்திருக்கிறார்கள். இலங்கை சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டு மேனோக்கி இழுத்துச் செல்லப்பட்ட உண்மைணை அவர்கள் விவிரித்திருந்தனர்; இந்த உண்மை அவர்களால் ஒத்துக் கொள்ளப்பட்டது. அந்தச் சமயத்தில் சந்திரனுக்கும் பயணம் செய்யும் அளவிற்கு முன்னேற்றமடைந்திருந்தனர். விண்வெளிப் பயணத்தின் பல விதமான

வகைகளும் திட்டமிடும் ஆற்றல் பெற்றிருந்திருந்தனர். விண்வெளிப் பயணத்தில் மிக்க தேர்ச்சிபெற்று அவர்கள் இருந்தனர். கிரீன்விச் காலத்தைத் திட்டமாக வைத்து இன்று முழு உலகமும் காலத்தைக் கணக்கிடுகிறது. உலக சரித்திரத்தில் இலங்கையினூடே செல்லும் தீர்க்க ரேகையை அந்தக் காலத்து வான இயல் நிபுணர்கள் எடுத்துக்கொண்டு, சூரியன் அந்தத் தீர்க்க ரேகையில் எழும் நேரத்தை மூல அளவாக வைத்துக் கொண்டு காலத்தை அளவிட்டனர். இந்த மூல கால அளவின் அடிப்படையில்தான் கிருஷ்ணருடைய பிறப்புக் காலம், கிருஷ்ணர் தன் தேகத்தை நீத்த காலம், மகாபாரத யுத்தம் பாண்டவர்கள் வாழும் போது இலங்கையினூடு செல்லும் தீர்க்கரேகையின் அடிப்படையில்தான் கால அளவைகள் தீர்மானிக்கப்பட்டன. இதை ஆதாரமாக நாம் வைத்துக்கொள்ளும்போது கலியுகம் என்று நாமழைக்கும் இந்தக் காலமானது பிரமாதி வருடத்தில் சிராவண மாதத்தில் பகுள பக்ஷத்தில் அஷ்டதி திதியில் ஆரம்பித்திருக்கிறது என்னும் முடிவுக்கு வருகிறோம். இது ஆங்கில ஆண்டுக் குறிப்பேட்டின்படி கிறிஸ்து பிறப்பதற்கு 3102 வருடங்களுக்கு முன்னால் பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதி என விளக்கப்படுகிறது. கி.மு. 20/02/3102 அன்று ஆரம்பித்த இந்த அம்சத்தை எடுத்துக் காட்டுவதற்காக நமது முன்னோர்கள் இந்நாளை யுகாதி அல்லது ஒரு புது யுகத்தின் ஆரம்பநாளானதால் அது யுகாதி என அழைக்கப்பட்டது. இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது மிகவும் சந்தோஷமாக இல்லாவிட்டாலும் மற்றொரு விஷயம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். துவாரகைக்கே பிரபாஸம் என்னும் புனித க்ஷேத்திரத்தில் தம் பூதவுடலைக் கிருஷ்ணர் நீத்த நாள்கூட இந்த யுகாதி நாள்தான். நமது முடிவை நெருங்கும் போது நாம் அசாதாரணமான, வழக்கத்திற்கு மாறான எண்ணங்களை எண்ணுகிறோமென்று ஒரு பழமொழி கூறுகின்றது. கிருஷ்ணர் வாழ்ந்து கொண்டிருந்த யாதவ சமுதாயத்திற்கு அப்போது அதிசயமான எண்ணங்கள் ஏற்பட்டன. அவர்கள் தாமாகவே தங்கள் முடிவை ஏற்படுத்தி கொண்டனர். சாத்வீக உணவை மட்டும் ஏற்க வேண்டுமென்பதைக் கிருஷ்ணர் உபதேசித்துக் கொண்டிருந்தபோதிலும் ஒரு புனித நாளன்று யாதவர்கள் இந்தப் புனித கட்டளையை மீறினர். அவர்கள் ஒரு மதச் சடங்கை செய்து கொண்டிருந்தபோது பயன்படுத்தக்கூடாத பொருட்களைப் பயன்படுத்தினர்; மாமிசம் கலந்த உணவைத் தயாரித்தனர்; மதுவகைகளைக் கூட அருந்தி இவ்வகையான உணவுகளைச் சாப்பிட்டனர். அத்தகைய உணவு மற்றும் மதுவின் காரணமாக அவர்கள் போதையுற்றுத் தங்கள் சமநிலையை இழந்தனர். அவர்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொள்ள ஆரம்பித்தனர்; ஒருவரையொருவர் கொல்வதற்குத் தயாராகும் நிலையை அடைந்தனர். இவ்விதமாக அவர்கள் யாதவகுலம் முழுவதையும் அழித்தனர். இத்தகைய சூழ்நிலையில்தான், கிருஷ்ணரால் விளக்கப்பட்ட இலட்சியங்களை மனதில் வைத்துக்கொண்டு காந்திஜி கூட மாமிசம் சாப்பிடுவதையும் மது அருந்துவதையும் தடைசெய்ய விரும்பினார். ஆனால் துரதிருஷ்டவசமாக அவர் வெற்றிபெறவில்லை. இவ்விதமான துன்பத்திற்காளான யாதவ சமுதாயம் தன் வாழ்வை இழந்தது. இந்த யுத்தத்தில் வஸுதேவர் கூடக் கொல்லப்பட்டார். எப்படியிருப்பினும், அங்கில்லாத யாதவப் பெண்கள் உயிர்பிழைத்தனர். பலராமர் கூட இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டார். சிறிது நேரத்தில் விதுரர் அந்த இடத்திற்கு வந்தார். விதுரர் அவ்விடத்தைப் பார்த்ததும் அது அவருக்குப் பயங்கர இடமாகத் தோன்றியது. அந்தச் சமயத்தில் உத்தவர் கூட அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். உத்தவர் அந்தச் சூழ்நிலையைப் பார்த்தபோது தன்னுடைய நெருங்கிய நண்பர் கிருஷ்ணர் கூடத் தம் பூத உடலை நீந்திருக்கக்கூடும் எனப் பயப்பட்டார்; கிருஷ்ணரின் தேகத்தைத் தேடிக்கொண்டிருந்தார். தேடுவதில் அர்ச்சுனனும் உத்தவருக்கு உதவினான். அந்தப் பயங்கரமான யுத்தத்தில் கிருஷ்ணருடைய உடல் வெட்டப்பட்டு, உருக்குலைக்கப்பட்டு பல இடங்களிலும் உடலின் பல பகுதிகள் வீசப்பட்டிருக்கின்றனவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. அர்ச்சுனனும் விதுரரும் கிருஷ்ணருடைய உடலை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லையே என நினைத்தனர். அந்தச் சூழ்நிலையில் கிருஷ்ணர் இல்லாத உலகத்தில் வாழ்வது பயனற்றது என அர்ச்சுனனும் விதுரரும் நினைத்தனர். யமுனா நதியில் தங்களை மூழ்கடித்துக் கொள்ள அவர்கள் தயாராயினர். அது மிகப்பெரும் துன்பகாலம். அதன் விளைவாக வானம்

முழுவதும், சுற்றியுள்ள நீர்நிலைகளும் மிகவும் பாழாகியிருந்தன. அப்பெருந்துன்பம் சூழ்நிலை முழுவதையும் பாழாக்கிக் கொண்டிருந்தது. விதுரர், அர்ச்சுனன் இருவரும் நதியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது சிறிது தூரத்தில் ஒரு நீலத்துணி படபடப்பதைப் பார்த்தனர்; அவ்விடத்தில் ஒரு சப்தம் வருவதைக் கேட்டனர். விதுரர் மிகவும் வியப்புற்றார்; அது என்ன என்பதை அறிய விரும்பி அவர் சப்தம் வந்த இடத்தை நோக்கி ஓடினார். ஒரு மரத்தின் கீழ் கிருஷ்ணர் மிகவும் சாந்தமான நிலையில் உட்கார்ந்திருப்பதை அவர் பார்த்தார். கிருஷ்ணர் தன் பூத உடலை நீப்பதற்குத் தயாராகிக் கொண்டிருப்பது போலத் தோன்றியது. ஆனால் கிருஷ்ணர் தம் நண்பர்களும் உறவினர்களும் தம்மருகேயிருக்கும்போது தம் உடலை நீப்பது சரியென நினைக்கவில்லை. உத்தவரைத் தூர அனுப்பும் நோக்கத்துடன் கிருஷ்ணர் அவருக்குப் பாகவதத்தைக் கற்பித்தார்; பின் போய் அர்ச்சுனனை அழைத்து வரும்படி அனுப்பினார். உத்தவர் சந்தோஷமாயிருப்பது போல் தோன்றினார்; கிருஷ்ணர் பத்திரமாயிருக்கும் செய்தியை அர்ச்சுனனுடன் பகிர்ந்து கொள்ள விரும்பி அவனை நோக்கி ஓடினார். அப்போது உத்தவர் தூரம் சென்று விட்டார் என்பதைப் பார்த்த கிருஷ்ணர் தம் பூத உடலை நீத்தார். உத்தவரும் அர்ச்சுனனும் மரத்தினருகே வந்தபோது அங்குக் கிருஷ்ணர் உடலும் காணப்படவில்லை. அவர்கள் இந்தச் சூழ்நிலையை இரண்டு மூன்று நாட்கள் கவனித்தனர். தம் மானிட வாழ்வின் நோக்கம் முடிந்துவிட்டதெனத் தீர்மானம் செய்து தம் பூதஉடலை அவர் விட்டுவிட்டார் என்பதை அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் பிறகு துவாரகைக்குத் திரும்பி வந்தனர். தம் வாழ்வினுள்ள அனைத்தையுமிழந்து விட்டதால் சத்யபாமையும், ருக்மிணியும், மற்ற கோபியர்களும் பெருந்துக்கத்தில் ஆழ்ந்திருந்தனர்; அர்ச்சுனனும் உத்தவரும் அவர்கள் துன்பத்தைப் பார்க்க இயலவில்லை. அந்த இடத்தில் பெண்களைத் தனியே விட்டுச் செல்லுதல் நல்லதன்று என அர்ச்சுனன் நினைத்தான். ஆகையால் தன் காண்டீபத்தை எடுத்துக்கொண்டு அவர்களையும் கூட்டிக்கொண்டு அஸ்தினாபுரத்திற்குச் செல்ல ஆரம்பித்தான். வழியில் காட்டுவாசிகள் அவர்களைத் தாக்கி அக்குழுவிலிருந்த பெண்களை எடுத்துச் செல்ல விரும்பினர். அர்ச்சுனன் அவர்களைத் தன் பாதுகாப்பில் நடத்திச் சென்றதால் சத்யபாமையும், ருக்மிணியும் மற்ற கோபியர்கள் அவனுடைய உதவியை நாடிக் கூக்குரலிட்டனர். அந்தச் சூழ்நிலையிலிருந்து தங்களைக் காக்கும்படி அவனை வேண்டிக் கொண்டனர். முன்பு அர்ச்சுனன் பல யுத்தங்களிலும் பங்கேற்று வெற்றி பெற்றிருக்கிறான். மகாபாரத யுத்தத்திலும், காண்டவவன யுத்தத்திலும் பெரும்பலத்தைக் காட்டியிருந்தான். பல சமயங்களில் அர்ச்சுனன் பெருந்துணிவையும் சக்தியையும் காட்டியிருக்கிறான். இந்தச் சமயத்தில் தன் காண்டீபத்தைத் தூக்கிக் குறிவைக்கக் கூட அவனால் இயலவில்லை. அப்போது அர்ச்சுனன், “என்னால் காட்டப்பட்ட பலமெல்லாம் கிருஷ்ணரால்தான். கிருஷ்ணர் இல்லாதபோது என்னால் காண்டீபத்தைத் தூக்கக்கூட முடியவில்லை” என நினைத்தான். இத்தனை வருடங்கள் தன்கரம் காண்டீபத்தைப் பிடித்திருந்தாலும் கிருஷ்ணரின் பலமே அதைப் பயன்படுத்தச் செய்தது என்பதை அவன் உணர்ந்தான். அந்தச் சமயத்தில் தன்னை மிகவும் உதவியற்றவனாக உணர்ந்தான். அத்தனை வருடங்களும் கிருஷ்ணர் அவனுடைய அந்தர்யாமியாக இருந்ததால் தன்னைப் பலமுள்ளவனாக உணர்ந்தான். ஆனால் இப்போது கிருஷ்ணர் தன்னோடு இல்லாதததால் தான் ஒரு தோற்பை என்பதை உணர்ந்தான். இதன் உட்பொருள் என்னவெனில் அவன் கிருஷ்ணரை ஒரு சாதாரண மானிட உருவில் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தவரை அவனுக்கு எல்லாப்பலமும் இருந்தது, ஆனால் அவர் அங்கு இல்லாததாக அவன் எண்ணியபோது அவன் எல்லாச் சக்திகளையும், யுத்தம் செய்வதற்குரிய விருப்பத்தையும் இழந்துவிட்டான் என்பதேயாம். கிருஷ்ணருடைய பூதவுடல் மறைந்துவிட்டதால் கிருஷ்ணரே மறைந்து விட்டதாக அர்ச்சுனன் எண்ணினான்; கிருஷ்ணருடைய பூதவுடலையும் கிருஷ்ணரையும் ஒன்றெனக் கருதும் மாயையில் ஆழ்ந்திருந்ததால் அவன் எல்லாச் சக்தியையும் இழந்துவிட்டான். ஒருவன் தன்னைப் பலவீனம் நிறைந்தவன் என நினைப்பது சரியன்று. வடிவமற்று, குணங்களற்றவராகக் கடவுளைக் கருதுவதுதான் சரியான மனப்பான்மையாகும். கடவுள் நம்முள் இருக்கிறார் என்பதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதுதான் சரியான மனப்பான்மையாகும். உருவமிருக்கும் வரை ஒருவன்

அந்த வடிவத்தை நினைப்பான் என்பது முற்றிலும் இயற்கையாகும்; ஆனால் என்றேனும் ஒருநாள் அந்த வடிவம் மறைக்கப்பட்டேயாக வேண்டும். வடிவமற்ற பரம்பொருளை ஒருமையுடன் நினைத்து ஒருருவத்தின் மேல் கொள்ளும் பற்றை விட்டுவிடுதல் நல்லது. எல்லா வடிவங்களுக்கும் உள்ள வடிவமற்ற மிகப்பெரும் சக்தியை ஒருமையுடன் நினைப்பதற்கு உதவும் வைராக்கியம் அல்லது பற்றற்ற தத்துவத்தை நமது வேதாந்தம் கற்பித்திருக்கிறது. ஜீவன் உடலை விடவேண்டும் என்பது தவிர்க்க முடியாதது; ஜீவன் உடலை விட்டுவிட்டால் உடல் ஜீவனை விட்டேயாகவேண்டும். இந்த உடல் நீர்ப்பரப்பின் மேலுள்ள ஒரு நீர்க்குமிழி போன்றதாகும். இந்நீர்க்குமிழி நீரில் பிறந்து, நீரில் வாழ்ந்து, முடிவாக நீரில் மறைகிறது. வடிவமற்ற மிகப்பெரும் சக்தியிடம் சரியான மனப்பான்மையை நாம் வளர்க்கும்போது தான் நாம் சாசுவதமான ஆனந்தத்தை அடையமுடியும்.

நாம் ஒரு பந்தை எடுத்துக் கடினமான தரையின் மீது அடித்தால், தரையின் மேல் நாம் எவ்வளவு வலுவாக அடிக்கிறோமோ, அந்த அளவுக்கு பந்து எதிரெழும்பும். கடினமான தரைக்குப் பதிலாக ஒரு சகதியான சேற்றுத் தரையின் மேல் பந்தை அடித்தோமானால் அது எதிரெழும்புவதற்கு முடியாமற்போவது மட்டுமல்லாமல், அது சேற்றுத் தரையில் மாட்டிக் கொண்டு விடவும் கூடும். அதுபோலவே, தெய்வீகத்தின் புனிதமான அம்சம் ஒரு புனிதமான இதயத்தில் பதியும்போது இதன் விளைவு இதயத்தில் பிரதிபலித்திருக்கும். மாறாக, நமக்குச் சேறு போன்ற புனிதமற்ற இதயம் இருந்தால், அத்தகைய இதயத்திற்கு எடுத்துச் செல்லப்படும் தெய்வீகம் புதைந்து மாட்டிக் கொள்ளும். ஆகையினால், ஒருவருடைய மனத்தூய்மையும், முன் மாதிரியான நல்வாழ்க்கையும் இன்றியமையாதன. உண்மையும் நேர்மையும் தம் இரு கண்களாகக் கருதப்பட வேண்டும். நம் இவ்விரு கண்களில் சுயநலம் என்ற வியாதி உள்ளது. சுயநலம் என்ற வியாதியால் கண்கள் பீடிக்கப்பட்டுள்ளதால் நாம் தூய்மையான, சுத்தமான, இதயத்தைப் பெற முடியவில்லை. இளமக்கள் மனத்தூய்மையைப் பெற வேண்டும். உண்மையையும் நேர்மையையும் பாதுகாப்பதற்கு அவர்கள் பெருங்கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். கிருஷ்ணரால் கற்பிக்கப்பட்டு எடுத்துக்காட்டப்பட்ட இலட்சியம் இதுவேயாகும். பாரதக் குடிமக்கள் கிருஷ்ணரையும், அவரது பிரேமையையும் அறிந்தவர்கள். அவர் சாசுவதமான இளமையுடம் விளங்குபவர். அவர் சாசுவதமான இளமையுடையவர் என்று சொல்வதால், இளைஞனாக இருக்கும்போது உள்ள உடலே அவருக்கு எப்போதும் இருக்கிறது என நாம் கருதக்கூடாது; அவருக்குக் கவலை இல்லை, அவர் எப்போதும் புன்முறுவல் பூக்கும் முகத்துடன் இருக்கிறார் என்னும் பொருளை இது தெரிவிக்கிறது. இந்த விதமான இன்பமும் ஆனந்தமும் ஒருவனது உடலுக்கும் ஆரோக்கியத்திற்கும் கூட இன்பத்தைத் தருகிறது. இந்நிலையில்தான் இன்பம் என்பது இறைவனுடன் ஐக்கியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உடலின் அழிவிற்கோ அல்லது உடலின் மூப்பிற்கோ நமது சொந்த நடத்தை காரணமாகிறது; நமது சொந்த நடத்தைக்கு நமது ஆசைகள் காரணமாவிருக்கின்றன. உலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆசைகளுக்காக நாம் இந்த உடலை பயன்படுத்தக் கூடாது. இன்பமும் துன்பமும் நமது உள்ளத்தில் கலைந்து செல்லும் மேகங்கள் போன்றவை. இந்நிலையில் நமது வேதங்கள் "நமது மனதைச் சந்திரனுக்கும், நமது கண்களைச் சூரியனுக்கும் ஒப்பிட்டிருக்கின்றன. நமது இதயம் வானத்தைப் போன்றது; இவ்வித ஆகாயத்தில் நமது மனம் ஆகாயத்திலுள்ள சந்திரனைப் போன்றது. நமது கண்களும் அறிவும் சூரியனைப் போன்றன" என்பதை கூட வேதங்கள் நமக்குக் கற்பித்திருக்கின்றன. நமது இதயம் என்னும் இந்த ஆகாயத்தில் அலையும் மேகங்கள் போன்றவை நமது எண்ணங்கள் எனக் கருதப்பட வேண்டும். நமது இதய ஆகாயத்தில் நட்சத்திரங்கள் போல் ஒளிவிடும் கோடிக்கணக்கான இறைவனுடைய நாமங்கள் உள்ளன. சந்திரனைப் போல நமது மனது ஒளிவிட்டால் அது சரியான சூழ்நிலையாக இருக்கும். நம் மனதுடன் ஒப்பிடப்படும் சந்திரன் பூரண நிலவாக இருக்க வேண்டும். முழு நிலவின் வடிவத்தை அடைவதற்கு மனது பயிற்றுவிக்கப்பட்டால் நமது இதயங்களைத் திருத்திச் சரி செய்வதற்கு வாய்ப்பு உள்ளது. முழு நிலவுடன் ஒப்பிடப்படும் அளவிற்கு நமது இதயத்தை உருவாக்குவதற்கு உதவும் பல

பாடங்களை இந்த மகாபாரதம் என்ற நூல் நமக்குக் கற்பித்திருக்கிறது. உங்கள் மனங்களைத் தூய்மையாக்க வேண்டும், வாழ்வை அமைப்பதற்கு வேண்டிய ஆதாரங்களாக உண்மையையும் நேர்மையையும் ஒத்துக்கொள்ள வேண்டும் என்பவனவற்றைக் கிருஷ்ணரது இலட்சியங்கள் வலியுறுத்தின. இதன் அடிப்படையில் கிருஷ்ணர் பிறந்த நாளை நாம் தீர்மானம் செய்வதும் சரியானதும் கூட. இந்தக் கணிப்புகளின் படி கிருஷ்ணர் பிறந்த நாள் கிமு. 3228 ஜூலை மாதம் 20ஆம் தேதி ஆகும். நம் பஞ்சாகத்தின் படி இந்நாள் ஸ்ரீமுக வருடம், சிராவண மாதம், பகுள பட்சம், அஷ்டமி திதி ஆகும். நட்சத்திரம் ரோகிணி ஆகும், காலம் நள்ளிரவுக்குப் பின்னால் அதிகாலை 3–00 மணி. இன்றிலிருந்து பின்னிட்டுக் கணக்கிட்டோமானால் கிருஷ்ணர் தம் பூத உடலை நீத்ததிலிருந்து 5078 வருடங்கள் ஆகின்றன. இதைச் சரிபார்க்க நாம் விரும்பினால் கி.மு.3102 உடன் 1976ஐக் கூட்டினால் 5078 வருடங்கள் ஆகும் என்பதை நாம் பார்க்கலாம். இங்கனம், கலியுகம் ஆரம்பித்திலிருந்து இப்போது 5078 வருடங்கள் ஆகியிருக்கின்றன. 5078 வருடங்களுக்கு முன்புதான் கிருஷ்ணர் தம் பூத உடலை நீத்தார். கலியுகமும் ஆரம்பித்தது. இந்நாள் கலியுகத்தின் முதல் நாளானதால் நாம் அதை யுகாதி என அழைக்கிறோம். ஆனால் கலியுகம் பிரமாதி வருடத்தில் ஆரம்பித்ததால் இந்த யுகம் முழுவதும் அபாயமும் தீமையும் நிறைந்தது எனத் தோன்றுகிறது. உண்மையில் இந்த யுகத்தைக் கலியுகம் என அழைப்பதற்குப் பதிலாகக் கலகலியுகம் என அழைப்பது சரியானதும் பொருத்தமுடையதும் ஆகும். நாம் எங்குப் பார்ப்பினும் சண்டை; ஒரு வீட்டிற்கோ, கிராமத்திற்கோ, நாட்டிற்கோ சென்றால் நாம் சண்டைகளைப் பார்க்கிறோம். கிருஷ்ணருடைய இலட்சியங்களை வாழ்ந்து காட்டி, கலியுகம் என்ற பெயருடைய இக்காலத்தை வளமுடைய காலமாக மா ற்றுவதற்கான செயல்களை இன்றைய இளம் மக்கள் செய்யவேண்டும். இரு வகையான மக்கள் இவ்வுலகில் இருக்க வேண்டும் என்பது நியதி. துன்பத்தை அறியாமல் இன்பத்தை அனுபவிக்க முடியாது. இரு துன்பங்கங்களுக்கிடையிலே இன்பம் வருகிறது. துன்பம் இல்லாமல் இன்பத்தின் பொருளை நீங்கள் ஒருபோதும் உணர முடியாது. இவ்விரு அம்சங்களும் எப்போதும் இருந்தாலும் நாம் நன்மை, இன்பம், சந்தோஷம் இவைகளை அதிகரிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நமது உடலில் ஒரு பக்கம் நல்ல இரத்தம் ஓடிக் கொண்டிருக்கும்போது அதே சமயத்தில் கெட்ட இரத்தமும் ஓடிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். நமது வீடுகளில் கூட நல்ல தூய குடிநீர் ஒரு பக்கமிருந்து கொண்டுவரப்படும்போது, இன்னொரு குழாயின் மூலம் அசுத்தமான கழிவு நீர் எடுத்துச் செல்லப்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். அவையிரண்டும் ஒரே வீட்டில் இருக்கின்றன. ஒரு கிராமத்திலோ அல்லது நகரத்திலோ சில குழாய்களின் மூலம் குடிநீர் கொண்டு வரப்படும்போது கழிவுநீரை எடுத்துச் செல்லும் குழாய்களும் இவைகளுடன் இருக்கின்றன. இரண்டும் ஒன்றே போல் புறத்தில் தூய்மையாகக் காணப்படும். அதுபோலவே நமது மனதில் எப்போதும் ஒரு விதமான ஒட்டகங்கள் இருக்கின்றன. ஒன்று நல்ல எண்ணங்களின் ஓட்டம்; இன்னொன்று தீய எண்ணங்களின் ஓட்டம். இரண்டும் சேர்ந்தேயிருக்கின்றன. ஆனால் நல்லதை ஒப்புக்கொண்டு, தீயதைத் தள்ளுவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். உலகத்தில் கிளர்ச்சிகள் இருக்கின்றன; புரட்சிகள் இருக்கின்றன. இவைகள் சாதாரணமானவை. உலகிலுள்ள அத்தகைய புரட்சிகளின் நடுவே தீயவைகளிலிருந்து நல்லவைகளை, பொய்யிலிருந்து உண்மையைப் பிரிந்து உணர்வதற்கு மனிதன் முயற்சி செய்ய வேண்டும். சமூகம் என்று நாம் அழைக்கும் தொடர்வண்டியில் இளம் மக்கள் நீண்ட பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. வழியில் உள்ள நிலையங்களில் இறங்கிவிடக்கூடிய நிலையில் இத்தொடர்வண்டியிலுள்ள நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிற மக்கள் நீங்களே. ஆகவே, இத் தொடர் வண்டியிலுள்ள குறைகளைச் சரி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நீங்கள் தயாராக இருக்கவேண்டும். இந்நாட்டிலுள்ள குறைகளைச் சரி செய்ய வேண்டி நீங்கள் இருக்கிறீர்கள்; ஆகவே உங்களை மனதில் நீங்கள் நல்லெண்ணங்களைப் பதித்துக் கொள்ளுங்கள். இன்று உங்கள் பெரியோர் செய்யும் ஒரு செயல் சரியன்று என நீங்கள் நினைத்தீர்களானால், நீங்கள் வளர்ந்தபின் அதே செயல்களைச் செய்யக் கூடாது. உங்கள் பெரியோர்கள்

செய்யும் செயல்கள் நல்லவை என நீங்கள் நினைத்தால் நீங்கள் பெரியோரானதும் அவற்றைச் செயலாக்குவதற்குத் தயாராக இருக்கவேண்டும். நம்மில் எவரும் தீய செயல்களின் விளைவுகளைப் பெறுவதற்கு விரும்பிவில்லையாயினம் தொடர்ந்து தீய செயல்களைச் செய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம். அத்தகைய தீய செயல்களின் விளைவுகளை ஒப்புக் கொள்வதற்கு நாம் விரும்புவது கூட இல்லை. நாம் எல்லோரும் நற்செயலின் விளைவுகளைப் பெறுவதற்கு விரும்புகிறோம்; ஆனால் ந ற்செயல்களைச் செய்வதற்கு நாம் தாயாராக இல்லை. நல்விளைவுகளைப் பெறுவதற்கு நீங்கள் ஒரு நல்ல செயல்களைச் செய்வதை நீங்கள் முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும். நீங்கள் பாவம் என நினைப்பதை ஒதுக்கித் தள்ள வேண்டும். அத்தகைய செயல்களின் நீங்கள் ஒரு போதும் பங்கேற்கக் கூடாது. நீங்கள் பேசும், சொல் நீங்கள் செய்யும் செயல், நீங்கள் எண்ணும் எண்ணம் இவற்றிற்க்கிடையேயுள்ள இசைவு 'தபஸ்' எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. எண்ணம், சொல், செயல் இவற்றிற்க்கிடையேயுள்ள இசைவு தான் 'தபஸ்' என்பதன் உண்மையான பொருள். ஒரு காலில் நிற்பதை 'தபஸ்' என விளக்க முடியாது எனக் கிருஷ்ணர் அர்ச்சுனனிடம் கூறினார். அதனை வெறும் தேகப்பயிற்சி எனவே கிருஷ்ணர் விவரித்தார். மகாபாரதத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள இலட்சியங்கள், கிருஷ்ணர் வாழ்ந்து காட்டிய முன்மாதிரியான இலட்சியங்கள்–இவை நமக்கு முக்கியமானவை. இளைஞர்கள் அனைவரும் தம் வாழ்வில் இவ ற்றைக் கடைப்பிடிப்பர் என நான் நம்புகிறேன்.

## பன்னிரண்டாவது கருத்துரை

### மனிதன் தன அகங்காரத்தால் குருடனாகிறான்.

அகங்காரத்தால் குருடனாகித் தன்னைச் சுற்றியுள்ள எதையும் பார்க்க இயலாதவனுக்கு வாழ்வு ஏதேனும் இனிமையைப் பயக்குமா? எந்த நன்மையையும் எப்போதும் செய்யாதவன் எளிதாக வாழ இயலுமா? பாவகரமான வாழ்வை நடத்துபவனுக்கு மகிழ்ச்சி கிடைக்குமா? எவர் நம் நண்பர்கள்? எவர் நம் எதிரிகள்? யார் கடவுள்? யார் பக்தன்? யார் ஆசிரியர்? யார் சீடன்? யார் எழுத்தாளர்? யார் நடிகன்? யார் எப்படி எப்படி என்பதைக் கண்டுபிடிக்க வழி ஏதேனும் இருக்கிறதா? புரிந்து கொள்ளும் அறிவும் சக்தியுமில்லாத ஒருவனைக் குரங்கு என அழைப்பதில் ஏதேனும் தவறு இருக்கிறதா?

ஒவ்வொருவனும் தனக்குத் தானே நண்பன். உண்மையில், தன்னுடைய அன்றாட வாழ்வில் பல பேர்களுடன் மனிதன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்கிறான். அவர்களுள் சிலர் நண்பர்கள் எனவும் சிலர் எதிரிகள் எனவும் அவன் நினைக்கிறான். சிலருடன் மேலும் மேலும் பேசிக் காலத்தைக் கழிக்க விரும்புகிறான் அவன்; மற்றவர்களுடன் சம்பாஷணையைத் தொடர்ந்து காலம் கழிக்க விரும்புவதில்லைல இத்தகைய இருமைகளாலும் மாறுபாடுகளாலும் உலகம் நிறைந்து விளங்குவதால், உண்மையில் எது தனக்கு இன்பத்தை கொடுக்கிறது, உண்மையில் எது தனக்குத் துன்பத்தைக் கொடுக்கிறது என்பதை மனிதன் தீர்மானிக்க முடியவில்லை. கிருஷ்ணர் அவதரித்த காலத்திலேயே கம்சனும் பிறந்தான். இராமர் இருந்த போது அதே காலத்தில் இராவணனும் இருந்தான். பிரகலாதன் தோன்றிய காலத்தில் ஹிரண்ய கசிபுவும் இருந்தான். இங்கனம், படைப்பில் நன்மையும் தீமையும் கலந்துள்ளபோது, நன்மை எது தீமை எது என்பதைத் தீர்மானிக்க இயலாத சூழ்நிலை எழுகிறது. இவை எல்லாவற்றின் அடிப்படை என்ன? எது எழுவாய்? எது செய்யப்படுபொருள்? இது நம்மால் அறியக்கூடாத ஒன்றல்ல. நம் சொந்த மனதில் எழும் எண்ணங்களோ இவை எல்லாவற்றிற்கும் காரணம். நம்மையும் நம் இலட்சியங்களையும் மதிப்பவர்களும், நம்

நன்மையை நாடுபவர்களும் தம் உறவினர் என்றும் தன் நண்பர் என்றும் கருதப்படுகிறார்கள். நம்மை வெறுப்பவர்களும், நம் விருப்பங்களுக்கு மாறுபடுகிறவர்களும், நமக்குத் துன்பத்தையும் இழப்பையும் உண்டாக்குபவர்களும் எதிரிகள் என்று கருதப்படுகிறார்கள். இந்நிலையில், உண்மையிலேயே நம் நண்பர்கள் யாவர் தம் எதிரிகள் யாவர் என்பதைத் தீர்மானிப்பது முடியாததாகி விடுகிறது. "நம்மை நிந்தனை செய்பவர்களுடைய கூட்டுறவை நாம் பெற வேண்டும்" என ஒரு சமயத்தில் கபீர் கூறினார். ஏனெனில், நாம் பல பாவங்களைச் செய்தாலும் அப்பாவங்களைச் சுட்டுக் காட்டும் மக்கள் தம் நிந்தனையால் அப்பாவங்களைப் போகச் செய்கிறார்கள். இந்நிலையில், யாரேனும் நம்மைக் கேலி செய்து நிந்தித்தால் அது நம் பாவ நீக்கத்தில் முடிகிறது. உண்மையில் நம் பாவங்களைப் போக்க உதவும் மக்கள் நம் நண்பர்கள் ஆவார்கள். நம்முள் பாவங்களை வளர்க்கும் மக்கள் நம் எதிரிகள் ஆவார்கள். நம்மைத் தூற்றிக் கேலி செய்வோர் நம் பாவங்களைப் போக்கும்போது நம் நண்பர்கள் என்று கருதப்பட வேண்டும். "உங்களுடைய சொந்த சித்தம்தான் உங்கள் எதிரி" என்று பிரகலாதன் தந்தையிடம் சொன்னான். "நீங்கள் அத்தகைய சக்தி வாய்ந்த யுத்த வீரர்; நீங்கள் முழு உலகத்தையும் வெல்லும் ஆற்றல் பெற்றும் உங்கள் சொந்த புலன் உறுப்புகளை வெற்றி கொள்ள முடியவில்லை" என்று அவன் கூறினான். ஆகையால், நம் புலன் உறுப்புகளைக் கட்டுப்படுத்தி வெற்றி கொள்வதில் நம்முள் நம்பிக்கை வைத்துக் கடவுளிடமும் நம்பிக்கை வைக்க வேண்டும். தன்னம்பிக்கை இல்லாதவனுக்கும், கடவுள் மேல் நம்பிக்கை இல்லாதவனுக்கும் புலன் உறுப்புகளை வெற்றி கொள்வது முடியாது. நம் புலன்களையும் உறுப்புகளையும் கட்டுப்படுத்த ஆரம்பிப்பதற்கு முன்னால் முதலாவதாகக் கடவுள் மேலும் நம் ஆத்மாபேரிலும் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். நமது புலன்களையும் உறுப்புகளையும் கட்டுப்படுத்தாமல் நம் வாழ்வை முன்னேற்ற நாம் செய்யும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியே.

இதை விளக்கச் சிறு கதையொன்றுள்ளது. ஒரு சமயம் மாலையில் இராதை மதுராவுக்குத் தனியாகவே பயணம் செய்து கொண்டிருந்தாள். இதைக் கண்ட மற்ற கோபிகைகள் அனைவரும் அவளைப் பின் தொடர ஆரம்பித்தனர். அவர் யமுனையை அடைந்தபோது இருட்டாகி விட்டது. கோபிகைகள் இராதையை எச்சரித்தனர்; அவள் மதுராவுக்கு இரவில் போகக்கூடாது எனவும், அப்படி அவள் போகவேண்டியிருந்தால் தாங்கள் அவளைப் பின்தொடர்வதாகவும் கூறினர். 'பிருந்தாவனம் எல்லோருக்கும் சொந்தம், கோவிந்தனும் எல்லோருக்கும் சொந்தம்' என்ற உணர்வுடன் அவள் அவர்களைத் தன்னுடன் இட்டுச் செல்ல இசைந்தாள். அவர்கள் எல்லோரும் யமுனையின் கரைக்குச் சென்றனர். ஒருவர் பின் ஒருவராய் முறை போட்டுக் கொண்டு படகை வலித்துச் செலுத்தினர். அதனால் எந்தத் தனி நபரும் களைப்படையவில்லை. அப்போது இருண்டிருந்தது. மற்ற பொருள்களைப் பற்றி எந்த விசேஷ கவனமும் செலுத்தாமல் அவர்கள் ஒருவர் பின் ஒருவராய்ப் படகையோட்டி வலித்தனர். இரவு முழுவதும் இவ்விதமாகப் படகை வலித்தாலும் அவர்கள் மதுராவை அடையவில்லை. பொழுது விடிந்ததும் கோகுலவாசிகளான மக்கள் நதிக்கு வந்து கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தனர். கரையில் படகைக் கம்பத்தில் கட்டியிருந்த கயிறைத் தாம் அவிழ்க்கவில்லை என்பதை அவர்கள் உணர்ந்தனர். கயிறை அவிழ்க்காமல் இரவு முழுவதும் படகைச் செலுத்தி கொண்டிருந்ததால் அவர்கள் இருந்த இடத்திலேயே இருந்தனர். படகு வலிக்கப்பட்டாலும், நீர்ப்பரப்பு இருந்தபோதிலும், படகை வலிக்கும் சக்தி அவர்களுக்கு இருப்பினும் படகு அசையவே இல்லை. படகைக் கட்டியிருந்த கயிறு அவிழ்க்கப்படாததுதான் படகு அசையாதத ற்குக் காரணம். இதுபோலவே, நமது புலன்களையும் உறுப்புகளையும் பற்றியுள்ள பந்தங்களை நீக்காமல் நாம் முன்னுக்கு வரவே இயலாது. ஆகையால், நமது புலன்களைக் கட்டுப்படுத்துவது அவசியம். இதைச் செய்வத ற்கு முன்னால் நாம் அன்பு, இரக்கம், தியாகம் – இம்மூன்றையும் வளர்க்க வேண்டும். நமது இதயத்தை இம்மூன்று குணங்களால் நிரப்பினால் அது ஒரு நந்தவனமாக மலர்ச்சியுறும். மாறாக, நமது இதயத்தை வெறுப்பு, பொறாமை, கோபம்–இம்மூன்று குணங்களால் நிரப்பிக் கொண்டால் அது துர்நாற்றமடிக்கும்

குட்டையாகி விடும். நமது இதயத்தை நந்தனவனமாக மாற்றவேண்டுமோ அல்லது துர்நாற்றமடிக்கும் குட்டையாக மாற்ற வேண்டுமா எனும் விஷயத்தை நாமேதான் ஆராயவேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் இந்த மூன்று (அன்பு, இரக்கம், தியாகம் என்னும்) குணங்களால் நிரப்பித் தன் இதயத்தை நந்தனவனமாக மாற்ற வேண்டும். உண்மையாகவே, நாம் மகிழ்வுள்ள மக்களைப் பார்க்கும்போது அவர்கள் மகிழ்ச்சியில் நாம் மகிழ்வு கொள்ள வேண்டும். நாம் துன்பத்தையும் இடர்பபாடுகளையும் கண்ணுறும்போது அவர்கள் துன்பத்தில் நாமும் பங்கேற்க வேண்டும். நாம் இந்த குணங்களை முன்னேற்ற முடியுமானால் நம் இதயத்தை நந்தவனமாக ஆக்குவோம். நாம் இரக்கம், நன்மை இவற்றைப் பெருக்கும் எல்லா முயற்சிசிளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இதுதான் 'மைத்ரி' அல்லது நல்ல தன்மை என்றழைக்கப்படுகிறது. நாம் இந்த நல்ல குணங்களை வளர்ததால் கடவுள் நமக்கு நெருங்கிருப்பார். நாம் துன்பங்களிடனிருந்தாலும், இன்பமாக இருந்தாலும், துயரத்தில் இருந்தாலும், இடர்ப்பாடுற்றாலும், எல்லாச் சமயங்களிலும் பரமாத்மாவின் பிரேமையைப் பெறும் வழியில் நம் இதயத்தை வளரச் செய்ய வேண்டும். மாறாக, பாவம் இழைக்க விரும்புதல், உற்றுக் கேட்கக்கூடாத விஷயங்களைக் கேட்க விரும்புதல், மற்றவருக்குத் துன்பம் இழைத்தல் போன்ற குணங்களைப் பெற்றல், பிறகு நீதி, நன்மை, நேர்மை முதலியவை நம் பக்கத்தில் ஒருபோதும் இராது. ஆகையால், மக்கள், அத்தகைய புனித குணங்களை வளர்க்க வேண்டும். பாண்டவர்கள் அப்படிப்பட்ட புனிதமானவர்கள்; அந்த உரிமையாலே கடவுளின் சமீபத்தில் இருக்கும் அனுபவம் பெற்றனர். பாண்டவர்களுக்கு உயிரூட்டும் மூச்சாக இருந்தவர் கிருஷ்ணர்; கிருஷ்ணருக்கு உடம்பைப் போன்று இருந்தவர்கள் பாண்டவர்கள். பாண்டவர்களைப் பொறுத்தவரை கிருஷ்ணரைப் பற்றிய உணர்வில்லாமல் ஒரு கணமேனும் இருந்ததில்லை. அவர்கள் எதைப்பார்த்தாலும், செய்தாலும் கிருஷ்ணர் அவர்களுக்குக்களித்த சக்தியினாலும் தூண்டுதலினிலுமேயாகும். இந்தக் கட்டத்தில் ஒரு சிறு நிகழ்ச்சி விவரிக்கப்படலாம். பூமிக்குத் தான் வந்த பணியை நிறைவு செய்தபின் கிருஷ்ணர் தன் பூதவுடலை நீந்துவிட்டார். இந்நிலையில் அர்ச்சுனன் கோபிகைகளைக் கோலத்திற்குக்கொணரும் காலத்து காட்டுமிரண்டிகளால் தாக்கப்பட்டான். மிகுந்த குழப்பமான நிலை; அர்ச்சுனன் தன் எல்லாச் சக்தியையும் இழந்துவிட்டான். அந்தப் பலமிழந்த நிலையில் அஸ்தினாபுரத்திற்கு எப்படியோ வந்து சேர்ந்தான் பாண்டவர்கள் உள்ளங்களில் தெய்வீக, தூய்மையான, தன்னலமற்ற கிருஷ்ணர் நாமம் இருந்ததால் அவர்கள் எதைப் பார்த்தாலும் புனிதமாகத் தோன்றியது. கிருஷ்ணர் பூவுலகில் இனி இல்லாததால் பாண்டவர்களுக்குப் பார்த்ததெல்லாம் புனிதமற்றதாகத் தோன்றியது. இன்றைய நாட்களைப் போலல்லாமல், ஒருவர் மதுராவுக்கோ துவாரகைக்கோ அன்று ஒரு செய்தியை அனுப்பவேண்டுமெனில் இலக்கை அடைய மாதங்களாகும். கிருஷ்ணரின் மறைவைப் பற்றிய செய்தி அஸ்தினாபுரத்திற்கு வந்து சேரும் முன்பே தர்மராஜா பல தீய, அம்சங்களான சகுனங்களைக் கண்டார். ஒரு நாள் மாலை அவர் வெளியே சென்று கொண்டிருந்த போது கலப்பையைத் தோளின் மேல் சுமந்துகொண்டு வீடு திரும்பும் ஓர் உழவனைக் கண்டார். வழக்கத்திற்கு மாறான இக்காட்சியை தர்மராஜா பார்த்தார். "கலப்பையை ஏன் தோளின் மேல் சுமந்து கொண்டு வருகிறாய்?" என்று கேட்டார். அதற்கு, தான் முந்திய நாள் வயலில் விட்டுவந்த கலப்பை திருடப்பட்டு விட்டதாகவும், அதனால், இன்றைக்குக் கலப்பையைத் தன்னுடன் வீட்டுக்கு எடுத்துச் செல்வதாகவும் அந்த மனிதன் பதில் அளித்தான். தர்மராஜா மிகவும் ஆச்சரியம் அடைந்தார்; மனக்குழப்பம் உற்றார்; கிருஷ்ணர் இன்னும் உயிருடன் இருக்கின்றாரா என்று சந்தேகப்பட ஆரம்பித்தார்; ஏனெனில், தன்னுடைய ஆட்சியில் நடக்கும் திருட்டுகளைத் தன்னால் விலக்க முடியவில்லையே! இன்னொரு நாள் அவர் நகரத்தில் நடந்து கொண்டிருந்தபோது ஒரு வீட்டின் கதவிலே எஃகினாலான ஒரு பெரிய தாழ்ப்பாளைப் பார்த்தார். அவர் அக்கதவுக்கருகில் சிலரைச் சந்தித்து, இந்த எஃகிலான தாழ்ப்பாள் என்னவென்று கேட்டார். மற்ற மக்களால் திருடப்படக்கூடிய சாத்தியத்தைத் தவிர்த்துப் பத்திரப்படுத்துவதற்காக இந்த எஃகிலான தாழ்ப்பாள் இருக்கிறது என அவர்கள் பதில் அளித்தனர். இதைக் கேட்ட பின்பு மேலும் மனக்குழப்பமும் ஆச்சரியமும் அடைந்தார். யுகம் மாறிக் கொண்டிருக்கிறது; இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடிய கலியுகம் வந்து

கொண்டிருக்கிறது என்று அவர் சந்தேகித்தார். இன்னொரு சமயத்தில் ஒரு சாலையின் நடுவில் ஓர் ஆணிடம் பேசிக்கொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்த்தார். இந்தக் காட்சியைக் கண்ணுற்றதும் தர்மராஜாவின் தலை சுற்ற ஆரம்பித்தது. பாரதநாட்டைச் சேர்ந்த ஒரு பெண் வீதியில் ஓர் ஆணிடம் இவ்வளவு சுதந்திரமாப் பேசுவதைப் பார்த்து பேரதிசயம் உற்றார். அத்தகைய நாட்டை ஆள்வதற்கு அவர் விரும்பவில்லை; தன்னைத் திரும்ப அழைத்துச் செல்லும்படி விரைவாகத் தன் தேரோட்டியைப் பணிந்தார். இந்நிகழ்ச்சிகளையும், சம்பவங்களையும் நாம் பார்க்கும்போது தர்மராஜாவின் ஆட்சி எவ்வளவு தார்மீகமாக இருந்தது என்பதை நாம் உணரமுடியும். இத்தகைய நிகழ்ச்சிகளிலிருந்து அவர் எவ்வளவு நல்லவராகவும் அன்புடையவராகவும் இருந்தார் என்பதைப் பார்க்க முடியும். இத்தகைய அமங்களமான நிகழ்ச்சிகளைப் பற்றிய தர்மராஜா நினைத்து கொண்டிருக்கும்போது அர்ச்சுனன் வந்து சேர்ந்தான். தர்மராஜா அர்ச்சுனனின் முகத்தைப் பார்த்தவுடனேயே ஏதோ ஒரு துக்கச் செய்தி உள்ளது என்பதை உணர்ந்தார். அர்ச்சுனன் ஊமையைப் போல் பேசமால் நின்று கொண்டிருந்தான். துக்கச் செய்தியைத் தர்மராஜாவுக்குத் தெரிவிக்க அவனால் இயலவில்லை. தர்மராஜா அர்ச்சுனனிடம் பல கேள்விகளைக் கேட்டபோது அவரால் பதில் ஏதும் பெற இயலவில்லை. ஏனெனில், அர்ச்சுனன் மிகப் பெருந்துயரத்துடன் இருந்தான்; அவன் மௌனமாக இருந்தான். அர்ச்சுனனின் வருகை குறித்தும் அவன் துயரத்தில் ஆழ்ந்திருப்பது குறித்தும் அரண்மனையிலுள்ள அனைவரும் விரைவாக அறிந்துகொண்டனர். வயதான தாயார் குந்தி அர்ச்சுனன் உடனடியாக வந்து தன்னைப் பார்க்க வேண்டும் எனச் சொல்லியனுப்பினார். அப்போது குந்தியின் வயது நூற்று எண்பதுக்கு மேல் ஆகும். அவள் தளர்ந்திருந்தாள்; ஒரு கட்டிலில் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். தம் தாயாரிட்ட கட்டளைகளைக் கேள்வி கேட்காமல் நிறைவேற்றும் பழக்கமுடையவர்களாகப் பாண்டவர்கள் இருந்ததினால் குந்தியினிடம் உடனடியாகச் சென்றனர். தந்தை, தாய், ஆசிரியர், அதிதி ஆகியோர் கடவுளாகக் கருதப்படவேண்டும் என்னும் புராதன மரபைப் பாண்டவர்கள் நன்கு அறிந்திருந்தனர். தம் வாழ்விலும் நடத்தையிலும், தம் தாயார், தம் ஆசிரியர்கள், நம்மை நாடி வந்த அதிதிகள் இவர்கள் பாலுள்ள மரியாதையை நிரூபித்துக் காட்டினர். தம் தந்தையாரிடமுள்ள மதிப்பை நிரூபித்துக்காட்டத் தந்தையார் அப்போது உயிரோடில்லை. சகோதரர்கள் குந்தியின் பாதங்களைத் தொட்டு வணங்கியதும், அர்ச்சுனனால் எழுந்திருக்கவே முடியவில்லை. ஏனெனில், அவன் அவ்வளவு துயரத்தில் ஆழ்ந்திருந்தான். கிருஷ்ணர், வசுதேவர், துவாரகையிலுள்ள மற்ற உறவினர்கள் முதலியோருடைய க்ஷேமத்தைப் பற்றிக் குந்தி பல கேள்விகளை உடனடியாகக் கேட்க ஆரம்பித்தாள். அவருடைய கேள்விகளுக்கப் பதில் சொல்ல இயலாமல், “கோபாலன் இல்லையம்மா!” என்று தர்மராஜா உடனடியாக உரக்கச் சொன்னார். குந்தி மிகவும் புத்திசாலியான பெண்மணியாவாள். என்ன நடந்திருக்கக்கூடும் என்பதை உடனடியாகவே அவள் ஊகித்து விட்டுக், ‘‘கோபாலா! கோபாலா!” எனக் கதறி உயிரை விட்டு விட்டாள். அடுத்தகணமே குந்தியின் மரணசடங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி தர்மராஜா ஆணையிட்டார். அவர் நகுலனையும், சகாதேவனையும், பீமனையும் அழைத்தார். தம் தாயாருக்கான அந்திமக் கிரியைகளைச் செய்யும்படி நகுலனும் சகாதேவனும் அனுப்பப்பட்டனர்; தம் வனவாசத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யும்படி பீமனுக்குக் கட்டளையிட்டார். நாட்டின் அரசனாகப் பரீட்சத்தை முடிசூட்டுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யும்படி அர்ச்சுனனை அழைத்துச் சொன்னார் இறந்த உடல் தன் மடியின் மீதிருந்தபோதே பரீட்சித்திற்கு முடி சூட்டுவதற்கான ஏற்பாடுகளையும், தாம் வனவாசம் செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தார். அத்தகைய துன்பம் சூழ்ந்த காலத்தில் எந்த மனிதனும் அத்தகைய செயல்களைச் செய்ய இயலாது. அத்தகைய புனிதமான ஒழுக்கத்திற்கும் முன்மாதிரியான நடத்தைக்கும் உதாரணம் காட்டும் வண்ணம் இருக்கும் மக்கள் பாண்டவர்களேயாவர். எவருக்கும் இந்தத் துணிவும், தியாகப் பான்மையும் இருந்தது கிடையாது. அந்திமகிரியைகள் செய்யப்பட்டன. புரோகிதர்கள் அழைத்து வரப்பட்டனர்; முடிசூட்டு விழா உடனடியாக நடத்தப்பட வேண்டுமென்பது அறிவுறுத்தப்பட்டது. அவர்கள் எல்லாரும் அக்காலம் மிகவும் மங்களகரமானது அன்று என்றும், முடிசூட்டுவிழாவைத் தள்ளிப்

போடலாம் என்று அபிப்ராயம் தெரிவித்தனர். ஆனால் கிருஷ்ணர் இல்லாத உலகத்தில் தான் வாழ இயலாது என்றும், உடனடியாகவே வனத்திற்குச் செல்லத் தான் விரும்புவதாகவும் தர்மர் வலியுறுத்தினார். அர்ச்சுனன், பீமன், நகுலன், சகாதேவன்—இவர்களும் அதுபோலவே கருதினர். கிருஷ்ணருடைய மறைவு உண்மையிலேயே பாண்டவர்களுடைய மரணமாகும் என்பதை அவர்கள் தெரிவித்தனர். கிருஷ்ணர் அழியாத புருஷர் என்பதால் அவர் மரணம் அடைய முடியாது என்றும், உண்மையில் இறந்தவர்கள் பாண்டவர்தாம் என்றும் அவர்கள் கூறினர். கிருஷ்ணர் பூதவடிவில் இல்லாத பூவுலகில் பாண்டவர்களால் தங்க இயலாது என அர்ச்சுனன் பண்டிதர்களுடன் விவாதித்தான். முடிசூட்டு விழாவை மரபுவழி நடத்தும்படி பண்டிதர்களைத் தர்மராஜா பல வழிகளில் கேட்டுக்கொண்டார். அங்கனம் அவர்கள் செய்யாவிட்டால் பரீட்சித்துக்கு வெறுமனே தம் கிரீடத்தைக் கொடுத்து விட்டு வனத்திற்குச் சென்று விடுவதாக அவர் வலியுறுத்தினார். பரீட்சித்தை அழைத்து வரும்படி ஆள் அனுப்பினார். பரீட்சித்து மிகச் சிறுவனாக இருந்தபோது முடிசூட்டதாகப் புராண நூல்களில் எழுதப்பட்டுள்ளது. இது உண்மையன்று. முடிசூட்டப்பட்ட போது பரீட்சித்துக்கு முப்பந்தைந்து வயது. கி.மு. **3138**—இல் மகாபாரத யுத்தம் நடைபெற்றது. அப்போதுதான் அதனையொட்டியே தர்மராஜாவின் ஆட்சிக் காலமும் ஆரம்பித்தது. அப்போது பரீட்சித்து தன் தாய் உத்தரையின் கருவில் இருந்தான். யுத்தம் முடிந்த பின் கிருஷ்ணர் துவாரகைக்குச் சென்று முப்பத்தாறு வருடங்கள் தங்கியிருந்தார். யுத்தம் கி.மு. **3138**—இல் நடந்ததாகலின், கிருஷ்ணர் தன் பூதவுடலை நீத்தது கி.மு.**3102**—இல், அதாவது, நடுவில் முப்பத்தாறு வருட இடைவெளி காணகின்றது. ஆகவே, அந்தச் சமயத்தில் முடிசூட்டப்பட்ட பரீட்சித்துக்கு முப்பத்தாறு வயது என்று தோன்றுகிறது. எனவே, அவன் நாட்டை ஆளும் தகுதி உடையவனாகவே இருந்தான். ஆனால், அவனது பாட்டனாரும், அவரது சகோதரர்களும் இருந்ததனால் நாட்டின் அரசாட்சியை ஏற்க இசையவில்லை. அந்தக் காலத்தில் புனிதமான ஒழுக்க மரபுகள் இருந்தன. தனக்கு அனுபவம் இல்லாததனால் தன்னால் ஆட்டை நன்கு ஆள இயலாது என்றும், தன்னையும் வனத்திற்கு இட்டுச் செல்லும்படியும் தன் பாட்டனாரையும், அவர் சகோதரர்களையும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். தர்மராஜாவின் பாதத்தைப் பணிந்து, எத்தனையோ பெரியவர்கள் இருக்கும்போது தனக்கு முடிசூட்டுவது சரியல்ல என்று கூறினான். பரீட்சித்து நாட்டை ஆளும் குடும்பத்தை ச் சேர்ந்தவன். அரசனாக ஆவதற்கு எல்லா உரிமைகளும் இருந்தன. ஆனால், மற்ற பெரியவர்களின் தகுதியை முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அவன் கூறத் தயங்கவில்லை. தர்மராஜா அதற்கு இசையவில்லை. நமது தேரைத் தயார் நிலையில் வைத்தார். பரீட்சித்துக்கு முடிசூட்டி விட்டு உடனே செல்ல விரும்பினார். இந்தச் சூழ்நிலை இங்கனம் வளர்ந்து கொண்டிருந்த போது திரௌபதி வீட்டை விட்டு வெளியே வந்தாள். தன்னைப் பல சமயங்களில் கிருஷ்ணர் காப்பாற்றினார் என்றும், குறிப்பாக, தன் கணவர்கள் அங்கு இல்லாதபோது கிருஷ்ணர் இல்லாமல் தான் ஒரு கணமும் வாழ விரும்பவில்லை என அவள் கூறினாள். ஓர் இலட்சியக் குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்பதை உலகத்திற்குப் பாண்டவர்கள் எடுத்துக் காட்டினார். இந்த எல்லா நிகழ்ச்சிகளையும் உற்று நோக்குங்கால் பாண்டவர்களுக்கும் கிருஷ்ணருக்குமிடையே நிலவிய உணர்ச்சி மிக்க நட்புறவின் தன்மையை நாம் பார்க்கிறோம். கிருஷ்ணரின் மறைவுக்குப் பின்னால் அர்ச்சுனனுடைய நிலையை நாம் பார்க்குமிடத்து அவன் நடைபிணமாகவே இருந்தான் என்பதையும், உயிரற்ற உடலொன்று இழுக்கப்படுவது போலத் தன் சகோதனைத் தொடர்ந்து சென்றான் என்பதையும் நாம் பார்க்கிறோம். அவன் இறந்து போன தன் தாயாரைப்பற்றிக் கூட நினைக்கவில்லை. ஒரு பைத்தியக்காரன் நடந்து கொள்வதைப்போல இடைவிடாது கிருஷ்ணருடைய நினைவிலேயே இருந்தான். நூறு வருடங்கள் யோகீச்வரனான கிருஷ்ணர் இருந்த இடமெல்லாம் மனிதர்களுக்குள் மிகச் சிறந்த அர்ச்சுனனும் இருந்தான், அவர்கள் இருவரும் ஒருசேர இருந்த இடமெல்லாம் வளமும், வெற்றியும், செல்வமும், நீதியும் நிறைந்து விளங்கின. அந்தக் காலம் எல்லாம் அவர்கள் பிரிக்க முடியாதவர்களாக வாழ்ந்தனர். அவர்கள் உடல்களிலேதான் வேறுபட்டிருந்தனர்; ஆனால் நோக்கங்கள், எண்ணங்கள், இலட்சியங்கள் அனைத்தும் ஒன்றாகவே இருந்தன. அஸ்தினாபுரத்தில்

இருந்தாலும், துவாரகையில் இருந்தாலும், கிருஷ்ணரும் அர்ச்சுனனும் இணைந்து வந்த போதெல்லாம் தாயார் குந்திதேவி ஒருபோதும் இரு வேறு தட்டங்களில் பரிமாறாமல் எப்போதும் ஒரு பெரிய தட்டத்தில் உணவு பரிமாறுவாள். கிருஷ்ணருடன் ஒரே தட்டத்தில் தான் உணவைப் பகிர்ந்து கொள்வது போல, ருக்மிணியும் அவர்கள் உண்ண ஒரே தட்டத்தில் உணவு பரிமாறத் தவறியதில்லை. அர்ச்சுனன் துவாரகைக்கு வந்தால் கிருஷ்ணரும் அர்ச்சுனனும் ஒருவருக்கொருவர் எப்போதும் உடனிருந்தனர்; கிருஷ்ணர் ருக்மிணியுடனோ, சத்தியபாமையுடனோ காலம் கழிப்பதில்லை. இதற்குக் காரணம் என்னவெனில், அர்ச்சுனன் மனிதர்கள் எல்லோரிலும் மிக உயர்ந்தவனாக இருந்தான்; கிருஷ்ணர் மிக உயந்த நிலையிலுள்ள அவதாரமாவார். அவர்கள் இருவரும் நரனையும் , நாராயணனையும் பிரதிபலிக்கும் மாதிரிகள் ஆவார்கள். சில சூழ்நிலைகளில் நரன் நாரயணனாக முடியும் நாராயணன் நரனாக பூவுலகத்தில் தோன்ற முடியும். மனிதன் இறைவனுடைய பிரேமையில் வாழும்போது, இறைவனுடைய எண்ணத்தில் ஆழும்போது, அவன் தன்னை நாராயணனாகவே ஆக்கிக் கொள்கிறான். ஆனால், எங்கும் அநீதியும், தீய எண்ணங்களும் நிலவும் போது கடவுளே அவதாரமாகப் பூமிக்கு இறங்கி வருகிறார்; மனிதன் கடவுளுடைய அருளைப் பெற்றுத் தன்னைக் கடவுளாக மாற்றிக் கொள்ளும்போது பிரம்மஞானத்திற்கு உயருகிறான் என்பதுதான் மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள உறவாகும். மனிதன் பிரம்மஞானம் பெறும்போது பிரம்மமாகவே மாறிவிடுகிறான். மாறாக, நாராயணன் மனித வடிவை எடுத்து மனித சமுதாயத்திற்கு உதவ விரும்பும்போது அவர் மனிதனைப் போலவே நடிக்கிறார். கிருஷ்ணரின் பிரிவால் துன்புற்ற பாண்டவர்கள் ஒருவருக்கொருவர் இருப்பதைக் கூடப் பார்க்காமல் போய்க்கொண்டே இருந்தார்கள். கிருஷ்ணரின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே மற்றவர்களின் இருப்பைப் பார்க்காமல் ஒவ்வொருவரும் மடிந்து வீழ்ந்தனர். அவ்வாறு அவர்கள் மரணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த போது திரௌபதி தன் எல்லாச் சக்தியையும் இழந்து விட்டாள்; தன் முடிவும் நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்; இறைவனைக் கூவி அழைத்தாள். தம் பிரபு உலகை விட்டு மறைந்த காரணமாக ஒவ்வொருவரும் கவலையுற்றிருப்பதால் அவர்கள் திரௌபதியின் துன்பத்தைப் பகிர்ந்துகொள்ள முடியாது என்று தர்மராஜா கூறினார். மிகப் பெருந்துன்பம் நேர்ந்த அக்கணத்தும் பாண்டவர்கள் கிருஷ்ணரை மட்டும்தான் நினைத்துக் கொண்டிருந்தனர். பாண்டவர்களுக்கும் கிருஷ்ணருக்குமுள்ள ஆழ்ந்த இணைப்பைப் பற்றிய பாடத்தை இது நமக்குக் கற்பிக்கிறது. பாண்டவர்கள் கிருஷ்ணரின் மேல் வைத்திருந்த தூய பிரேமையின் காரணமாக, கண்ணிமைகள் கண்களைக் காப்பதுபோல் கிருஷ்ணர் பாண்டவர்களைக் காத்து வந்தார், பாண்டவர்கள் எப்போதும் கிருஷ்ணரையே தங்கள் துணைவனாகக் கொண்டிருந்தனர். அவர்களுக்குத் துன்பம் வந்துற்ற காலத்தும், நல்லதிருஷ்டம் உள்ளபோதும் கிருஷ்ணர் அவர்களுடனே இருந்தார். அவர்கள் வனத்தில் வாழ்ந்து கொண்டிருந்த போதும் ஓராண்டு முழுவதும் அஞ்ஞாத வாசம் செய்தபோதும் கிருஷ்ணர் அவர்களுடன் இருந்தார், அவர் அவர்களுடன் எல்லாக் காலங்களிலும் உடனிருந்தார். கிருஷ்ணருக்கும் பாண்டவர்களுக்கும் உள்ள உண்மையான நட்பின் திறம் நன்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

மாறாக, இந்தக் காலத்திய மைத்ரி நட்பைப் பார்க்குமிடத்து, நன்கு தெரியும் டெரிலின் சட்டையின் பையில் பத்து ரூபாய் நோட்டைப் பார்த்து விட்டால் ஒருவன் நண்பனாகி விடுகிறான். இது காணப்படாவிட்டால் எந்த நட்பும் இருக்காது. இன்று உலகத்தில் உண்மையான நட்பின் அடையாளம் எதுவும் இல்லை. ஓர் உண்மையான நண்பன் என அழைக்கப்படக்கூடிய ஒருவனும் இல்லை. ஏரி, நீரால் நிறைந்து விளங்கும் போது தவளைகள் சுற்றிக் கூடுகின்றன; ஏரி வறண்டு விட்டால் எல்லாத் தவளைகளும் மாயமாக மறைந்து விடுகின்றன. ஒரு மனிதன் வளமையுடையவனாகவும் தன்வந்தனாகவும் இருந்தால் ஒவ்வொருவனும் அவனுடைய நண்பனாக இருக்க விரும்புவான். ஆனால், அந்தச் செல்வம் மறைந்தால் ஒவ்வொருவனும் மறைந்து விடுவான்; ஒருவனும் நண்பனாக இருக்கமாட்டான் உங்கள் எல்லா உறவினரும் சுடுகாட்டு வாசல் வரைக்கும்தான் உறவினர்களாக விளங்குபவர்கள். உங்களுடன் எல்லாக் காலங்களிலும்

தொடர்ந்து இருக்கப் போகும் ஒரே நண்பன்—தெய்வீக நண்பன்—கடவுளாவார். நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். இந்தப் புனித இலட்சியங்களிலிருந்து நீங்கள் நல்லனவற்றைக் கற்றுக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

## பதிமூன்றாது கருத்துரை

## மனிதனுடைய மனம் பைத்தியம் பிடித்த குரங்கைப் போன்றது.

அகில உலகத்தின் அடிப்படை இறைவனின் பிரேமையாகும். எல்லா வேதங்களின் சாரத்தையும் ஒருவன் மனப்பாடம் செய்ய முடிந்தாலும், மிகவும் கவரத் தக்க வழியில் கவிதைகளைப் புனைய முடிந்தாலும், அந்த மனிதனுக்குப் புனிதமான மனம் இல்லையென்றால் அவன் ஒரு பயனற்ற மனிதனாவான். இதைக் காட்டிலும் எந்தப் பெரிய உண்மையை உங்களுக்கு நான் சொல்ல முடியும்?

இன்றைய கல்வி உண்மையான கல்வியாகாது. இன்றைய கல்வி வயிறு வளர்ப்பதற்கு வகை செய்யும் வெறும் தொழில் போலாகி விட்டது. வயிறு பிழைக்க உதவும் அத்தகைய ஒரு வழியை நீங்கள் பின்ப ற்றும்போது தனிப்பட்ட சுயநலத்தையும் கூடவே வளர்க்கிறீர்கள். உண்மையான கல்வியின் நோக்கம் நன்னடத்தை, புனிதத் தன்மையும், நன்னடத்தையும் இல்லாத கல்விமுறை பயனற்றது. பலவிதமான துறைகளில் கல்வி முறைகளைப் பெறுவதில் உள்ள பயன் யாது? நீங்கள் மரணத்தை வெல்லுவதற்கான (மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வதற்கான) வழி முறையைக் காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நீங்கள் M.A., B.A., போன்ற பட்டங்களைப் பெற்றிருக்கக் கூடும். வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைமையிருக்கலாம். இவ்வுலகில் நீங்கள் பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கலாம். இவ்வுலகில் நீங்கள் பல நல்லவற்றையும் நீங்கள் பயிற்சி செய்து கொண்டிருக்கலாம். ஜபம், தவம் முதலியவ ற்றையும் நீங்கள் பயிற்சி செய்து கொண்டிருக்கலாம்; ஆனால், நீங்கள் என்ன செய்தாலும் பக்தர்களின் பக்திக்குச் சமமாக முடியாது. ஒருவன் மிகுந்த அறிவைப் பெற்றிருக்கலாம்; ஆனால் வாழ்நாள் முழுவதையும் கல்வியிலேயே செலவழிக்கலாம். ஆனால், அவன் தன்னுடைய கெட்ட குணங்களை விட முடியவில்லையென்றால், அவன் கல்விமானாக இருப்பதன் பயன் என்ன? நீங்கள் மிகுந்த நேரம் செலவு செய்து பல பொருள்களைக் கற்கலாம்; ஆனால், இதனால் உங்கள் வாழ்வில் வாதம் செய்யும் திறமையுடையவராக மட்டுமே ஆவீர்கள். நீங்கள் இப்போது பெற்றுள்ள கல்வி முறையால் முழுமையான ஞானத்தை ஒருபோதும் அடைய இயலாது. திவ்யாத்ம ஸ்வரூபிகளே! நீங்கள் நாட்டின் பாதுகாப்பு, பத்திரம், நன்மை—இவற்றை விரும்பினால், நாடு அபாயத்திற்குள்ளாகாமல் இருக்க வேண்டுமென்றால், மூன்று கருத்துக்களை விருத்தி செய்து கொள்வது உங்களுக்கு அவசியமாகிறது. அவை, நாட்டிற்குத் தொண்டு, சுயநலமில்லாத தியாகம், ஆன்மிகத்திற்கு அர்ப்பணம்—இவையேயாகும். இவற்றில் உறுதியான தீர்மானம் உள்ள இளம் மக்களைப் பயிற்றுவிக்கும் பெரிய தேவை ஏற்பட்டுள்ளது. இன்று வாழ்க்கை முழுவதும் வெறுமனே மற்றவரைப் பார்த்து பழகுவதில் இருப்பதாகத் தோன்றுகிறது. தன் சொந்த தனித் தன்மையையும், உயர்ந்த எண்ணங்களையும் மாணவன் பாழாக்கிக் கொண்டிருக்கிறான். மற்றவரைப் பார்த்துக் 'காப்பி' யடிப்பதில் ஒரு மாணவன் தன்னை அடிமையாக்கிக் கொண்டு வருகிறான்.

திவ்யாத்ம ஸ்வரூபிகளே, மாணவர்களே, சிறுவர்களே, சிறுமியர்களே! சத்ய சாயி கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் தேர்வுகளில் மதிப்பெண்களும் தகுதிகளும் பெறுவதில் மற்றவர்களை மிஞ்சி நிற்பது மட்டுமல்லாமல், தங்களைப் பற்றிய குற்றஞ்சாட்டுகள் வராமல் பார்ப்பதில் கவனம் செலுத்துவர் என நான் நம்புகிறேன். உண்மையில் தன்னுடைய நடத்தையைப் பற்றி எந்தக் குற்றச் சாட்டுகளும் பெறாமல் இருத்தல் மதிப்பெண்கள் வாங்குவதைக் காட்டிலும் மிகவும் முக்கியமானது. ஆகவே, மாணவர்கள் இந்தப் புனிதமான

குணத்தைப் பெறுவர் என்றும், கட்டுப்பாடு, பக்தி, கடமை என்ற முக்கியமான தேவையை மனதில் இருத்தி நாட்டிற்கு உழைக்கவேண்டும் என்றும் நான் விழைகின்றேன். இன்று மாணவர்களுக்காக இருந்து M.A., M.Com., Ph.D. போனற் பலவிதமான பட்டங்களைப் பெற்றுக் கொண்டு "வீதிப் பிச்சைக்காரர்கள்" என்னும்படியான உணர்வைக் கொடுக்கும் உடைகளை அணிகின்றனர். இன்றைய மாணவர்கள் இந்தப் பாரதப் பெரும் நாட்டின் குடிமக்கள் என்று தம்மை அழைத்துக்கொண்டாலும், பிச்சைக்காரர்களைப் போலவும், ஹிப்பிகளைப் போலவும் வீதிகளில் அலைகிறார்கள். சத்ய சாயி மாணவர்கள் தங்கள் நடத்தையை முன்மாதிரியாக விளங்க வேண்டும்; அவர்கள் மேற்கூறிய வாழ்க்கை முறையை முற்றிலும் ஒழிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். நீங்கள் நற்குணங்களை வளர்த்து மற்றவர்களுக்கு முன்னோடிகளாக விளங்குவீர்கள் என நான் நம்புகிறேன். உங்களைப் பற்றியும், உங்கள் நற்குணங்களை வளர்த்து ம ற்றவர்களுக்கு முன்னோடிகளாக விளங்குவீர்கள் என நான் நம்புகிறேன். உங்களைப் பற்றியும், உங்கள் ந ற்குணங்களைப் பற்றியும் நாடு பெருமையுற வேண்டும். வெறும் பட்டத்தைப் பெற்றுவிட்டு அடிமையைப் போல் மற்றவர்களைப் பின்பற்றுவதற்குத்தான் படிக்கிறீர்கள் என நீங்கள் நினைக்கக் கூடாது. உங்கள் நாட்டி ற்குப் புகழ் தரும் விதத்தில் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். மற்றவர்களை எப்போதும் அடுத்து நிற்கும் எளிய மக்களைப் போலல்லாமல் உங்கள் உழைப்பால் வாழ்வதற்கு உதவும் கல்வியை நீங்கள் பெற வேண்டும். பட்டம் என்னும் பிச்சைப் பாத்திரத்துடன் பிச்சைகாரர்களாக ஆகி வேலை தேடி ஒரு காரியாலயத்திலிருந்து மற்றொரு காரியலத்திலிருந்து அலையக்கூடாது. உங்கள் தாயாரும், தந்தையாரும் உங்களை வளர்த்திருக்கிறார்கள். ஒரு மாணவன் என்ற முறையில் உங்கள் பெற்றோர்களுக்கு மரியாதை செலுத்தி நன்றியுணர்வைக் காட்ட வேண்டும். இதைச் செய்ய முடியாத மாணவர்கள் தாய்நாட்டிற்கு எங்கனம் நன்றியுணர்வைக் காட்ட முடியவில்லையென்றால் நீங்கள் தாய்நாட்டிற்கு என்ன தொண்டு செய்ய இயலும்? எல்லாச் சமயங்களையும் சமநோக்கோடு பாவிக்கும் வண்ணம் சத்ய சாயி சங்கங்கள் இருக்க வேண்டும். ஒரே ஒரு சமயமே உள்ளது; அது அன்பு சமயம். ஒரே ஒரு சாதியே உள்ளது; அது மனித சமுதாயம் என்னும் சாதி. ஒரே ஒரு கடவுளே உள்ளார்; அவர் எங்கும் நிறைந்துள்ளார். ஒரே ஒரு மொழியே உள்ளது; அது உளங்கனிந்த அன்பு மொழியாகும். நீங்கள் இந்த உண்மையை உணர வேண்டும்; இதை உலகத்தில் பரப்புவதற்காகத் தயாராக இருக்கவேண்டும். நீங்கள் எந்தச் சமயத்தை, அல்லது இனத்தை, அல்லது சமுதாயத்தைச் சார்ந்தவராக இருப்பினும் கவலையில்லை. ஆனால், உங்கள் தாயாரையும், தந்தையாரையும் தெய்வமாக மதிக்க வேண்டும் என்னும் அடிப்படைத் தத்துவத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த கொள்கை உங்கள் உள்ளங்களில் ஆழமாகப் பதிக்கப்பட வேண்டும். கடவுள் உணர்வு இல்லாத மனிதன், மனிதன் அல்லன் என்று நேற்று உங்களுக்கு கூறப்பட்டது. மனித உணர்வு இல்லாமலேயே கடவுள் எப்போதும் கடவுளாகத்தான் இருக்கிறார்; இதன் பொருள் என்னவெனில், மனிதன் இல்லாவிட்டால் கூடக் கடவுள் கடவுளாகவே இருக்கிறா; ஆனால் கடவுளுணர்வற்ற மனிதன் மனிதத்தன்மை இல்லதவன் என்பதேயாகும்; இரக்கமின்றி மனிதன் அரக்கனாகி விடுகிறான். திவ்யாத்ம ஸ்வரூபிகளே! மிருகங்களும் பறவைகளும் கூடத் தமக்கான உணவைச் சாப்பிடுகின்றன. அவைகளின் குட்டிகளையும், குஞ்சுகளையும் காப்பாற்றுகின்றன. இது போன்ற மற்ற காரியங்களையும் செய்கின்றன. மிருகங்கள் செய்யும் செயல்களிலிருந்து வேறுபட்ட தனித்த செயல்களை மனிதர்கள் செய்தாலேன்றித் தங்களை மனிதர்கள் என்றோ, கல்வி பெற்றவர்கள் என்றோ அழைத்துக் கொள்வதில் என்ன பயன் இருக்கிறது? மிருகங்களிலிருந்து நாம எந்த வகையிலும் வேறுபடவில்லையென்றால் நாம் எதற்காகக் கல்வி பெறவேண்டும்? கல்வி பெற்ற மனிதர்கள் மிருகங்களைப் போல் ஒழுகுவதை நாம் பார்க்கிறோம். சில வழிகளில் வீதி நாய்களைப் போன்று வாழும் வாழ்க்கை முறையை மாணவர்கள் ஏன் கடைப்பிடிக்கவேண்டும்? வாழ்வில் 'வளமை' என்பது என்ன பொருள் உடைந்தது என்ற முதல் கேள்வியைத் தங்களுக்குத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும். ஒரு மகாராஜாவால் அனுபவிக்கப்படும் இன்பமும் ஆனந்தமும் வீதியிலுள்ள ஒரு நாயாலும் அனுபவிக்கப்படுகிறது. இதனால் ஒரு நாயும், ஒரு மகாராஜாவும்

ஒரே மாதிரிதான் என்று கூற முடியுமா? இது சரியல்ல. வாழ்க்கைக்கு வேண்டியவற்றைச் சம்பாதிப்பதற்கு மட்டும் மனிதன் பிறக்கவில்லை. மிருகங்களும் பறவைகளும் மற்ற உயிரினங்களும் கூட உணவைச் சாப்பிடுகின்றன. எவ்விதமான பிரத்தியேக முயற்சிகளை மிருகங்கள் செய்து கொண்டுள்ளன? எதுவுமில்லை. அவை பயிர்களை வளர்ப்பதில்லை; அப்போதைக்கப்போது தமக்கு வேண்டியவற்றைத் தேடிப் பெறுகின்றன. நீங்களும் உணவைத் தேடுவதிலேயே உங்கள் வாழ்வு அனைத்தையும் செலவிட்டால் என்ன பயன்? இது நிச்சயமாக உங்கள் வாழ்வின் நோக்கமாக இருக்கமுடியாது. அன்றாட வாழ்வை நடத்துவதற்கு வேண்டிய தேவைகள் ஒரு சிலதான். ஆனால், இந்தத் தேவைகைளைப் பூர்த்தி செய்வதில் மனிதன் செலவிடும் காலமானது தேவையைக் காட்டிலும் மிக மிக அதிகமாக இருக்கிறது. காலம் என்பது கடவுளாகும். ஆகவே, காலத்தை வீணடிக்கக்கூடாது. காலத்தை வீணடிப்பது வாழ்வை வீணடிப்பதற்கு ஒப்பாகும். நாம் காலத்தைச் சேமிக்க வேண்டும்; சேமிக்கப்பட்ட காலமானது ஒரு நல்ல நோக்கத்திற்காகச் செலவிடப்பட வேண்டும்; நமது நாட்டின் கலாச்சாரத்தைப் புனருத்தாரணம் செய்வதற்காகச் செலவிடப்பட வேண்டும்; நமது நாட்டின் கலாச்சாரத்தை புனருத்தாரணம் செய்வதற்காகச் செலவிடப்பட வேண்டும். இன்று ஒரு புதிய சமுதாயத்தையும், ஒரு புதிய கலாச்சாரத்தையும் அமைக்கப் போவதாக நாம் பேசுகிறோம். இது காலத்தை மிகவும் வீணடிப்பதாகும். புராதன கலாசாரம். புராதான சமுதாயம்—இவைகளில் கு ற்றங்களிலிருந்தால அவைகளைப் புரிந்து உணர்ந்து கொண்டால்தான் ஒரு புதிய சமுதாயத்தையும், ஒரு புதிய கலாச்சாரத்தையும் ஸ்தாபிப்பதற்கான உரிமையை நாம் பெறுவோம். நினைவிற்கெட்டாத காலத்திலிருந்து கோடிக்கணக்கான மக்களால் நமது நாட்டின் கலாசாரமும் வழி மரபுகளும் போற்றப்பட்டுப் புகழப்பட்டு வருகின்றன. அத்தகைய வழி மரபுகளும் போற்றப்பட்டுப் புகழப்பட்டு வருகின்றன. அத்தகைய வழி மரபுகளைப் பயனற்றவைகளாகக் கருதி, ஒரு புதிய சமுதாயத்தாலும், ஒரு புதிய கலாச்சாரத்தாலும் பயனடைய எண்ணி மாற்றுவது முட்டாள்தனமான ஒன்றாகும். இவ்விதமான குறிக்கோள் முறை சுயநலம் நிறைந்ததாகும்; தனிப்பட்ட சுய நலத்தைப் பெருக்குவதற்கு நாடும் ஒரு விருப்பமாகும். இது சமுதாயத்தின் தன்மையைக் குறிக்கோளாகக் கொண்டதல்ல. நாட்டின் இளைஞர்கள் நமது புராதன கலாச்சாரத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கு முயல வேண்டும். உங்கள் வாழ்வு புனிதமானது, உங்கள் வயது புனிதமானது. பதினாறு வயதுக்கும் முப்பத்திரண்டு வயதுக்கும் இடைப்பட்ட காலம் பொன்னான காலம். உங்கள் வழியில் வரும் தடைகளை வெற்றி காணவும் உங்கள் செயல்களையும், எண்ணங்களையும் கட்டுப்படுத்தவும் உங்களுக்குச் சக்தியுள்ள வயது இது. இந்த வயதில் நீங்கள் கோபமுற்றால், பொறாமைப்பட்டால், உணர்ச்சி வசப்பட்டால், உங்கள் கோபம், பொறாமை, உணர்ச்சி—இவைகளைக் கட்டுப்படுத்த உங்கள் சக்திகளைப் பயன்படுத்த வேண்டும். இந்த வயதில் உங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த உங்களுக்குச் சக்தியிலையென்றால், முதுமையில் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த எப்படி சக்தியடையப் போகிறீர்கள்? தன் மனதில் படரும் ஒவ்வொரு தீய கொள்கையையும் எண்ணத்தையும் ஒவ்வொரு இளம் மாணவனும் உணர்ந்து அதை முற்றிலும் நீக்குதல் அவனுடைய கடமை. மனது ஒரு பைத்தியம் பிடித்த குரங்கைப் போன்றது; நீங்கள் அதனிடம் சரணடையக்கூடாது. நீங்கள் உங்கள் மனதைக் கட்டுப்படுத்தி உங்கள் வசம் வைத்திருக்க வேண்டும். உங்கள் மனதில் படரும் எல்லா ஆசைகளுக்கும் இணங்குவதற்கு நீங்கள் தயாராக இருக்கக்கூடாது. ஓர் எண்ணம் உங்கள் மனதில் உண்டானவுடனேயே அது நல்ல எண்ணமா தீய எண்ணமாக என்பதை நீங்கள் ஆராய வேண்டும். உதாரணத்திற்குத் துணியொன்றைப் பார்ப்போம். உண்மையில் அது நூலிழைகளின் தொகுப்பேயாகும். அதை இன்னும் கவனமாக நீங்கள் ஆராய்ந்தால் அது வெறும் பஞ்சு என்று சொல்வீர்கள். முதல் நிலை பஞ்சு, இரண்டாம் நிலை நூல், முடிவான நிலை துணி. நீங்கள் இந்தத் துணியை விரும்பாவிட்டால் என்ன செய்வீர்கள். இந்த நூலிழைகளின் ஒன்றன்பின் ஒன்றாகக் களைத்தால் அங்குத் துணி இருக்காது. அதுபோலவே மனதிற்கு ஒரு குறிப்பிட்ட வடிவம் கிடையாது. அது வெறும் ஆசைகளின் தொகுப்பேயாகும். பஞ்சுத் துணியோடு ஒப்பிடவல்ல உங்கள் மனதின் எண்ணங்களிலிருந்து ஆசைகளே உண்டாகின்றன. இங்கனம் இந்த உவமையில் மூன்று நிலைகள்

என்னவென்றால்; பஞ்சு—எண்ணங்ள, நூல்—ஆசைகள், துணி—மனது. ஆகவே இயன்ற வரை இந்த ஆசைகளைக் குறைக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் இந்த ஆசைகள் பளுவான சுமையைப் போன்றவை. இளைஞர்களுக்கு வாழ்க்கைப் பயணம் மிக நீண்டதொன்றாகும். உங்கள் பயணத்தை வசதியானதான நீங்கள் ஆக்க விரும்பினால், உங்கள் சுமையைக் குறைக்க வேண்டும். ஆசைகளின் தொகுப்பே உங்கள் சுமையாகும். பழைய தலைமுறையில் ஒரு எண்பது வயது கிழவன் கூடப் பெற்றிராத அளவுக்கு ஆசைகள் இன்று இளம் மக்கள் மனதில் புகுந்துள்ளன.

நான் ஒரு சிறு உதாரணத்தை இங்குக் கொடுக்க விரும்புகிறேன். பலவிதமான மக்கள் பலர் சுவாமியிடம் வருகிறார்கள். அவர்களுக்குப் பல்வேறு விதமான கொள்கைகளும் எண்ணங்களும் இருக்கின்றன. இவர்களில் பதினாறு வயதுள்ள ஒருவன் இருந்தான். நான் அவனுக்கு "இண்டர்வியூ" அளித்தபோது அவன் மிகவும் தளர்ந்து துக்கமாகத் தோற்றமளித்தான்; பல எண்ணங்களோடு கவலையாக இருந்தான். "நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?" என நான் கேட்டேன். தான் படிக்கவில்லையென்றும், படிப்பை நிறுத்தி விட்டதாகவும் அவன் சொன்னான். அப்போது அவனை, "வேறு ஏதேனும் தொழில் செய்கிறாயா?" என நான் கேட்டேன். தான் மனோதிடம், ஏகாத்ர சிந்தனை எல்லாவற்றையும் இழந்து விட்டதாக அவன் சொன்னான். கடந்த ஆறு மாதங்களாகத் தன் வாழ்வு பொருளற்றதாகவும் வெறுப்பூட்டுவதாகவும் இருப்பதாக அவன் சொன்னான். கடந்த ஆறு மாதங்களாக அவனைத் தளரவைத்தது என்ன என்று நான் கேட்ட போது, தன் இரண்டாம் மனைவி ஆறு மாதங்களுக்கு முன்பு தன்னை விவாகரத்து செய்துவிட்டதாக அவன் சொன்னான். அவன் வயதை பார்க்கும் போது , அவனுக்குப் பதினாறு வயது கூட நிரம்பவில்லை; ஆனால் தன்னுடைய இரண்டாம் மனைவி தன்னை விவாகரத்து செய்து விட்டதைப்பற்றி அவன் பேசுகிறான். அவனுடைய இரண்டாம் மனைவி அவனை உயிரோடு எரித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமளவுக்கு அவனுடைய வாழ்வு அவ்வளவு பரிதாபகரமாக இருக்கிறது. அத்தகைய ஈன வாழ்க்கை நாய்களுக்கே உரித்தானது. நாம் அத்தகைய வாழ்வு வாழக்கூடாது. 'நமது பண்பாடு மிகப் புனிதமானது, நமது பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கும்படி சொல்லுகிறது' என்பதைப் பற்றி நாம் பெருமைப்பட வேண்டும். உங்கள் 'உள்ள அழகே' முக்கியமானதாகும். உடலின் புற அழகு முக்கியமானதே அன்று. உங்களுக்குத் தூய, சுத்த உள்ளம் இருந்தால் உலகத்தைச் சுத்தம் செய்வதற்கு உங்களுக்குச் சக்தி வந்துவிடும். தம் பெற்றோர்களை மதிப்பதற்கு இளைஞர்கள் இக்காலத்துத் தயாராக இல்லை. ஏன் ஒருவன் தன் பெற்றோர்களை மதிக்கவேண்டும் என்று நீங்கள் கேள்வி கேட்கலாம். எப்போதும், நீங்கள் எந்தச் செயலை மேற்கொண்டாலும் எதிர்காலத்தில் அவற்றின் பிரதி விளைவுகள் உங்களுக்கு வரும். உங்கள் பெ ற்றோர்கள் உங்களுக்குச் செய்துள்ள அனைத்துக்கும் அவர்களை மதிக்கவேண்டுவது உங்கள் கடமை. இன்று உங்கள் பெற்றோர்களுக்கு நீங்கள் மரியாதை காட்டினால், பிறகு நீங்கள் தாய தந்தையராகும்போது உங்கள் குழந்தைகள் உங்களை மதிப்பார்கள். இப்போது உங்கள் பெற்றோர்களை நீங்கள் துன்பமுறச் செய்தால், பதிலுக்கு உங்களுக்கு உங்கள் குழந்தைகள் அதே மாதிரி செய்வார்கள்; கண்ணீர் உங்கள் கண்களில் பெருகும். ஒரு மாணவன் எதிர்காலத்தில் சந்தோஷமான, பத்திரமான வாழ்க்கையை நடத்த விரும்பினால் இப்போது அவன் நல்ல வாழ்வை ஏற்று நடத்தவேண்டும். இதற்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புனிதமான நல்ல பழக்கங்களைக் காண்பிக்க வேண்டும். ஆசிரியர்களிடையே, தீய பழக்கங்கள் இருப்பின் மாணவர்களும் தீய பழக்கங்களை ஏற்பர். இந்த மிருதுவான உள்ளம் கொண்ட இளம் மாணவர்கள் ஆசிரியர் கரங்களில் ஒப்படைக்கப்படும்போது, ஆசிரியர்கள் நல்ல பழக்கங்களையும் சரியான எண்ணங்களையும் கடைப்பிடிப்பதற்குத் தீர்மானமாயிருக்க வேண்டும். ஒரு மாணவன் தீயவனாக இருந்தால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாழடிக்கப்பட்டு விடுவார்கள். ஆகவே, முதலில் ஆசிரியர்கள் நல்ல பழக்கங்களைப் பெற வேண்டும். உண்மையில் நல்ல மாணவர்களே ஆசிரியர்களைப் போன்றவர்கள். இன்று, மாணவர்கள் ஓரிரண்டு வருடங்கள் மாணவர்களாக

இருப்பார்கள்; அதற்குப் பிறகு அவர்கள் சென்று ஏதேனும் வேலையை ஏற்கிறார்கள். பிறகு மீண்டும் மாணவர்கள் புத்தகங்களைத் தொடப்போவதில்லை. ஆனால் ஆசிரியர்கள் அதுபோல இருக்க முடியாது. தம் வாழ்நாள் முழுவதும் அவர்கள் புத்தகங்களோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஆசிரியர்கள் எந்த இடத்திலும் முன்கோபத்தையோ பொறாமையோ காட்டக்கூடாது. அத்தகைய ஆசிரியர்கள் இருந்தால் மாணவ சமுதாயம் தீயவழியில் செல்வதற்கு ஆசிரியர்களே காரணம் என்று சொல்வது சரியாகும். வரப்போகும் வருடங்களில் நீங்கள் உணரவேண்டிய பல விஷயங்கள் உள்ளன. உங்கள் கொள்கைகள், எண்ணங்கள், நடத்தை – இவை தீய வழியில் போவதற்குப் பெருமளவிற்குத் திரைப்படங்கள் காரணமாகின்றன. இத்துடன், பெற்றோர்கள் திரைப்படங்களைப் பார்ப்பதால் இந்த கெட்ட எண்ணங்கள் அவர்களது மாணவப் பிள்ளைகளுக்கும் வருகின்றன. புனிதமான பாகவதக் கதையில் இதற்கு ஓர் உதாரணமும் உள்ளது. கிருஷ்ணர் வீட்டில் இல்லாதபோது அர்ச்சுனன் சுபத்திரையிடம் சென்று பத்மவியூகத்தைப் பற்றி அவளுக்குச் சொல்லிக்கொண்டிருந்தான்.அந்தச் சமயத்தில் கிருஷ்ணர் உள்ளே வந்தார். அர்ச்சுனனால் சொல்லப்பட்டதெல்லாம் உண்மையில் சுபத்திரையின் கர்ப்பத்திலிருந்த குழந்தையால் கவனமாகக் கேட்கப்பட்டது என அர்ச்சுனனிடம் கூறினார். இந்த ஆரம்பப் பாடத்தால்தான் அர்ச்சனனுடைய மகன் பத்மவியூகத்தில் நுழைந்தான். ஆனால், வியூகத்தை நுழையும் முறையை மட்டும்ந்தான் அவன் கர்ப்த்தினின்று தெரிந்திருந்தான். இதைக் கருத்திற்கொண்டு, கர்ப்பமுற்ற பெண்கள் புனிதமான நன்மையான கதைகளை மட்டும் கேட்கவேண்டும் என்பது நம் வழி மரபாக இருக்கிறது. கர்ப்பமுற்று ஐந்து மாதங்களானதும் புனிதக் கதைகளைச் சொல்லுதலும், மகிழ்ச்சிகரமான விழாக்கள் ஏற்பாடு செய்தலும் வழக்கம். துரதிருஷ்டவசமாக இன்று, பல திரைப்படங்களைக் கர்ப்பமுற்ற பெண்கள் பார்ப்பது வழக்கமாகிவிட்டது. அவர்களுக்குத் திருப்தியளிக்கும் வண்ணம் வீட்டிலுள்ளவர்கள் ஒரு நாளுக்கு இரண்டு அல்லது மூன்று திரைப்படங்களைப் பார்க்க இட்டுச் செல்கிறார்கள். நன்னடத்தையைக் கொண்டிராத, அநீதியான திரைப்படங்களைப் பார்த்துக் கர்ப்பத்திலுள்ள குழந்தைகள் கூட அத்தகைய எண்ணங்களையே பெறும். தாயின் கர்ப்பத்திலேயே இளம் குழந்தை அத்தகைய தீய எண்ணங்களைப் பெறுகிறது. அது பெரிதாக வளர்ந்ததும் இந்தத் தீய தன்மைகளை அதிகரிக்கச் செய்ய ஆரம்பிக்கிறது; தீமையிலிருந்து இன்னும் பெருந்தீமைக்கு வளர்கிறது. துரதிருஷ்டவசமாக புனிதமான வழி மரபுகளைப் போற்றும் நோக்கமுள்ள திரைப்படங்கள் அரிதாகி வருகின்றன. செய்வதறியாத இளம் மக்கள் இந்தத் தீய படங்களைச் சென்று பார்க்கிறார்கள். நீங்கள் பண்டைய சரித்திரத்தைத் திரும்பிப் பார்த்து இந்தியப் பெண்களின் புனிதத்தன்மையை நோக்கினால் அவர்கள் பெருமையை நீங்கள் உணர்வீர்கள். நாட்டிலுள்ள சிறந்த பெண்மணிகளின் புனித சரித்திரத்திலிருந்து கற்பிப்பதற்குப் பதிலாக நாட்டின் வீதிகளிலே நம்பெண்டிரை விற்பனைக்கு வைக்கிறோம். கழிந்த காலமனைத்தும் நமது பெண்டிரின் புனிதத்தன்மையைப் பாதுகாக்கும் வண்ணம் நமது பண்பாடும் வழி மரபுகளும் அமைந்திருந்தன. அத்தகைய பண்பாடு நம்மால் புறக்கணிக்கப்பட்டு மறக்கப்பட்டு விட்டது. நமது இந்தப் புராதனப் பண்பாட்டைப் புனருத்தாரணம் செய்ய ஸத்ய ஸாயி கல்லூரி மாணவர்கள் உறுதி கொள்வர் என நான் நம்புகிறேன். நமது வாழ்வை நடத்துவதற்கு நமக்குப் பொருளியல் கல்வி தேவை என்பதை நாம் சந்தேகிப்பதில்லை; நமது ஆன்மாவை உயர்த்தி நல்ல வாழ்வை நடத்ததில்லை; நமது ஆன்மாவை உயர்த்தி நல்ல வாழ்வை நடத்த நமக்கு ஆன்மிகக் கல்வியும் அவசியம். நாம் பெற்ற கல்விக்கேற்ற வாழ்வை நாம் நடத்துவதற்கான நமக்குச் சரியான விதமான பண்பாடும் தேவை. தேவையான பண்பாடில்லாத கல்வி சுண்ணத்தூளைப் போன்றது. நமது பண்பாடு மின்னோட்டத்தைப் போன்றது. அதை மின்சக்தியின் "பாஸிடிவ்" (நேர் துருவம்) என அழைக்கலாம். மின் சக்தியின் "நெகடிவ்" (எதிர் துருவம்) போன்றது நமது கல்வி. பாசிட்டிவ்வும் நெகடிவ்வும் ஒன்று சேர்ந்தாலொழிய மின்சக்திக்குப் பயனிருக்காது; அதுபோலப் பண்பாடும் கல்வியும் சேர்ந்தாலொழிய நற்பயன் கிட்டாது, நமது புனிதமான பாரதீயப் பண்பாடு கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இன்று நாம் பார்ப்பதுபோல், இளம் ஆரம்பப் பள்ளி குழந்தைகள் புகை பிடித்தல், குடித்தல், சீட்டு விளையாடுதல்—

இவைகளுக்கு அடிமையாகும் நிலை இருந்தால், அத்தகைய சிறுவர்களை நாம் மனிதர்கள் என்றழைக்க முடியுமா? மனிதன் மது அருந்துகிறான் என்பது முதல் படி; மது மதுவை மேலும் அருந்துகிறது என்பது இரண்டாம் படி; மது மனிதனை அருந்துகிறது என்பது மூன்றாம் படி. நமது மாணவர்கள் அத்தகைய தீய பழக்கங்களை ஒருபோதும் கடைபிடிக்கக் கூடாது. மாறாக, நமது மாணவர்கள் அத்தகைய தீய பழக்கங்களை ஒழித்து நாட்டின் நல்ல உதாரணங்களைத் தங்களைக் காட்டிக் கொள்ள வேண்டும். இந்த விதமான தீய பழக்கம் ஒரு மனிதனையும் அவன் வாழ்வையும் முற்றிலும் அழித்து விடும். இந்தத் தீய பழக்கங்களினால் நமது மரியாதை மறைகிறது. 'மனிதன்' என்னும் நமது பேருக்கு ஏற்ற வண்ணம் நம்மையே நாம் நன்முறையில் நடத்திக் கொள்ள வேண்டும். "தன் அறியாமையை நீக்கும் வண்ணம் தானே நடந்து கொள்பவன்" என்பது 'மனிதன்' என்னும் நமது பேருக்கு ஏற்ற வண்ணம் நம்மையே நாம் நன்முறையில் நடத்திக் கொள்ள வேண்டும். "தன் அறியாமையை நீக்கும் வண்ணம் தானே நடந்து கொள்பவன்" என்பது "மனிதன்" என்பதன் பொருள். இந்நிலையில், அறியாமை என்னும் குருட்டுத் தன்மையைக் காட்டிலும் மரணம் மிகவும் இனிமையானது எனச் சொல்லப்பட்டிருக்கிறது. தொண்டினாலும் தியாகத்தாலும் பெரியவர்களிடம் நமக்குள்ள மதிப்பு காட்டப்படவேண்டும். உங்களுக்கு இரண்டே உடைகள் இருக்கலாம்; ஆனால் நீங்கள் துவைத்துச் சுத்தமாக அணிய வேண்டும்; அப்போது நீங்கள் மதிப்பைப் பெறுவீர்கள். மாறாக, மாணவர்கள் ஒரு புது ஜோடி 'பேண்ட்' டைச் சென்று வாங்குகிறார்கள்; சில இடங்களில் அவைகளை வெட்டி ஒட்டுப் போடுகிறார்கள். அத்தகைய மனிதன் முற்பிறவியில் பிச்சைக்காரனாக இருந்திருக்க வேண்டும்; தற்போதைய வாழ்விலும் அங்கனமே தொடர்ந்து பிச்சைக்காரனாகவே இருக்கிறான். மாணவர்களில், சிலர் சோம்பேறிகளாகி வருகிறார்கள். அத்தகைய சோம்பேறி மனிதன் நாட்டி ற்கு என்ன நன்மை செய்யப் போகிறான்? தொடர்ந்து பல நாட்கள் குளிக்காத மாணவர்கள் பலர் இருக்கிறார்கள். அத்தகைய மாணவர்கள் எத்தகைய நற்செயல்களுக்கு எடுத்துக்காட்டாவர்? அவர்கள் நாட்டிற்குச் செய்ய முடிவது என்ன இருக்கிறது? சோம்பேறித்தனம் துருவும் தூசியும் ஆகும்; அநுபூதியோ சிறந்ததும் அமைதியும் ஆகம். இச்செயல் நன்மையா தீமையா என ஒவ்வொருவரும் தானே நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு மாணவன் நம்மை நெருங்கினால், அவனிடம் துர்நாற்றமுள்ளதால் நாம் தூரத்தில் தள்ளி நிற்கவேண்டிய துரதிருஷ்டமான சூழ்நிலை இன்று உருவாகியிருக்கிறது. கல்வி பெற்ற மாணவர்கள் நாட்டின் நன்மைக்கான சாதனங்களாகத் தம்மை மாற்றிக் கொள்ளவேண்டும். மாணவர்கள் இருக்குமிடங்களெல்லாம் தற்போது குழப்பமுள்ளது. மாணவ சமுதாயத்திற்கு இது அவமானமாகும். இந்த இருண்ட கறையைப் போக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். எளிமையான வழியில் உங்கள் நாட்டிற்குச் சேவை செய்ய நீங்கள் உறுதி பூண வேண்டும். அப்போதுதான் உங்கள் கல்வியின் நன்மையை எடுத்துக் காட்ட உங்களால் முடியும். நீங்கள் மற்றவர்களுக்கும் தொண்டாற்ற வேண்டும். எப்போதும் தலைமையை நாடாதீர்கள். பணியே வழிபாடு, கடமையே கடவுள். பணியும் வழிபாடும் உங்கள் இரண்டு கண்கள். இவ்விரண்டு கண்களால் உங்கள் வாழ்வை நீங்கள் நடத்த வேண்டும். மாணவர்களே! உங்களுக்குப் புனிதமான, மிருதுவான இதயம் இருக்கிறது. நீங்கள் இளைஞர்கள்; நீங்கள் சென்று அரசியலில் இறங்காதீர்கள். நீங்கள் பெரியவர்களாக வளர்ந்து சிறிது அனுபவம் அடைத்த பின்பு அரசியலில் இறங்கி நாட்டிற்குச் சேவை செய்ய முடியும். உங்கள் கல்விக்குத் தடையுண்டாக்காத பாதையை நீங்கள் மே ற்கொள்ள வேண்டும். நீங்கள் கல்வி கற்கும் பாதையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். நீங்கள் கல்வி க ற்கும் போது அரசியலில் சேர்ந்தால் எந்தத் தொண்டும் செய்யும் வாய்ப்பை இழப்பீர்கள். நீங்கள் மாணவருமில்லை, நாட்டிற்குத் தொண்டு செய்யவும் உங்களால் முடியாது. இங்கனம் இரண்டு அம்சங்களும் உங்களிடமிருந்து பறிக்கப்பட்டு விடும். உங்கள் கல்வியைப் பூர்த்தி செய்த பின்பு, உங்கள் நாட்டிற்குத் தொண்டு செய்யும் நல்ல எண்ணத்தை நீங்கள் பெற்றால் நீங்கள் அரசியலில் சேர்ந்து அங்கனமே செய்யலாம். ஒரு மாணவன் என்ற முறையில் நீங்கள் வித்யார்த்தியாக இருக்க வேண்டும். அறிவைத் தேட வேண்டும். பொருட்சுகங்களை நாடும் விஷயார்த்தியாக நீங்கள் இருக்கக் கூடாது. கடந்த பத்து

தினங்களுக்கு மேலாக இந்திய கலாசாரத்தின் பல விதமான அம்சங்களைப் பெரியவர்களிடமும், இளம் மாணவர்களிடமும் நீங்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டிந்தீர்கள். உங்கள் நாட்டின் நன்மைக்காக, நீங்கள் கேட்டவற்றை அனுஷ்டானத்தில் கடைப்பிடிக்க உங்களால் முடியும் என நான் நம்புகிறேன். அந்த வழியில் உங்களை நான் ஆசீர்வதிக்கிறேன்.

## பதினான்காவது கருத்துரை

### ஆண்டவனை அடைவதில் மிக விரைவான பாதை அன்புப்பாதையாகும்.

பிரேமையில்லாத இடங்களில் பிரமே விதையைப் பதியுங்கள். அத்தகைய உலர்ந்த இடத்தில் பிரேமப் பேருணர்வு மழையாகப் பொழியும்படி செய்யுங்கள். பிரேம நதிகள் அங்கு ஓடும்படி செய்யுங்கள். "ஓ கிருஷ்ணா! பிரேம நதிகள் மக்கள் உள்ளங்களில் ஓடும் வண்ணம் உன் முரளியை இசைப்பாயாக!"

பவித்ராத்ம ஸ்வரூபிகளே! சிறுவர்களே! சிறுமியர்களே! சுற்றுப்புற சூழ்நிலைகளும் புறப்பொருள் உலகமும் உண்மை என்னும் மயக்கம் நமக்கு இருக்கும்வரை நமது துன்பங்கள் நம்மை விடப் போவதில்லை. இன்று, தற்காலத்திய சூழ்நிலையில், உங்களைப் போன்ற இளஞ்சிறாா் கடவுளிடம் நம்பிக்கையை வளா்த்து அவ்வழியில் வாழ்வில் முன்னேற வேண்டும். நீங்கள் பிறக்கும் போது அழுகிறீர்கள், இறக்கும்போது அழுகிறீர்கள், பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவே பல பொருள்களுக்காக அழுகிறீர்கள். நீங்கள் எப்போதாவது தர்மத்திற்காகவோ, வாழ்வில் நன்மையொன்றை அடைவதற்காகவோ அழுகிறீர்களா? ஏன், எந்த நோக்கத்தி ற்காக நீங்கள் அழுதீர்கள்? அழுவதற்காகவே நீங்கள் அழுதீர்களா? நமது காலத்தைக் கடத்துவதற்காகவே நாம் அழுது அழுது வருத்தப்படக்கூடாது. நாம் செய்யும் முயற்சிகளனைத்தும் நமது குறிக்கோளை, நமது கொள்கையை அடைவதற்காக இருக்கவேண்டும். இது அன்பினால் மட்டும்தான் நடக்கமுடியும். நினைவி ற்கெட்டா காலந்தொட்டு பாரத நாட்டுக் குடிமக்களால் கடவுளிடம் ஒருவன் காட்டும் அன்பு பக்தி என்றழைக்கப்பட்டது. கடவுளுடைய கருணையை நாம் அடைவதற்குப் பல்வே பாதையிருக்க, கடவுளையும் அவரது அதிசயங்களையும் உணர இந்தவிதமான பிரேமையும் பக்தியுந்தான் நமக்கு உதவும். கடவுளிடம் நெருங்கிச் செல்வதற்காக ஏதேனுமொரு வழியில் பக்தியும் ஒரு சாதனமாக மனிதனால் பயன்படுத்தப்படுகிறது. தந்தையாகவோ அல்லது தாயாகவோ அல்லது சகோதரனாகவோ அல்லது மனைவியாகவோ அல்லது மகனாகவோ அன்பைக் காட்டி ஏதேனுமொரு வழியில் கடவுளிடம் நெருங்கிச் செல்வது பக்தியின் பொருளும் உட்குறிப்பும் ஆகும்.

அதே குறிக்கோளை அடைவதற்கு மற்ற பாதைகளும் இருக்கின்றன. இந்தப் பாதைகள் ஞானமார்க்கம் என்றும் கா்மமார்க்கம் என்றும் விவரிக்கப்படுகின்றன. எப்படியிருந்த போதிலும், ஞான மார்க்கத்தைக் கடைப்பிடிப்பது கஷ்டமான காரியம்; நீங்கள் இந்த மார்க்கத்தைக் கடைப்பிடிக்க விரும்பினால் விடாமுயற்சி, கூர்த்தமதி, அறிவு போன்ற சில குணங்கள் தேவைப்படுகின்றன. பக்தி மார்க்கத்தோடு ஒப்பிடும்போது ஞான மார்க்கம் அதிகம் கடினமானதாகத் தோன்றுகிறது. கா்ம மார்க்கத்தைப் பற்றி நாம் பேசினால், தன்னம்பிக்கை மிகவும் தேவையானது. இந்தக் கா்மமார்க்கத்தில் ஒருவன் தன்னுடைய சொந்த பலத்தையும் சக்தியையும் அடுத்து நிற்கிறான், கடவுளை அடுத்து இருப்பதில்லை. இந்தக் கா்மமார்க்கத்தைக் கடைப்பிடிப்பதற்கு நம் சொந்த சக்தியை எப்போதும் நம்பியிருப்பது சிறது கடினமாகத் தோன்றுகிறது. நாம் யோகமார்க்கத்தைப் பார்க்குங்கால், அஷ்டாங்கயோகம் என்னும் யோகத்தின் பல முறைகளையும் ஒழுங்குகளையும் நாம் அப்யசிக்கவேண்டியிருக்கிறது எனவும் நாம் முடிவுக்கு வருகிறோம். ஞான மார்க்கம், கா்ம் மார்க்கம், யோக மார்க்கம் –இந்தப் பாதைகள் பக்தி வழியைக் காட்டிலும் மிகவும் கடினமானவை. அன்புவழி எளியதும் சுருக்கமானதுமாகும். இந்தவிதமான அன்பு அல்லது பிரேமை, ஒரு தனிநபா் பேரிலோ, சமுதாயத்தின்

பேரிலோ, குறிப்பிட்ட பேரிலோ பொருந்தியது அல்ல. இது நன்கு பரந்த அம்சம். நாம் இந்த அன்பென்னும் கொள்கையை விரிவுபடுத்தும்போதுதான் அன்பின் புனிதத்தன்மை, அதன் தெய்வீகத் தன்மை—இவற்றை உணர்ந்து அனுபவிக்க முடியும். கடவுள் அன்பின் திருவுரு ஆவார். கடவுளை அடைந்து, அவர் தெய்வீகத்தை உணர நமக்குக் கிடைக்கிற ஒரே பாதை பக்திப்பாதையாகும். சந்திரன் ஆகாயத்தில் வந்ததும் நீங்கள் அதை நேரடியாகப் பார்க்கமுடியும்; அதற்கு ஒரு 'டார்ச்' விளக்கு அல்லது பெட்ரோ மாக்ஸ் விளக்கு அல்லது வேறு எந்தச் செயற்கை விளக்கும் உங்களுக்குத் தேவையில்லை. உங்களுக்கு இன்னொரு விளக்கு தேவையில்லாததின் காரணம் என்னவெனில், சந்திரனுடைய வெளிச்சத்தாலே சந்திரனைப் பார்ப்பது நமக்குச் சாத்தியமாகிறது. அதுபோலவே, அன்பின் திருவுருவான கடவுளருகே நாம் செல்ல விரும்பினால் அவனுக்கே உரித்தான அன்பின் வழியாக மட்டுமே அப்படிச் செய்யமுடியும். அன்பின் திருவுருவான கடவுள் ஓரிடத்துக்கோ, பிரேதசத்துக்கோ மட்டும் உரியவர் அல்லர். உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் எங்கும் அவர் இருக்கிறார். எல்லோரையும் நேசிப்பதை அவர்களுள் உள்ள கடவுளை நேசிப்பது போலக் கருதுவதும் இளஞ்சிறாருக்கு மிகவும் இன்றியாமையாதது ஆகும். கடவுள் சுயநலம ற்றவராதலால் நமது அன்பு சுயநலமற்ற அன்பாக ஆகும் வண்ணம் நாமும் அன்பை அபிவிருத்தி செய்ய வேண்டும். சுயநலமற்ற கடவுளின் அன்பைச் சுயநலமற்ற முறையில் அனுபவிப்பதற்காக அவரது அன்பபை உங்களுக்கு மட்டும் குறுக்கிக்கொள்ளுதல் சரியான செயலன்று. நாம் ஒரு குறிப்பிட்ட நிலையை அடையும் வரை கடவுளை ஓர் எல்லைக்குட்பட்ட நிலையில் இருக்கும்போ, அதாவது நமது சொந்த வாழ்வு பரந்ததாக இல்லாதபோது, ஒரு பரந்த நிலையில் அன்பை அனுபவிப்பதென்பது சாத்தியமன்று. ஆகவே நமது அன்பைப் போதுமான அளவுக்குப் பரந்தாக்கும் சில முறைகளைக் கடைப்பிடித்தல் நமக்கு முதல் படியாகிறது. அதற்கு ஒரு சிறிய உதாரணம் இருக்கிறது.

நாம் ஒரு சிறிய ஊதுபத்தியை எடுத்துக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். அந்தச் சிறிய ஊதுபத்தியில் நாம் நெருப்பைப் பார்க்கிறோம். ஒரு சிகரெட்டைப் புகைக்கும்போது அந்தச் சிகரெட்டிலும் நீங்கள் நெருப்பைப் பார்க்கலாம். ஒரு மலையின் மேல் காட்டுத் தீ உள்ளபோது அதிலும் பெருநெருப்பை நாம் பார்க்கிறோம். ஊதுபத்தியில் நாம் பார்க்கும் நெருப்பு, சிகரெட்டில் நாம் பார்க்கும் நெருப்பு, நாம் பார்க்கும் காட்டுத் தீ—இவையெல்லாம் நெருப்புதான். எல்லாம் நெருப்புதான் என்ற உணர்வில் சில விறகுக் கட்டைகளை நீங்கள் எடுத்து வந்து சிகரெட்டின் மேலோ அல்லது ஊதுபத்தியின் மேலோ பட்டால் அப்போது விறகுக்கட்டை நெருப்புப் பிடிக்காது, நெருப்பே அணைந்துவிடும். மாறாக, நாம் மிருதுவான பச்சை இலைகளைக் கூட எடுத்துச் சென்று சுடர் விட்டு எரியும் காட்டுத் தீயில் போட்டால் அவைகள் நெருப்புப் பிடித்து எரிந்துவிடும். இதுபோலவே, உங்களுள் அன்பு பரந்ததாக இல்லாதிருப்பின் கடவுளன்பு என்னும் பெரு நெருப்பை நீங்கள் தாங்க இயலாது. நீங்கள் கடவுளின் எங்கும் பரந்த அன்பைப்பற்றி வெறுமனே நன்கு பேச ஆரம்பித்தால் அப்போது உங்களுள் உள்ள சிறு நெருப்புப் போன்ற அன்புகூட அழிந்து போகும் அபாயமிருக்கிறது. நீங்கள் அத்தகைய சம மன நிலையை அடைந்து அனுபவிப்பதற்கு முன்பு ஒவ்வொருவரிடமும் இந்த அன்பையே நீங்கள் காண்பதற்கு முன்பு, உங்களுள் உள்ள இந்த அன்பை அபிவிருத்தி செய்து, இதைப் போதுமான அளவுக்கு அதிகரிக்கச் செய்வது முதல்படியாகும். இதற்கு ஒரு வடிவத்தையும் ஏற்ற காலத்தையும் உணர்தல் உங்களுக்குத் தேவை. உங்களைச் சுற்றியுள்ள சூழ்நிலையையும் காலத்தையும் நீங்கள் உணராவிட்டால் உங்கள் அன்பை அபிவிருத்தி செய்ய முடியாது. கடவுளுடைய அன்பு எல்லையற்ற, முடிறவற்ற ஒரு சமுத்திரத்தைப் போன்றது. கடவுளுடைய அன்பு எல்லைய ற்றும் முடிவற்றும் இருப்பதாலேயே நீங்கள் அத்தனையையும் உங்களுடன் எடுத்துச் செல்ல இயலாது. நீங்கள் எடுத்துச் செல்லமுடிவது நீங்கள் எடுத்துச் செல்லும் பாத்திரத்தின் அளவைப் பொறுத்துள்ளது. ஆகவே முதலில் செய்யவேண்டியது உங்கள் பாத்திரத்தின் அளவை விஸ்தரித்தலாகும். இந்தச் சாதனையைக் கடைப்பிடிப்பதன் மூலம் செய்யமுடியும். இந்தச் சாதனையில் முதல்படி உங்கள் தாயாருக்கு மரியாதை செலுத்துதல் ஆகும். உங்கள் தாயாரிடம் கொண்டுள்ள பக்தி வடிவத்தில் உங்கள் தாயாருக்கு

நீங்கள் நன்றியறிதலைச் செலுத்தவேண்டும். மகனின் அன்பிற்குப் பிரதியாகத் தாயாரும் வாத்ஸல்ய வடிவத்தில் தன் பக்தியைக் காட்டுவாள். தாயார் குழந்தைக்கு நீராட்டி, உடை அணிவித்துச் சீராட்டித் தூங்க வைப்பாள். இந்த எல்லாவற்றையும் செய்யும்போது அவள் தன் அன்றாடக் கடமைகளையும் கவனிப்பாள். இவ்வழியில், தாயருக்கும் மகனுக்கும் உள்ள பற்றையும் அன்பையும் அபிவிருத்தி செய்யலாம். சரியாக அபிவிருத்தி செய்யும்போது அதுவே கடவுளைக் குறித்த பக்தி வடிவாகச் சமைக்கப்பட முடியும். இந்நிலையில், இந்தவிதமான பக்தி, அதாவது தாயாருக்கும் மகனுக்கும் உள்ள அன்பு, பாகவதத்தில் வாத் ஸல்ய பக்தி என்று விவரிக்கப்படுகிறது. யசோதையிடமிருந்த தாய்மைக் குணம் குழந்தை வடிவிலிருந்த ஆண்டவனைப் போஷித்து, அவனுக்கு ஆடை அணிவித்து சீராட்டியது. குழந்தையைத் தன் மடியில் பலாப்பழத்தைப் போன்று வைத்திருக்குமளவுக்குப் பற்று இருந்தது. இதுமட்டுமல்ல, கிருஷ்ணர் தேவகிக்குக் பிறந்திருந்தாலும், தன் சொந்த மகனைப் போலவே யசோதை கிருஷ்ணரைப் பார்த்துக் கொண்டாள். அவள் கிருஷ்ணரிடம் வாத்ஸல்ய பக்தியை வளர்த்துக் கொண்டாள். பல கோபியர்கள் கிருஷ்ணனைப் பற்றிக் குறை கூறியபோதிலும் யசோதை அவனை இன்னும் அதிகமாக நேசித்தாள். அவள் ஒருபோதும் குற்றச்சாட்டுகளைப் பற்றிக் கவலைப்பட்டதில்லை. இந்தக் குற்றச்சாட்டுகள் மிகவும் அதிகமாக வந்த சமயம் அவளால் இனிமேல் அக்குற்றச்சாட்டுகளைக் கேட்டுப் பொறுக்க முடியவில்லை. அவள் கிருஷ்ணனை நோக்கி, “உனக்குக் கொடுப்பதை சாப்பிடாமல், உன் சொந்த வீட்டில் போதுமான தயிர் மற்றும் பால் இல்லாதது போல மற்ற வீடுகளுக்குச் சென்று ஏன் திருட வேண்டும்?” எனக் கேட்டாள். அவள் அவனைக் கொஞ்சி இதைப் பற்றி மிகவும் அன்பான முறையில் கேட்டாள். அப்போது பலராமனும் சாத்தகியும் யசோதையிடம் வந்து கிருஷ்ணன் மண்ணைச் சாப்பிட்டான் என்று புகார் செய்தபோது அவள்மிகவும் குழப்பமுற்று வாயைத் திறக்கும்படி கிருஷ்ணனைக் கேட்டாள். வாய் திறக்கப்பட்டபோது வாயில் மண்ணிற்குப் பதில் வெண்ணெய் வாசனை அடிப்பதைப் பார்த்தாள். அவள் குழப்பத்தில் ஆழ்ந்தாள். உண்மை எது என்பது அவளுக்குத் தெரியவில்லை. கிருஷ்ணன் மிகச் சிறிய பையனாக இருந்தாலும் அவனுடைய பெருமை அவனுடைய வாயிலேயே பார்க்கப்பட்டது. அவன் “நான் ஒரு சின்னக் குழந்தையா?” நான் மண்ணைச் சாப்பிடும் அளவுக்கு முட்டாளா?” கேள்வியைக் கேட்கும்போது, அவள் அனைவரும் பாராட்டும் வகையில் தன் உண்மையைப் பெருமையை வெளிப்படுத்துகிறான் என்பதை நாம் இங்கு உணரவேண்டும். கிருஷ்ணனுடைய தெய்வீகப் பெருமையை இந்த விடையிலேயே காணலாம் : “இந்தப் பிரபஞ்சம் முழுவதும் என்னுள் இருக்கும் போது சிறிது இனிப்புப் பண்டங்களினால் எனக்கு உணவூட்ட உன்னால் முடியுமா? நான் ஒவ்வொரு ஜீவனுள்ளும் இருக்கும்போது உண்மையில் அவனுக்கு உணவூட்டுவதன் பொருள் தான் என்ன? அவனுடைய ஒளி கோடி சூரியப் பிரகாசமாய் இருக்கும்போது அவனைப் பார்க்க ஒரு விளக்கை எடுத்துக் கொள்வதன் பொருள்தானென்ன? இவ்வுலகில் உள்ள மிகச் சிறந்த அவர்களாலும் அவனை உணரமுடியாமலும், நெருங்க முடியாமலும் இருக்கும்போது யாரேனும் ஒருவர் எப்படி அவன் இயற்கையை புரிந்து கொண்டு உணரமுடியும்? இத்தனையையும் கேட்டாலும், பார்த்தாலும், கிருஷ்ணனாலேயே கிருஷ்ணனுடைய பெருமையும் தெய்வீகமும் சொல்லப்பட்டாலும், யசோதையின் தாய்மைக் குணம் கிருஷ்ணனை இளம் பையனாகவே பார்க்க விரும்பியது. மகனிடம் தாயார் கொண்டுள்ள அந்த வாத்ஸல்ய பிரேமையில் அவள் மிகவும் ஆழ்ந்த இன்பத்தையும் முக்தியையும் கண்டாள். ஆகவே நீங்கள் முக்தியநுபூதியடைய விரும்பினால் விவரிக்கப்பட்டுள்ள எல்லா பக்தி முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டுமென்பது அவசியமன்று. நீங்கள் பிரேமையைப் போன்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஏதேனும் ஒரு வழியின் மூலமாகக் கடவுளிடம் உங்களை இணைத்துக் கொண்டால் அவரை உணர்வது சாத்தியமாகும். எல்லாச் சமயங்களிம் பிரேமையுடன் நிறைந்து விளங்கியவள் யசோதை. கிருஷ்ணனைப் பிரிந்தோ அல்லது கிருஷ்ணனைப் பற்றி நினைக்காமலோ ஒரு கணம் கூட அவள் இருந்ததில்லை. குழந்தை கிருஷ்ணரின் மிருதுவான ரோஜாப்பூப் போன்ற கன்னங்கள் தன்னருகே இருப்பதைக் காட்டிலும் அதிக ஆனந்தம் ஏதேனும் இருக்கிறதா என அவள் கேட்பது வழக்கம். கிருஷ்ணனின் இந்தக் குழந்தை

வடிவத்தைக் கடவுளின் வடிவமாகவே கருதி அவ்வடிவத்திடம் தன் பிரேமையைச் செலுத்தினாள். இங்கனம் அவள் கடவுளை உணர்ந்தாள். இது நமது பாகவதத்தில் வாத்ஸல்ய பக்தி என அழைக்கப்படுகிறது என முன்னரே கூறினோம்.

அடுத்தது ஸக்ய பக்தி : இது கோபாலர்களால் எடுத்துக் காட்டப்பட்டது. அவர்கள் கிருஷ்ணனுடன் விளையாடினர்; அவனுடன் ஒன்றாக இருந்தனர். அவன் கடவுள் அல்லது அவதாரம் என அவர்கள் ஒருபோதும் நினைக்கவில்லை. கிருஷ்ணன் கோபாலர்களில் ஒருவன் என அவர்கள் நினைத்தனர். கடவுளுடன் ஒன்றாக இருக்குமளவுக்கு விளங்கும் ஆழ்ந்த நட்புறவு முறை ஸக்ய பக்தி என்று விவரிக்கப்படுகிறது. அவர்கள் கிருஷ்ணனுடன் “கண்ணாமூச்சி” விளையாடினர்; அவனைத் தமது சகாக்களில் ஒருவனாகக் கருதினர்; இங்கனம் அவனுடன் ஒன்றாயினர். இந்த முறையில் அவனிடம் அவர்கள் அன்பு காட்டினர். தினமும் பிற்பகலில் எல்லா விலங்குகளும் ஒரு மரத்தின் கீழ் நிறுத்தப்படும், கோபாலர்களும் கிருஷ்ணரும் இன்னொரு மரநிழலில் உட்காருவது வழக்கம்; அவர்கள் தங்கள் உணவைப் பகிர்ந்து கொள்வர். இந்த முறையில் அவர்களுக்குள் ஆழ்ந்த நட்புறவு உருவானது. இது மட்டுமல்ல, அவர்கள் கிருஷ்ணனிடமிருந்து ஒரு கணம் கூட ஒரு போதும் பிரிந்து சென்றதில்லை. அவர்கள் எப்போதும் விலங்குகளைப் போஷித்து வந்தனர். விலங்குகள் இன்பமாக மேய்ந்து கொண்டிருக்கும்போது அவர்கள் வந்து கிருஷ்ணனுடன் உட்கார்ந்து கொண்டு அவனைக் கதை சொல்லும்படி கேட்பது வழக்கம். இங்கனம் ஒவ்வொரு கணத்தையும் அவர்கள் கிருஷ்ணனுடன் கழித்தனர். அவர்கள் விளையாடும்போதும், பாடும்போதும், இருக்கும் போதும் கிருஷ்ணரைத் தம்மில் ஓர் அங்கமாகவே கொண்டு சேர்ந்து வாழ்ந்தனர். அந்நாட்களில் கிருஷ்ணன் புல்லாங்குழலை நன்கு வாசிப்பது வழக்கம்; வேறு எந்தக் கோபாலன் வாசிப்பதைக் காட்டிலும் மிக நன்கு வாசிப்பது அவன் வழக்கம். அவன் புல்லாங்குழல் இசைக்கும்போது ஒவ்வொருவரையும் அவசமாக்கி மெய்ம்மறக்கச் செய்யவல்லவன். கோபாலர்களில் ஒருவன் கிருஷ்ணனிடம் வந்து சொல்வான்: “என் மனம் திருப்தியுறும் அளவுக்குப் பாடு, பாடு; நான் சந்தோஷப்படும் வண்ணம் இனிய சொற்களைக் கூறுவாயாக; வேதங்களின் சாரத்தை எடுத்து, உன் புல்லாங்குழலின் இனிமை மூலம் அதை வாசித்து, என் இதயம் திருப்தியடையுமளவுக்கு நிரப்புவாயாக.” இன்னொரு கோபாலன் கிருஷ்ணனிடம் வந்து சொல்வான்: “நமது பசுக்கள் உபநிஷத்துக்கள்; பசுக்களின் நான்கு கால்கள் நான்கு வேதங்களை போன்றவை. பசுவின் பாலிலிருந்து வேதங்களை எடுத்து, வேதமந்திரங்கள், உபநிஷத்துக்கள் – இவற்றின் சாற்றைப் பிழிந்து, அதை உன் குழலில் ஊற்றி எங்களுக்காகப் பாடுவாயாக” என்று. இந்த விதமாகக் கோபாலர்கள் கிருஷ்ணனைச் சுற்றித் திரிந்தனர். அவர்கள் அவனை ஒரு நண்பனாகக் கருதி அவனுடன் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டனர். இந்தக் கோபாலர்கள் யமுனா நதிக்கரைக்குச் சென்று நதியில் நீந்துவது வழக்கம். அவர்கள் நதியில் நீந்தும்போது கிருஷ்ணனுடைய (இறைவனுடைய) கால்களைப் பிடிக்க முயற்சி செய்வர். தன் கால்களைப் பிடிக்க முயற்சி செய்யும் சிறிய மீன்கள் பின்வர, பெரிய மீன் முன்செல்வது போல் அது தோற்றமளிக்கும். இங்கனம் தம் அன்றாட வாழ்வில் கிருஷ்ணனைத் தம் பொது மனித நண்பனாகக் கருதிக் கிருஷ்ணனுடைய கருணையான குணங்களை அனுபவித்தனர். தம் சொந்த சகோதரர்களும் சகோதரிகளும் தம்மிடமிருந்து தூரத்திலிருந்தாலும் கோபாலர்கள் கவலைப்பட்டதில்லை; ஆனால் கிருஷ்ணனிடமிருந்து ஒரு கணம் பிரிந்தாலும் அவர்கள் வருந்துவது வழக்கம். இங்கனம் ஏதேனுமொரு முறையில் கோபாலர்கள் கிருஷ்ணனிடம் நெருங்கியிருக்க விரும்பினர் என்பதை நாம் பார்க்கிறோம். அவர்கள் எந்தத் தபசும் பூஜையும் செய்யவில்லை. அவர்கள் பிரேம முறைகளைப் பின்பற்றிக் கிருஷ்ணனருகே இருக்க விரும்பினர். கிருஷ்ணன் அன்பு சமுத்திரமாகக் கருதப்பட்டான். இந்த அன்புச் சமுத்திரத்திலிருந்து வந்த நீர்த் துளிகளாகத் தங்களைக் கோபாலர்கக் கருதினர். அவர்கள் முழு நோக்கமும் தன் வாழ்வை எல்லையற்ற அன்புச் சமுத்திரத்தில் லயிக்கச் செய்வது ஆகும். நாம் ஒரு நீர்த்துளியை நமது உள்ளங்கையில் வைத்திருக்கும்வரை அது நீர்த்துளியாக இருக்கிறது. ஆனால் இந்த

நீர்த்துளியை எடுத்துச் சமுத்திரத்துடன் நாம் கலந்தால் நீர்த்துளி என்பது இல்லாமல், அது தன் தனித்தனித்துக் கடவுளின் எல்லையற்ற பிரேம சமுத்திரத்துடன் அவைகளை லயிக்கச் செய்ய முயற்சி செய்தனர். கடவுளுடன் ஐக்கியமாக விரும்புவதைக் காட்டிலும் நல்ல குறிக்கோள் வேறு என்ன இருக்க முடியும்?

மூன்றாவது விதமான பிரேமை விரேதத பிரேமை என்றழைக்கப்படுகிறது. ஏதேனுமொரு வழியில் அவர்களும் கடவுளிடம் நெருங்கி வருகின்றனர். கம்சன், தந்தவக்ரன், ஜராசந்தன், பௌண்டரீக வாஸுதேவன் இன்னோர் அத்தகைய மக்களுக்கு உதாரணங்களாவார். தூக்கத்தின் போதுகூட கிருஷ்ணருடைய நாமத்தைக் கேட்டால் உணர்ச்சி வசப்பட்டுக் குதிக்குமளவுக்கு அவர்கள் கிருஷ்ணரை வெறுத்தன. நம்பிக்கையுள்ள மக்களுக்குக் கடவுளின் வடிவை ஒரு முறை பார்ப்பது அல்லது கடவுளின் வருணையைக் கேட்பது ஆனந்தமூட்டும். ஆனால் விரோதமுள்ள மக்கள் தூங்கும்போதும் சாப்பிடும்போதும் கூட எப்போதும் தாம் வெறுக்கும் மனிதனையே நினைத்துக் கொண்டிருப்பார்கள். சிசுபாலன் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு சுவரின் மேல் தன் காலின் நிழலைப் பார்த்த ஒரு சம்பவம் இருக்கிறது. இந்த நிழலைப் பார்த்து அவன் கலவரமுற்றான்; ஏனென்றால், கிருஷ்ணர் வந்திருக்கிறார் என அவன் நினைத்தான். எல்லாக் காலங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலிம் கடவுள் விரோதமான வழியில் நினைத்தாலும் இந்த வழியாகக் கடவுளைப் பற்றிப் பயப்படும் அளவுக்கு விரோத பிரேமை. இந்த வழியாக கடவுளுடைய நாமமும் வடிவமும் அவர்கள் உள்ளங்களில் சாசுவதமாகப் பதிக்கப்படுகின்றன. அத்தகைய ஆழ்ந்த தொடர்பினால் அவர்கள் இறைவனிடம் நெருங்கியவர்களாகி விடுகின்றனர். நீங்கள் தூங்கிக்கொண்டிருக்கும் வரை என்ன இருக்கிறது? நீங்கள் சத்திரத்தில் தூங்கினாலென்ன? சாவடியில் தூங்கினாலென்ன? நெருப்புக்கும் எரிக்கும் தன்மையிருக்கிறது. நீங்கள் அதை அறிந்து தொட்டாலும் அறியாமல் தொட்டாலும் உங்களை சுட்டெரிக்கும். ஒருவர் தம் பக்கம் பிரியத்துடன் வந்தாலும், பிரியமில்லாமல் வந்தாலும் வந்தவர்களைத் தூய்மைப்படுத்தும் தன்மையது கிருஷ்ணரின் ஒளிவீசும் தேஜஸ். எந்த வழியில், ஏன் ஒருவன் எதைச் செய்கிறான் என்பது முக்கியமல்ல; ஆனால் ஒருவன் இறைவனுடைய நாமத்தையும் உருவத்தையும் தொடர்ந்து இடைவிடாது நினைத்தால் அவன் முக்தியடைகிறான்.

நான்காவது கோபிகாபக்தி அல்லது மதுரபக்தி என்றழைக்கப்படுகிறது. இந்தப் பக்தியைக் கொண்ட கோபிகைகள் எப்போதும் கிருஷ்ணனை நினைத்தனர். அவர்கள் தங்கள் எண்ணங்களையும், கொள்கைகளையும், தங்களையே முற்றிலும் கிருஷ்ணனிடம் ஒப்புவித்தனர். அவர்கள் எதைச் செய்தாலும், சாப்பிட்டாலும், பேசினாலும் எல்லாம் கிருஷ்ணனுடைய நாமத்துடன் செய்தனர். அவர்கள் தங்கள் வாழ்வு முழுவதும் கிருஷ்ணனுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதினர். அவர்கள் நேரத்தில் ஒவ்வொரு கணமும் கிருஷ்ணனுக்கே அர்ப்பணிக்கப்பட்டது. கிருஷ்ணன் அங்கு ஒரு கணம் இல்லாவிட்டாலும்கூட அவர்கள் தங்களை உயிரற்றவர்களாகக் கருதினர். கிருஷ்ணன் இடையர்களுடன் காட்டுக்குப் போகும்போது இந்தக் கோபிகைகள் அவனையும் அவன் சௌகரியங்களையும் பற்றி நினைப்பது வழக்கம். அவனுக்குச் சரியான பாதுகாப்பு இருக்கிறதா இல்லையா எனவும், அவனுக்குச் செருப்புகள் இருக்கின்றனவா இல்லையா எனவும், அவனுக்குச் செருப்புகள் இருக்கின்றனவா இல்லையா எனவும், அவனுக்கு எந்த விதத்திலாவது அசௌகரியம் ஏற்படுமா எனவும், பலவாறாக அவர்கள் எப்போதும் கவலையுற்றனர். அவர்கள் எப்போதும் கிருஷ்ணனையும் அவனுடைய வசதிகளையும் பற்றி நினைத்தனர். ‘இயற்கையாகவே கிருஷ்ணன் கறுப்புநிறமுள்ளவன்; அவன் காட்டுக்குப் போவதால் சூரிய ஒளியின் தகிப்பால் அவனது நிறம் இன்னும் கறுப்பாகிவிடுமே; அவனது உடலைப் பாதுகாக்க அடுத்த நாள் அவன் குடையை எடுத்துச் சென்றால் எவ்வளவு அழகாக இருக்கும்’ எனக் கோபிகைகளின் ஒருத்தி நினைத்துக் கொண்டிருப்பாள். இந்த விதத்தில் எல்லா நேரங்களிலும் அவர்கள் கோபாலனையும் அவன் சௌகரியங்களையும் பற்றி நினைத்துக் கொண்டிருந்தனர். பகற்பொழுதில் அவர்கள் தம் உணவுண்ணும் போது கோபாலனுக்குச்

சரியான உணவு கிடைத்திருக்குமா இல்லையா என எண்ணமிட்டனர். கோபாலனுக்கு ஓய்வெடுக்க நல்ல இடம் கிடைத்திருக்குமா இல்லையா என அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர். இங்கனம் அவர்கள் சாப்பிட்டாலும், தூங்கினாலும், ஓய்வெடுத்தாலும், எப்போதும் கோபாலனைப் பற்றியே நினைத்துக்கொண்டு தங்கள் சொந்த வாழ்வை ரசித்தனர். “பிரம்மவித் பிரம்மைவ பவதி” – ஆகவே நாம் கடவுளைப் பற் றி நினைத்தால், நமது எண்ணங்கள் கடவுளிடம் திருப்பப்பட்டால் நாம் கடவுளுடன் ஒன்றாகிவிடுவோம். எல்லாச் சமயங்களிலும் அவர்கள் எண்ணங்கள் முழுவதும் கிருஷ்ணனால் நிறைந்து விளங்கியதால், அவர்கள் தங்களையும் தங்கள் உடல்களையும் கிருஷ்ணன் இருப்பதைப் போலவே ஆக்கிக்கொண்டனர்.

இந்தச் சூழ்நிலைகளில் கோகுலத்திற்கு ஒரு புது மருமகள் வந்தாள். இந்தப் புது மருமகள் வந்தபோது கிருஷ்ணனுடைய அழகையும் பெருமையையும் பற்றி அவளுக்குப் பெரியவர்கள் விவரித்தனர். கிராமத்துக்கு வராத முன்பே புது மருமகளான நீரஜா கிருஷ்ணனுடையை பெருமையைப் பற் றி அறிந்திருந்தாள். அவள் கிருஷ்ணனைப் பார்க்கும் சந்தர்ப்பத்தைப் பெற் ஏங்கிக் கொண்டிருந்தாள். நீரஜாவினுடைய மாமியார் மிகவும் கொடூரமான பெண்மணியாவாள். நீரஜா வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது, கிருஷ்ணனைப் பார்ப்பதற்கு முயற்சி செய்யக்கூடாது, கிருஷ்ணனுடைய நாமத்தைக் கூடச் சொல்லக்கூடாது என்றெல்லாம் அவள் உத்தரவிட்டாள். இதற்குக் காரணம், இந்தச் சிறுமிகளுடன் பல, விளையாட்டுகளை விளையாடிக் கொண்டு கிருஷ்ணன் உண்மையில் பல குடும்பங்களுடைய ந ற்பெயரைக் கெடுக்கிறான் என்னும் உணர்வு மக்களிடம் இருந்ததேயாகும். கிருஷ்ணன் அந்தச் சமயத்தில் ஏழு வயது பையன்; அத்தகைய எண்ணங்கள் வருவதற்கு எந்த விதத்திலும் காரணங்கள் இல்லை. ஆனால் சில பெருமை உணர்வுகளின் காரணத்தால் கிருஷ்ணனைப் பற்றி அத்தகைய பொறுப்பற்ற எண்ணங்களையும் கதைகளையும் பரப்பும் மக்கள் இருந்தனர். அத்தகைய தீய மக்கள் அக்காலத்திலும் கூட இருந்தனர். உண்மையில் அத்தகைய பேச்சுக்களுக்கு ஆதாரம் எதுவுமில்லை. அந்தக் கிராமத்தில் ஒரு பழக்கம் இருந்தது. அதன்படி நந்தன், கிராமத்தின் தலைவனாகக் கருதப்பட்டான். எல்லா மக்களும் தம் வீட்டில் விளக்கை ஏற்ற நந்தன் வீட்டிலிருந்து விளக்கேற்றிக் கொண்டு வருவது மங்களகரமானது எனக் கருதப்பட்டது. ஒரு நாள் நீரஜாவின் மாமியாருக்குக் காய்ச்சலாக இருந்தது. ஆகவே நீரஜா போய் விளக்கேற்றிக் கொண்டு வரும்படி அனுப்பப்பட்டாள். அவன் நந்தன் வீட்டிற்குச் சென்று கிருஷ்ணன் வாழும் புனித வீட்டைப் பார்க்கவாவது தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தற்கு நீரஜா மிகவும் சந்தோஷப்பட்டாள். ஆனால் நீரஜா அங்குச் சென்றபோது அவள் கவனம் எல்லாம், அவள் எண்ணங்கள் எல்லாம் கிருஷ்ணனில் ஆழ்ந்தன. அநத்ச் சமயத்தில் கிருஷ்ணன் அங்கு வரும் சந்தர்ப்பத்திற்காக அவள் காத்துக்கொண்டிருந்தாள். ஏற்கனவே திரியில் நெருப்புப் பற்றித் தன் கை வரைக்கும் பரவிவிட்டது என்பதை உணராத அளவுக்கு அவள் கிருஷ்ண நினைவில் ஆழ்ந்திருந்தாள். யசோதை வெளியில் வந்து இதைப் பார்த்தாள். நீரஜா ஊருக்குப் புதிதானவள் போலும் என்று சொல்லி, அவள் கை எரிந்து கொண்டிருப்பதையும், இருப்பினும் நீரஜா இந்நிகழ்ச்சியை அறியாது இருப்பதையும் கண்டு அவள் ஆச்சரியப்பட்டாள். யசோதையினுடைய வார்த்தைகளைக் கேட்டு நீரஜா தன் சுயநினைவை அடைந்தாள். தன் மாமி, மாமன் இதைப்பற்றி அறிந்தால் தனக்குத் தீங்கு விளைவிப்பராதலால் அவர்களுக்கு இந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்லவேண்டாமென அவள் யசோதையைக் கெஞ்சினாள். தான் ஏற்ற சுவாலையில் பார்த்த கிருஷ்ணனுடைய காட்சிகளில் தான் ஆழ்ந்து விட்டதாக அவள் விளக்கினாள். அவள் இந்தச் சொற்களைச் சொல்லிக் கொண்டிருந்தபோது மற்ற கோபிகைகள் மிகவும் விரைவாக வந்து இந்த நிகழ்ச்சியைப் பார்த்தனர். நீரஜாவைச் சூழ்ந்த கோபிகைகள் சும்மாவிருக்கவில்லை; கிராமத்திலிருந்த எல்லோருக்கும் இந்தச் சம்பவத்தை விரைவாகத் தெரிவித்தனர். கோபிகைகள் இப்படி வசைபாடிக் கொண்டிருந்தபோது, வரப்போகும் விளைவுகளைக் குறித்து நீரஜா மிகவும் பயப்பட்டாள்; தன் மாமியார் என்ன சொல்லுவாரோ எனக் கவலையுற்றாள். ஆனால் இதெல்லாம் தான் அடைந்த கிருஷ்ண தரிசனத்தில் பாதி கூட முக்கியத்துவமுடையது அன்று என அவள் சந்தோஷமடைந்தாள். விளைவுகளை ஏற்க அவள்

தயாராயிருந்தாள். கடவுளை அத்தகைய அன்புடன் நாடுவது எல்லாவற்றிலும் சிறந்தது. இந்த வழியில் கோபிகைகள் கிருஷ்ணனுடைய வடிவத்தை எல்லாக் காலங்களிலும் நினைத்துக் கொண்டிருந்தனர். இந்தக் கோபிகைகள் எல்லோருக்கும் ஒரு தலைவி போன்றவள் இருந்தாள்; அவளே ராதா. ராதா தலையாக இருக்க விரும்பினாளல்லள்; ஆனால் மற்ற கோபிகைகள் அவளைத் தன் தலைவியாகத் தேர்ந்தெடுத்தனர். எப்போது ஏதேனும் கஷ்டமுள்ளதோ அப்போதெல்லாம் அவர்கள் அவளிடம் போய்ச் சொல்வர். நீங்கள் இன்று திரைப்படங்களிலும் நாடகங்களிலும் பார்க்கும் விதத்தவள் ராதா என்று கருதக்கூடாது. எப்போதும் கிருஷ்ண நினைவில் இருந்தவள்; அவளுடைய பெயரே அவளுடைய பெருமையையும் புனிதத் தன்மையையும் தெரிவிக்கிறது. ரகாரத்தில் (ரா) நீங்கள் ஆரம்பித்தால் ராதாவைப் பெறுகிறீர்கள். நீங்கள் ஆகாரத்தில் (ஆ) ஆரம்பித்தால் அதே எழுத்துக்கள் ஆதார் என அமையும்; நீங்கள் தகாரத்தில் (தா) ஆரம்பித்தால் தாராவைப் பெறுகிறீர்கள். அதையே திருப்பிப் படித்தால் (த்+ஆ=தா) நீங்கள்ஆராத் என்பதைப் பெறுகிறீர்கள். இதன் பொருள், ராதாவின் ஆதார அடிப்படையே கிருஷ்ணனுடைய ஆராதனை என்பதாகும். நீங்கள் கிருஷ்ணனுக்கும் ராதைக்கும் உள்ள ஆழ்ந்த உறவை உண்மையில் உணர விரும்பினால், ராதா மூங்கில் புதரிடம் போய் ஒரு தனியிடத்தில் உட்கார்ந்திருந்தபோது நடைபெற்ற ஒரு சம்பவத்தை கவனிக்கவேண்டும். கிருஷ்ணனிடம் அவளுக்கிருந்த பற்றை அவளுடைய வார்த்தைகளிலிருந்து புரிந்து கொள்ளலாம். அவள் கிராமத்தை விட்டு வெளியே அனுப்பப்பட்டாள்; துன்பத்தால் அவள் பாடினாள்: “கிராமத்தில் துன்பமாக உள்ளது. நான் தங்குவதற்கு இடம் எதுவும் இல்லை. ஆகவே இங்கு நான் வெளியே வந்து விட்டேன். என்னுள் இருக்கும் உயிர் மூச்சை உனக்காகத்தான் தாங்கியிருக்கின்றேன். இவ்வாழ்வு உனக்காகவே இருக்கிறது. எனது கனவிலாவது உன்னைக் காட்டுவாயாக. நான் உன்னைப் பார்க்க முடியாவிட்டால் என் மனது ஒரு கணங்கூட நிம்மதி கொள்ள முடிவதில்லை. நான் உன்னை விளக்குங்கால் நீ என்னுள்ளிருக்கும் என் கண்மணி போன்றவள்; ஆனால் உன்னைப் பார்க்க வேண்டுமென்றால் நி என் வெளியே இருக்கும் ஒரு சிறிய குழந்தை போன்றவன். நீ கண்மணிப் பாவையாவாய். காட்டுபவனும் நீயே; நான் காண விழைபவனும் நீயே. உன் ஸ்தூல மனித வடிவில் ஒரு முறையேனும் உன்னைக் காண்பிக்கமாட்டாயா?” அந்தச் சமயத்தில் கம்சனைக் கொல்ல சென்றிருந்த கிருஷ்ணன் மதுராவில் இருந்தான். தங்குவதற்கு ஓரிடமும் இல்லாதபோதும்கூட முற்றிலும் கிருஷ்ணனுக்காக அவள் தன் உயிர் மூச்சைத் தாங்கிக் கொண்டிருப்பதை அவள் பிரார்த்தனையிலிருந்து நாம் அறிகிறோம். அவன் இந்த விதமான உள்முக எண்ணங்களில் தன்னை ஆழ்த்திக் கொண்டிருந்தபோது, அவள் தோழியர் சில விளையாட்டுகளை விளையாடுவதுபோல் அவளுக்குத் தோன்றியது. கோபிகைகளின் ஒரு குழு, கோபாலன் ‘ரேபள்ளி’ க்குத் திரும்பிவிட்டதாகப் பாடிச் சொல்லிக் கொண்டிருந்தனர். இந்தப் பாட்டைக் கேட்டவுடனேயே கோபாலன் உண்மையில் திரும்பி விட்டதாக அவள் நினைத்தாள்; அவள் மூங்கில் புதரிலிருந்து சுடுமணலில் குதித்து மணலின் சூட்டைப் பொருட்படுத்தாமல் கோபாலனைச் சந்திப்பதற்கு முன்னால் ஓடிக்கொண்டிருந்தாள். உஷ்ணத்திலும் குளிரிலும் கூட யமுனா நதிக்கரையிலேயே அவள் எப்போதும் இருக்குமளவுக்கு அவள் பக்தி இருந்தது. உஷ்ணத்தால் அவள் உடம்பு தகிக்கப்பட்டது. அவள் உடம்பு தகிக்கப்பட்டபோதிலும் ஒரு போதும் அவள் கவலைப்படவில்லை. உஷ்ணத்தாலும் குளிராலும் உண்டாக்கப்பட்ட சேதங்களைத் தைரியத்துடன் தாங்கிக் கொண்டு அவள் எப்போதும் யமுனைக் கரையிலேயே தங்கினாள். பெரிய காளியன் பாம்பைக் கொன்ற சமயத்தில் அவள் அணிந்து கொண்டிருந்த கால் சதங்கைகளின் கிண்கிணி சத்தத்துடன் கிருஷ்ணன் வரவேண்டும் என அவள் பிரார்த்தனை செய்து கொண்டு ஆண்டவனைப் பாடிக் கொண்டிருந்தாள். அவள் பேருணர்ச்சியில் பாடிக் கொண்டே ஆண்டவனை விளித்துத் தன்னிடம் வரும்படி பிரார்த்தித்தாள். அந்தப் பேரானந்தத்தில் அவள் வசமிழந்து உயிர் நீங்கினாள். கோபிகைகளுக்கு அத்தகைய புனிதமான எண்ணங்கள், சுயநலமற்ற பக்தி, சுயநலமற்ற பிரேமை இருந்தன. நாம் அவர்களுடைய பிரேமையின் புனிதத் தன்மையைப் புரிந்து கொள்ள முடியாமல், அவர்களுடைய செயல்களுக்குத் தவறான விளக்கம் கொடுத்துத் தவறான பொருள்

கொள்கிறோம். கோபிகைகள் கிருஷ்ணனிடம் கொண்டிருந்த சுயநலமற்ற புனிதத் தன்மையுள்ள பக்தியால்தான் இந்நாட்டு மக்களின் உள்ளங்களில் மிகவும் ஆழ்ந்து விளங்குகிறார்கள்; இன்று கூட நாம் அவளைப் பற்றிப் பேசுகிறோம். மாறாக, கர்மத்தை அல்லது செயலை அதிகம் வலியுறுத்திய இரமவதாரத்தைப் பற்றி நாம் அதிகம் பேசவதில்லை. அவர் வேறு விதமானவர்; அவர் ‘செயலை’ அதிகம் வலியுறுத்தினார். நாம் கிருஷ்ண பக்தியைப் பற்றிப் பேசும்போது அதைத் தவறாக விளக்கித் தவறான பொருள் கொடுக்கக்கூடாது. பாகவதம் கிருஷ்ண பக்தியின் புனிதத்தன்மையை நமக்கப் போதிக்கிறது. தெய்வீக அன்பில் வெறுப்பில்லை, பொறாமையில்லை, கோபமில்லை. அது உலகம் முழுவதுக்கும் ஆனந்தத்தைக் கொடுக்க முடியும். மாணவர்களே! சிறுமியர்களே! சிறுவர்களே! நாம் சுயநலமற்ற பிரேமையை முக்கியமான பக்தி முறையாக ஏற்று சுயநலமற்ற பிரேமையை முக்கியமான பக்தி முறையாக ஏ ற்று நமது நாட்டில் அபிவிருத்தி செய்ய வேண்டும். கடவுளிடம் நமக்குள்ள உறவைப் பொருத்தவரை அதை நாம் இலட்சியமாகக் கொள்ள வேண்டும்; மற்ற நாடுகளுக்கு பாரத நாட்டை இலட்சியமாக ஆக்க வேண்டும். உங்கள் உள்ளங்களில் புனிதமற்ற சுயநலமுள்ள பிரேமை ஏதேனும் இருந்தால் அதைத் தூர எறிந்து விட்டு, சுயநலமற்ற தெய்வீக அன்பைப் பெருக்குங்கள். நீங்கள் இவ்வாறு செய்து உங்கள் இதயத்தைத் தூய்மை செய்வீர்கள் என் நான் நம்புகிறேன்.